36

# கவிமணியின் தமிழ்ப் பணி



டாக்டர். ந .சுப்பு ரெட்டியார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கவிமணியின் தமிழ்ப்பணி
# — ஒரு மதிப்பீடு

'தமிழ்ச்செம்மல்' 'கலைமாமணி' பேராசிரியர்
**டாக்டர் ந. சுப்புரெட்டியார்**
M.A., B.Sc., L.T., Vidwan., Ph.D., D.Lit.,
(1) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்,
தமிழ் இலக்கியத் துறை, செ.ப.க.
(2) மதிப்பியல் இயக்குநர், தெற்கு தென்கிழக்கு ஆசிய
நாடுகளின் மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

கலைஞன் பதிப்பகம்
19 கண்ணதாசன் சாலை,
தியாகராய நகர் சென்னை - 600 017.

**Rs. 75-00**

**KAVIMANIYIN THAMIZHP PANI ORU MATHIPEEDU**

© **Dr.N. SUBBU REDDIAR**

Pages: xvi+272

First Edition : 2002

Published by
**KALAIGNAN PATHIPAGAM**
19 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.

Typeset:
**Oviyam**
Chennai - 600 020.

Printed at:
**Sakthi Printers**
Chennai - 600 021.

சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ் இலக்கியத் துறை



திரு. மு. சண்முகம் பிள்ளை (அமரர்)

திருக்குறள் இருக்கைப் பேராசிரியர்

சென்னைப் பல்கலைக் கழக
**தமிழ் இலக்கியத் துறை - திருக்குறள்**
**இருக்கைப் பேராசிரியர்**
என் நெடுநாள் நண்பர்
திரு. **மு. சண்முகம் பிள்ளை** அவர்கட்கு

**அன்புப் படையல்**

இலக்கணக் கடலின் கரைகண்ட செம்மல்;
இணையற்ற தேவியின் தொண்டர்;
துலக்குசீர் வையா புரியின் நல்லன்பர்;
தூய்மையார் வாய்மையார்; என்றும்
நலக்குரித் தாய மர்ரேயின் நண்பர்;
நாவலர் பாவலர் பெருமான்;
புலக்குரித் தூய சண்முகம் பிள்ளை
பொற்பினுக் குரியதிந் நூலே [1]

தேவி - தேசிக விநாயகம் பிள்ளை

# அணிந்துரை

## (பேராசிரியர் முனைவர் இராதா செல்லப்பன்)

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழறிஞர். நூறு நூல்களுக்கு மேல் படைத்து உலவ விட்ட பெருமைக்குரியவர். அவர் தொடாத துறைகள் இல்லை. பல்வேறு துறைகளில் ஆழங்காற்பட்டு தமிழ் ஆய்வு வளர்ச்சியில் தம்முடைய முத்திரையை நன்கு பதித்த பேரறி ஞர். தம்முடைய 87ஆவது அகவையிலும் ஓயாது உழைத்துத் தமிழன்னைக்குப் பல்வேறு நூல்களைக் காணிக்கையாக்கி உள்ளார். அவருடைய படைப்புச் சாதனையில் இப்பொழுது முகிழ்ந்துள்ளது "**கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு** " என்னும் நூல்.

கலை வேறு; அறிவியல் வேறு என்ற கருத்து மாறி இரண்டும் ஒன்றாகக் கை கோர்த்து நடக்கும் காலமிது. திறனாளிகள் அறிவியல் ணுகுமுறைகளைக் கொண்டு இலக்கி யத்தை ஆராய்வர். இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் அதன் போக்கும் சில பொதுவான கொள்கைகளுக்கு உட்பட் டவை. அப் பொது .ண்மைகளை அறியும் ஆர்வம் கிளர்ந்தெ ழுந்ததன் விளைவே இந்நூல். இந்நூலின்கண் ஆசிரியர் கவிமணி பல்வேறு கால கட்டங்களிலும் எழுதிய பாக்களைத் தொகுத்துப் பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி ஆராய்ந்து தந்துள்ளார் நூலாசிரியர். கவிமணி காட்டும் இயற்கைக் காட்சிகளையும் படிமக் காட்சிகளையும் வரலாற் றுப் போக்கிலும் ஒப்பீட்டு முறையிலும் தமக்கே உரித்தான முறையில் திறனாய்ந்துள்ளார் பேராசிரியர்.

கவிஞரின் குழந்தைப் பாடல்களை நுணுகி ஆராய்ந்து கருத்தளிக்கிறார் பேராசிரியர். ரூசோவின் எமிலி என்ற நூல்தான் புதிய கல்வி முறைகளுக்கான வித்து என்று கூறும் அவர் பெஸ்டலாஸ்ஸி, ஃபிராபெல் முதலான மேனாட்டறிஞர்

---

பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகம், பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024. (தொ.பே.0431 - 660358)

களின் கல்விக் கொள்கைகளை எளிமையாக எடுத்துக் கூறுகிறார். அவர்கள் கொள்கைகள் மூலமாகக் குழந்தைக் கல்வி முறைகளைக் கூறுகின்றனர். கவிமணியின் குழந்தைப் பாடல்களோ கற்பித்தல் முறைக்குச் செயல்முறை வடிவம் கொடுக்குமாற்றினை விளக்குகிறார்.

கவிமணியின் கவிதைகளில் வெளிப்படும் தேசபக்தி உணர்வைப் பாரதியார், பாரதிதாசன் ஆகியோரது உணர்வுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கூறுகிறார். விடுதலைக்காகப் பாடுபட்டோர் மிதவாதிகள் தீவிரவாதிகள் என்ற இரு வகையாகப் பிரிந்து செயல்பட்டனர். பாரதியாரின் கவிதைகளில் தீவிர தேசபக்தக் கனல் வீசுவதை எடுத்துக்காட்டும் பேராசிரியர் பாரதிதாசனைப் பற்றிக் கூறும்போது ''பாரதிதாசன் கவிதைகளில் நாட்டுப்பற்று இல்லாமலில்லை. ஆனால், சமூக நீதிகளைக் கண்டிக்கும் போக்கும் தந்தை பெரியாரின் கருத்துக்களும்தான் அவர் பாடல்களில் தலைதூக்கி நிற்கின்றன'' என்று திறனாய்கிறார். கவிமணியைப் பற்றிக் கூறும்போது ''கவிமணி வாழ்ந்த சூழ்நிலை காரணமாக இவர்தம் பாடல்கள் நாட்டுப்பற்றின் இனிய மணம் கமழ்வதாக அமையவில்லை. ஆனால், நாட்டுப்பற்றிற்குரிய பொருள்களை இவர் பாடவே இல்லை என்று கருதவும் முடியாது'' என்ற கருத்துரைக்கிறார். தேசக்கொடியின் சிறப்பு, கதர் விற்பனை, வட்ட மேசை மாநாடு முதலான தலைப்புகளில் பாடி அவரும் தேசிய நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராக அமைந்து விடுகின்றார். கவிமணியவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் சுதந்திரம் பற்றி அவர் பாடிய இரு பாடல்களுமே சுதந்திரம் பெற்றபின் பாடப் பெற்றவையே என்ற செய்தியையும் தருகிறார்.

கவிஞரின் கடவுள் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரியர் தாயுமான சுவாமிகள், குமரகுருபரர் ஆகியோரின் கருத்துக்கள் இவர்தம் பாடல்களில் காணப்படுகின்றன என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். கவிஞரின்,

**கோவில் முழுதும் கண்டேன் - உயர்**
**கோபுரம் ஏறிக் கண்டேன்**
**தேவாதி தேவனையான் - தோழி!**
**தேடியும் கண்டிலேன்**

என்று தொடங்கி காணாமைக்குரிய காரணத்தையும் அவ னைக் காணும் முறையையும் விளக்குவதை எடுத்துக்காட்டுகி றார் பேராசிரியர்.

கண்ணுக் கினியன கண்டு - மனத்தைக்
    காட்டில் அலையவிட்டு
பண்ணிடும் பூசையாலே - தோழி
    பயனொன் றில்லை, அடி
உள்ளத்தில் உள்ளான், அடி!அதுநீ
    உணர வேண்டும்.அடி!
உள்ளத்தில் காண்பாய்எனில் - கோயில்
    உள்ளேயும் காண்பாய்,அடி!

என்று கடவுளை ஆரவாரமின்றி கருத்தை ஒருநிலைப்படுத்தி நினைக்க வேண்டும் என்று கவிஞர் கூறும் நயம் சிறப்பாக உள்ளது. கலைமகள் பற்றிக் கவிஞமணி பாடியுள்ள பாடல் குமரகுருபரரின் சகலகலாவல்லிப் பாடல்களையும் கம்பனின் சரசுவதி அந்தாதிப் பாடல்களையும் விஞ்சும் முறையில் அமைந்துள்ளது என்று பாராட்டிக் கூறுகிறார் பேராசிரியர் (ப.56) கவிமணி வடமொழியைத் தழுவி எழுதிய மீராபா யின் பாடல்களை அன்பொழுகும் அற்புதக் கவிதைகள் என்று கூறிக் களிக்கிறார் பேராசிரியர். அந்தப் பாடல் நிகழ்ச்சிகளை தமிழிலுள்ள பக்திப் பாடல்களில் உள்ள நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு வருணிப்பது மிகவும் சுவை பயப்பதாக அமைந்துள் ளது. மீரா அளித்த நைவேத்தியத்தை கண்ணன் விக்கிரகம் ஏற்றுக்கொண்ட செய்தி பேராசிரியருக்குக் கண்ணப்பநாய னார் குடுமித் தேவரைத் தம் நைவேத்தியத்தை உண்ணச் செய்ததையும் நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையா ரைக் கொழுக்கட்டையை உண்ணச் செய்ததையும் நினைவுக் குக் கொண்டு வருகிறது. மீரா முக்தியடைந்த நிலையை ஆண்டாளின் முக்தி நிலையோடும் திருப்பாணாழ்வார் முக்தி நிலையோடும் ஒப்பிட்டுக் காட்டி மகிழ்கிறார். புத்தர் பெரு மான் வரலாற்றைக் கூறும் ஆசிய ஜோதியைப் பற்றித் திற னாய்வு செய்யும் பேராசிரியர் அக்கவிதைகளில் தம்மையே இழந்து உணர்ச்சிப் பெருக்கோடு கவிதை நயம் காட்டுகிறார். தாம் அனைத்திந்தியக் கீழ்த்திசை மாநாட்டில் கலந்து கொள்ள வாரணாசி சென்றபோது புத்த கயைக்குச் சென்றதையும் அவ்வமயம் கவிமணியின் ஆசிய ஜோதிக் கவிதைகள் அவர் மனக்கண் முன்னே குமிழியிட்டதை உணர்ச்சி பொங்கக்

காட்டுகிறார் பேராசிரியர். அவ்விடங்களிலெல்லாம் மானசீக மாகப் புத்தர் பெருமானைத் தரிசிக்க அவர்தம் புனித வர லாற்றை உணரக் கவிமணியின் கவிதைகள் அவ்விடங்களி லெல்லாம் தம் மனக் காதுகளினால் கேட்டுக் களித்த நிலையை நயம்பட நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் பேராசிரியர் அவர் கள்.

பாரதியும் பட்டிக்காட்டானும் என்ற தலைப்பில் அமைந்த கவிமணியின் கவிதையை ''கவிதைத் திறனாய்விற்குக் கவி தையாலேயே திறனாய்ந்த அற்புதத் திறனாய்வுக் கவிதை இது. பின்னோர்க்கெல்லாம் இது ஒரு கலங்கரை விளக்கம் போல் அமைந்து என்றும் நின்று வழிகாட்டும் சிறந்த ஓர் இலக்கியமா கும்'' என்று உவந்து பாராட்டுகிறார் பேராசிரியர்.

சுந்தரமூர்த்தி வழியில் என்ற இயலில் இயலுக்கான பெயர்க் காரணத்தை தருகிறார் பேராசிரியர். தேவாரத்தில் திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தொடர்ந்து நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதி பாடினார். அந்தப் பாதையைப் பின்பற்றி பாரதியாரும் பாரதிதாசனாரும் பல்வேறு அறிஞர்கள், தொண்டர்கள் முதலானோரைப் பற்றிப் பாடினர். அம் மரபை அடியொற்றிக் கவிமணியும் வாழ்த்துப் பாடல்களாகவும் இரங்கற் பாக்களாகவும், போற்றும் முறையி லும் பாடல்களை அமைத்துள்ளனர். கவிமணியின் இப்பாடல் களைப் பற்றிய செய்திகள் இடம் பெறும் இவ்வியலுக்குச் சுந்தரமூர்த்தி வழியில் என்று பேராசிரியர் பெயர் சூட்டியுள்ள முறை சுவையூட்டுவதாக அமைந்துள்ளது. கவிமணி பல அறிஞர்களைப் போற்றிப் பாடியுள்ளார். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களும் கவிமணியும் இணை பிரி யாத தோழமையுணர்வுடன் பழகியவர்கள். கவிமணியின் நூல்கள் பலவற்றைப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் முன்னுரை அணி செய்திருக்கிறது. தம்முடைய படைப்புகள் பெரும்பாலானவற்றைப் பிள்ளையவர்களிடம் படித்துக் காட் டிய பிறகே அவற்றை அச்சு வாகனம் ஏற்றியவர் கவிமணி. பிள்ளையவர்களைப் பற்றி அவர் ஒரு சிறிய பாடல் கூடப் படைக்கவில்லை என்பது வியப்பான ஒரு செய்தி. ஒரு சமயம் ஒரு நண்பர் கவிமணியிடம் நீங்கள் உங்கள் அன்பிற் கும் மதிப்பிற்குரிய வையாபுரிப் பிள்ளையவர்களைப் பற்றி ஒரு பாடல் கூடப் புனையவில்லையே என்று கேட்டாராம்.

அதற்குக் கவிமணியோ ''நான் வேறு பிள்ளையவர்கள் வேறு அல்ல; அவரைப் பற்றி நான் பாடலெழுதுவது என்னைப் பற்றி நானே பாடுவது போலாகுமே. அதனால் தான் நான் அவ்வாறு பாடலியற்றவில்லை'' என்று பதிலிறுத்தாராம்.

சமூகநலச் சிந்தனைகள் என்ற இயலிலே கவிமணியின் சமூக நோக்கை நன்கு வெளிப்படுத்துகிறார் பேராசிரியர். சமுதாய ஒற்றுமை, சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமை, பெண்கள் நிலை, தொழிலாளர் நிலை, பிச்சைக்காரர் நிலை எனப் பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் கவிமணியின் பாடல்களை ஆராயும் பேராசிரியர் தக்க இடங்களில் பாரதி யார் பாடல்கள், பக்தி இலக்கியப் பாடல்கள் முதலியவற் றோடு ஒப்பிட்டுக் காட்டி நயம் பாராட்டியுள்ளது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. பண்பாட்டுக் கூறுகளைப் பற்றிப் பேசும்போது, கவிமணி நிலைமையாமையைப் பற்றிப் பாடல் களில் விளக்கியிருப்பது போல வேறு எங்கும் தமிழிலக்கியத் தில் காண முடியாது என்பதை ஆணித்தரமாகப் கூறுகிறார். கவிமணியின் மக்கட் பண்புக் கோட்பாட்டினை விளக்கும் போது, குதிரையின் புலம்பலாகக் கவிமணி தரும் பாடல்க ளைப் பேராசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது அந்த இயலுக் குப் பொருத்தமாக அமைந்துள்ளது. இயற்கையை நன்கு அனுபவித்துப் பாடிய புலவன் கவிமணி. அந்த உணர்வி னைத் தம் திறனாய்வின் மூலம் நமக்குப் பேராசிரியர் அளிக்கி றார் என்றால் அது மிகையாகாது. கவிமணியின் மருமக்கள் வழி மான்மியம் என்ற படைப்பு அங்கதச் சுவை நிறைந்த அருமையான ஒரு படைப்பு. நாஞ்சில் நாட்டில் வழக்கிலி ருந்த மருமக்கள் வழித் தாய் முறையைக் கண்டித்து எழுதப் பெற்ற ஒரு படைப்பு. இதனைப் பற்றிப் பேராசிரியர் கூறும் போது, ''மருமக்கள் வழி மான்மியம் என்ற சமுதாய ஓவியம் ஒரு நூதன இலக்கிய வகையைச் சார்ந்தது. இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு என்பர். இக்கூற்றினை விளக்குவது போல் கவிமணியின் இந்தச் சொல்லோவியம் அமைந்துள்ளது (பக்.224). கதைதைய ஓர் அபலையின் வாயில் வைத்துக் கவிமணி பேசுவது அற்புதமாக அமைந்துள்ளது (பக்.241). இந்தக் காவியம் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மக்களின் வாழ்க்கையின் கண்ணாடியாகத் திறனாய்வுப் போக்கில் அமைந்துள்ளது தெளிவு (பக்.224)'' என்று தெளிவுபடுத்துகி றார் கவிமணியின் பாடல்களில் அமைந்துள்ள படிமங்கள்

பயில்வோர் மனத்தில் தோன்றி கவிதையனுபவத்தைக் கிளர்ந் தெழச் செய்கின்றன என்றும் அவை படிப்போரைக் கவிதைய னுபவத்தின் கொடுமுடிக்குக் கொண்டு செலுத்துகின்றன என் றும் கருத்து தெரிவிக்கும் பேராசிரியர் கவிமணி கையாண் டுள்ள படிமங்களை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இப்படி மக் காட்சிகள் நம் மூளையில் பதிந்து முருகுணர்ச்சியாக மாறுவதை அறிவியல் பூர்வமாகவும் விளக்குகிறார் பேராசிரி யர்.

கவிஞரின் மொழிக் கொள்கையை ஆராய்கின்ற பேராசிரி யர் ''நூல் முழுவதும் கையாளப்பெறும் வட்டார வழக்குச் சொற்கள் காவியத்தை இயல்புடைத்தாக்குகின்றன. எடுத்துக் காட்டாக ஏகாங்கி, கண்டாங்கி, குலுக்கை, களரி கட்டுதல், மலரணை முதலிய பல சொற்களைக் காட்டுகிறார். கல்லாதா ருக்கும் விளங்கும் சொற்களைப் பயன்படுத்துகிறார். பெரும் பாலும் கதாபாத்திரங்களே பேசுவதாக இயற்றுவது அவரது வழக்கமாக உள்ளது என்கிறார் ஆசிரியர். இதுகாறும் மேற்கூ றிய கவிதைகளால்... இவருடைய தமிழ் என்றும் உள்ளத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியம். நமது மூதாதைய ரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ், உண்மை நிரம்பிய தமிழ், கல்லார்க்கும் கற்றார்க்கும் நாட்டார்க்கும் நகரத்தார்க்கும் ஒன்றுபோல நலம் இனளிக்கும் தமிழ் (பக்.263) என்ற மதிப்பீடு பேராசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

''சாந்தலிங்கத் தம்புரான் தண்ணீரில் மிதந்து வந்த காகி தக் கப்பலைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்து அதிசயித் துப் போனார். அழகழகான முத்து முத்தான எழுத்தில் தமிழ்ப் பாடல்கள் அதில் எழுதியிருந்தன... என்ன ஆச்சரியம்! சின்னச் சின்ன வார்த்தைகளில் புரியக் கூடிய தமிழில் எழுதியிருந்த அந்தப் பாடல்கள் அவருக்குப் பெரிய சந்தோ ஷத்தை உண்டாக்கிற்று... ஆச்சரியத்தோடு எதிர்க்கரையைப் பார்த்த தம்புரானுக்கு ஒரே வியப்பு! அச்சிறுவனை அழைத்து விவரம் கேட்க, அவன் எழுதிய பாட்டுத்தான் அது என அறிந்து வியந்து போகிறார் தம்புரான். தம்பி! என் மடத்துக்கு வா! உனக்கு நான் தமிழ் சொல்லித் தருகிறேன்!'' என்று குகன் பெரும்புள்ளிகள் என்ற தமது நூலில் கூறுகிறார். அச்சிறுவன் தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. அவருடைய தமிழை அவருடைய கவிதைகளை இன்னும் சொல்லப்

போனால் அவருடைய படைப்புகளை ஆழமாகக் கண்டு தனது திறனாய்வுப் பார்வையால் அடையாளம் காட்டுகிறார் பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள். அவருடைய இத் திறனாய்வு நூல் ஒப்பீட்டு முறையில் அமைந்த திறனாய்வாகத் திகழ்கிறது. கவிமணியுடன் பாரதியாரை, பாரதிதாசனை, நாமக்கல் கவிஞரை ஒப்பிட்டுக் காட்டுகிறார். கவிமணியின் பாடல்களைப் படிக்கும் போது பேராசிரியருக்குத் தேவார மும், ஆழ்வார் பாசுரங்களும் கண்முன்னே தோன்றுகின்றன. பேராசிரியரின் ஆசிய ஜோதியைப் பற்றிய மதிப்பீடு நம் கண்முன் புத்த கயையைக் கொண்டு வந்து காட்டுகிறது. கவிமணியின் கவிதைகளை ஒப்பிட்டு முறையில் நடுநிலை யில் நின்று திறனாய்ந்து நல்லதொரு திறனாய்வு நூலினைப் படைத்தளித்த பேராசிரியருக்குத் தமிழ் உலகம் குறிப்பாகத் தமிழ்க் கவிதை உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது என்றால் அது மிகையன்று.

— **இராதா செல்லப்பன்**

# நூல் முகம்

**கா**னல்நீர் விழைந்த மான்என உலகக்
  கட்டினை நட்டுழன்று அலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
  ஏன்றுகொண் டருளும்நாள் உளதோ
ஊனம்ஒன்று இல்லா உத்தமர் உளத்தே
  ஓங்குசீர்ப் பிரணவ ஒளியே
வேல்நவில் கரந்தோர்க் கினியவா சித்தி
  விநாயக விக்கினேச் சுரனே (11)[1]

சங்கம்வளர்த் திடவளர்ந்த தமிழ்க்கொடியைச்
  சரசுவதி தன்னை அன்பர்
துங்கமுறக் கலைபயிற்றி உணர்வளிக்கும்
  கலைஞானத் தோகை தன்னைத்
திங்கள்நுதல் திருவைஅருட் குருவைமலர்
  ஓங்கியபெண் தெய்வந் தன்னைத்
தங்கமலை முலையாளைக் கலையாளைத்
  தொழுதுபுகழ் சற்று நிற்பாம்[2]

— **இராமலிங்க வள்ளல்**

என் வாழ்நாளில் கல்லூரி வாழ்க்கை தொடங்கி என் மனத்தை அதிகமாக ஈர்த்தது அறிவியல்; அஃது இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது. 1941 ஜூன் முதல் நாள் தொடங்கி துறையூரில் புதிதாகத் தொடங்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளி முதல் தலைமையாசிரியர் பணியை ஏற்ற நாள் முதல் மக்கள் உணர்வைக் கல்வியின்பால் ஈர்க்கச் செய்வதற்குத் துணையாயிருப்பதற்கு உதவுவது மக்கள் பேசும் மொழி தமிழ் என்பதனை உணர்ந்தேன். நான் உயர்நிலைப் பள்ளி மாணவனாக 5,6ஆம் படிவங்களில் பயின்றபோது தமிழ் கற்பித்த இரு தமிழாசிரியர்கள் ஊட்டிய, உறங்கிய நிலையிலிருந்த தமிழுணர்வு இப்பொழுது கிளர்ந்தெழத் தொடாங்கியது.

1. திருஅருட்பா - மூன்றாம் திருமுறை - சித்தி விநாயகர் பதிகம் - 11.
2. மேலது - மேலது - கலைமகள் வாழ்த்து - 2

சிறுவனாகிய என் கவனத்தை காந்தியடிகளின் வாழ்க்கை ஈர்த்தது. 1932ல் நான் முசிறியில் 5ஆம் படிவ மாணவனாக இருந்தபோது ஒரு சில மாணவர்களுடன் திருச்சி வந்த காந்தியடிகளைப் பார்க்க வந்து திருச்சி தேசிய கல்லூரி வளாகத்தில் அப்பெருமானைக் கண்டு மகிழ்ந்தேன். 1942 ஆகஸ்டு புரட்சி என் மனத்தை ஈர்த்தது. குறைந்த தமிழறிவுள்ள நான் பாரதியின் பாடல்களில் ஆழங்கால் பட்டேன்.[3] 1943 முதல் தந்தை பெரியாரிடம் ஈடுபாடு கொண்டு நேரில் பழகியவனாதலால் சுயமரியாதை இயக்கம் என்னை ஈர்த்தது. பாவேந்தர் பாடல்களில் ஆழங்கால் பட்டு அநுபவித்தேன். 1948இல் பாவேந்தரை ஒரு வாரம் விருந்தினராக என் இல்லத்தில் தங்க வைத்து அவருடன் அளவளாவி மகிழ்ந்தேன். அவர்தம் தீவிர கொள்கை எனக்கு உடன்பாடு இல்லாத போதிலும், அவர்தம் பாடல்கள் என் உள்ளத்தை ஈர்த்ததால் அவர்தம் நூற்றாண்டு விழாவில் அவர் பாடல்களைப் பற்றி மூன்று திறனாய்வு நூல்களை எழுதி முடித்தேன்.[4]

இதற்கிடையில் புதுமைப் பதிப்பகம் ''மலரும் மாலையும்'' என்ற தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல்களை வெளியிட்டது (1944 மூன்றாம் பதிப்பு). சத்துவகுணம் மிக்க எனக்கு சத்துவ குணமே வடிவாகவுள்ள பிள்ளையவர்களின் பாடல்கள் மிகவும் இனித்தன. பன்முறைப் படித்துப் படித்து மகிழ்ந்தேன். காரைக்குடி சென்றதும் (1950 சூலை முதல்) டி.கே.சி. யின் தொடர்பும் அவர்தம் பாடல்களைப் பற்றி அதிகமாக மேடைகளில் பேசிவந்த பேராசிரியர் ஆ.முத்துச்சிவம் தொடர்பும் ஏற்பட்டதால் மேலும் அவர்தம் பாடல்களில் ஈடுபாடு அதிகமாயிற்று. திருப்பதி சென்ற பிறகு தே.வி.யின் பாடல்களை தமிழ் எம்.ஏ.க்குரிய பாடத் திட்டத்தில் சேர்ந்து கற்பிக்கும் வாய்ப்பையும் பெற்றேன். அவர்தம் அனைத்துப் பாடல்களையும் கொண்ட பாரி நிலைய வெளியீடு (சனவரி, 1967) எனக்குக் கிடைத்தது. இப்பதிப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

3. பிற்காலத்தில் பாரதி நூற்றாண்டு விழா நினைவாக பாரதியின் பாடல்களைப் பற்றி நான்கு திறனாய்வு நூல்களை வெளியிட்டு மகிழ்ந்தேன்.
4. ஒன்று அப்பொழுது வெளிவந்தது; இரண்டு இப்பொழுது (2002) வெளிவருகின்றன.

உலகத் தமிழ் மாநாடு (எட்டாம் அமர்வு) தஞ்சையில் நடைபெற்றபொழுது அதில் தே.வி.யின் பாடல்களைப் பற்றி ஆய்வுக் கட்டுரை வழங்கினேன். தொடர்ந்து **'கவிமணியின் தமிழ்ப் பணி - ஒரு மதிப்பீடு'** என்ற தலைப்பில் எழுதி முடித்தேன் (1995). அதன் கைப்படியைப் பெற்று திரு. ப.முத்துக்குமாரசாமி அவர்களின் பரிந்துரையால் கலைஞன் பதிப்பகம் மூலம் வெளிவருகிறது. வெளியிட்டவருக்கும் 'புருஷகாரம்' செய்தவருக்கும் மிக்க நன்றி.

நான் இன்று நன்னிலையிலிருப்பதற்கு இறையருளும் (விநாயகர், முருகன், ஏழுமலையான்) நான்கு பெரியவர்களின்[5] ஆசிகளும் காரணம் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய **டாக்டர் (திருமதி) இராதா செல்லப்பன்** (பேராசிரியர், துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி) பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்களின் அருமைப் பேத்தியாவார். பாட்டனாரின் எல்லா நற்குணங்களும் மொழி இலக்கியப் புலமையும் கைவரப் பெற்றவர். என்பால் மதிப்பும் மரியாதையும் கொண்ட இப்பெருமாட்டி இந்நூலுக்கு அணிந்துரை அருளியது இந்நூலின் பேறு; என் பேறும் கூட. அணிந்துரை வழங்கிய அன்பருக்கு என் இதயங்கலந்த நன்றி.

பேராசிரியர் **மு. சண்முகம்பிள்ளை** அவர்கள் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களின் அருமைச் சீடர். பருந்தும் அதன் நிழலும்போல் அப்பெருமகனாரிடம் ஒட்டிக் கொண்டிருப்பவர். பிள்ளையவர்களின் அருங்குணங்களனைத்தும் மெய்ப்புகள் (Proofs) திருத்தும் திறனும் இவரிடம் அமைந்தன. பல்லாண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக திருக்குறள் இருக்கையை அலங்கரித்திருந்தவர். சத்துவ குணம் மிக்க சீலர். என்பால் மிக்க மதிப்பும் மரியாதையும் கொண்டவர். கவிமணியின்பால் பெருமதிப்பு கொண்டவர். தம் இல்லத்திற்குக் 'கவிமணியின் இல்லம்' என்று பெயரிட்டு

5. திரு.வி.க. 1934 முதல் அவர் மறையும் வரை **தவத்திரு சித்பவாநந்த அடிகள்** (1943 முதல் அவர் தம் பூத உடல் நீங்கும் வரை); **பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை** (1944 முதல் அவர் மறையும் வரை); **தந்தை பெரியார்** (1944 முதல் அவர் மறையும் வரை)

வழங்கியவர். கவிமணியின் கவிதைகளிலும் மிக்க ஆழங் கால் பட்டவர். இத்தகைய உழுவலன்பருக்கு இந்நூலை அன்புப் படையலாக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றேன்.

இந்நூல் அச்சேறும்போது மூல படியைப் பார்வை படிக ளுடன் ஒப்பிட்டு சரி பார்க்கவும், மெய்ப்புகளைக் கவனத்து டன் திருத்தவும் எனக்கு உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் மு.ப.சியாமளாக்கு என் அன்பு கலந்த ஆசிகள் என்றும் உரியவை.

இந்நூல் எழுதவும், வெளியிடவும் (காலங்கடந்த போதி லும்) எனக்கு எல்லா வகையிலும் அருள் சுரந்த என் நெஞ்சில் நிலையாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஏழுமலை யான் இணையடித் திருத்தாமரைகட்கு எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள் - புருஷகாரபூதையின் மூலம்.

பொன்னிலும் மணிகளிலும் - நறும்
 பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியவர் நகைப்பினிலும் - செழுங்
 காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் - மன்னர்
 முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி - அவர்
 பதமலர் வாழ்த்திநற் பதம் பெறுவோம் (1)[6]

— பாரதியார்

'வேங்கடம்'
AD-13 அண்ணாநகர்
சென்னை - 600 040
15.07.2002

**ந. சுப்பு ரெட்டியார்**

6. பா.க. தோ.மா. திருமகளைச் சரண்புகுதல்

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப்படையல் | v |
| | அணிந்துரை | vi |
| | நூல்முகம் | xiii |
| **இயல்** | | |
| 1. | கவிமணி - ஒரு அறிமுகம் | 3 |
| 2. | குழந்தை - சிறுவர் இலக்கியம் | 12 |
| 3. | தேசியப் பாடல்கள் | 35 |
| 4. | தெய்வத் தமிழ் | 50 |
| 5. | இசைத்தமிழ் | 78 |
| 6. | திறனாயுந்திறன் | 83 |
| 7. | சுந்தரமூர்த்தி வழியில் | 113 |
| 8. | சமூகநலச் சிந்தனைகள் | 156 |
| 9. | பண்பாட்டுக் கூறுகள் | 182 |
| 10. | மக்கட்பண்புக் கோட்பாடு | 193 |
| 11. | இயற்கை வழி இன்பம் | 211 |
| 12. | மருமக்கள் வழி மான்மியம் | 226 |
| 13. | பாடலில் படிமங்கள் | 247 |
| 14. | கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு | 259 |
| **பின்னிணைப்பு** | | |
| | பயன்பட்ட நூல்கள் | 268 |

# 1. கவிமணி - ஓர் அறிமுகம்

தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று (236) [1]

என்பது வள்ளுவர் பெருமானின் வாக்கு. நல்ல பிறவி பற்றிய வள்ளுவர் கருத்தையொட்டிப் பிறவிப் பயன் பெறுபவர்கள் ஒரு சிலரே. புகழை அண்மைப் புகழ் என்றும், சேய்மைப் புகழ் என்றும் இரு வகையாகப் பிரித்து நோக்கலாம். அண்மைப் புகழ் என்பது ஒருவரைச் சுற்றி வாழும் மக்கள் அவருடைய நற்பண்புகளையும் நற்செயல்களையும் அறிந்து புகழ்வதாகும். சேய்மைப் புகழ் என்பது இக்காலத்தில் செய்தித் தாள்கள் வாயிலாகக் கிடைப்பது. இவர்தம் நற்பண்புகளும் நற்செயல்களும் இவை மூலம் பரவி சேய்மையில் உள்ளவர்களாலும் புகழப் பெறுவதாகும். கவிமணியவர்கட்கு இருவகைப் புகழ்களும் ஓரளவு கிட்டின. ஆனால், பாரதியாருக்கோ பாவேந்தர் பாரதிதாசனுக்கோ கிட்டிய அளவு இவருக்குக் கிட்டவில்லை.

பிறப்பு: கவிமணி குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் - சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூர் என்ற சிற்றூரில் 1876-இல் (தாது ஆண்டு ஆடித் திங்கள் 14ஆம் நாள்) பிறந்தார். தந்தையார் சிவதாணு பிள்ளை; தாயார் ஆதிலட்சுமி அம்மாள். சிவதாணுப் பிள்ளை நாஞ்சில் நாட்டிலே முதன் முதலில் ஆங்கிலம் படித்தவர்களுள் ஒருவர்; உப்பள விசாரணை அதிகாரியாகப் பணியாற்றியவர். தாயார் ஆதிலட்சுமி அம்மாள் மாணிக்க வாசகம் பிள்ளை மூத்த

1. குறள் - புகழ்-6

பிள்ளை என்றவரின் திருமுகளார். மூத்த பிள்ளை என்பார் தமிழ்ப் புலவராகத் திகழ்ந்தவர்; கவிதைகள் இயற்றும் புலமை மிக்கவர். ஆதிலட்சுமி அம்மாள் பிறந்த இடம் திருநாகை என வழங்கும் நாகப்பட்டினம். அங்கு அவர் தாய்வீட்டார் புகழ் மிக்க வணிகர்கள்; சொந்தக் கப்பல் வைத்து கடல் வாணிகம் நடத்தி வந்தனர். பிற்காலத்தில் பொருள் இழப்பு ஏற்பட்டதனால் வாணிகத்தைத் துறந்து நாஞ்சில் நாட்டில் குடியேறி விட்டார்கள்.

கல்வி: தொடக்க நிலைக் கல்வியைத் தேரூரில் உள்ள பாடசாலைகளில் இளமை முதற்கொண்டே தமிழும் மலையாளமும் பயின்றார். தாய்மொழியாகிய தமிழ் மொழியின் மீது அளவற்ற பற்றுடையவராகத் திகழ்ந்தார். இளமை முதற் கொண்டே தமிழ்க் கவிதைகள் இயற்றுவதில் ஆர்வங் காட்டி வந்தார். தமிழ் நூல்களை முறையாகக் கற்க வேண்டும் என்ற பேரவா இவர் தம் மனத்தை உந்திக் கொண்டே இருந்தது. தேரூரின் அருகில் உள்ள 'வாணன் திட்டு' மடத்தில் தங்கியிருந்த திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு சாந்தலிங்கத் தம்பிரானவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஐந்தாறு ஆண்டுக் காலம் முறையாகப் பாடம் கேட்டு ஆர்வத்துடன் பயின்றார். திருநெல்வேலி உமையொருபாக குருக்களிடம் சிவதீட்சையும் பெற்றுக் கொண்டார்.

கோட்டாற்றிலுள்ள அரசாங்க ஆங்கிலக் கல்லூரியில் பயின்று 'மெட்ரிக்குலேஷன்' தேர்வில் தேர்ச்சி பெற்றார். அதன் பின்னர் நாகர்கோவிலுள்ள கல்லூரியில் எப்ஃஏ வகுப்பில் சேர்ந்து பயின்றார். பல இடையூறுகளால் ஆங்கில கல்வியை நிறுத்திவிட வேண்டியதாயிற்று. எனினும் ஆங்கில நூல்களையும், ஆங்கிலக் கவிதைகளையும் எப்பொழுதும் படித்து வந்தார். இதன் பின்னர் திருவனந்தபுரம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சில காலம் பயின்று பயிற்சிக்குரிய தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

ஆசிரியத் தொழில்: கல்வித் துறை வாழ்க்கையே தமக்குரியது என்று மேற்கொண்டார். முதலில் கோட்டாற்றிலுள்ள நடுநிலைப் பள்ளியில் துணையாசிரியராகப் பணியில் அமர்ந்தார் (1901ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள்). பின்னர் நாகர்கோயில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும், திருவனந்தபுரம் மகளிர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் துணையாசிரியராகப் பணி ஏற்றார். அடுத்து, திருவனந்தபுரம் அரசர் மகளிர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகவும் இறுதியாக அரசர் மகளிர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளராகவும் பல்லாண்டுகள் பணியாற்றினார்.

அறிவியல் துறையில் நல்ல அறிவு பெற்றிருந்தமையால் அப்பாடம் பற்றிய பயிற்சிப் பாடங்களைக் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்தார். ஆனால், இலக்கியக் கல்வியை மறவாது ஒருபொழுதும் விடாது இலக்கியங்களைக் கற்பதிலும், அவற்றை ஆராய்வதிலும் காலத்தைச் செலவிட்டார். இறுதிக் காலத்தில் அரசர் மகளிர்ப் பள்ளியில் தமிழாசிரியராகவும், அரசர் மகளிர்க் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணியாற்ற வாய்ப்புகள் கிடைத்த போது, தமது உயிராசைக்குரிய தமிழையே தாம் கற்பிக்கும் வாய்ப்புகள் நேர்ந்தது பற்றிக் கவிமணி பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். இறுதியாக 1931ஆம் ஆண்டில் மனநிறைவுடன் ஆசிரியப் பணியினின்றும் ஓய்வு பெற்றார்.

எழுத்துப் பணி: தவத்திரு சாந்தலிங்கத் தம்பிரானவர்களிடம் தமிழ் பயின்று வரும்போதே கவிதை இயற்றும் ஆற்றல் முகிழ்க்கத் தொடங்கியது. அப்பெரியாரின் கட்டளைப்படி தம் சொந்த ஊராகிய தேரூரில் கோயில் கொண்டிருக்கும் அழகம்மையின்மீது 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' (பத்துப் பாடல்கள் அடங்கியது) என்ற கவிதை நூலையும் அடுத்துள்ள சுசீந்திரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தாணுமாலயப் பெருமாள்மீது பல தோத்திரங்களையும் துதிப் பாடல்களையும் இயற்றினார். 'சுசீந்திர மாலை

யின்' கையெழுத்துப் படி ஆசிரியரிடமிருந்து தவறிப் போய் விட்டது. நினைவிலிருந்த ஒரு பாடல் மட்டும் 'மலரும் மாலையும்' நூலில் இடம் பெற்றுள்ளது. இவை இவர்தம் கன்னிப் படைப்புகளாக அமைந்தன. கவிதை இயற்றும் பண்பு கருவிலே திருவுடையதாக அமைந்திருந்தது என் பதை அக்காலத் தமிழ் உலகம் நன்கு அறிந்தது.

இவர்தம் ஆசிரியப் பணிக் காலத்தில் செய்யுட்களைப் புதியனவாக இயற்றும் பணி இவருடைய அன்றாட வாழ்க் கையில் நடைபெற்று வந்தது. கல்லூரி வாழ்க்கையில் இவருடைய கவித்துவம் வெளியாதற்குரிய வாய்ப்புகளும் அடிக்கடி நேர்ந்தன. இவர் இயற்றிய கவிதைகள் கல்வித் துறை அதிகாரிகளாலும், பல அறிஞர்களாலும் தமிழ் விற்பன்னர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்று வந்தன. பல சந்தர்ப்பங்களில் பாடப் பெற்ற தனிப் பாடல்கள் (வாழ்த்துப் பாடல்கள், சரம கவிகள் ) பிற்காலத்தில் வெளிவந்த 'மலரும் மாலையும்' பதிப்பில் இடம் பெற்றுள் ளன. தமிழ்நாட்டு இதழ்களில் 'ஆண்டான் கவிராயர்', 'தேவன்', 'ஐயம் பிள்ளை', 'குயில்' என்ற புனை பெயர்க ளில் பல பாடல்கள் வெளியாயின. இவரை அறிந்தோரெல் லாம் இவரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். இவரு டைய கல்வி அறிவு, தமிழ்ப் புலமை, கற்பிக்கும் ஆற்றல், கவிதை இயற்றும் திறன், நேர்மை, பண்பாடு முதலிய பல இனிய குணங்கள் பற்றித் திருவிதாங்கூர் பெருமக்கள் நன்கு உணர்ந்து இவரைப் போற்றி வரலாயினர். சுருங்கக் கூறின் அக்காலத் தமிழ்ச் சமூகம் இவரிடம் பெருமதிப்பு கொண்டிருந்தது.

எழுத்து வடிவங்கள்: திருவனந்தபுரத்திலிருந்து பண்டித முத்துசாமிப் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த ''தமிழன்'' என்ற இதழிலும், ''கேரள சொசைட்டி பேப்பர்' முதலிய இதழ்களிலும் இவருடைய பாடல்களும் ஆய்வுரைகளும் வெளிவந்து கொண்டிருந்தன. 'மருமக்கள்

மான்மியம்' என்ற நகைச்சுவை நூல் பகுதிப் பகுதியாக 'தமிழனில்' வரத் தொடங்கியது. 'யதார்த்தவாதி' என்ற புனை பெயரில் 'நாஞ்சி நேசன்' என்ற இதழில் பல தமிழ்க் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'செந்தமிழ்' என்ற திங்கள் இதழிலும் இவரது கவிதைகளில் சில வெளிவந்தன.

இவை தவிர, 'மலரும் மாலையும்' (கவிதைத் தொகுதி) என்ற கவிதை நூலைக் காரைக்குடி 'புதுமைப் பதிப்பகம்' என்ற நிறுவனம் வெளியிட்டது (1938). 'ஆசிய சோதி' என்ற நூலும் இப்பதிப்பகமே வெளியிட்டது (1941). இதே ஆண்டில் இப்பதிப்பகம் 'இளந்தென்றல்' என்ற தலைப்பில் குழந்தைப் பாடல்களை வெளியிட்டது. 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற நூலும் இப்பதிப்பகத்தின் மூலம் அச்சு வடிவம் பெற்றது (1942). 'தேவியின் கனிகள்' என்ற தலைப்பில் திருவல்லிக்கேணி ஸ்டார் பிரசுரம் வெளியிட்டது (1945). இதில் 'மலரும் மாலை'யில் வெளிவந்துள்ள சரசுவதி துதி, 'குழந்தை', 'தாலாட்டு', 'கிளி', 'பசுவும் கன்றும்', 'சந்திரன்', 'முத்தம் தா' என்னும் ஏழு கவிதைகள் அடங்கியிருந்தன. 'உமார்க்கய்யாம்' என்ற நூலை கவிக்குயில் வெளியீடு மூலம் வெளிவந்தது (1945). 'காதல் பிறந்த கதை' (கவிதைத் தொகுதி) அருள் நிலைய வெளியீடாக வெளிவந்தது (1947). 'தேவியின் கீர்த்தனங்கள்' என்ற நூல் பாரி நிலையம் வெளியிட்டது (1953). இந்தப் பதிப்பகம் 'கவிமணியின் உரைமணிகள்' என்ற வசன இலக்கியத்தையும் வெளியிட்டது (1953).

1951 முதல் கவிமணியின் (1) 'மலரும் மாலையும்', (2) 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' (3) 'உமார்கய்யாம்' (4) 'ஆசிய சோதி' (5) 'தேவியின் கீர்த்தனங்கள்' முதலியவற்றைப் பாரி நிலையத்தார் பதிப்புரிமை பெற்று வெளியிட்டு வருகின்றனர்.

கவிமணியின் வரலாற்று நூல்கள்: *'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை வரலாறு' என்ற தலைப்பில் கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதி வெளியிட்டார் (1945). 'கவி மணி வரலாறு' என்ற நூலை வித்துவான் செ.சதாசிவம் பிள்ளை எழுதி வெளியிட்டார் (1948). இந்த நூல்களின் உரிமை இவர் மருகர் குமாரசாமிப் பிள்ளையிடம் (1950 முதல்) இருந்து வருவதாக அறியக் கிடக்கின்றது.*

பட்டமும் பரிசுகளும்: *1940-இல் 'கவிமணி' என்ற விருது இவருக்கு வழங்கப் பெற்றது.* 'தேவியின் கீர்த்தனங் கள்' என்னும் இசை நூல் *தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசும் (1956),* 'குழந்தைச் செல்வம்' *என்னும் கவிதைத் தொகுதிக்கு சென்னை அரசாங்கக் கல்வித் துறையின்* (D.P.I.) *பரிசும் (1957) பெற்றன.*

வாழ்விடம்: *ஓய்வு பெற்றபின் கவிமணி நாகர்கோவில் நகருக்கு வட திசையில் சுமார் இரண்டு கல் தொலைவி லுள்ள தமது துணைவியாரின் பிறந்தகமாகிய புத்தேரி என்ற சிற்றூரைத் தமது அமைதியான வாழ்க்கைக்குரிய இடமா கத் தேர்ந்தெடுத்துக் கொண்டு தமிழ் நூல்களையும் ஆங் கில நூல்களையும் படித்து அநுபவிப்பதிலும் கல்வெட்டு கள் முதலியவற்றை ஆய்வதிலும் பொழுது போக்கிக் கொண்டு வந்தார். இடையிடையே பலர் விருப்பத்திற் கிணங்க தமிழ்க் கவிதைகளை இயற்றி அவர்களை மகிழ் வித்துக் கொண்டிருந்தார்.* [2]

2. இக்கால கட்டத்தில் 1948 மே மாதத்தில் குடும்பத்துடனும் வேறு ஒரு நண்பர் குடும்பத்துடனும் திருத்தலப் பயணம் மேற்கொண்டிருந்த பொழுது நாகர்கோ விலை 3 நாள் தங்குமிடமாகக் கொண்டு (க.о. சுப்பிரமணிய பிள்ளை புத்தகக் கம்பெனியில்) சுசீந்திரம் கன்யாகுமரி முதலான இடங்களைச் சுற்றிப் பார்த்த பொழுது புத்தேரிக்குச் சென்று கவிமணியிடம் 30 மணித் துளிகள் உரையாடி யதை நினைவு கூர்கின்றேன்.

பாராட்டுகள்: கவிமணியின் நூல்கள் தமிழ் கூறு நல்லுலகில் உலாவத் தொடங்கியதும் நாடளாவிய பாராட்டுகளும் வந்து குவியத் தொடங்கின. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவேன்.

1. காரைக்குடிக்கருகிலுள்ள ஆத்தங்குடி என்ற சிற்றூரில் நகரத்தார் சார்பாக ஒரு பாராட்டு நடைபெற்றது (மே 11, 1943).

2. மதுரையில் பாரதியார் கட்டடம் திறந்து வைத்தார் (செப்டம்பர் 11, 1944).

3. செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் உபசரித்து (மே, 12, 1943) வெள்ளிப் பாத்திரங்கள் பரிசளித்தார்.

4. திருநெல்வேலி கலை அன்பர்கள் கவிமணியை வரவேற்றுப் பாராட்டினர் (செப்டம்பர், 26, 1944).

5. கவிமணியின் 70-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவாகக் கொண்டாடப் பெற்றது. இதன் நினைவாக 'கவிமணி மலர்' வெளியிடப் பெற்றது (1945).

6. நாகர்கோவிலில் நடைபெற்ற மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பங்கு கொண்டு வரவேற்புரை நிகழ்த்தினார் (1948).

7. கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழ்நாட்டின் தென்குமரி எல்லை மாநாட்டைத் திறந்து வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார் (சனவரி, 6, 1950).

8. டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமையில் பொன்னாடை போர்த்தப் பெற்று பாராட்டு பெற்றார் (அக்டோபர், 1950).

9. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கண்ணியப் பொறுப்பில் தமிழ்ப் பேராசிரியராக அமரும்படி வேண்டுகோள் விடுத்தது. (திசம்பர், 1950).

*10.* திருவாவடு துறை மகா சந்நிதானம் தவத்திரு அம்பல வாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பொன் னாடை போர்த்திப் பாராட்டியது *(திசம்பர், 5, 1950).*

*11.* திருச்சி வானொலி நிலையம் கவிமணியை பேட்டி கண்டது. 'என்னை இயக்கிய இலட்சியம்' என்பது பற்றிய நிருபரின் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகள் பகர்ந்தார். *(ஏப்பிரல், 1951).*

*12.* திருவனந்தபுரம் வானொலி நிலையம் பேட்டி கண்டு கவிஞரின் பாடல்களை அவர்களே பாட ஏற்பாடு செய்தது *(மார்ச்சு 13, 1954).*

*13.* கல்கத்தா பாரதி சங்கத்தினர் கவிமணி பிறந்த நாள் விழா கொண்டாடிச் சிறப்புச் செய்தனர். பாரதி வழிப் பெருங்கவிஞருக்கு விழாக் கொண்டாடி முதல் வழிகாட்டி யாக அமைந்தனர் *(ஆகஸ்டு 8, 1956).*

**சிவப்பேறு:** நம்மிடையே இருந்து அன்பு காட்டி அறம் பெருக்கி வாழ்வாங்கு வாழ்ந்து, நமக்கு வழிகாட்டிய கவிமணி அவர்கள் தம் புகழ் நிலை பெறச் செய்து பொன்னுலகமடைந்தனர். *(செப்டம்பர், 26, 1954).*

**நினைவுச் சின்னங்கள்:** *(1)* திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தில் தம் அன்னையார் பெயரில் பரிசு வழங்குவதற் காக அறக்கட்டளை நிறுவுதல் *(1944).*

*(2)* கவிமணி பிறந்த தேரூரில் தேரூர்ப் பெருமக்கள் 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என்னும் பெயரால் பெரியதொரு மண்டபம் நிறுவித் தமது பேரன்பினை வெளியிட்டனர். இஃது இச்சிற்றூரின் நடுநா யகமாய், கலை நிலையமாய், கண்டவர்தம் கண்ணையும் கருத்தையும் கவர்வதாய் அமைந்து திகழ்கின்றது *(மே, 1952).*

*(3)* நாகர்கோவில் நகரில் 'கவிமணி நிலையம்' உருவாகி யுள்ளது. கவிமணி தாம் படித்து அநுபவித்துப் போற்றிய

நூல்களையெல்லாம் இந்நிலையத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள் (ஜூலை, 1953).

(4) புத்தேரியில் கவிமணி இறுதியாக இருந்து அமைதியுடன் வாழ்ந்து மறைந்த இடத்தில் அவர் மருகர் 'கவிமணி இல்லம்' எனப் பெரிய அழகிய மாளிகை அமைத்துள்ளனர். இம்மாளிகையில் கவிமணி அவர்களின் வாழ்க்கையை நினைவூட்டும் பல உருவப் படங்களும், பிற சின்னங்களும் அமைந்துள்ளன. இது கவிமணி அவர்களை நினைவு கூரும் வகையில் சிறந்ததொரு நிலையமாகத் திகழ்கின்றது (நவம்பர் 21, 1955).

# 2. குழந்தை - சிறுவர் இலக்கியம்

இந்த வகை இலக்கியத்திற்கு முதன் முதல் வித்திட்டவர் பாரதியார். 'பாப்பாப் பாட்டு', 'புதிய ஆத்தி சூடி', 'முரசு' என்ற பாடல்களில் இப்பண்பைக் காணலாம். 'முரசு' என்ற தலைப்பில் காணப்படும் பாடல்களில் இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கருத்துகள் சாகாவரம் பெற்றுத் திகழ்கின்றன.

இவரைப் பின்பற்றி பாவேந்தர் பாரதிதாசன் (1) ஒரு தாயின் உள்ளம் மகிழ்கின்றது, (2) இளைஞர் இலக்கியம் என்ற இரண்டு தனி நூல்களை இயற்றி சிறுவர் இளைஞர் இலக்கியப் படைப்பை மேலும் பெருக்கியுள்ளார்.

இந்த இரண்டு கவிஞர் பெருமான்களில் அடிச்சுவட்டில் கவிமணி நடைபோடுகின்றார். இவர்தம் படைப்புகளை நோக்குவோம். இந்த வகை இலக்கியத்தின் பெருமையினை நாமக்கல் கவிஞர்,

'கோழி குலவிவரும் கிளிகொஞ்சும்
குழந்தை எழுந்து துள்ளிக் களிமிஞ்சும் [1]

என்று இவர்தம் இலக்கியத்தைப் புகழ்ந்து பேசுவார்.

'மலரும் மாலையும்' என்ற இவர்தம் படைப்பில் 'மழலை மொழி' என்ற பகுதியில் காணப்பெறும் 'முத்தந் தா' என்பது முதல் 'பாண்டியாடுதல்' முடியவுள்ளப் பதினாறு பாடல்களும் குழந்தையநுபவத்தையொட்டிய பாடல்களேயாகும்.

'கண்ணே! மணியே! முத்தந்தா
கட்டிக் கரும்பே முத்தந்தா;

1. மலரும் மாலையும் - சிறப்புப் பாயிரங்கள்

வண்ணக் கிளியே! முத்தந்தா,
வாசகக் கொழுந்தே முத்தந்தா'

இந்தப் பாடல் மழலையருக்குப் பொருத்தமான பாடல் நுகர்வினையால் கருவறையில் பத்துத் திங்கள் கிடந்து இப்பூவுலகிற்கு வரும் குழந்தையின் முத்தத்தைப் பெற்றோர்களும் உற்றோர்களும் பெறுவதற்கு ஆர்வம் காட்டும் போது அனைத்துலக நாயகனான முருகன் குழந்தையாகப் பிறக்கும் போது அவனது முத்தத்தை ஆன்ம கோடிகள் பெறுவதற்கு அலைவதைச் சொல்ல வேண்டுமோ? பிள்ளைத் தமிழ் ஆசிரியர்கள் முத்தப் பருவத்தின் முருகனது முத்தத்தை வருணித்து அநுபவிப்பது சொல்லுந்தரமன்று.

பகழிக் கூத்தர் முருகனது முத்தத்தைப் பெற ஆர்வமுற்றிருப்பதை அவரது கவிதை காட்டுகின்றது. ''ஒலிக்கின்ற அலைகள் நிறைந்த கருப்பமுள்ள வலம்புரிகளை எடுத்தெறிய, அவை கரையில் தவழ்ந்து சென்று கருவுயிர்க்கும் முத்துக்களுக்கு விலையுண்டு; மும்மதங்களைப் பொழியும் யானைகளின் பிறை மருப்புகளில் பிறக்கும் தரளத்திற்கும் விலையுண்டு; நெற்பயிர்கள் வளர்ந்து முதிர்ந்து சாய்ந்த நிலையில் ஈனும் குளிர் முத்தினுக்கும் வில்லையுண்டு; மேகங்கள் தரும் நித்திலங்களுக்கும் விலையுண்டு; முருகா! நின் கனிவாய்,

''முத்தம் தனக்கு விலையில்லை;
முருகா முத்தம் தருகவே;
முத்தம் சொரியும் கடல் அலைவாய்
முதல்வா! முத்தம் தருகவே'' [2]

இவ்வாறு முருகனை வேண்டுகின்றார் கவிஞர்.

2. திருச்செந்தூர் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் - முத்தப் பருவம்

குமரகுருபர அடிகள் வைத்தீசுவர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் 'முத்தையா' என்று செல்லப் பெயர் கொண்ட முருகப் பெருமானை முத்தம் தருமாறு வேண்டுவது அற்புதம். "இந்த அண்டங்களையெல்லாம் ஈன்ற என் அம்மையின்,

"முலைப்பால் நாறும் செங்கனிவாய்
முத்தம் தருக முத்தமே;
மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி
முருகா முத்தம் தருகவே"[3]

இவ்வாறு முத்தம் தருமாறு முத்தையாவை வேண்டுகின்றார்கள் அடிகள். அந்தகக் கவி வீரராகவ முதலியார் சேயூர் முருகனை வேண்டுவது:

"செஞ்சாறு இழைத்தது எனும்மழலைத்
திருவாய் முத்தம் தருவாயே
செய்கைக் கரசே மயிற்கரசே
திருவாய் முத்தம் தருவாயே"[4]

கந்தப்ப தேசிகர் திருத்தணிகை முருகப் பெருமானை வேண்டுவது:

"கைவாய் மழுவும் கறைமிடறும்
கண்ணார் நுதலும் பிறைமுடியும்
கவிதைத் தோன்றும் சிவனிடத்தில்
கலந்த உமையாள் உடன்பிறந்த
மொய்வான் அறுமீன் உவந்தளித்த
முத்தே முத்தம் தருகவே,
மூலாத் திரியில் எழுஞான
முளையே முத்தம் தருகவே."[5]

3. முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் - முத்தப் பருவம்
4. சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் - முத்தப் பருவம்
5. திருத்தணிகை பிள்ளைத் தமிழ் - முத்தப் பருவம்

இங்ஙனம் பிள்ளைத் தமிழ் நூல்கள் குழந்தைக் கடவுளின் முத்தத்தைப் பற்றிச் சிறப்புடன் பேசுகின்றன.

தாலாட்டு: கல்வியறிவில்லாத மகளிர் ஏதோ தாலாட்டுப் பாடல்கள்[6] பாடுவதை இன்றும் காணலாம். பெரியாழ்வார் 'தாலே தாலேலோ' (தால் நாக்கு) என்று சொல்லிக் குழந்தைக் கண்ணனை தாலாட்டுவதைக் காணலாம். பிள்ளைத் தமிழ் இலக்கணம் 'தாலப்பருவம்' என்று இதனைக் குறிப்பிடும். கவிமணி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். தாலாட்டுப் பாடல்கள் பல ஞானச்செல்வர்களையும், பல கடவுளர்களையும் அறிமுகம் செய்வனவாக அமைந்திருக்கும் நேர்த்தி அற்புதம்.

நெஞ்சிற் கவலையெலாம்
நீங்கத் திருமுகத்தில்
புன்சிரிப்பைக் காட்டி,எம்மை
போற்றும் இளமதியோ? (6)

பல்லக்கில் அம்மான்
பவனி வரும்பொழுது
மெல்ல மடியிருந்து
விளையாடும் பைங்கிளியோ? (7)

என்பன போன்றவை பொதுவானவை.

பூமாலை வாடும்,மணம்
பொன்மாலைக் கில்லையென்று
பாமாலை வைத்தீசன்
பாதம் பணிபவனோ? (8)

இதில் பாமாலை வைத்து ஈசன் பாதத்தைப் பணிந்தவர் அப்பர் பெருமான் என்பது குறிப்பிடப் பெறுகின்றது.

6. ம.மா. தாலாட்டு

பாலமுதம் உண்டுதமிழ்ப்
    பாமாலை பாடி,இந்தத்
தாலம் புகழவரும்
    சம்பந்தன் நீதானோ? (9)

என்ற பாடலில் ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடப் பெறுகின்றார்.

கொன்றையணிந் தம்பலத்தில்
    கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னாக
    வளர்ந்தவனும் நீதானோ? (10)

என்ற இப்பாடலில் சுந்தரமூர்த்தி அடிகள் குறிப்பிடப் பெறுகின்றார்.

கல்லைப் பிசைந்து
    கனியாக்கும் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
    தொடுத்தவனும் நீதானோ? (11)

என்ற பாடலில் மணிவாசகப் பெருமான் குறிப்பிடப் பெறுகின்றார்.

பூவில் அயனும்,இந்தப்
    பூமீது வள்ளுவர்தம்
பாவின் நயம்உணரப்
    பாலகனாய் வந்தானோ? (12)

என்ற பாடலில் வள்ளுவர் பற்றிய குறிப்பு வருகின்றது.

கம்பர் கவியின்
    கவியமுதம் உண்டிட,மால்
அம்புவியில் வந்திங்கு
    அவதாரம் செய்தானோ? (13)

*என்ற பாடலில், கம்பன், திருமால் பற்றிய குறிப்புகள் வருகின்றன.*

தேவாரப் பாகும்
 திருவாசகத் தேனும்,
நாவாரஉண்ண எம்மான்
 நன்மகவாய் வந்தானோ? (14)

*என்ற பாடலில் தேவார திருவாசகக் குறிப்புகள் வருகின்றன.*

நாலா யிரக்கவியின்
 நல்லமுதம் உண்டிட,மால்
பாலாழி நீங்கியொரு
 பாலகனாய் வந்தானோ? (18)

*என்ற பாட்டில் 'நாலாயிரம்' பற்றிய குறிப்பு வருகின்றது. இவ்விடத்தில் சீர்திருத்தக் கவிஞரான பாவேந்தரின்,*

சொற்கோவில் நற்போற்றித் திருஅகவல்
 செந்தமிழில் இருக்கும் போது
கற்கோவில் உட்புறத்தில் கால்வைத்தது
 எவ்வாறு சகத்திர நாமம்!
தெற்கோதும் தேவாரம் திருவாய்நன்
 மொழியான தேனி ருக்கச்
செக்காடும் இரைச்சலென வேதபா
 ராயணமேன் திருக்கோயி லின்பால்? [7]

*என்ற பாடல் நினைவிற்கு வருகின்றது. இது நிற்க.*

*தவிர கவிமணியின் தாலாட்டுப் பாடல்களில் முருகன், கண்ணன் ஆகியோரும் வருகின்றனர். இவர்தம் இளமைத் திருவிளையாடல்கள் சிறுவர்களின் மனத்தைச்*

7. பாவேந்தர் - தமிழியக்கம் - பக்.28.

*சொக்கியிர்க்கும் அற்புத விசையைப் பெற்றுள்ளன அன்றோ"*

புள்ளி மயிலோடு
    புனங்காத்து நிற்கும்அந்த
வள்ளி மணவாளன்
    மதலையாய் வந்தானோ? (16)

*என்ற பாடலில் முருகன் பற்றிய குறிப்பும்,*

ஆயர் பதியில்
    அற்புதங்கள் செய்து நின்ற
மாயவனே இங்கெமக்கு
    மகவாகி வந்தானோ? (17)

பெண்கள் சிறுவீட்டைப்
    பேணாதழித்து, அவர்தம்
கண்கள் சிவக்கவைக்கும்
    கண்ணபிரான் நீதானோ? (19)

*என்ற பாடல்களில் தப்புகள் செய்வதற்கெனப் பிறந்த கண்ணபிரான் பற்றிய குறிப்புகள் அடங்கிக் கிடக்கின்றன.*

ஆரடித்தார் நீஅழுதாய்,
    அடித்தாரைச் சொல்லியழு;
சீரெடுத்த செல்வச்
    சீமான் திருக்குமரா! (20)

பாலை விரும்பினையோ?
    பணிகாரம் வேண்டினையோ?
சோலைப் பசுங்கிளியே!
    சுந்தரமே! சொல்லிஅழு (21)

சப்பாணி கொட்டித்
தளர்ந்தனையோ? அல்லதுன்றன்
கைப்பாவை காக்க
கலங்கி அழுதனையோ? (22)

தித்திக்குந் தேனும்
தினைமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள்,
அழவேண்டாம்; கண்மணியே! (23)

மாங்கனியும், நல்ல
வருக்கைப் பலாக்கனியும்
வாங்கியுன் அம்மான்
வருவார்; அழவேண்டாம் (24)

கண்ணுறங்கு; கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு (25)

*என்கின்ற பாடல்கள் பாடிய வாய் தேனூறச் செய்கின்றன. பாடல்கள் யாவும் பக்தி இலக்கியங்களை அறிமுகம் செய்வனவாயும், ஞானச் செல்வர்களையும், மாபெருங் கவிஞர்களையும் அறிமுகம் செய்வனவாயும் அமைந்துள் ளன. தமிழின் குழைவும் இனிமையும் பாக்களில் ததும்பி நிற்கின்றன.*

*இவ்விடத்தில் பாவேந்தர் பாரதிதாசனின் தாலாட்டுப் பாடல்களையும் நினைவு கூரலாம். அவர் ஆண் குழந்தை பெண் குழந்தை இவர்கட்குத் தனித்தனியே பாடல்கள் பாடியுள்ளார்.*

### ஆண் குழந்தைக்கு

சின்ன மலர்வாய் சிரித்தபடி பால்குடித்தாய்
கன்னலின் சாறே! கனிரசமே! கண்ணுறங்கு!

போராடிப் போராடிப் பூக்காமல் காய்க்காமல்
வேரோடு பேர்க்கவந்த வீரா! இளவீரா!

வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்

மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா! இளந்தோளா! கண்ணுறங்கு!

எல்லாம் அவன்செயலே என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும்

காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர்என உரைக்கும் வீணருக்கும்

மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே,என் செந்தமிழே! கண்ணுறங்கு

## பெண் குழந்தைக்கு

அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே!

மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும் கர்ப்பூரப் பெட்டகமே!

வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி!

தெய்விகத்தை நம்பும் திருந்தாத பெண்குலத்தை
உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே!

எல்லாம் கடவுள்செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே!

வாயிலிட்டுத் தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கைக்
கோயில்என்று காசுதரும் கொள்கை தவிர்ப்பவளே!

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமிஎன்பார் செய்கைக்கு
நாணி உறங்கு; நகைத்துநீ கண்ணுறங்கு!

இவரது பாடல்களில் இறை மறுப்பு, சீர்திருத்தக் கருத்து கள் முதலியவை மிளிர்கின்றன. கவிமணியின் பாடல்கள் அழுகின்ற குழந்தையை உறங்க வைக்கும் பாணியில் அமைந் துள்ளன.

பள்ளி எழுச்சி: குழந்தைகளைத் துயிலெழுப்புவது பற் றியும் சில பாடல்களை ஆக்கியுள்ளார் கவிமணி[8]

அப்பா எழுந்திரையா!
அரசே எழுந்திரையா!
கொக்கொக்கே என்று
கோழிஅதோ கூவுதுபார்! (1)

காகாகா என்று
காகம் பறக்குதுபார்!
கிழக்கு வெளுக்குதுபார்!
கிரணம் பரவுதுபார்! (2)

கறவைப் பசுவைஅதன்
கன்றுசுற்றித் துள்ளுதுபார்!
பால்குடிக்க வேண்டாமோ?
பழம்தின்ன வேண்டாமோ? (4)

பாடல்கள் எல்லாம்
படித்திட வேண்டாமோ?
சீக்கிரம் பள்ளிக்குச்
சென்றிட வேண்டாமோ? (5)

காலையும் ஆச்சுதய்யா!
கண்விழித்துப் பாரையா!
அப்பா எழுந்திரையா!
அரசே எழுந்திரையா! (6)

8. ம.மா.,மழலை மொழி - அரசே எழுந்திரு.

இப்படிச் செல்லுகின்றன பாடல்கள். இவை சிறுவனை நோக்கிப் பாடப் பெற்றவை. தாய்மார்கள் சிறுவனை 'ராஜா, ராஜா' என்று விளிப்பதைப் பார்க்கின்றோம். கவிமணி 'அரசே!'என்று அவனை விளக்கின்றார்.

பேச்சுப் பயிற்சி: சற்றுக் குழந்தை வளர்ந்த நிலையில் தாயும் குழந்தைப் பள்ளி ஆசிரியர்களும் குழந்தைகட்குப் பேச்சுப் பயிற்சி தர வேண்டும். அப்போதுதான் குழந்தையின் நாக்கு திருந்தும். 'சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்' அல்லவா? இதற்கேற்ற முறையில் வீட்டுப் பிராணிகளை அழைக்கும் பாங்கில் சில பாடல்களைப் பாடியுள்ளார் கவிமணி. பேச்சுப் பயிற்சி தருவதற்கு ஏற்ற பாடல்கள்[9]

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி (1)

முத்தம் கொடுக்குது
வெள்ளைப் பசு - மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி. (4)

குழந்தைகளை இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பசுவுக்கு ஒரு குழுவும், கன்றுக் குட்டிக்கு ஒரு குழுவுமாகப் பெயரிட்டு முதலிரண்டு அடிகளை ஒரு குழு பாடி மூன்று நான்கு அடிகளை மற்றொரு குழு பாடுமாறு பயிற்சி தரலாம்.

9. மழலை மொழி - பசுவும் கன்றும்

**காக்காய் பற்றியவை:**

காக்காய்! காக்காய்! பறந்துவா;
கண்ணுக்கு மை கொண்டுவா; (1)

கோழி! கோழீ கூவிவா;
குழந்தைக்குப் பூகொண்டுவா; (2)

வெள்ளைப் பசுவே! விரைந்துவா;
பிள்ளைக்குப் பால்கொண்டுவா! (3) [10]

*இப்பாடல்களை குழந்தைகளைப் பாடச் சொன்னால் நன்றாகவும் உற்சாகமாகவும் பாடுவார்கள்.*

கோழியைப் பற்றியவை: *சேவற் கோழி, பெட்டைக் கோழி இவை பற்றித் தனித்தனியே பாடல்கள் உள்ளன.* [11]

கோழீ! கோழீ! வாவா!
கொக்கோ கோஎன்றுவா;
கோழீ ஓடி வாவா;
கொண்டைப் பூவைக் காட்டுவா (1)

குத்திச் சண்டை செய்யவோ?
குப்பைக் கிண்டி மேயவோ?
கத்தி போலுன் கால்விரல்
கடவுள் தந்து விட்டனர்! (2)

காலை கூவி எங்களைக்
கட்டில் விட்டெ ழுப்புவாய்;
வேலை செய்ய ஏவுவாய்!
வெற்றி கொண்ட கோழியே! (3)

*10. மழலை மொழி - காக்காய்*

*11. மேலது - மேலது - கோழி.*

இவை சேவற் கோழியைப் பற்றியவை.

கோழீ! கோழீ! வாவா!
　　கூரைவிட் டிறங்கிவா;
கோழீ முட்டை இடவா;
　　கூட்டில்அடை காக்க வா. (4)

பெட்டைக் கோழீ! வாவா!
　　பிள்ளைகளைக் கூட்டிவா!
குட்டை நெல்லைக் கொட்டினேன்;
　　கொத்திக் கொத்தித் தின்னவா (5)

வஞ்ச மாய்ப்ப ருந்து அதோ!
　　வானில் வட்டம் போடுது
குஞ்ச ணைத்துக் காப்பாயோ?
　　கூட்டில் கொண்டு சேர்ப்பாயோ? (6)

இவை பெட்டைக் கோழியைப் பற்றியவை. பயிற்சி தந்தால் இவற்றைக் குழந்தைகள் ஆர்வமாய்ப் பாடும். இவற்றைக் கற்பிக்கும்போது சேவலுக்குக் கொண்டை உண்டு, அதுதான் விடியற்காலையில் கூவுவது, அதுதான் கோழிப் போரில் பங்கு கொள்ளுவது என்ற கருத்துகளும்; பெட்டைக் கோழிக்குக் கொண்டை இல்லை, அதுதான் முட்டையிட்டு அடை காக்கும், இரை தேடப் போகும் போது குஞ்சுகளைக் கூட்டிச் செல்லுவதும், பருந்தினால் தன் குஞ்சுகளுக்கு வரும் விபத்தை அதுவே காக்கும் என்ற கருத்துகளும் குழந்தைகளின் மனத்தில் ஆழப்பதியும்.

கிளியை அழைத்தல் பற்றி: இதுபற்றி ஏழு பாடல்கள் உள்ளன.[12] எல்லாமே குழந்தைகள் பாடுவதற்கு ஏற்றவை. அவற்றுள் சில:

12. மழலை மொழி - கிளியை அழைத்தல்

பச்சைக் கிளியே வாவா;
பாலும் சோறும் உண்ணவா;
கொச்சி மஞ்சள் பூசவா!
கொஞ்சிவிளை ஆட வா (1)

கவலை யெல்லாம் நீங்கவே,
களிப்பெழுந்து பொங்கவே
பவழ வாய் திறந்துநீ
பாடுவாயோ தத்தம்மா! (2)

வட்ட மாயுன் கழுத்திலே
வான வில்லை ஆரம்மா
இட்ட மன்னர் யாரம்மா?
யான் அறியக் கூறம்மா! (3)

பையப் பையப் பறந்துவா
பாடிப் பாடிக் களித்துவா
கையில்வந் திருக்க வா
கனியருந்த ஓடிவா (4)

*ஆசிரியை(யர்) தக்க பயிற்சியளித்தால் இப்பாடல்அற்புதமாகப் பாடி மகிழ்வார்ரகள் சிறுவர் சிறுமியர்.*

*கூண்டுக்கிளி பற்றி[13] உள்ள பாடல்கள் சிறுவனும் கிளியும் உரையாடும் பாங்கில் அமைந்துள்ளன.*

*சிறுவன் கிளியை நோக்கி வினவுகின்றான்:*

பாலைக் கொண்டு தருகின்றேன்,
பழமும் தின்னத் தருகின்றேன்;
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்ப தேன்கிளியே! (1)

13. மேலது - கூண்டுக் கிளி

காட்டி லென்றும் இடைதேடிக்
களைத்தி டாயோ? உனக் கிந்தக்
கூட்டில் வாழும் வாழ்வினிலே
குறைகளேதும் உண்டோ,சொல்! (2)

கிளி சிறுவன் விடுத்த வினாவுக்கு மறுமொழி தருகின்றது:

சிறையில் வாழும் வாழ்வுக்குச்
சிறகும் படைத்து விடுவானோ?
இறைவன் அறியாப் பாலகனோ?
எண்ணி வினைகள் செய்யானோ? (3)

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை;
சோலை எங்கும் கூவிநிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா! (4)

இந்தப் பாடல்களையும் சிறுவர்களைக் குழுவாகப் பிரித்துக் கொண்டு கற்பிக்கலாம். பள்ளி விழா நிகழ்ச்சிகளில் இரு சிறுவர்களைக் கொண்டு பாடுமாறு நிகழ்ச்சி அமைக்கலாம்.

நாயைப் பற்றியவை: வீட்டில் செல்லமாக வளர்க்கப்பெறும் செல்ல பிராணிகளுள் நாய் மிகவும் முக்கியமானது. பெரும்பாலும் இன்றைய வாழ்வில் செல்வர்கள் வீடுகளில் ''நாய்கள் ஜாக்கிறதை'' என்ற பெயர்ப் பலகையைக் காணலாம். இஃது அந்த வீட்டில் நாய்கள் இருப்பதைக் குறிப்பிடுகின்றது. தம்மைக் காத்துக் கொள்வதற்காகவே நாய்களை வளர்க்கின்றனர் செல்வர்கள். நாயைப் பற்றிய பாடல்கள்;

வீட்டு வாசல் காப்பவன்,
வேட்டை யாட வல்லவன்,
ஆட்டுக் கிடைப் பாண்டியன்,
அன்பு மிக்க தோழன் (1)

உண்ட சோற்றை எண்ணி
உயிரும் விடத் துணிபவன்,
மண்டலத்தில் நாய்போல்
வாய்த்த துணை உண்டோ? (2)

*குழந்தை மனத்திற்கு ஏற்ற பாடல்கள் இவை.*

பாண்டியாடுதல்: *சிறுமியர்கட்கு ஏற்ற விளையாட்டு. அவர்களை மனங்கவரும் விளையாட்டு. இத்தலைப்பில் ஆறு பாடல்கள் உள்ளன.*

பாங்கி தோழி, பங்கஜம்!
பாண்டி யாட வாராயோ?
பாட்டி எனக்குப் பரிசளித்த
பல்லாங் குழியைப் பாரிதோ! (1)

மாமா நேற்று வாங்கித் தந்த
மாணிக் கத்தைப் பாரிதோ!
அத்தை தந்த கட்டிமுத்தின்
அழகை வந்து பாரிதோ! (2)

சேரருக்கு மங்க ளங்கள்
செப்பி விளை யாடலாம்;
சோழ ருக்குச் சோபனங்கள்
சொல்லி விளை யாடலாம்; (3)

பாண்டி யர்க்குப் பல்லாண்டு
பாடி விளை யாடலாம்!
உண்ணும் பாண்டி யாடலாம்.
ஓய்ந்து விட்டால் நிறுத்தலாம் (4)

*திருமணத்தில் பெண்ணையும் மாப்பிள்ளையையும் நலுங்கு முதலியவை நடைபெறும் போது இந்த விளை யாட்டில் விடுவார்கள். இதில் பழக்கமில்லாத அப்பாவி மாப்பிள்ளை பெரும்பாலும் தோற்று விடுவதே நடை*

முறை. பெண்ணின் தோழியர் யாவரும் பெண்ணின் வெற்றியைக் கைகொட்டிச் சிரித்து மகிழ்வார்கள். மாப்பிள்ளை முகத்தில் அசடு வழியும்.

இன்னும் இந்தப் பகுதியில் பொம்மைக் கலியாணம், எலிக் கலியாணம், புலிக்கூடு, பசு, பால், காலைப் பாட்டு என்ற தலைப்புகளில் பல குழந்தைப் பாடல்கள் உள்ளன. அவை யாவும் சிறுவர்கள் விளையாட்டுக்கும் வாய்மொழிப் பயிற்சிக்கும் ஏற்றவையாகும். 'காட்சி இன்பம்' என்ற பகுதியில் உள்ள 'கடிகாரம்', 'சைக்கிள்', 'ஆகாய விமானம்' பேன்ற பாடல்கள் குழந்தைகள் ஆர்வமாய் படிக்கத் தூண்டுபவை. 'கதைப் பாட்டு' என்ற தலைப்பில் உள்ள 'ஊகமுள்ள காகம்', 'நெற்பானையும எலியும்', 'அப்பம் திருடின எலி', 'ஔவையும் இடைச் சிறுவனும்' என்ற கதைப் பாடல்கள் சிறுவர்கள் சுவைத்துக் களித்துப் படிக்கத் தக்கவை; பாடி மகிழத்தக்கவை.

இவை தவிர, 'உள்ளமும் உணர்வும்' என்ற பகுதியில் உள்ள பல பாடல்களைச் சிறந்த குழந்தை இலக்கியமாகக் கருதலாம். 'குழந்தை' என்ற தலைப்பில் உள்ள பாடல்கள் தாயும் சேயும் உரையாடும் பாணியில் அமைந்துள்ளன.

எங்கே இருந்து வந்தாய்? குழந்தாய்! - அதை
    யானும் அறிந்திடச் சொல், குழந்தாய்!
எங்கும் நிறைவெளியில் இருந்தேன் - சற்றே
    இங்கும் இருக்க வந்தேன், அம்மா! (1)

கண்ணில் ஒளிவிளங்கக் கண்டேன் - அந்தக்
    காட்சியின் காரணம்என்? குழந்தாய்!
விண்மீன் ஒளிசிறிது தங்கி - அங்கு
    மின்னி விளங்குகின்ற தம்மா! (3)

மனமிக மகிழ்ந்திடக் குழந்தாய்! - நீயென்
    மடியில் வந்தவகை எதுவோ?

தினமும்நீ செய்தபெருந் தவத்தால் - அந்தத்
திருவருள் கூட்டிவைத்த தம்மா! (12)

இத்தலைப்பிலுள்ள பன்னிரண்டு *பாடல்கள் படித்து அநுப விக்கத் தக்கவை.*

*'முதல் துயரம்' என்ற தலைப்பில் உள்ள கவிதைகள் உள்ளத்தை உருக்குபவை.*

*'பிள்ளை' கூறுவனவாக உள்ளவை:*

தும்பி பாடுதம்மா! - கிளிபயில்
சோலை தேடு தம்மா!
தம்பி எங்கே? அம்மா! - விளையாடத்
தனியே நின்றேன், அம்மா! (2)

சின்னஞ் சிறுபிஞ்சு - வெள்ளரியில்
செழித்தி ருக்கு தம்மா!
கன்னிக் காய்பறிக்கத் - தம்பியையும்
காணோமே, அம்மா! (4)

புனைந்த சித்திரம்போல் - வண்ணத்துப்
பூச்சி சுற்று தம்மா!
துணைவன் இல்லாமல் - யானும் அதைத்
தொடர்ந்து செல்லேன், அம்மா! (6)

*தாய் கூறுவனவாக அமைந்தவை:*

யார் அழைத்தாலும் - அவன்செவிக்கு
எட்ட மாட்டாதே;
பாரில் நம்மை அவன் - இனிவந்து
பார்க்க மாட்டானே. (8)

வாச மலரைப்போல் - வளர்ந்தவன்
வாடி விட்டானே;
ஈசன் சந்நிதியில் - விளையாடி
இருக்கின் றான்அப்பா! (9)

குயிலைத் தேடானோ? - கிளியொடு
கொஞ்ச வாரானோ?
மயிலை நோக்கானோ? - நம்மையெல்லாம்
மறந்தும் போனானோ? (10)

இனிய கதையெல்லாம் - அவனைப்போல்
யாவர் சொல்வாரம்மா!
கனியைச் செந்தேனை - இனிஎந்தக்
காலம் காண்பேன், ஐயோ! (13)

இதில் உள்ள பதின்மூன்று பாடல்களும் படித்து அநுபவிக்கத் தக்கவை.

'மூன்று விஷயங்கள்' என்ற தலைப்பில் உள்ள மூன்று பாடல்களும் உணர்ச்சிப் பிழம்பை எழுப்புபவை.

கூவிப் பறக்கும்ஒரு - கிளியினைக்
கூட்டில் அடைத்து வைத்தால்
தேவர் உலகமெல்லாம் - அதுசினத்
தீயை எழுப்பிடுமே! (1)

மன்னிய சோலையிலே - ஒருகுயில்
வாடி வருந்து மெனில்
கின்னரர் கிம்புருடர் - தளர்ந்துதம்
கீதம் இழப்பார் ஐயோ! (2)

சிட்டுக் குருவிக்கேனும் - ஒருசிறு
தீங்கினைச் செய்பவரை
நட்டநல் நண்பராக - உலகமும்
நம்பிக்கை கொள்வதுண்டோ! (3)

குழந்தைகளின் கல்வி: இவ்விடத்தில் உளவியல் அடிப்படையில் அமைந்த குழந்தைக் கல்வி முறைகள் பற்றிய சில சொற்கள்: மேனாட்டு அறிஞர்களில் ரூசோ, பெஸ்டலாஸ்ஸி, ஃபிராபெல், மாண்டிசாரி போன்ற அறிஞர்கள் குழந்

தைக் கல்வியில் அதிகக் கவனம் செலுத்திச் சில முறைக ளையும் வகுத்துக் காட்டியுள்ளனர். ரூசோவின் 'எமிலி' என்ற நூல்தான் புதிய முறைகளின் வித்து எனலாம். ரூசோவின் கல்வி பற்றிய கருத்துகள் தெளிவாக அதில் காணப் பெறுகின்றன. கல்வி கற்பிப்பதில் குழந்தைதான் முக்கிய கூறு, மனிதனின் பண்பாடல்ல என்பது ரூசோ வின் கருத்து. அதாவது குழந்தையை மையமாக வைத்துக் கல்வி புகட்ட வேண்டுமேயன்றி பாடப் பொருளை வலிந்து புகுத்தக் கூடாது என்பது இதன் கருத்தாகும். இதனால் ரூசோவைக் 'கல்வி முறையின் காபர்னீகஸ்' என்று கூறுகின்றனர். பூமியை நடுவாக வைத்துதான் ஏனைய கோள்கள் இயங்குகின்றன என்ற பழைய கொள்கையை காபர்னிகஸ் மறுத்துக் கதிரவனையே மையமாகக் கொண்டு ஏனைய கோள்கள் இயங்குகின்றன என்ற உண் மையை உலகிற்கு உணர்த்தியது போலவே, அதுகாறும் கல்வித் திட்டத்தினை நடுவாக வைத்துக் கற்பிக்கப் பெற்ற முறையைத் தவறு எனக் கண்டித்து, குழந்தையை நடுவாக வைத்துக் கற்பிக்கப் பெறவேண்டும் என்று கூறினார் ரூசோ. ''குழந்தையை நன்றாக ஆராய்க; குழந்தையை ஆராய்வது எளிதல்ல; 'குழந்தையைக் கவனி; இயற்கை யோடு இசைந்து நட' என்பவை ரூசோ கல்வித் துறையில் பணியாற்றுவோருக்கு வழங்கிய தாரக மந்திரங்கள். அவர் தந்த மந்திரங்கள் உளவியல் உண்மைகளை ஒட்டியும் உள்ளன. அன்றியும் அவர் புலன்கள் வாயிலாகத்தான் கற்பிக்க வேண்டும் என்று அழுத்தமாகக் கூறினார். புத்தக வாயிலாகப் புகட்டும் கல்வியை அந்த அறிஞர் ஆதரிக்க வில்லை.

ஸ்விட்ஸர்லாந்து நாட்டு அறிஞர் பெஸ்டலாஸ்ஸி என் பார் ரூசோவின் கொள்கையை வகுப்பறையில் நடை முறைப்படுத்தினார். அவர் குழந்தையை ஒரு விதையாகக்

கருதினார். விதைக்குள் எதிர்காலத்தில் பெரிய மரமாகும் ஆற்றல் சிறு வடிவில் - 'ஆலமர வித்தில் அருங்குறள் போல்' - உள்ளுறைந்திருப்பதைப் போலவே (Latent) பிற்காலத்தில் வெளிவர வேண்டிய பேராற்றல்கள் குழந்தைகளிடம் உள்ளுறைந்து கிடக்கின்றன என்று அவ்வறிஞர் எண்ணினார். அவ்வாற்றல்களை வெளிப்படுத்தலே (Patent) கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கருதினார். எனவே, புலன்கள் (Senses) வாயிலாகத் தான் கல்வி புகட்ட வேண்டும் என்று வற்புறுத்தினார். அவரும் புத்தகப் படிப்பை ஆதரிக்கவில்லை. இதனை வகுப்பறையில் ஒரு முறையாக வளர்த்தவர் மாண்டிசாரி அம்மையார் என்ற கல்வி முறை வித்தகர்.

கல்வி உலகில் தலை சிறந்து திகழ்ந்தவர் ஃபிராபெல் என்ற செருமானிய அறிஞர். அவர் இயற்கை அன்னையும் மனிதனும் ஒன்றாக இருந்து கொண்டு இறைவனுடைய திருவுளத்தை வெளிப்படுத்துகின்றனர் என்று நம்பினார்.[14] எனவே, குழந்தைகளின் ஆற்றல்கள் மலர்ச்சியடைதல் இறைவனின் திருவுளக் குறிப்புப்படி நிறைவேறுவதால் அவை தவறாகா என்று நம்பினார். ஆகவே, இயற்கையையொட்டிக் கல்வி கற்பித்தல் நடைபெற வேண்டும் என்பது அவர் கருத்தாகும். அவர் கொள்கைப்படி பள்ளி என்பது குழந்தைகளின் பூங்கா. பள்ளியில் கல்வி பயிலும் குழந்தைகள் பூங்காவில் வளரும் செடிகள். குழந்தைகளைக் கண்காணிக்கும் ஆசிரியர் செடிகளைப் பாதுகாக்கும் தோட்டக்காரன். எனவே, கற்கும் குழந்தைகள் தாமாகச் செயற்பட்டும் கருத்துகளைத் தாமாக வெளியிட்டும் வளர்ச்சியடைய வேண்டும் என்பது ஃபிராபெலின் விருப்பமாகும்.

14. 'சித்தினை அசித்துடன் இணைத்தாய்; சோர்ந்த பல்லுலகங்கள் சமைத்தாய்' என்பது பாரதியார் வாக்கு.

அவற்றை அவர் பாட்டுகள் வாயிலாகவும் படைப்பாற்றலின் துணை கொண்டும் எய்துவிக்கலாம் என்றும் கருதினார்.

ஃபிராபெலின் கல்வி முறை 'கிண்டர் கார்ட்டன் முறை' என்பதாகும். கிண்டர் கார்ட்டன் (Kinder garten) என்ற செருமானியச் சொல் 'குழந்தைகளின் தோட்டம்' என்று பொருள்படும். ஃபிராபெல் குழந்தைகளின் இளமைப் பருவமே வளர்ச்சியின் முக்கிய பருவம் எனக் கருதினார். குழந்தையின் வளர்ச்சியிலும் இளந்தாவரத்தின் வளர்ச்சியிலும் ஃபிராபெல் சில பொதுவான வளர்ச்சிகளைக் கண்டார். இப்பண்புகளை ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். தன்னியக்கம் என்பது, மனத்தின் முக்கியமான பண்பாகும். அது குழந்தைகளின் விளையாட்டின் மூலம் வெளிப்படுகின்றது. எனவே, குழந்தை விளையாட்டு மூலம்தான் முழு வளர்ச்சியடைய வேண்டும். ஃபிராபெல் பிற்கால மனிதனுக்குத் தேவையானவை அனைத்தும் குழந்தைப் பருவத்தில் விளையாட்டு வடிவாக வெளிப்படுகின்றன என்று கூறுகின்றார். எனவே, குழந்தைகட்கு விளையாட்டு முறையில்தான் கற்பிக்க வேண்டும் என்பது இவ்வறிஞரின் கருத்தாகும். குழந்தைகள் விளையாடுவதற்கு ஆசிரியர் உற்சாகம் ஊட்ட வேண்டும். விளையாட்டுகளில் காணும் நற்கூறுகளில் கவனம் செலுத்த வேண்டும். தேவையற்ற அல்லது முறையற்ற கூறுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

குழந்தைகளின் தோட்டத்தில் உரிமை, விளையாட்டு, மகிழ்ச்சி ஆகிய மூன்று கூறுகள் இடம் பெறுதல் வேண்டும். அவ்வாறு இடம் பெற்றால்தான் குழந்தைகளின் உணர்வுகள் நன்முறையில் வெளிப்படும். அங்குப் பாட

நூல்கட்கு வேலை இல்லை. குழந்தைகட்கும் குறிப்பிட்ட மனப் பயிற்சி இல்லை; குழந்தைகளின் உணர்வுகள் மூன்று விதமாக வெளிப்படுவதற்குப் பயிற்சிகள் அளிக்கப் பெறுகின்றன. அவை பாட்டு, இயக்கம், செய்கை; இவை மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தே பயின்று வரும். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தைக்கு அது பாட்டாகக் கற்பிக்கப் பெறும்; கற்கும் போது ஆட்டமும் அபிநயமும் இருக்கும். கற்றபின் அது ஓவியமாகத் தீட்டப் பெறும்.

கவிமணியின் 'மலரும் மாலையும்' என்ற நூலில் உள்ள பல பாடல்கள் இங்ஙனம் கற்பிப்பதற்குப் பயன்படுபவை.

# 3. தேசியப் பாடல்கள்

கவிமணியின் பாடல்கள் பெரும்பாலானவற்றில் தேச பக்தியின் இனிய மணம் கமழ்ந்து வீசவில்லை. தேசபக்தி இவரது பாடல்களை இயக்கவில்லை என்பதுதான் உண்மை. காரணம், இவர் தோன்றிய சூழ்நிலை அதற் கேற்ற உந்து விசையை நல்கவில்லை. பாரதியாருக்குத் தேச பக்தியும் சுதந்தர உணர்வும் துணை நின்றன போல வும், பாரதிதாசனுக்கு பெரியார் இயக்கம் உந்துவிசையை அளித்தது போலவும் கவிமணிக்கு எத்தகைய விசையும் அவர் வாழ்ந்த சூழ்நிலை அமையவில்லை.

வரலாற்றுக் காலத்தில் வெள்ளையர்களின் தனிப் பேரரசைப் போல் மிக வலிமையும் பெருமையும் உடைய வேறொரு பேரரசு தோன்றியதில்லை. வெள்ளையரின் ஆட்சியில் நம் நாடு மிகவும் கீழடங்கி நின்றது. அடக்கு முறை பலமாகவும் உறுதியாகவும் கையாளப் பெற்றது. தம் நாட்டிலுள்ள ஆலை முதலாளிகள், துணி வணிகர்கள் இவர்களின் நன்மையைக் கருதி நம் நாட்டு மக்களுக்கு பல வாய்ப்புகள் அமையாது தடுத்தனர். தம் நாட்டுக் கப்பல் வணிகர்களின் முன்னேற்றத்தைக் கருதி நமது நாட்டில் கப்பல் முதலிய சாதனங்களை இயற்றுவதற்கு சிறிதும் இடந்தரவில்லை. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் வரலாறு நமக்கு நன்கு விளக்கும். அவருக்கு இழைத்த கொடுமைகளும் அவர் பட்ட சொல்லொணாத் துன்பங்களும் நமது நாட்டு மக்களின் திக்கற்ற நிலையை நன்கு எடுத்துக் காட்டும்.

ஒவ்வோராண்டும் நம் நாட்டிலிருந்து கோடிக் கணக் கான பணத்தை தங்கள் நாட்டிற்குக் கொண்டு செல்வதில் மிகவும் ஊக்கமுடையவர்களாக இருந்தனர் வெள்ளையர் கள். நம் நாட்டு மக்களின் வருமானம் நாளடைவில்

குறைந்து கொண்டே வந்தது. எங்குப் பார்த்தாலும் பஞ்சமும் பட்டினியும் தான் தலைவிரித்தாடத் தொடங்கின. இந்த நிலையில் அரசுக்கு எதிராகக் கருத்துகளை எவரேனும் வெளியிட்டாலும் அவர்கட்கு வாய்ப்பூட்டு போடப் பெற்றது. எங்கேனும் வெளிப்படையாக அரசின் அடாத செயல்களைக் கண்டித்தால், குண்டுகட்கு அவர்கள் இரையாக வேண்டியதுதான். அடக்குமுறை இவ்வாறாக வன்மையுடனும் உறுதியுடனும் மேற்கொள்ளப் பெற்றது.

உணவு முறைகளிலும் பிறவற்றிலும் ஒவ்வாத வழிகளை கொண்டால் உடல் நலத்தில் கேடுகள் தலை தூக்குவது போல, அரசின் கொடுங்கோன்மை நாட்டு மக்களிடம் விடுதலை உணர்வு தோன்றத் தொடங்கி விட்டது. இந்த உணர்வு மக்களிடையே தீவிரமாகப் பரவியது. பலவிதமான அடக்குமுறைகளை அரசு கையாண்ட போதிலும் இந்த விடுதலை வேட்கையைத் தடுக்க முடியவில்லை. நாடு முழுவதும் இந்த வேட்கையுணர்வு அலை அலையாகப் பரவியது. இந்த உணர்ச்சியை ஒருவாறாக நெறிப்படுத்தி நாட்டிற்கு நன்மை புரிய வேண்டும் என்ற கருத்துடன் உழைத்து வந்தவர்கள் காங்கிரசுக் கட்சியினர்.

இந்தக் கட்சியினரும் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற இருவகையாகப் பிரிந்து செயற்பட்டனர். முன்னவர் அரசுடன் இணைந்து ஒத்துழைத்து சட்டத்தின் நடைமுறைகட்கு உட்பட்டுத் தமது குறிக்கோள்களை வெற்றியுடன் சாதித்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தையுடையவர்கள். பின்னவர் அன்னிய அரசுடன் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும், அதற்காக சட்டங்களை மீறிய வழியையும் மேற்கொள்ளலாம் என்னும் கருத்துடையவர்கள். பின்னவர்களின் கட்சியைச் சேர்ந்தவர் பாரதியார்.

புதுமைக் கவி பாரதியாரின் கவிதைகளில் தீவிர தேசபக்திக் கனல் நிரம்பிப் பரிமளிக்கின்றன. அடக்கு

முறைகள் இவரையும் பாதித்தன. இந்த முறைகளினால் இவர்தம் நாட்டுப் பற்று மேன்மேலும் கிளர்ந்தெழுந்தது. சுதந்திரப் பயிரை வளர்த்ததை,

தண்ணீர்விட் டோவளர்த்தோம்!
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம் [1]

என்று குறிப்பிடுகின்றார்.

வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? [2]

என்று தம் தீவிர விடுதலை வேட்கையை வெளியிடுகின்றார்.

என்று தணியும் இந்தச்
சுதந்திர தாகம்? [3]

என்று இவர்தம் விடுதலை உணர்வு வெளிப்படுகின்றது. சுதந்திரத்தை தேவியாக உருவகித்துப் பாடல்கள் படைத்துள்ளார்.

தெய்வங்களைப பற்றிப் பாடிய போதிலும், பழைய பாரதக் கதைகளை எடுத்துக் கவிதை புனைந்த போதிலும், வேறு எந்தத் தலைப்பின்மீது பாரதியார் கவிதை இயற்றிய போதிலும் அவற்றில் எல்லாம் தேசபக்தி என்னும் அனல் ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். விநாயகர் நான் மணி மாலைப் பாடும்போதுகூட,

நமக்குத் தொழில்கவிதை
நாட்டிற்கு உழைத்தல் [4]

1. பா.க. தே.கீ: சுதந்திரப் பயிர் -
2. மேலது - மேலது - சுதந்திரத்தின் பெருமை - 1
3. மேலது - மேலது - சுதந்திரத் தாகம் - 1
4. வி.நா.மா. 25

என்று கூறி தமது நாட்டுப் பற்றைக் குறிப்பிடுவர். பாஞ்சாலி சபதத்தில் விதுரன் தூது செல்லும்போது வழியிடையே நாட்டினுறு வளங்கள் நோக்கி தன் இதயத்துள்ளே பல மொழிகள் கூறும்போது,

..... .... ....
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
வேள்வினும் இவையெல்லாம் விளங்கும் நாடு;
சோரமுதற் புன்மையெதும் தோன்றா நாடு
தொல்லுலகில் முடிமணிபோல் தோன்றும் நாடு
பாரதர்தந் நாட்டினிலே நாசம் எய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே![5]

என்று அவன் நாட்டின்மீது தான் கொண்ட பற்றினைப் புலப்படுத்துவார். நாட்டைப் பணயமாக வைத்து தருமன் சூதாட நினைக்கும்போது விதுரன் கூறுவான்:

ஐய கோ:இதை யாதெனச் சொல்வோம்?
அரச ரானவர் செய்குவ தொன்றோ
மெய்ய தாகவோர் மண்டலத் தாட்சி
வென்று சூதினி லாதல் கருத்தோ?
வைய மிஃது பொறுத்திடு மோ?மேல்
வான்பொறுத் திடுமோ? பழிமக்காள்!
துய்ய சீர்த்தி மதிக்குல மோ?நாம்
தூ!வென் றெள்ளி விதுரனும் சொல்வான்[6]

இதிலும் தேசபக்தி சுடர்விட்டு ஒளிர்வதைக் காணலாம்.

நாட்டின்மீது பாடிய பாடல்களில் மட்டிலுந்தான் இவர்தம் நாட்டுப் பற்றும் விடுதலை உணர்வும் விளங்குகின்றன என்று நினைத்தல் தவறு. இவர் எழுதுகோலில் பிறக்கும் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு சொற்றொ

5. பா.ச. அழைப்புச் சருக்கம் - 118
6. மேலது - சூதாட்டச் சருக்கம் - 196

டரும், ஒவ்வொரு பாடலும், ஒவ்வொரு பாடல் தொகுதியும், ஒவ்வொரு நூலும் நாட்டுப் பற்றை உயிர்த்துக் கொண்டுள்ளன. சுருங்கக் கூறின் தேசபக்தியே இவர்தம் பாடலின் உயிர் நாடியாகத் திகழ்கின்றது எனலாம்.

சிற்றரசு நாடுகளில்: வெள்ளையர் நேர்முகமாக ஆட்சி புரிந்த நாட்டுப் பகுதியில் நாட்டுப் பற்றை வளர்த்து வந்த அரசியற் கிளர்ச்சி தன்னாட்சி முறையில் இயங்கி வந்த சிற்றரசு நாடுகளில் பெரும்பாலும் இல்லை. அங்குள்ள மன்னர்கள் வழிவழியாக நீண்ட காலமாக நல்லாட்சி புரிந்து வந்தவர்ளாதலின் அவர்கள் நாட்டுக் குடிமக்கள் அவர்கள்மீது பேரன்பு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். இதனைக் கவிமணியின்,

நாட்டின் நலமே நமதுநலம் என்றுள்ளந்
தீட்டும் பெருமான் எம்சித்திரைமன் - கூட்டும்
குடியரசின் மன்னவர்செங் கோலரசை மெச்சும்
படியரசு செய்க பரிந்து (8)

நாட்டுக் கணியாகி நன்மைக்கு வித்தாகிப்
பாட்டுக் கினிய பயனாகி - ஊட்டிநிதம்
குஞ்சணைக்கும் தாய்போல் குடியணைக்கும் சித்திரைமன்
வஞ்சிநிலம் வாழ்க மகிழ்ந்து (12)

என்பன போன்ற பாடல்களால் தெளியலாம்.[7]

அக்காலத்தில் சிற்றரசர்களின் ஆட்சியில் காங்கிரசின் முயற்சிகள் தலைகாட்டுவதற்கு வாய்ப்புகளே இல்லை. எந்தவிதமான அரசியற் கிளர்ச்சிகளுமின்றி அமைதியாக இந்த ஆட்சிகள் நடைபெற்று வந்தன. இக்காலத்தில் ஆங்கிலப் பிரதிநிதிகள் ஒவ்வொரு சிற்றரசு நாடுகளிலும்

7. ம.மா. வாழ்த்து - சித்திரை மன்னர் முடிசூட்டு விழா

இருந்து வந்தனர். இவர்கள் மூலம் அரசியல் விஷயங்கள் நன்றாகக் கண்காணிக்கப் பெற்று வந்தன. இவர்களறியா மல் இந்நாட்டுப் பகுதிகளில் எந்தவிதமான கிளர்ச்சிகளும் தோன்ற முடியா. தவிர, இந்தச் சிற்றரசுகள் ஆங்கில அதிகாரத்திற்கு அஞ்சியவர்களுமாக இருந்தனர். கைத்தடி யும் வாளும் சுருள் கத்தியும் கொண்டு போர் புரியும் நாடுகள் துப்பாக்கியும் பீரங்கியும் கொண்டு போர்புரிய வல்லவர்களின்கீழ் அடங்கி நடப்பது இயல்பேயன்றோ? ஆங்கிலப் பிரதிநிதிகளின் கருத்தைத் தெளிவாக அறிந்து கொண்டு தங்கள் நாடுகளில் முளைக்கும் சிறு சிறு குழப் பங்களை உடனுக்குடன் அடக்கி வந்தனர்.

ஒரு சில சமயங்களில் இந்தியப் பகுதிகளினின்றும் தீவிரவாதிகளில் சிலர் இச்சிற்றரசு நாடுகளில் அடைக் கலம் புகும் வாய்ப்புகளும் இருந்து வந்தன. இவர்களை நன்றாகக் காவல் செய்து இவர்களால் யாதொரு அரசியற் குழப்பமும் நேரிடாதபடி சிற்றரசர்கள் விழிப்புடன் கவ னித்துக் கொண்டனர். இங்ஙனம் அடைக்கலம் புகுவதும் எளிதான செயலாகவும் நடைபெற முடியாத நிலை.

**கவிமணி:** இத்தகைய சூழ்நிலையில் திருவிதாங்கூர் நாட்டில் தோன்றியவர் கவிமணி. இவர் வாழ்ந்து வந்த குமரி மாவட்டப் பகுதி திருவிதாங்கூர் சிற்றரசர்க்குரியதாக இருந்தது. பாரதியாரின் பாடல்கள் இவரை ஆட்கொண்ட போதிலும், வாழ்ந்த சூழ்நிலையின் காரணமாக இவர்தம் பாடல்கள் நாட்டுப் பற்றின் இனிய மணம் கமழ்வதாக அமையவில்லை. ஆனால், நாட்டுப் பற்றுக்குரிய பொருள் களைப் பற்றி இவர் பாடவே இல்லை என்று கருதவும் முடியாது. தம்மை ஆட்கொண்ட கவிதை நாயகனை இவர் பின்பற்றாது இருக்க முடியுமா? இவரும் தேசியம் பற்றித் தேசக் கொடியின் சிறப்பு, காங்கிரசு கப்பல், கதர் விற் பனை வட்ட மேசை மகாநாடு, சுதந்திரம், உழைக்க வேண்டும், குடியரசு வாழ்த்து போன்ற தலைப்புகளில்

கவிதைகள் புனைந்துள்ளார். இவை 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுப்பின் பிற்காலப் பதிப்புகளில் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களெல்லாம் இவர்தம் வாழ்வின் பிற்காலப் பகுதியில் நல்லோர் பலரது வேண்டு கோள்களின் பயனாகப் பாடப் பெற்றவை. இங்ஙனம் இக்கவிஞர் பெருமானும் தேசிய நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவராக அமைந்து விடுகின்றனர்.

பாரதிக்குப் பின்னர் அவர் தாசனாகத் திகழ்ந்த பாவேந்தரிடமும் நாட்டுப் பற்று இல்லாமல் இல்லை. ஆனால், சமூக அநீதிகளைக் கண்டிக்கும் போக்கும் தந்தை பெரியாரின் கருத்துகளும்தான் அவர்தம் பாடலில் தலை தூக்கி நிற்கின்றன. நாட்டு மக்களிடம் ஒற்றுமையின்மை தான் காரணம் என்று கூறும் போக்கில் மூடப்பழக்கங்க ளைச் சாடுகின்றார். இதனை ஓர் ஆங்கிலேயன் வாயில் வைத்துப் பேசுகின்றார்.

ஓ!என் சகோதரரே ஒன்றுக்கும் அஞ்சாதீர்
நாவலந் தீவு நம்மை விட்டுப் போகாது;
வாழ்கின்றார் முப்பதுமுக்கோடி மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?
பேதம் வளர்க்கப் பெரும்பு ராணங்கள்!
சாதிசண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்து தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்
தேன்சுரக்கப் பேசிஇந்த தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்
இந்த உழைச்சேற்றை ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நம்மை எதிர்ப்பார்? [8]

8. சஞ்சீவி பர்வத்தின் சாரல் - ஆங்கிலேயன் பேசுவது

இதில் கவிஞரின் நாட்டுப் பற்றோடு சமூக மூடப்பழக்கங்கள் முதலியவையும் காட்டப் பெறுகின்றன.

பாடல்களின் சிறப்பு: பாரதியாரின் *'தாயின் மணிக்கொடி பாரீர்!'*[9] என்ற பாடல் ஆனந்தக் களிப்பு மெட்டில் உணர்வு கொப்புளிக்கும் முறையில் அற்புதமாக அமைந்திருப்பது போல கவிமணியின் 'தேசக் கொடி'ப் பாடல் அமைந்திரா விடினும், பாடலின் சிறப்பிற்கும் வளமான கருத்திற்கும் குறைவில்லை.

வீரர் துணிந்தேறி நட்டகொடி - இது
வெற்றி விருதா எடுத்த கொடி;
யாரும் இறைஞ்சி வணங்கும் கொடி
என்று சுதந்திரம் ஈட்டும் கொடி (3)

கங்கை யினும்புனித மானகொடி; - கோடிக்
கதரின் இனியமணம் கமழும் கொடி
மங்கையர் நோன்பிருந்து நெய்தகொடி - அவர்
வாழ்வு தழையவந்த மங்கலக் கொடி (4)

மின்னல் இடிக்கும் அஞ்சாதுயருங் கொடி - விண்ணில்
வீரர் திலகர்தொழும் விருதுக் கொடி;
தன்னை மிதித்தெறிந்த சூர்களெல்லாம் - இன்று
தாழ்ந்து தலைவணங்கக் காணும் கொடி (5)

கலியுகக் கண்ணன் கருணாகரன் - அந்தக்
காந்தி மகான்வாழ்த்தி யெடுத்த கொடி;
புலியொடு பசுவும்சென் றோர்துறையில் - மனம்
பொருந்திநீர் அருந்திடச் செய்யும் கொடி (7)

காணாப் புதுமைகளைக் காட்டும் கொடி - தொண்டர்
கனவையும் நனவாக மாற்றும் கொடி;
வாணாளின் இன்பமெலாம் வழங்கும் கொடி - நாட்டின்
வளத்தை வளர்க்கவந்த மந்திரக்கொடி (8)

9. பா.க. தே.கீ. தாயின் மணிக்கொடி

ஏழை அழுதகண்ணீர் துடைக்கும் கொடி - அவன்
இதயம் குளிரஇன்பம் பொழியும் கொடி;
ஊழையும் உப்பக்கம் காணும்கொடிநித்தம்
உழைத்துமுன் னேறநம்மை ஊக்கும் கொடி (12)[10]

என்ற பாடல்களில் இவற்றைக் கண்டு தெளியலாம்.

காங்கிரசு கப்பல்: இந்தக் கப்பலின் பகுதிகளை உருவ கப்படுத்திப் பேசுகின்றார் கவிஞர்; இந்தக் கப்பலின் நங்கூரம் பொறுமை; அச்சாணி பொதுநலம்; கப்பலின் பாய் வாய்மை. இமயம் முதல் குமரி வரை வாழும் யாவரும் இக்கப்பலில் பயணம் செய்து சாதி, சமயக் கடல்களில் சாய்ந்து சரியாது நீந்திச் செல்லலாம். இக்கப்பலின் வலிமையை,

வீரர் திலகர்கள் செய்தகப்பல் - நெஞ்சில்
விளைந்த வயிரத்தால் ஆன கப்பல்;
பாரத மாதா பாராட்டும் கப்பல் - இன்று
பாபு ராஜேந்திரர் ஓட்டும் கப்பல்[11]

என்று காட்டிய பாபு இராஜேந்திரப் பிரசாத் நடத்திச் செல்லும் கப்பல் என்கின்றார்.

கதர் விற்பனை: முன்னைய காங்கிரசுத் தொண்டர்கள் அன்னிய நாட்டுத் துணியை தவிர்க்குமாறு ஊர்தோறும் பிரசாரம் செய்து கதர் துணி மூட்டைகளைச் சுமந்து சென்று விற்பனை செய்து வந்தனர். ஒரு காலத்தில் தக்ளியும் இராட்டையும் துப்பாக்கி பீரங்கி பலத்தையும் தகர்த்தெறியும் ஆற்றல் படைத்தனவாக இருந்தன. காந்தியடிகள் நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொடுத்த அற்புத ஆயுதங்கள் இவை. கதர் உற்பத்தியால் சிற்றூர்களில் உள்ள ஏழைகட்கு வேலை வாய்ப்பு ஏற்படுகின்றது. பாரதியார் பாடல்களில்

10. தேசக் கொடியின் சிறப்பு - 3,4,5,7,8,12
11. காங்கிரசு கப்பல் - 4

ஏனோ கதர் பற்றிய பாடல்கள் இல்லை; பாரதிதாசனிலும் இதே நிலைதான்.

கதர் துணி உற்பத்தி செய்து அதனை ஊரூராய்ச் சென்று விற்று வரும் ஓர் ஏழைத் தொழிலாளி பேசுவதாக இத்தலைப்பின் கீழுள்ள பாடல்கள் அமைகின்றன.[12]

பாவிஎன் கதையினைக் கேளும்ஐயா! - அந்தப்
பாஞ்சாலி கதையும்ஈ தொக்குமோ? ஐயா!
ஆவியைப் பிடித்துநான் அலைவதெல்லாம் - என்றன்
அருமைக் குழந்தைகளுக் காகவே ஐயா! (1)

என்பது முதற் பாடல். இதில் உற்பத்தி செய்து விற்போரின் பரிதாப நிலை காட்டப் பெறுகின்றது.

வாடி முகம்சடைத்த மக்களும்உண்டு - தீரா
வயிற்றுப் பசியும்உண்டு நானும்உண்டு;
வீடும் குடியிருக்க இல்லை,ஐயா! - என்றன்
விதியின் கொடுமைகளும் கொஞ்சமோ? ஐயா! (3)

பருத்தி விளைக்குச்சென்று பஞ்சுவாங்கினேன் - அந்தப்
பஞ்சை அரைத்துநல்ல நூலும்நூற்றேன்;
ஒருத்தி துணையுமின்றி ஆடையும்நெய்தேன்; - அதை
ஊரூராய்க் கொண்டுகொண்டு விற்கவும் வந்தேன் (4)

அஞ்சு வயதுமகள் கோலம்இட்டால் - அதை
அழகில்லை என்றழிக்கும் தாயரும் உண்டோ?
பஞ்சு படுவதிலும் பெரும்பாடு - நாங்கள்
படுவதும் நீங்கள்அறி யாததோ ஐயா! (9)

காசுமியர் சால்வைநெய்த கையும் இல்லையோ - உயர்
காசியிலே நெய்தபட்டின் காலமும் போச்சோ?
மாசிலாத டாக்காவின் மஸ்லினாடை - இன்னும்
வாவென்றால் வாராதோ? வளர்ந்தி டாதோ? (10)

12. கதர் விற்பனை - 1

கைகால் களைக்க நெய்த கதராடை - இரு
கண்கள் சடையநெய்த கதராடை
ஐயா,நீர் வாங்கியதை அணிவீரோ? - எங்கள்
அரும்பசிக்கு அன்னம்ஏதும் அளிப்பீரோ? (13)

குறுக்கு முறியநெய்த கதராடை - கும்பிக்
கொதிப்பை அடக்கிநெய்த கதராடை
மறுத்துநீர் தள்ளாமல் கொள்ளுவீரோ? - எங்கள்
வயிற்றில் எரிதணியச் செய்குவீரோ? (14)

தேசமெல்லாம் புகழ்ந்திடும் ஆடை,ஐயா! - மேலைச்
சீமையையும் நடுக்கிடும் ஆடை,ஐயா!
காசுபணம் இல்லாத ஏழைகளுக்காய் - அந்தக்
காந்திமகான் போற்றும்காம தேனு, ஐயா! (15)

வேறுவேறு புண்ணியங்கள் செய்யவேண்டுமோ? - கதர்
வேட்டிவாங்கி அணிவது போதாதோ? ஐயா!
நூறுபேருக் கன்னம்நிதம் அளித்தபலன் - இந்த
நூலாடை கட்டுபவர்க் குண்டே, ஐயா! (16)

*என்ற பாடல்களில் காந்தியடிகளின் பொருளாதாரத் திட்டம் பளிச்சிடுகின்றதன்றோ?*

*தீபாவளிப் பண்டிகையின்போது - கதராடை அணியுமாறு பரிந்துரைக்கும் கவிமணி அந்த ஆடையின் பெருமையை தொழிலாளி வாயில் வைத்துப் பேசுகின்றார்:*

பெண்டுகள் பிள்ளைகள் நெய்த கதராடை
பீதாம் பரத்தினும் மேலாம் அடா!
கொண்டாடிப் பண்டிகை நாளில் அணிந்திடில்
கோடிகோ டிப்புண்யம் உண்டாம், அடா! [13]

*என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.*

13. சமூகம் - தீபாவளிப் பண்டிகை - 12

அந்தக் காலக் கட்டக் கண்ணாடி கொண்டு நோக்கி னால் இராட்டையும் தக்ளியும் பக்கிங்காம் ஆலைகளையும் தம்பிக்கச் செய்ததையும் வெள்ளையரின் ஆட்சியை நடுங் கச் செய்ததையும் அறியலாம்.

வட்ட மேசை மாநாடு: இந்தப் பாடல்கள்[14] குறத்தி குறி சொல்லும் பாங்கில் 'ஆண்டிப் பண்டாரம்' மெட்டில் அமைத்து வை.

வட்டமேசை மாநாடு
மங்களமாய் முடிந்திடுமோ?
திட்டமாகச் சுதந்திரத்தின்
தீர்மானம் பழுத்திடுமோ? (1)

கற்றவர்கள் பெரியோர்கள்
கப்பலேறிச் சென்றவர்கள்
வெற்றிகொண்டு வருவாரோ?
வெறுங்கையராய்த் திரும்புவரோ (2)

இந்துக்கள், இஸ்லாமியர், சிற்றரசர்கள் இவர்கள் இசைந்து வரவேண்டிய மாநாடு. அப்போது இங்கிலாந் தில் இரும்பு இதயம் படைத்த சர்ச்சில் முதலமைச்சராக இருந்தார். நம் நாட்டிலிருந்து காந்தியடிகள், மூதறிஞர் மாளவியா, மாதரசி சரோஜினி தேவியார் முதலியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சர்ச்சிலிடும் கர்ச்சனையில்
தளர்ந்துமனம் சடைவாரோ?
மெச்சிடவே இந்தியரும்
வீரமொழி பகர்வாரோ? (8)

14. ம.மா: தேசியம் - வட்டமேசை மாநாடு

'புஞ்சிரிப்பில், கைகுலுக்கில்'
புத்திமிக மயங்கிடுமோ?
நெஞ்சிருப்பை நம்மவரும்
நிறைவேற்றி வருவாரோ? (10)

மாதரசி சரோசினியார்
வாக்குநயம் பலித்திடுமோ?
மூதறிஞர் மாளவியா
முயன்றதவம் முற்றிடுமோ? (12)

சீக்கிரமாய்க் காந்திமகான்
செயக்கொடியும் கட்டுவரோ?
ஊக்கமுடன் இந்தியரும்
உளமகிழ்ந்து வாழ்வாரோ? (13)

என்ற பாடல்கள் மாநாட்டின் முடிவை எதிர்பார்ப்பனவாய் அமைந்துள்ளன. குறத்தி குறி சொல்லும் பாங்கில் அமைந்தது மிகப் பொருத்தம். இம்மாநாடு நடைபெற்றபோது பாரதியார் இல்லை; கவிமணி இருந்தார்; பாடி மகிழ்ந்தார்.

சுதந்திரம்: பாரதியார் தீவிரவாதிகளின் வகுப்பைச் சேர்ந்தவர். விடுதலை பெறுவதே முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்தவர். ஆகவே, அவர்

வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? [15]

என்று பாடினார். மேலும்,

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்? [16]

15. பா.க. தே.கீ. சுதந்திரப் பெருமை - 1
16. மேலது - மேலது - சுதந்திர தாகம் - 1

என்று நிலவும் நிலைக்கு வருந்துகின்றார். கவிஞரின் தீவிர நாட்டுப் பற்று சுதந்திரத்தை 'சுதந்திர தேவி'யாகவே உருவகப்படுத்திப் போற்றி மகிழ்வார் - ஒன்பது பாடல்க ளில்.

இதந்தரு மனையின் நீங்கி
  இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
  பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
  விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
  தொழுதிடல் மறக்கி லேனே.[17]

என்று சுதந்திரத்தைத் தேவியாகக் கருதி வழிபடுகின்றார். இந்த ஒன்பது பாடல்களும் பக்தியுடன் பாடி மகிழத்தக் கவை.

கவிமணி சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. சுதந்திரத்தைப் பற்றி இவர் பாடிய இரண்டு பாடல்களும் சுதந்திரம் பெற்ற பின் பாடப் பெற்றவை[18] அவற்றுள் ஒன்று:

மாதவம் செய்து பெற்ற
  மந்திர வாளைக் கொண்டு
வேதனை மிகுந்தி டத்தன்
  மெய்யினை அரிவ தொக்கும்;
கோதிலாச் சுதந்தி ரத்தால்
  குணம்பெறா தென்றும் நாட்டின்
வாதினைப் பெருக்கிச் சண்டை
  வளர்ப்பவர் செய்கை அம்மா! (2)

17. பா.க. தே.கீ. - சுதந்திரத் தேவியின் துதி

18. ம.மா. - சுதந்திரம் - 2

இன்று நடைபெறுவது கட்சி அரசியல். போட்டா போட்டி யுடன் ஆட்சியைப் பிடிக்க எத்தனையோ தகாத முயற்சி கள் நடைபெற்று வருகின்றன. எல்லாக் கட்சிகளுமே ஏழைகட்குதவுவதாகக் கூறி வாக்குகள் பெறுகின்றன. எங்கும் ஊழல் மலிந்து காணப் பெறுகின்றது. கையூட்டு தாண்டவமாடுகின்றது. தம்தம் பைகளை நிரப்புவதே குறிக்கோளாக இருந்து வருகின்றது. இறந்த பெரியோர்க ளின் பெருமை களைச் சொல்லியே வாக்குகளைப் பெறும் தந்திரம் எல்லாக் கட்சிகளின் மரபாக நிலைத்து விட்டது. இதனை எதிர்பார்த்தே நாட்டுத் தந்தை காந்தியடிகள் சுதந்திரத்திற்குப்பின் காங்கிரசுக் கட்சியைக் கலைத்து விட வேண்டும் என்று தம் யோசனையைத் தெரிவித்தார். தே.வி.யின் பாடலில் இந்த அவலத் தொனி பிரதிபலிக் கின்றது.

# 4. தெய்வத்தமிழ்

'**கோ**யில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது நம் நாட்டில் வழங்கிவரும் ஒரு பழமொழி; ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு முதுமொழி. மக்களி டையே இறைவழிபாட்டை நினைவுறுத்திக் கொண்டே இருக்கும் ஓர் ஆற்றல் நிலையம் (Power House). நாவுக்கரசரும் இதுபற்றி ஒரு தேவாரம் பாடியுள்ளார்.

> திருக்கோயில் இல்லாத திருவி லூரும்
> திருவெண்ணீர் அணியாத திருவி லூரும்
> பருக்கோடிப் பத்திமையால் பாடா வூரும்
> பாங்கினொடு பலதலங்கள் இல்லா வூரும்
> விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
> விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
> அருப்போடு மலர்பறித்திட்டு உண்ணா ஒரும்
> அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே [1]

என்ற திருப்பாடலில் கோயில் ஓர் ஊரில் வானொலி நிலையம் போல, ஒரு தொலைக்காட்சி நிலையம் போல பல தெய்வச் செயல்கட்கு இருப்பிடம் போல் இயங்குவ தைக் குறிப்பிடுவதைக் கண்டு மகிழலாம். வைணவத்தில் ஒரு திவ்விய தேசம் வைணவ தத்துவங்களின் நிலைக்கள மாகத் திகழ்கின்றது என்பர். அவ்வூரிலுள்ள நல்லார் சித்து; ஆறு, குளம், சோலை முதலியன அடங்கியுள்ள இயற்கைச் சூழ்நிலை அசித்து; எம்பெருமான் எழுந்தருளியுள்ள இடம் ஈசுவரன் என்பவற்றை நினைவுறுத்தும் நிலையமாக இருப் பதாகக் கூறுவர்.

நம் கவிமணியும் கோயில் வழிபாடுபற்றி [2] எட்டுப் பாடல்கள் பாடியுள்ளார்.

1. அப்பர் தேவாரம் - 6.95:5
2. ம.மா: பக்திமஞ்சரி - கோயில் வழிபாடு

கோவில் முழுதுங் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனையான் - தோழி!
தேடியும் கண்டிலனே (1)

இதனையொட்டி தெப்பகுளம், தேரோடும் வீதி, சிற்பச் சிலை, சித்திர வேலை, பொன்னும் மணியும், பூமாலை, தூபமிடுதல், தீபம் சுற்றுதல், தில்லைப் பதி, சிற்றம்பலம் முதலியவற்றைக் கண்டதாகக் கூறி எய்ப்பினில் வைப்பாம் இறைவனைத் தான் காணவில்லை என்பார். காணாமைக் குரிய காரணத்தையும், அவனைக் காணும் முறையையும் விளக்குவார்.

கண்ணுக் கினியன கண்டு - மனத்தைக்
காட்டில் அலைய விட்டு,
பண்ணிடும் பூசையாலே - தோழி!
பயனொன் றில்லை,அடி! (7)

உள்ளத்தில் உள்ளான்,அடி! - அதுநீ
உணர வேண்டும், அடி!
உள்ளத்தில் காண்பாய்எனில் - கோயில்
உள்ளேயும் காண்பாய்,அடி! (8)

என்ற பாடல்களில் இவற்றின் விளக்கத்தைக் காணலாம். இவ்விடத்தில்,

உடம்பெனும் மனையகத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி
உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே.[3]

3. அப்பர் தேவாரம் - 4.75:4

என்ற அப்பர் தேவாரத் திருப்பாடலை நினைவு கூர்ந்து மகிழலாம்.

சிறு வயது முதற் கொண்டே கவிமணி தெய்வ பக்திமிக்கவராகத் திகழ்ந்தார். ஒன்பது வயதிலேயே இவருக்கு சிவதீட்சை செய்யப் பெற்றது. திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த உமையொரு பாக தீட்சிதர் இதனைச் செய்து வைத்தார். அச்சமயத்தில் வாழ்த்தாக அவர்மீது ஒரு வெண்பா பாடினார். அது:

வேறும் ஒருதுணையான் வேண்டுவனோ வேணுவனம்
தேறும் உமையோர்பாகத் தேசிகனே - கூறும்எனக்கு
எய்யாப் பிறவி இருள்அகல நீஅளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது[4]

அழகம்மை ஆசிரிய விருத்தம்: இது கவிமணியின் முதல் கவிதை நூல். பத்தொன்பது வயதில் பாடியது. தேரூரில் கோயில் கொண்டிருப்பவர் அன்னை அழகம்மை. இது சுசீந்திரத்துக்கு அருகிலுள்ள தேரூரில் எழுந்தருளியிருக்கும் உதயமார்த்தண்ட விநாயகர்மீது காப்பாக ஒரு வெண்பாவும் தேவியின்மீது பத்து பாசுரங்களும் கொண்ட திருப்பதிகம்.[5]

சீருதவும் நல்லூராந் தேரூர் அழகிதிருப்
பேருதவும் பாவினையான் பேசவே - ஒருதய
மார்த்தாண்ட வேழம் வழுவேதும் வாராமல்
காத்தாண்டு கொள்ளக் கடன்.

என்ற வெண்பா அற்புதமாக அமைந்துள்ளது; வளம் மிக்கதாய் விளங்குகின்றது.

ஏனைய பத்துப் பாக்களும் பதினான்கு கழி நெடிலடி ஆசிரிய விருத்தமாக அமைந்துள்ளன. பாடலில் ஆசிரி

4. ம.மா. வாழ்த்து - உமையொரு பாகக் குருக்கள்
5. மேலது - பக்தி மஞ்சரி - அழகம்மை ஆசிரிய விருத்தம்

*யரின் இளமை முறுக்கு, தமிழ் வளம், கருத்துச் செறிவு முதலியவை அற்புதமாக அமைந்துள்ளன. தாயுமானவர் பாடல்கள்,*

சிவகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே!
சின்மையா னந்தகுருவே. [6]

கருத்தறிய சிற்சபையுள் ஆனந்த நிர்த்தமிடு
கருணா கரக்கடவுளே! [7]

வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே! [8]

*என்று முடிவன போலும், குமரகுருபர அடிகளின் பாடல்கள்,*

தமிழொடு பிறந்துபழ மதுரையில் வளர்ந்தகொடி
சப்பாணி கொட்டி யருளே [9]

ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலி ஆட வாவே [10]

*என்று இறுவனபோலும், இவர்தம் பாடல்களும்,*

தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே!
தேவிஅழ கம்மை உமையே! [11]
(இரதபுரி - தேரூர்)

*என்று முடிகின்றன. இங்ஙனம் இவர்தம் பாடல்கள் யாவும் மேற்குறிப்பிட்ட இரண்டு ஆசிரியர்களின் பாடல்களின் பாணியிலே செல்லுகின்றன. இளம் வயதில் பாடிய*

6. தா.பா. சின்மயானந்த குரு
7. கருணாகரக் கடவுள்
8. சித்தர் கணம்
9. மீனா. பிள்ளைத் தமிழ் - சப்பாணி 36
10. மேலது - மேலது - அம்புலி - 63
11. அழகம்மை ஆசிரிய விருத்தம் - 3

னவாதலால் பாடல்களில் மிடுக்கும் பெருமிதமும் புலனாகின்றன.

முருகனைப் பற்றியவை: சுடலை முத்துப் பிள்ளையவர்கள் வேண்டுகோளுக்கிணங்க செந்தில் முருகன்மீது பாடியனவாக மூன்று பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று:

தண்டனை போதுமையா! தாங்கமுடி யாதையா!
கொண்டபிணி நீங்கஅருள் கூறையா! - கண்டுனது
வாசலில் வந்து வணங்கவலி இல்லைஐயா!
ஈசனே! செந்திலிறை வா! (2)

என்ற இப்பாடல் அப்போது கவிமணி ஆஸ்துமா நோயால் பீடிக்கப் பெற்றிருந்த நிலையைக் காட்டுவது.

நிந்தா ஸ்துதியாக ஒரு பாடல்:

தந்தை மலையாளி; தாய்மாமன் மாட்டிடையன்;
வந்தஒரு மச்சானும் வாணியனே - சந்ததமும்
விண்முகத்தை எட்டும்அயில் வேலேந்து பன்னிருகைச்
சண்முகற்குச் சாதியெது தான்? [12]

இது,

தந்தை பிறந்திறலாத் தன்மையினால் தன்மாமன்
வந்து பிறந்திறக்கும் வன்மையினால் - முந்தொருநாள்
வீணிக்கு வேளை எரித்தான் மகன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண் [13]

என்ற காளமேகப் புலவரின் பாடல் பாணியில் அமைந்துள்ளது.

12. ம.மா: கதம்பம் - முருகன் நிந்தாஸ்துதி
13. தனிப்பாடல்

*கவிமணியை இரட்டைப் பிணிபோல் பீடித்திருந்தவை ஆஸ்துமாவும் எக்ஸிமாவும். எக்ஸிமா நோய் சதா சொரிந்து கொண்டிருக்கும் நிலையை உண்டாக்கும். முருகன்மீது சிரங்கு பற்றி நகைச்சுவையாக நான்கு பாடல்களைப் பாடியுள்ளார். இந்த நான்கும் சுவை மிக்கவையாதலின் ஈண்டுத் தரப் பெறுகின்றன.*[14]

செந்தில் குமரா திருமால் மருகாஎன்
சிந்தை குடிகொண்ட தேசிகா - நொந்தஇம்
மெய்யிற் சிரங்கை விடியுமட் டும்சொரியக்
கையிரண்டு போதாது காண். (1)

வாரம் முடங்காமல் வைப்பெண்ணெய் தேய்த்திட்டேன்;
சார மருந்தெல்லாம் சாப்பிட்டேன் - வீரம்
குறைந்திடக் காணேன்; குமரா! சிரங்கு
மறைந்திடத் தாநீ வரம். (2)

உண்ட மருந்தாலும் உடமுழு தும்பூசிக்
கொண்ட மருந்தாலும் குணமிலையே - மண்டு
சிரங்கப்ப ராயா! சினம்மாறிக் கொஞ்சம்
இரங்கப்பா ஏழை எனக்கு (3)

முத்து பவழம் முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீசு பதக்கமெலாம் - சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம் (4)

*இந்தப் பாடல்கள் சோகம் கலந்த நகைச்சுவையுடன் மிளிர்கின்றன.*

முருகன் புகழ் மாலை: *இந்தத் தலைப்பில் நான்கு பாடலகள் உள்ளன.*[15] *ஈண்டு இரண்டு தரப் பெறுகின்றன.*

14. ம.மா. கதம்பம் - சிரங்கு

15. ம.மா. பக்தி மஞ்சரி - முருகன் புகழ்மாலை

புல்லும் பசுவிற்காம்; பூண்டும் மருந்திற்காம்;
கல்லும் திருக்கோயில் கட்டுதற்காம்; - தொல்லுலகில்
ஏழை எளியேன் எதற்காவேன்? செந்திநகர்
வாழும் வடிவேலா வா! (1)

முத்தையா! வேலா! முருகா! எனவோதும்
சொத்தையே தேடிச் சுகமடைவீர்! - நித்தமிவ்
வீடும் களமும் விளைநிலமும் தோப்புகளும்
மாடும் சதமாகு மா? (2)

இவை நெஞ்சை உருக்கும் பாடல்களாகும்.

குமரி பகவதி, சுசீந்திரம், இலக்குமி பற்றியும் பாடல்கள் உள்ளன. ஆனால், கலைமகள் பற்றியுள்ள,

நாடிப் புலங்கள் உழுவார் கரமும்
நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும்
செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும்
உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம்
அடைக்கலமே.[16]

என்ற பாடல் குமரகுருபரரின் சகலகலாவல்லிப் பாடல்களையும் கம்பனின் சரசுவதி அந்தாதிப் பாடல்களையும் விஞ்சும் முறையில் அமைந்துள்ளது.

'அஞ்சலி' என்ற தலைப்பிலுள்ள பன்னிரண்டு பாடல்களில் முதல் மூன்று பாடல்கள் தாயுமானவர் பாடல்களைப் போல் அமைந்துள்ளன. ஏனையவை வேறு படிகளில் வார்க்கப் பெற்றுள்ளன.

16. ம.மா: சரசுவதி துதி

ஏழையுளந் திருக்கோயில் எனக்கொண்டு நீயும்
　　எழுந்தருளி யிருக்குமுறை அறிந்து,அடிமை அங்கே
சூழவரு வஞ்சனையைத் துரத்தி, நிறை அன்பாம்
　　சுந்தரகாண் மலர்மாலை சூட்டிநிதம் தொழுவேன் (7)

சின்னஞ் சிறிய மலர்,இந்தச்
　　சிறிய மலரைக் கொய்திடுவாய்;
இன்னும் காலம் செல்லின்,ஒளி,
　　ஒளிஇழந்து வாடி விழுந்திடுமே (9)

மணமும் நிறமும் இல்லாவோர்
　　மலரே எனினும் ஐயாநின்
பணியிற் சேரத் தாழாது
　　பறித்துக் கொள்ள வேண்டினனே (12)

அன்பின் வெற்றி: *இந்த வரலாற்றுக் கவிதையும் 'தெய்வத் தமிழில்' அடங்கும். தமிழ்நாட்டிலுள்ள ஆண்டாள் வரலாறு போலவே வடநாட்டில் மீராபாய் என்ற பக்தையின் வரலாறு வழங்கி வருகிறது. ஆண்டாள் பாடிய பாசுரங்களையொப்ப இந்தி மொழியில் மீராபாயின் பாடல்கள் புகழுடன் வழங்கி வருகின்றன. கவிமணி அவற்றைத் தழுவி முப்பத்து நான்கு தமிழ்ப் பாடல்களை வார்த்துள்ளார். அவை யாவும் அன்பொழுகும் அற்புதக் கவிதைகளாகும்.*

*மீராபாய் கிரிதர கோபாலன் தன்னை மணந்ததாகக் கனவுகண்டு அதனைத் தன் தாயிடம் உரைக்கின்றாள்.*

அன்னையே! தாயே! அழகன் சகதீசன்
என்னை மணக்க இரவில் கனாக் கண்டேன்
நென்னல் இரவுகண்ட நீண்ட கனாமுழுதும்
ஒன்றை ஒழியாமல் உரைக்கின்றேன் கேளம்மா! (1)

நங்கையர் கூடி நலங்கனிந்து, என்மீது
குங்குமம் பூசிக் குளிர்சந் தனம்பூசி,
மங்கள மாக மஞ்சள் மிகப்பூசி
அங்குநீ ராட்டக் கனாக்கண்டேன்; அம்மா!நான் (3)

தோரணம் நாட்டித் துளாய்மாலை தொங்கவிட்டுப்
பூரண கும்பம் பொலிவாக முன்வைத்துத்
தாரணி போற்றத் தகுமோர் புரோகிதர்வந்து,
ஆரணம் ஓதக் கனாக்கண்டேன்; அம்மா!நான் (4)

செய்தற் கரிதாம்அத் திருமணப் பந்தரின்கீழ்,
வையம் அளந்து வளர்ந்த வடிவழகன்,
ஐம்பத் தறுகோடி ஆட்கள் நடுவேஎன்
கையைப் பிடிக்கக் கனாக்கண்டேன்; அம்மா!நான் (5)

முன்செய் தவப்பயனால் முகுந்தன் கிரிதரனே
அன்பு நிறைந்திடுமென் அகமுடையா!னாக வந்தான்
இன்ப மணமும்நேற் றிரவிலே யானதுஅம்மா!
துன்பம் ஒழிந்ததம்மா! சுகமும் பிறந்ததம்மா! (6)

*ஆண்டாள் பாசுரங்கள் தலைவி (மகள்) தோழிக்குச் சொல்வனவாக அமைந்துள்ளன.*

வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம்எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன், தோழி!நான் (1)

கதிர்ஒளித் தீபம் கலசம் உடன்ஏந்திச்
சதிர்இள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதரக் கனாக்கண்டேன், தோழி!நான் (5)

மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றுஊத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி!நான் (6)

வாய்நல்லார் நல்ல மறைஓதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து,

காய்சின மாகளிறு அன்னான்என் கைபற்றி,
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழி!நான் (7)

ஆண்டாள் பாசுரங்களைத் தானே நேரில் பாடியவை; கவிமணி மீராபாய் இந்தியில் பாடிய பாடல்களைத் தமிழாக்கம் செய்தவை. கவிமணி அவற்றை ஆண்டாள் பாணியில் அமைத்துள்ளமை ஒப்புநோக்கி மகிழத் தக்கது. திருமணச் சடங்குகளில் சிறிது வேறுபட்டுள்ளது. இருவரும் கண்ணனையே தம் நாயகனாக வரித்துள்ளமை கருதத்தக்கது.

ஆண்டாள், மீராபாய் ஆகிய இருவர் வாழ்க்கையிலும் ஒரு வேறுபாடு உண்டு. ஆண்டாள்,

மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழகில் லேன்[17]

என்று கூறியவள், மற்றும்,

அன்றிப்பின் மற்றொருவர்க்
கென்னைப் பேசலொட்டேன்
மாலிருஞ்சோலையெம் மாயற்கல்லால்.[18]

என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். ஆனால், மீராபாய் மேவாடா மகா ராணாவின் மூத்தமகன் போஜராஜனை மணந்து கொள்ளுகின்றாள். இல்லற வாழ்க்கை சுகப்படவில்லை. அவள் கிரிதரனையே மணாளனாக வரிக்கின்றாள். கிரிதர கோபால விக்கிரகத்தையே இடைவிடாது வழிபட்டு வருகின்றாள்; அவன் புகழையே பாடியவண்ணம் அவள் காலம் கழிகின்றது. இப்படிப் பாடும் ஏழு பாடல்களும் உள்ளத்தை உருக்குபவை.

17. நாச்.திரு.1:5
18.

நித்தம் நித்தம் நீராடில்
    நெடுமால் அருமைப் பெறலாமேல்
தத்தும் தவளை மீன்களும்அத்
    தனிப்பே றடைய வேண்டாவோ? (7)

காயும் கனியும் அருந்துவதால்
    கண்ணன் கழலைப் பெறலாமேல்
ஆயும் கிளைவாழ் குரங்குகளும்
    அப்பே றடைய வேண்டாவோ? (8)

வாடும் புல்லைத் தின்பதனால்
    மாயன் கிருபை பெறலாமேல்,
ஆடும் மாடும் மான்களும்அவ்
    அரும்பே றடைய வேண்டாவோ! (9)

பெண்ணின் இன்பம் துறப்பதனால்
    பெருமான் பாதம் பெறலாமேல்
மண்ணில் எல்லா அலிகளும்அம்
    மாப்பே றடைய வேண்டாவோ! (10)

பாலை நிதமும் குடிப்பதனால்
    பரமன் அடியைப் பெறலாமேல்,
ஞால மீது சிசுக்களும்அந்
    நற்பே றடைய வேண்டாவோ (11)

*இவ்வாறு எதனாலும் எம்பெருமானைக் காண முடியாதவர், உண்மையான அன்பால்தான் அவனைக் காண முடியும் என்கின்றாள் மீரா.*

உண்மை யன்பை உடையவரே
    உலகை அளந்த பெருமானை,
அண்மை யாகக் கண்டிடுவர்
    அல்லார் காணார், காணாரே (12)

*இங்ஙனம் மீரா ஒரு சீர்திருத்தச் சமயவாதிபோல் பேசுகின்றாள்.*

*போஜ ராஜன் குடும்பம் சக்தி வழிபாட்டைக் குலதர்ம மாகப் பெற்று வந்த பரம்பரையது. மாமியார் திருமால் வழிபாட்டைப் பொறுக்காமல் கிரிதர கோபால விக்கிரகத் தைப் பிடுங்கி எறிகின்றாள். மீராவின் வருத்தம் பாடல்க ளாக மலர்கின்றது. இங்குள்ள ஐந்து பாடல்களும் கல் நெஞ்சத்தையும் உருக்குபவை. மூன்று பாடல்கள் ஈண்டுத் தரப் பெறுகின்றன.*

கண்ணனைக் காணாமல் காதல்கைம் மீறியது
பெண்ணின் நலமிழந்தேன் பெரும்பித்தி யாகிவிட்டேன்;
புண்ணைப் பொறுத்தவரும் புண்செய் தவறுமல்லால்;
மண்ணில் அதன்வருத்தம் மற்றோர் அறிவாரோ? (13)

நஞ்சினை யுண்டு நலியு மவர்போல,
விஞ்சு மதன்கொடுமை வேறெவரும் காண்பாரோ?
நெஞ்சத் துயரமெலாம் நீங்க, முகில்வண்ணன்
அஞ்சல் அளித்தென்னை ஆட்கொள்வ தெந்நாளோ? (14)

அன்பர் படுக்கையுமவ் வாகாய மீதேயாம்
என்றன் படுக்கையுமிங்கு ஈட்டிகளின் மேலேயாம்;
வன்பில் விதிஎனக்கு வகுத்தவழி ஈதானால்,
இன்ப நலமெல்லாம் எவ்வா றடைவதம்மா? (15)

*ஒருநாள் மீரா நைவேத்தியத்தை இறைவன் திருமேனி முன் வைத்து அதனை உண்ணும்படி வேண்டுகின்றாள்.*

விதவிதமாய்ப் பண்டங்கள் செய்து வைத்தேன்;
    விண்ணமுத மெனக்கறிகள் சமைத்து வைத்தேன்;
இதமுறவே என்மீதில் இரங்கி, நீஇவ்
    இராஜவிருந் துண்டருள வேண்டும்; ஐயா!
பதமலரை முடியணிந்து பணிந்து நின்றேன்;
    பகவானே! கிரிதரனே! பாரில் என்றும்
சதமெனவே நம்பிவரும் அடியா ருள்ளம்
    சலியாது காத்தாளும் தேவ தேவே! (19)

விக்கிரகம் உண்ணாதிருப்பதைக் கண்டு மீரா வருந்தி மெய்சோர்ந்து கிடக்கின்றாள். உடனே விக்கிரகம் நைவேத்தியத்தை ஏற்று உண்கின்றது. இவ்விதத்தில் கண்ணப்ப நாயனார் குடுமித் தேவரைத் தம் நைவேத்தியத்தை உண்ணச் செய்ததும், திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி என்ற சிறுவன் அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையாரைத் தான் படைத்த கொழுக்கட்டையை உண்ணச் செய்ததுமான வரலாறுகள் நம்மை நினைவுகூரச் செய்கின்றன.

விக்கிரகம் நைவேத்தியத்தை ஏற்றுக் கொண்டதால் களிப்புற்ற மீரா கிரிதரனை வருணித்து மகிழ்கின்றாள். - மூன்று பாடல்களில். அவற்றில் இரண்டை ஈண்டு தருகின்றேன்.

நந்த குமரன் வடிவழகை
　　நானும் கண்ட நாள்முதலா
இந்த உலகம் மேலுலகம்
　　இரண்டும் வேம்பே ஆனதம்மா!
முந்து மயலின் தோகை,அவன்
　　முடியின் மணிபோல் ஒளிவிடுமே;
சக்தத் திலகம், ஈரேழு
　　தலமும் அடிமை கொண்டிடுமே (20)

அம்பொற் குழைகள் மிசையாட
　　அரைஞாண் சதங்கை இசைபாட,
நம்பன் கண்ணன் அழகியவோர்
　　நடனாய் வந்து நடிக்கின்றான்
உம்பர் தொழும்அவ் வுத்தமனின்
　　உவமை காணா உறுப்பழகுக்கு
இம்பர் எளியேன் அர்ப்பணமாய்
　　என்னை இன்று வைத்தேனே (22)

*ஒருமுறை மீரா சமாதி நிலையில் இருக்கும்போது கண்ணனுடைய தரிசனம் கிடைக்கின்றது. சமாதி கலைந்து மகிழ்ச்சிப் பெருக்கால் பாடுகின்றாள்.*

கார்முகிலின் மேனிபெறும் நந்தகுமாரா! - என்றன்
கண்களிலே குடியிருப்பாய் - நந்தகுமார!
மார்பினிலே வைஜயந்தி மாலையணியும் - உன்றன்
வடிவினிலே மயங்கி நின்றேன்; நந்தகுமாரா!
ஆரமுதம் ஊறுதமிழ் மீதிலமரும் - குழல்
அழகினுக்கோர் அளவுமுண்டோ நந்தகுமாரா!
சேருமணி யாடரைஞாண் பாதச் சதங்கை - ஒலி
செய்திடவே வந்தருள்வாய்; நந்தகுமாரா!
பாரும்வவிண்ணும் பணிந்துதொழும் நந்தகுமாரா! - என்றும்
பத்தரையாள் ஈசன்நீயே! நந்தகுமாரா! (30)

*இந்தப் பாடல் பாரதியின், 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா'[19] என்ற பாடலை நினைக்கச் செய்கின்றது.*

*போஜராஜன் போரில் இறந்து படுகின்றான். அவன் தம்பி உதயசிம்மன் ராணாவாகின்றான். மீராவின் திருமால் பக்தியைக் கண்டு வெறுப்படைந்து அவளைக் கொல்ல முயலுகின்றான். அவன் செய்த முயற்சிகள் பயனற்றுப் பேகின்றன. இதனையறிந்த மீரா பாடுகின்றாள்:*

தணியா அரவின் கூடையொடு
சாளக் கிராமம் ஆயிடுமே!
அணியார் கிண்ணத் தருநஞ்சும்
அமுதாய் இனிமை தந்திடுமே!

19. பா.க: தோ.பா. நந்தலாலா

திணியார் சூலப் படையுமலர்ச்
சேக்கை யாக மாறிடுமே!
மணியார் வண்ணன் அடியாருளம்
மலையா தென்றும் காப்பானே (31)

*நாட்டை விட்டு மீரா பிருந்தாவனம் வந்து சேர்கின்றாள். அங்குள்ள கண்ணன் கோயில் அடைத்துக் கிடக்கின்றது. மீரா அதைத் திறக்கும்படி பாடுகின்றாள்.*

ஆளடிமை யாகஎனை அமர்த்திக்கொள்வாய்;
அழகாக நந்தவன வேலைசெய்வேன்;
நாள்விடிய எழுந்துன்னை நமஸ்க ரிப்பேன்;
நலமிகவே நின்கதைகள் பாடி நிற்பேன்;
மீள்கூலி யாயுனது காட்சி போதும்;
மேற்செலவுக் குன்நாம செபமே போதும்;
நீள்செல்வம் பத்தியலால் வேறொன் றில்லை;
நித்தியனே! நின்மலனே! நிகரில் லோனே! (32)

பொருவரிய யோகியர்,மா தவத்தின் மிக்கோர்,
புள்ளுயர்த்தோன் அடிமறவாப் பத்தி செல்வர்
பெருமைதரு மாபிருந்தா வனத்தில் இன்று
பேறுபல பெற்றிடவே கூடி நின்றார்;
அருமறைக்கும் எட்டாத ஆதி நாதன்
அரையாமத் தன்புநதிக் கரையில் வந்து
கருதரிய கண்காட்சி தருவான்; சற்றும்
கலங்காம லிருப்பாய்என் ஏழை நெஞ்சே! (33)

*பாட்டு முடியவும் கதவு திறக்கின்றது; கண்ணனை வழிபட்டுக் கொண்டு மீரா அங்கே இருந்து வருகின்றாள். இந்த நிகழ்ச்சி திருமறைக்காட்டின் (வேதாரண்யம்) மூடியிருந்த திருக்கோயிலின் திருக்கதவு திறக்குமாறு அப்பர்*

அடிகள் பதிகம் பாடியதும்[20] கதவு திறக்கும் நிகழ்ச்சியை நினைக்கச் செய்கின்றது.

பிருந்தாவனத்தில் காலம் கழித்த மீரா ஒருநாள் தன்னை ஏற்றுக் கொள்ளும்படிக் கண்ணனை வேண்டுகின் றாள்.

என்றும் எனைநீ ஏற்றுக்கொள்;
    எனக்குத் துணைவே றெவருமில்லை;
கன்று பசியும் எனக்கில்லை;
    கண்ணில் உறக்கம் சிறிதுமில்லை;
துன்றும் உடலும் குறுகி,ஒரு
    துரும்பாய்த் தேய்தல் கண்டிலையோ?
நன்று தருவாய்; எனைக்கூடி
    நடுவிற் பிரியா தருள்வாயே (34)

விக்கிரகம் இரண்டாய்ப் பிளந்து மீராவைத் தன்னுள் அடக்கிக் கொள்ளுகின்றது. மீரா தனது அறுபத்தேழாம் வயதில் முக்தி அடைகின்றாள். இந்த நிகழ்ச்சி திருவரங்கப் பெருமானின் திருமேனியில் ஆண்டாள் கலந்த நிகிழ்ச்சி யையும், திருப்பாணாழ்வாரை அரங்கநாதன் தன் திருவடி யில் ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியையும் நினைக்கச் செய் கின்றது.

இரட்சிகர்: சமயப் பொறை சமரச நிலை ஆகிய இவை தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள். தமிழ்ப் பண்பாட்டின் உருவமான கவிமணி இயேசு பெருமானைப் பற்றியும் பாடியுள்ளார். இப்பாடல்கள் முப்பதும் தெய்வத் தமிழில் அடங்கும். இப்பாடல்கள் சுருக்கமாக அப்பெருமான் வர லாற்றையும் அவர் மன்பதைக்கு உரைத்த செய்தியையும் குறிப்பிடுகின்றன.

20. அப்பர் தேவாரம் - 5.10

பூமியை ஆளுதற்குத் - தேவ
புத்திரன் வந்துதித்தான்
சேமம் பிறக்குமென - யூதர்
சிந்தை களித்திருந்தார் (11)

"ஈசன் நாமத்தை - அனுதினம
ஏத்திப் புகழவேண்டும்;
தாச தாசனாய்ப் - பணிந்து
தருமம் காக்கவேண்டும் (12)

உன்னுயி ரைப்போல் - இந்த
உலகில் உயிரையெல்லாம்
மன்னும் அன்பொடுநீ - என்றும்
மதித்து வாழவேண்டும் (13)

மேவும் எனதாட்சி - அந்த
விண்ணுல காட்சியேயாம்
ஏவல் இடம்பொருளில் - எனக்கிங்கு
ஏதும் மயக்கமில்லை" (14)

என்னும்இப் பொன்னுரைகள் - நாட்டில்
எங்கும் எடுத்துரைத்தான்;
மன்னுயிர் காத்திடவே - மண்ணில்
வந்து பிறந்தமகன் (15)

ஏழை படும்பாட்டை - அவனும்
எண்ணி எண்ணிநைவான்;
ஏழையோ டேழையாக - உலகில்
எங்கும் அலைந்திடுவான் (16)

* * *

ஏசுவி னைச்சிலுவை - மரத்தில்
ஏற்றிக் கொல்வதென்றே
நாசகா லர்கூடி - விதியங்கே
நாட்டி விட்டார்,ஐயோ! (21)

''மன்னுயிர் காத்திடவே - இங்கு
வந்து பிறந்தமகன்
தன்னுயிர் காக்கவொண்ணாது - இன்று
தயங்கி நிற்கின்றான்! (22)

முழக்கம் செய்துவந்தான் - வழக்கை
முடித்து நிற்கின்றான்;
ஒழுக்கம் காட்டவந்தான் - இங்கே
உயர்வு பெற்றுவிட்டான்!'' (23)

என்று பற்பலரும் - அவனை
ஏளனம் செய்துநின்றார்;
ஒன்றும் உரையாமல் - உரவோன்
உள்ளம் அடங்கிநின்றான் (24)

''யாதும் அறியாதார் - அவர்பிழை
யாவும் பொறுத்திடுவாய்;
நாதனே!'' என்றீசன் - அருளை
நயந்து வேண்டிநின்றான் (25)

''உன்னையே நம்பிநின்றேன் - உதவிக்கு
ஒருவரை யும்காணேன்;
என்னைக்கை விட்டனையே! - ஈசா!''
என்று வருந்திநின்றான் (27)

சரணம் நீயென்றே - தலையைத்
தாழ்ந்து நின்றதலால்,
மரண வேளையிலும் - ஈசனை
மறந்த தில்லை அவன் (29)

ஆவி பெற்றனனோ? இன்றும்
அம்புவி வாழ்பவனோ?
யாவர் அறிந்திடுவார் - அறிதினும்
யாவரே கூறவல்லார்? (30)

பாடல்கள் யாவும் பாமர மக்களும் படித்து நுகரும் வண்ணம் அமைத்திட்டார் கவிமணி.

ஆசிய ஜோதி: இந்த நூல் ஆங்கில மொழியில் எட்வின் ஆர்னால்டு என்பவர் Light of Asia என்னும் பெயரில் வெளியிட்ட நூலின் தமிழ் வடிவமே ஆகும். இதனை மொழி பெயர்ப்பு என்று சொல்வது பெயரளவில்தான். ஆனால், இதனை ஒரு நூதன படைப்பு என்றே சொல்ல வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு நம் நாட்டில் தோன்றிய புத்தர் பெருமானின் வரலாற்றைக் கூறும் ஓர் அற்புதமான படைப்பு இது. புத்தர் பெருமானை,

"பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே"[21]

என்று பாடிப் பாராட்டியுள்ளார் பாரதியார். இவருடைய பெருமை சீனா, ஜப்பான், பர்மா, சயாம், இலங்கை முதலிய வெளிநாடுகள் வரை சென்று பரவியுள்ளது. இன்றைய உலகில் புத்த சமயத்தைத் தழுவினவர்கள் அறுபது கோடிக்கு மேல் உள்ளனர். இந்திய அரசியல் சட்டத்தைப் படைத்த டாக்டர் அம்பேத்கர் கூட இச்சமயத்தின்பால் ஈர்க்கப் பெற்று அதனைத் தழுவினார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

'ஆசிய சோதியை' பன்முறை பயின்று அதில் ஆழங்கால்பட்டு அநுபவித்தவன் அடியேன். புத்த கயைக்குச்

21. பா.க: தே.கீ: எங்கள் நாடு

*சென்று வரும் பேறு ஏற்பட்டது (அக்டோபர் - 1968)*[22] *குவலயத்தில் அருள் மாரி பொழியும் ஐயன் புத்தர் பிரான் ஞான ஒளி பெற்ற இடத்திற்கு வந்ததும் என்னையறியாத புத்துணர்ச்சி என்பால் எழுந்தது. கூச்சல், குழப்பம், கேளிக்கை முதலான நிகழ்ச்சிகள் ஒன்றும் இல்லாத அமைதியான இடத்தை முதன் முலாக இங்குத்தான் கண்டேன்.*

*ஒரு சிலர் அங்குமிங்கும் நடமாடினாலும் அவர்கள் நடையிலும் பேச்சிலும் அமைதி காணப் பெற்றது. அமைதியான சூழ்நிலை தியானத்திற்கு ஏற்ற இடமாகத் திகழ்ந்தது. இந்த இடத்தில் போதி மரத்தடியில் 'ஞான ஒளி' கண்ட புத்தர் பிரான் ''ஆசிய சோதி''யாக மலர்ந்த வரலாற்று நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக என் மனதில் விரைந்து குமிழியிட்டெழுந்தன. நானும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் புத்தர் பிரான் வாழ்ந்த காலத்திற்குத் தள்ளப் பெற்றேன் - மானசீகமாக. பாவனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன்.*

*தேவர் அவையில் இறைவன் பேசிய அருளுரை என் மனக் காதில் கேட்டது.*

''வையகத்தில் உயிர்கள்மிக வாடக் கண்டேன்;
வழியறியாது அவைமயங்கி வருந்தக் கண்டேன்;
மெய்யிதுஎன்று உய்யுநெறி காட்டி நன்மை
விளைவிப்பர் எவரையுமே கண்ணிற் காணேன் (1)

எண்ணரிய சென்மங்கள் எடுத்து முன்னம்
எவ்வுடம்பின் எவ்வுயிர்க்கும் இடர்க ளைந்தேன்;
மன்னுலகம் ஈடேற இன்னும் ஓர்கால்
மனிதஉடல் தாங்கமனத்து ஆசை கொண்டேன்; (2)

22. 1968 - அக்டோபர் 12-14 அனைத்திந்திய கீழ்த்திசை மாநாடு (24வது அமர்வு) வாரணாசியில் நடைபெற்றது. இதற்கு என் மனைவியையும் இட்டுக் கொண்டு காசிக்குச் சென்றபோது கயை, புத்த கயை, அயோத்தி முதலான இடங்கட்குச் சென்றுவரும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொண்டேன்.

இப்பிறப்பை யல்லாது பிறப்பு வேறிங்கு
எனக்குமிலை; என்னைவழி பட்டு வாழும்
ஒப்பரிய அடியவர்கள் எவர்க்கும் இல்லை;
உண்மையீது எந்நாளும் உன்மை யாமால்! (3)

வானெழுந்து வளர்இமய மலையின் தென்பால்
வாழும்உயர் சாக்கியர்தம் மன்ன னுக்கு
யானும்ஒரு மகனாகச் செல்வேன்''[23] (4)

*என்று புத்தர் அவதரித்த செய்தி அறிந்தேன். பின்னர் அவர் மக்கள் அல்லலுறுங் காரணத்தை அறிய காடு மலை முதலிய இடங்களிலெல்லாம் அலைந்து திரிந்த வரலாறு கள் எல்லாம் என் மானதக் காட்சியில் புலனாயின. அவர் யசோதரையை மணந்ததும், அவள் அந்தப்புரத்தில் இருந்த போது அவர் மட்டும் தேவகீதம் கேட்டதும், பின்னர்,*

''புழுதி நிறைந்த பூமி எனக்குப்
பழுதி லாத பஞ்சணை யாகும்;
பாழிட மான பாலையை நல்ல
வாழிட மாக மதித்து வாழ்வேன்;
ஏழைப் பிராணி எதனொடும் அன்பாய்த்
தோழமை பூண்டு துணைசெய் திடுவேன்;
பணிசெய் பள்ளர் பறையர் அணியும்
துணியை அறையில் சுற்றித் திரிவேன்;
தெருத்தெரு வாகத் திரிந்து பெற்ற
பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன்''[24]

*என்று சொல்லிக் கொண்டு துறவு பூண்டதும் யசோரையை நோக்கி,*

''நீள்நில மீது நித்தியா னந்த
வாழ்வை யடையும் வழிஇது என்று

23. ஆசிய சோதி - புத்தர் அவதாரம் (அடி 1,2,3,4)
24. ஆசிய சோதி சித்தார்த்தர் துறவு - (அடி 66-75)

தீவிர மானதியாகத் தாலும்
ஒய்வில் லாத உழைப்பி னாலும்
அறியலா மென்னில் அறிந்து வருவேன்
வாடி வருந்தி மன்னுயி ரெல்லாம்
அடையும் துன்பம் அனைத்தும் ஒழிப்பேன்''[25]

என்று கூறி வெளியேறியதுமான நிகழ்ச்சிகள் படக்காட்சி காண்பதுபோல எனது மானதக் காட்சியில் தெரிந்தன.

பின்னர், வழிநடந்த களைப்பால் ஓர் ஏழை இடைச் சிறுவன், கலத்தில் கறந்து தந்த பாலைப் பருகித் தளர்ச்சி நீங்கியதும் பிம்பிசார மன்னன் செய்யும் வேள்விக்காக நடத்திச் செல்லப் பெற்ற ஆட்டு மந்தையைக் கண்டு இரங்கியதும், துள்ளும் மறியொன்றினைச் சுமந்து கொண்டு,

''மானேந்தும் ஈசன்உளம் நாண ஆட்டின்
மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்''[26]

பிம்ப சாரணின் மாநகரின் திருவாயிலில் வந்தபோது கண்ட காட்சிகளும், யாகம் செய்யும் தீட்சிதருக்கும் புத்தர் பிரானுக்கும் இடையே நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களும், யாக தீட்சதருக்குப் புத்தர் பிரான் தந்த,

மன்னுயி ரெல்லாம் உலகில் - ஒருதாயின்
மக்களென் றுண்மை அறிந்தீரோ (58)

..... ..... .....

தாயென நம்பி வரும்உயிரை - யாக
சாலை நடுவில் கிடத்திஒரு
பேயெனக் கீறிப் பிளப்பதனால் - என்ன
பேறும் பெருமையும் பெற்றீரையா? (61)

25. மேலது - மேலது (அடி 256-262)
26. மேலது - கருணைக் கடல் - 16

..... ..... .....

ஆயிரம் பாவங்கள் செய்தவெல்லாம் - ஏழை
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை - விட்டுச்
செல்வ தொருநாளு மில்லை ஐயா! (63)

முன்னைப் பிறப்பினில் செய்தவினை - யாவும்
முற்றி முதிர்ந்து முளைத்தெழுந்து
பின்னைப் பிறப்பில் வளர்ந்திடும் என்பது
பித்தர் உரையென தெண்ணினீரோ? (64)

நெஞ்சினில் வாயினில் கையினில் - செய்திடும்
நீதி அநீதிகள் யாவையுமே
வஞ்சமி லாது மறுபிறப்பில் - உம்மை
வந்து பொருந்தாமல் போயிடுமோ? (65)

..... ..... .....

ஆதலால், தீவினை செய்ய வேண்டா - ஏழை
ஆட்டின் உயிரையும் வாங்க வேண்டா
பூதலந் தன்னை நரகம் தாக்கிடும்
புத்தியை விட்டுப் பிழையும்ஐயா! (69)[27]

என்பன போன்ற அறிவுரைகளும் என் மனக் காதில் கேட்டன.

'புத்தரும் சுஜாதையும்' என்ற தலைப்பில் உள்ள பாடல்களை என் மனம் அசை போட்டது. புத்தர் சுஜாதை படைத்த உணவை உண்டு உடல் வலியுற்றதனையும், சிந்தை முற்றும் தெளிந்த நிலையும் உடையவராகி,

வாடா மலர்கள் மலர்ந்து சொரியும்
போதி விருட்சம் பொலிபூங் காவினை
நாடிச் சென்றனன் ஞானம் பெறவே[28]

27. மேலது - கருணைக்கடல் - 58, 61, 63, 64, 65, 69
28. மேலது - புத்தரும் சுஜாதையும் (அடி - 237-239)

என்ற செய்தியையும் என்மனம் சிந்தித்தது. அப்போது நானும் என் மனைவியும் போதி மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்ததை நினைந்து பார்த்தேன்.

சுஜாதை தவம் செய்து பெற்ற மகன் இறந்து விடுகின்றான். இந்நிலையில் மீண்டும் அவளிடம் வந்த புத்தர் பெருமானை நோக்கி தன் மகனை உயிர்ப்பிக்குமாறு வேண்டுகின்றாள். அவர் அவளுக்கு அறிவுரை பகர்ந்து, 'பிறப்புளதேல் இறப்புமுண்டு' என்ற உண்மையைப் போதிக்கும் காட்சி என் மனத்திரையில் காணப்படுகின்றது. இப்பகுதியிலுள்ள பாடல்கள் உள்ளத்தை உருக்குபவை.

மகனை அரவு தீண்டிய செய்தியினைக் கூறுகின்றாள். கண்டோர் பலர் அதற்கு மருந்து கூறுகின்றனர்.

கண்டாரில் மிக்கஉளக் கனிவுடையார் ஒருவர்
'காரிகையே! மலைமீது காவியுடை அணிந்து
முண்டிதமாய் அலையும்ஒரு முனிவர்அடி பணிந்தால்
முடியாத காரியமும் முடியும்என உரைத்தார் (14)[29]

புத்தரிடம் மகனிழந்தாய் கதறுதுவதைக் கூறும் பாடல்கள் கல்நெஞ்சத்தையும் கரைப்பவை; 'கண்ணிலான்' பெற்றிழந்தான் என உழந்த நிலையில் கன்றொழிந்த காராவின் கலக்கம் எய்திய காரிகை அரற்றிய சில பாடல்கள்:

வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா! (18)

29. ஆ.சோ: புத்தரும் மகனிழந்த தாயும் - 14

முகம்பார்த்துப் பேசாமல்
    முலைப்பாலும் உண்ணாமல்
மகன்கிடக்கும் கிடைகண்டு
    மனம்பொறுக்கு தில்லைஐயா! (19)

'பின்னி முடிச்சிடம்மா
    பிச்சிப்பூ சூட்டிடம்மா'
என்னும் மொழிகளினி
    எக்காலம் கேட்பனையா? (21)

நெஞ்சிற் கவலையெல்லாம்
    நிற்காமல் ஓட்டும்அந்தப்
புஞ்சிரிப்பைக் காணாது
    புத்திதடு மாறுதையா! (22)

துள்ளிவிளை யாடஎன்றன்
    சுந்தரனைத் தேடிவரும்
புள்ளிமான் கன்றினுக்குளப்
    பொய்சொல்லி நிற்பனையா? (26)

குஞ்சை யிழந்தகுயில்
    கூவியழக் கண்டகனா
நெஞ்சை யறுக்குதையா
    நினைப்பொழிய மாட்டாதையா! (28)

கொம்படர்ந்த மாவின்
    குலையடர்ந்த பூம்பிஞ்சு
வெம்பிடவிழக் கண்டகனா
    மெய்யாய் விடுமோ,ஐயா! (29)

தாயாகி உள்ளம்
    தருக்கி யிருந்ததுபோய்ப்
பேயாகி இன்று
    பிணந்தூக்கி நிற்பேனோ? (31)

''இந்தப் பிறவியில்யான்
எப்பிழையும் செய்தறியேன்;
எவ்விதம் என்வயிற்றில்
இவ்விடியும் வீழந்ததையா?'' (32)

*மகப்பேறு இல்லாத கவிமணி ஒட்டவுணர்தல்* (Empathy) *நிலையடைந்து கதறும் நிலை எய்தினரோ? என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. இந்தக் கதறலைச் செவிமடுத்த புத்தர்பிரான் சுகுண சுந்தரி சுஜாதைக்கு அவள் கவலை தீர்க்கும் மருந்தொன்று கூறுகின்றார்:*

''தாயே நின்மனக்கவலை - ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்;
சேயினை எழுப்பிடுவேன் - விளையாடித்
திரியவும் செய்திடுவேன் (34)

நாவிய கடுகுவேண்டும் - அதுவுமோர்
நாவுரிதானும் வேண்டும்;
சாவினை அறியாத - வீட்டினில்
தந்ததா யிருக்கவேண்டும்! (35)

பக்கமாம் பதிகளிலே - சென்றுநீ
பார்த்திது வாங்கிவந்தால்
துக்கமும் அகலுமம்மா! - குழந்தையும்
சுகமாக வாழுமம்மா! (36)

*சுஜாதா குழந்தையைத் தன் மார்பிலணைந்து கொண்டு எங்கும் சென்று கடுகு இரந்து வெறுங் கையளாகித் திரும்புகின்றாள். திரும்பியவள் புத்தர் பெருமானிடம் தன் அநுபவத்தை நவில்கின்றாள். இரந்து சென்றபொழுது ஒருத்தி மட்டிலும் பரிவுகொண்டு,*

நாவிக் கொழித்த நாவுரிக் கடுகையும்
அளந்துஎன் மடியில் அளித்திட வந்தனள். (10)[30]

என்பதையும்,

இட்ட கடுகை ஏற்பதன் முன்னம்
தாயரே, நீவிர் தங்கும் மனையிது
சாவறி யாத தனிமனை தானா?
தந்தை தாயர் தமக்கை தங்கை
மைந்தர் எவரும் மரித்ததும் உண்டோ?
உரைத்திடும்' (20-21)

என்று தான் வினவியதையும், அதற்கு அவள்,

'வினவியது என்னை? விரிநீர் உலகில்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றார்
இறந்தார் என்கை இயல்பே அம்மா!
காலையில் உதித்த கடுங்கதிர்ச் செல்வன் (21-25)

மாலையில் தளர்ந்து மறைவதும் இலையோ?
இம்மா நிலத்தில் இறக்கையின் குறிப்பெலாம்
அம்மா நீயும் ஆய்ந்திலை போலும்' (26-28)

என்று உரைத்து, கணவனை இழந்த கைம்பெண், தந்தையை இழந்த தனயள்; மைந்தனை இழந்த வறியவள், தமையனை இழந்த தங்கை, மாமனை இழந்த மருகி, அன்னையை இழந்த அகதி என்று ஒவ்வொருவரையும் தனித்தனியே இனங்காட்டி,

பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும்
உலகின் இயற்கை (36-37)

என்ற தத்துவ உண்மையையும் எடுத்துக் காட்டுகின்றாள்.

பிறிதொரு வீட்டில் சென்றபோது அங்குள்ள பெண் ஒருத்தி இவள் கையிலிருந்த கடுகை வாங்கி அளந்து கட்டி வைத்து,

30. ஆ.சோ: புத்தரும் மகனிழந்த தாயும் - அடி.15

உழுதவர் இந்நாள் உலகில் இல்லை;
விதைத்தவர் அன்றே விண்ணுல கெய்தினர்
காத்தவர் காலமும் கழிந்து விட்டது
அடிமையும் இறந்துநாள் ஐந்தா றாகுது
காலனை எவரே கடக்க வல்லவர்? (46-50)

*என்று மற்றோர் பேருண்மையினை மறைக் கூற்று போல் உரைத்தனள். இவ்வாறு தன் அநுபவத்தை கூறிய சுஜாதை,*

"ஐயமிடு மனைகளிலே மரணம் என்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு;
மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்;
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன்;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்..." (39)

*என்கின்றாள். இதனைச் செவிமடுத்த புத்தர்பிரான் அப் பெருமாட்டியை,*

மங்கைமனத் தெளிவையெலாம் உரைத்த உண்மை
வார்த்தையினால் அறிந்தவளை நோக்கி, "அம்மா!
எங்குமிலாப் பொருள்தேடச் சென்று நீயும்
யான்நினைத்த பொருளதனைப் பெற்று வந்தாய்;
தங்குமிந்த உலகியற்கை மாறா தம்மா!
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டா;
அங்கமெலாம் வாயாக அழுதிட் டாலும்
அவளெழுந்து நின்துயரம் அகற்ற லுண்டோ? (40)

*என்று தேற்றி மகனை அடக்கம் செய்துமாறு பணித்து தன் வழிச் செல்லுகின்றார். போதி மரத்தடியில் என் மனைவி யுடன் நின்றிருந்த எனக்கு இந்த மானதக் காட்சிகள் படலம் படலமாக மனக் கண்ணில் புலனாயின.*

*இத்துடன் இந்த இயல் நிறைவு பெறுகின்றது.*

# 5. இசைத்தமிழ்

**1943**-இல் தமிழ்நாட்டில் பொங்கி எழுந்தது தமிழிசை இயக்கம். இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் முன்னின்று இந்த இயக்கத்திற்கு ஒரு புதிய வேகத்தை நல்கினார். கல்கி, இராஜாஜி, டி.கே.சி. முதலியோருக்கு இதில் பெரும் பங்கு உண்டு. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதற்குப் பெரும் ஆதரவு அளித்தது. இதன் விளைவாகச் சென்னையில் தோன்றியதுதான் அண்ணாமலை மன்றம்.

தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு முன்னர் இராமலிங்க அடிகள் பல கீர்த்தனைகள் இயற்றியுள்ளார். இவருக்கு முன்னர் இயற்றப் பெற்ற இராம நாடகக் கீர்த்தனைகள், நந்தனார் கீர்த்தனைகள் புகழ் பெற்றவை. சங்கரதாஸ் சுவாமிகள், இலட்சுமண பிள்ளை, பம்மல் சம்பந்த முதலியார் முதலியோர் படைத்த நாடகங்களில் பெரும்பாலும் பாட்டுகள் (கீர்த்தனைகள்) இருந்து வந்தன. பிற்காலத்தில் கந்தசாமி முதலியார், பவானந்தம் பிள்ளை, தெ.பொ. கிருட்டிண சாமிப் பாவலர், டி.கே. முத்துசாமி, எஸ்.டி. சுந்தரம், பி.எஸ்.இராமையா, கு.சா. கிருஷ்ணமூர்த்தி, அறிஞர் அண்ணா இவர்களால் படைக்கப் பெற்று நடிக்கப் பெற்ற நாடகங்களிலும் ஒரு சில கீர்த்தனைகள் தலைகாட்டத்தான் செய்தன.

பாரதியாரும் 'வந்தே மாதரம்'[1] 'பாரத நாடு'[2], 'பாரத தேசம்'[3] முதலான[4] கீர்த்தனங்களைப் பாடி இசைத்

1. பா.க: தே.கீ. வந்தே மாதரம்
2. மேலது - மேலது - பாரத நாடு
3. மேலது - மேலது - பாரததேசம்
4. கண்ணம்மாவின் எழில், இராதைப் பாட்டு, ஐயம் உண்டு, ஆரிய தரிசனம் முதலான தோத்திரப் பாடல்களைக் காண்க.

தமிழுக்கு ஆக்கம் அளித்துள்ளார். இவருக்கு இசைஞான மும், இசைப் பயிற்சியும் உண்டு. அவரே தம் பாடலுக்கு மெட்டு, இராகம் தாளம் முதலிய இசைக் குறிப்புகளைத் தம் பாடல்கட்குத் தந்திருப்பதை அறியலாம்.

இந்த நிலையில் தமிழிசை இயக்கத்தின் அலைகள் திருவிதாங்கூர் பகுதியில் வாழ்ந்து வந்த கவிமணியின் உள்ளத்திலும் மோதின. அக்காலந்தொட்டு பற்பல கீர்த்த னங்களும் இவர் பாடி வந்துள்ளார். பெரும்பாலும் இவை தெய்வம் பற்றியனவாகவே உள்ளன. இசையரசு முத்து தாண்டவர் பதங்கள் முதலியவற்றிலே காணப்பெறும் நயமும் அபிநயத் தகுதியும் இவர்தம் கீர்த்தனங்களில் மிளிர்கின்றன.

**பல்லவி**

சொன்ன தெல்லாம் மறந்தாரோ? - என்னைச்
சோதனை செய்யத் துணிந்தாரோ?

**அநுபல்லவி**

செந்நெற் கழனிசூழும் தில்லை பதியாரன்று
கன்னல் கனியமுத்தம் கனிந்து தனித்தளித்துச்
(சொன்ன)

**சரணம்**

வருவார் வருவாரென்று நித்தம் வரும்
வழிமேல் விழியாய் நின்றேன் தோழி

ஒரு வாரம் ஒருமாதம் ஒருவருஷமும் போச்சே
ஒருத்தி சிறுக்கி என்றிவ் வூரும் சிரிக்கலாச்சே
(சொன்ன)

இதுபோன்ற கவிதைகள் அமைந்த கீர்த்தனங்களும் பல உள்ளன. எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் நிறுவப்பெற்ற பொழுது பாடிய கீர்த்தனம் ஒன்று உள்ளது. அது:

**பல்லவி**

மண்டபம் வாழ்கவே - பாரதி
மண்டபம் வாழ்கவே

**அநுபல்லவி**

தண்டமிழ் போல அவன்
தந்த கவிகள் போல
எண்டி சையும் போற்றும்
இமய மலையே போல

(மண்டபம்)

**சரணம்**

பாரத சக்திவளர் பீடமாய்
பைந்தமிழ்க் காலயமாய்
வீர சுதந்தி ரத்தின்
வெற்றி நிலைக் களமாய்
சூரிய சந்திரர் இத்
தொல்லுல குள்ளளவும்

(மண்டபம்)

இதுபோன்ற இனிமையும் அழகும் வாய்ந்த கீர்த்தனங்கள் பல பாடியுள்ளார் கவிமணி. தமிழ்நாட்டில் இசையும் அபிநயமும் தனிப்பட்ட சிறப்புடன் விளங்கி நமது பண் பாட்டின் மேன்மையை நன்கு உணர்த்துகின்றன. கவிமணி யின் கீர்த்தனங்களையெல்லாம் தொகுத்து 'தே.வி.யின் கீர்த்த னங்கள்' என்ற பெயரில் வெளியிடப் பெற்றுள்ளன.[5]

இங்ஙனம் பல கீர்த்தனங்களையும் பாடியருளிய கவி மணி இசைப் பயிற்சி பெற்றவரல்லர். இசைப் பயிற்சியே பெறாத ஒருவர் கீர்த்தனங்கள் முதலியவற்றைப்

5. பாரி நிலைய வெளியீடு (1953)

பாடுதல் பொருத்தமாகுமா? என்று சிலர் வினவலாம். சாகித்தியம் இயற்றபவர்கட்குச் சங்கீதம் பயிற்சி அமைந்திருப்பது அருமை; இங்ஙனமே சங்கீதப் பயின்றவர்கட்குச் சாகித்தியத்திற்கு வேண்டிய மொழிப் பயிற்சி பெரும்பாலும் இருப்பதில்லை. இன்று தமிழ்நாட்டில் வழங்கிவரும் பதங்களும் கீர்த்தனங்களும் மொழி பற்றிய அளவில் 'பிழை மலிந்த சருக்கங்களாக' இருப்பதன் காரணம் இதுவேயாகும். வடமொழியிலுள்ள பதங்களும் கீர்த்தனங்களும் பிழை மலிந்துள்ளன என்று வடமொழி வாணர்கள் சொல்லக் கேட்டதுண்டு. இக்குறை நீங்க வேண்டுமாயின் பாடலாசிரியரும் இசை அமைப்பவரும் வேறு வேறாக இருக்க வேண்டும். நந்தமிழ்நாட்டில் பெரும்பாலும் பாட்டு இயற்றுபவர் வேறாகவும், பண் அமைப்பவர் வேறாகவும் தொன்றுதொட்டு நெருக்கமாக இருந்து வருவதைக் காணலாம்.

'பரிபாடல்' என்னும் தொகை நூலை நோக்கும் போது இவ்வுண்மை தெளிவாகும். ஒவ்வொரு பாடலின் அடியிலும்,

> கடவுள் வாழ்த்து
> ஆசிரியன் நல்லந்துவனார் பாட்டு
> மருத்துவன் நல்லச்சுவனார் இசை
> பண்ணும் பாலையாழ் — பரிபா-8

என்றும்

> கடவுள் வாழ்த்து
> நல்லச்சுதனார் பாட்டு
> கண்ணகனார் இசை
> பண்காந்தாரம் — பரிபா - 21

என்றும் குறிப்பிட்டிருத்தல் இதற்குச் சான்றுகளாகும். தவிர, சைவத்திருமுறைகளைத் தொகுத்தவர் திருநாரையூரைச் சார்ந்த நம்பியாண்டார் நம்பி; தேவாரப் பதிகங்களுக்கு பண் அமைத்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்தருளிய திருவெருக்கத்தம் புலியூரைச் சார்ந்த திருநீலகண்டப் பெரும்பாணர் மரபிலே பிறந்த அம்மையார் ஒருவர் என்பது வரலாறு. அங்ஙனமே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்து அடைவு படுத்தியவர் காட்டுமன்னார் கோவிலைச் சார்ந்த நாதமுனிகள்; இப்பாசுரங்களுக்கு முதன் முதலாக இராக - தாளங்களை அமைத்தவர் அப்பாவு முதலியார் (1865). இவர்தான் முதன் முதலாக நாலாயிரத்தை அச்சியற்றியவர். மேலை நாடுகளிலும் சாகித்தியம் இயற்றுவோரும் இசையூட்டுவோரும் வேறு வேறாகவே இருப்பதுவே வழக்கம் என்றும் அறியக் கிடக்கின்றது. இவ்வழக்கங்களுக்கேற்பவும் தமிழின் நயம், கவித்துவத்தின் நயம் இவற்றைப் பேணவும் கவிமணி இக்கீர்த்தனம் முதலியவற்றைப் படைத்துள்ளார். இசையூட்டுவோர் கீர்த்தனங்களைப் பலமுறை கற்று அவற்றின் இசை பாவங்களில் ஊறி, அதன் பின்னர் தக்கதாய இசையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இன்றைய திரைப்படவுலகில் பாடல்களை இயற்றுவோரும் பண் அமைப்போரும் வேறு வேறாக இருப்பதையும் காண்கின்றோம்.

## 6. திறனாயும் திறன்

**நா**ம் எதைப் படித்தாலும் அதனைத் திறனாய்ந்தே உணர்கின்றோம். சிறுவர்களிடம் கூட இத்திறனாய்வுப் பண்பு கருவிலே திருவுடையதாகக் காணப் பெறுகின்றது. சாதாரணமாகத் 'திறனாய்தல்' என்பது தவறாகவே உணரப் பெறுகின்றது; திறனாய்பவரின் உண்மையான செயல் அழகையும் உண்மையையும் காண்பதேயாகும் என்பதைத் தெளிவாக உளங்கொள்ளுதல் வேண்டும். கவிதையாயினும் வாழ்க்கையாயினும் திறனாய்வாளனுக்கு ஒரே ஒரு கடமை - ஒரு குறிக்கோள் உண்டு; அதில் அழகையும் உண்மையையும் காண்பதே அது. சில சமயம் திறனாய்வாளன் குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமையும் ஏற்படலாம்; ஆனால், அவ்வாறு செய்வது குறைகளை காண்பதில் தான் கொண்டுள்ள காதலால் அன்று என்றும், உண்மையின்மீது தான் கொண்டுள்ள காதலின் காரணமாகவே அவ்வாறு செய்வதாகவும் நாம் உணர வேண்டும். அழகின் நடுவே காணப் பெறும் உண்மைதான் பொலிவுடன் திகழும் என்பதை நாம் வற்புறுத்த வேண்டியதில்லை. குறை காண்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளவர், பிறருடைய குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலேயே மகிழ்ச்சி அடைகின்றவர், தம்முடைய சிறுமையைத் தான் காட்டிக் கொள்ளுகின்றார் என்பது வெளிப்படை. அவரால் பொருளின் உயிர்நாடியை - இதயத்தை ஒருநாளும் நன்கு உணர முடியாது. அவர் பெருங்கவிஞர்களின் நட்பை எப்பொழுதும் பெறவே இயலாது. கவிஞர்களும் தம்மைப் போல மனிதர்களே என்று காட்டும் ஒன்றில் மட்டிலும் அவருடைய அக்கறை செல்லும். சுருங்கக் கூறினால், தம்மையே அவர்களிடம் காண்கின்றனர். தம் குறைகளையே அவர்களிடமும் காண்கின்றனர். இத்தகைய திறனாய்வாளர் வடையை உண்ணும் செயலைவிட்டு அதன் துளையை

எண்ணிக் கொண்டே - கணக்கிட்டுக் கொண்டே - நேரங் கழிக்கும் பேர்வழிகளைப் போன்றவர்கள்.

உண்மையான திறனாய்வாளர் கவிதைகளைத் துய்க்கும் ஆற்றல் பெற்றவர்; அவர் கவிதைகளில் உண்மையையும் அழகையுமே காண முயல்வார். தாம் காணும் ஒரு சில குறைகளை ஒரு பக்கம் ஒதுக்கித் தள்ளிவிட்டுக் கவிதைகளைப் படைத்த கவிஞர்களின் அருகில் வாழ விரும்புவார்; அவர்களுடைய பெருமையில் தம்மையும் வைத்துக் காண முயல்வார்; விழைவார். இவ்வாறு ஆராயும் திறன் எளிதல் கைவரப் பெறுவது அன்று. இதற்குப் பயிற்சியும் வேண்டும்; ஒழுங்கும் கட்டுப்பாடும் வேண்டும். பல காலம் ஒழுங்காய்க் கட்டுப்பட்டுப் பயின்ற இலக்கியப் பயிற்சியுடையவர்க்கே இத்திறன் வாய்க்கப் பெறும். குறைகளைக் காண்பது மிகவும் எளிது; கம்பன், இளங்கோ போன்ற மேதையர்களிடமும் குறைகளைக் கண்டுவிடலாம். ஆனால், அவர்களைப் போல் உன்னத நிலையிலிருந்து கொண்டு மானிட வாழ்க்கையைப் பரந்து காணும் திறனை யாவர் பெற முடியும்? கவிதைகளில் பொருள்களின் தன்மையை விட அக்கவிதைகளைப் படைத்த கவிஞர்களின் உணர்ச்சிகளே சிறப்பிடம் பெறுகின்றன; அவர்கள் காணும் அழகும் வாழ்க்கை உண்மைகளுமே நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

கவிஞர்கள் அவ்வப்போதைய மனநிலைக்கேற்ப, அவ்வக் காலத்து சூழ்நிலைக்கேற்பப் பல்வேறுபட்ட உணர்ச்சிகளை உடையவராக இருப்பர். இத்தகைய வேறுபட்ட உணர்ச்சிகளைக் கொண்டு தாம் மேற்கொண்ட பொருள்களின் அழகைக் கற்பனை செய்து பாடுவதனால் தான், அக்கவிதையில் புதுப்புதுக் காட்சிகளைக் காண முடிகின்றது; நாமும் அக்காட்சியின் அழகில் ஈடுபட்டு அநுபவிக்கின்றோம். இடையிடையே காணும் வாழ்க்கையைப் பற்றிய உண்மைகள் நம்மை வியப்புக் கடலில்

ஆழ்த்துகின்றன. பழைய பாஞ்சாலி சபதத்தையே பாரதி புது மெருகு கொடுத்துப் பாடியுள்ளமை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். யாப்பமைதி, சுவை வேறுபாடு முதலியவற்றை இக்காலத்திற்கேற்றவாறு அமைத்திருப்ப தால் அது பொதுமக்கள் சுவைக்கும் காவியமாகத் திகழ் கின்றது. காவியத்தில் காணப்பெறும் சில அபூர்வக் கற்ப னைகள், கனிந்த நாடகத் தன்மை, இடத்திற்கேற்ற யாப் பமைதி முதலிய கூறுகள் கல்விச் செருக்குடைய புலவர்க ளையும் களிப்பிக்குமாறு அமைந்துள்ளன.

பாரதியைப் பற்றி: 'பாட்டுக்கொரு புலவன் பாரதி'[1] என்றும், 'பாரதத்தாய் செய்த தவப்பயனாய் வந்த பாவ லன் சுப்பிரமணிய பாரதி'[2] என்றும் பாரதியை அறிமுகப்ப டுத்துவார் நம் கவிமணி. பாவேந்தர் பாரதிதாசனார்,

> உய்வகை காட்டும் உயர்த மிழுக்குப்
> புதுநெறி காட்டிய புலவன் பாரதி[3]

என்று பேசுவார்.

பாரதியைப் பற்றியும் அவருடைய கவிதையைப் பற் றியும் பொதுவாகவும், அவர்தம் பல பாடல்களைப் பற்றிச் சிறப்பாகவும் 'பாரதியும் பட்டிக்காட்டானும்' என்ற தலைப் பில் திறனாய்ந்துள்ளார் கவிமணி. கவிதைத் திறனாய்வுக் குக் கவிதையாலேயே திறனாய்ந்த அற்புதத் திறனாய்வுக் கவிதை இது. பின்னோர்க்கெல்லாம் இஃது ஒரு கலங்கரை விளக்கம் போல் அமைந்து என்றும் நின்று வழிகாட்டும் சிறந்த ஓர் இலக்கியமாகும்.

பட்டிக்காட்டான் ஒருவன் பட்டணம் போகின்றான். பாரதி பாடல்களைப் பண்ணோடு கேட்கும் வாய்ப்பு

1. ம.மா: பாரதியும் பட்டிக்காட்டானும் - 3
2. மேலது - பாரதி மண்டபம் -2
3. பா.தா.க. பகுதி 2 - பக்.71

*அவனுக்கு ஏற்படுகின்றது. அதில் அவன் மனம் ஈடுபடு கின்றது. சில நாட்களில் அவன் ஊருக்குத் திரும்புகின் றான். அங்கே தன் நண்பர்களுக்கு அப்பாடல்களின் அருமை பெருமைகளைத் தான் உணர்ந்த மட்டில் விவரித் துக் கூறுவதாகக் கவிமணி அவன் வாயின் மூலம் பேசுகின் றார்.*

உள்ளக் கருத்தையெலாம உள்ளபடி யான்இந்த
வெள்ளைக் கவியில் விளிம்பினேன்[4]

*என்று ஒரு வெண்பாவில் தொடங்குகின்றது கவிமணியின் திறனாய்வு.*

பாட்டுக் கொருபுலவன் பாரதி,அடா! - அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே,அடா! - அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய்,அடா! (2)

*என்று பட்டிக்காட்டான் உளறுவதுதான் கவிமணியின் திறனாய்வு; பட்டிக்காட்டான் வாயில் வைத்துப் பேசுவது.*

## (அ) பாடல்களில் பொதுநோக்குத் திறனாய்வு

1. ஞானத்திலேபர மோனத்திலே - உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு[5]

2. அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே[6]

4. ம.மா: பாரதியும் பட்டிக்காட்டானும் - 1
5. பா.க. தே.கீ: பாரத நாடு - 1
6. மேலது, வே.பா: அச்சமில்லை - 1

3. தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரை
கண்ணீரால் காத்தோம்; கருகத் திருவளமோ?[7]

4. காக்கைச் சிறகினிலே நந்த லாலா! - நின்றன்
கரியநிறம் தோன்று தையே, நந்தலாலா!
பார்க்கும் மரங்க ளெல்லாம் நந்த லாலா! - நின்றன்
பச்சை நிறம் தோன்று தையேநந்த லாலா!

*என்பன போன்ற பாடல்களை பட்டிக்காட்டான் கேட்க நேரிடுகின்றது. உணர்ச்சி பொங்கி எழுகின்றது. அந்த உணர்ச்சி,*

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே,அடா! - கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமோ, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே,அடா - பசுங்
கன்றும்பால் உண்டிடாது கேட்குமேயடா! (3)

*என்ற பாட்டாக வடிவெடுக்கின்றது.*

1. சொல்ல வல்லாயோ! - கிளியே!
சொல்லநீ வல்லாயோ?

தில்லையம்பலத்தே - நடனம்
செய்யும் அமரர்பிரான் - அவன்
செல்வத் திருமகனை - இங்குவந்து
சேர்ந்து கலந்து மகிழ்ந் திடுவாய் என்று
சொல்ல வல்லாயோ?[8]

2. திருவைப் பணிந்துநித்தம்
செம்மைத் தொழில்புரிந்து
வருக வருவதென்றே - கிளியே!
மகிழ்வுற் றிருப்போமடி[9]

7. பா.க: தே.கீ. சுதந்திரப் பயிர் - 1
8. தோ.பா: கிளிவிடு தூது - 1
9. மேலது - கிளிப்பாட்டு - 1

3. முருகா! முருகா! முருகா!

வருவாய் மயில்மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் நிறமும் தனமும் கனமும்[10] (முருகா)

4. கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி ஐயா!
படரும் வானொளி இன்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்,
உடல்ப ரந்த கடலுந் தனுள்ளே
ஒவ்வொரு நுண்டுளி யும்வழி யாகச்
சுடரும் நின்றன் வடிவையும் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே[11]

5. வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்; - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத் திசையும இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பி வீரா![12]

*இந்தப் பாடல்கள் முழங்கப்படுவதையும் கேட்கின்றான் நாட்டுப்புறத்தான். இதனை நினைவில் கொண்டு,*

குயிலும் கிளியும் பாட்டில் கூவுமே,அடா! - மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமே,அடா! - மலர்
வெயிலும் மழையுமதில் தோன்றுமே,அடா! - மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமே, அடா! (4)

*என்ற பாடலில் வெளியிடுகின்றான், தன் உணர்ச்சியை.*

10. மேலது: முருகன்பாட்டு
11. தோ.பா: ஞாயிறு வணக்கம் - 1
12. பா.க: தனிப்பாடல்கள் - மழை-2

'நிலாவும் வான்மீனும், காற்றும்', 'காலைப் பொழுது', 'அந்திப் பொழுது', 'ஒளியும் இருளும்'[13] என்ற பாடல்களை அவன் செவிமடுத்திருக்க வேண்டும்.

1. நிலாவையும் வானத்து மீனையும்
காற்றையும் நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக்
குடித்தொரு கோலவெறி படைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை
எங்கணும் ஒட்டி மகிழ்ந்திடுவோம்;
பலாவின் கனிச்சுளை வண்டியில்
ஓர்வண்டு பாடுவதும் வியப்போ? (1)

தாரகை யென்ற மணித்திரள்
யாவையும் சார்ந்திடப் போமனமே,
ஈரச் சுவையதி லூறி
வருமதில் இன்புறு வாய்மனமே!
சீர விருஞ்சுடர் மீனொடு
வானத்துத் திங்களையும் சமைத்தே
ஓரழ காக விழுங்கிவிடும்
உள்ளத்தை ஒப்பதோர் செல்வமுண்டோ? (2)[14]

2. தென்னையின் கீற்றுச் சலசல
வென்றிடச் செய்துவருங் காற்றே!
உன்னைக் குதிரைகொண் டேறித்
திரியுமோர் உள்ளம் படைத்து விட்டோம்

13. இவை நான்கும் தனிப்பாடல்கள் பகுதியில் உள்ளவை.

14. பா.க: தனிப்பாடல்கள் - நிலாவும்.... 1,2

3. மண்ணுல கத்துநல் லோசைகள்
காற்றெனும் வானவன் கொண்டுவந்தான்;
பண்ணி லிசைத்தவ் வொலிக
ளனைத்தையும் பாடி மகிழ்ந்திடுவோம்.[15]

4. மாதர் முகத்தைநினக்கிணை கூறுவர்
வெண்ணிலாவே - அஃது
வயதிற்கவலையின் நோவிற் கெடுவது
வெண்ணிலாவே
காதலர் நெஞ்சை வெதுப்புவை நீஎன்பர்
வெண்ணிலாவே! - நினைக்
காதல் செய்வார் நெஞ்சிற் கின்னமு தாகுவை
வெண்ணிலாவே (4)[16]

*இந்தப் பாடல்களைப் பண்ணொடு பாடக் கேட்ட பட்டிக் காட்டான்,*

விண்ணிலொரு மீன்கள் மின்னுமே,அடா! - விண்ணில்
விளங்கும் மதிநிலவு வீசுமே, அடா!
கண்ணுக் கினியசோலை காணுமே,அடா! - அதில்
களித்திள மான்கள்விளை யாடுமே,அடா! (6)

*என்ற பாடலை அமைத்து மகிழ்கின்றான்.*

*அவன் கீழ்க்கண்ட பாடல்களையும் பண்ணோடு பாடச் செவிமடுத்திருக்க வேண்டும்.*

1. செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாம் என்றே எண்ணி யிருப்பார்
பித்தமனிதர் அவர்சொலும் சாத்திரம்
பேயுரை யாம்என்றிங்கு ஊதேடா சங்கம்! (1)

15. மேற்படி - மேற்படி - 4,5

16. தோ.பா. வெண்ணிலாவே - 24.

இத்தரை மீதினில் லேயிந்த நாளினில்
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவுநிலையில் களிப்பவர்
தூயவராம் என்றிங்கு ஊதேடா சங்கம் (4)[17]

2. பக்தி யினாலே - இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடீ!
சித்தம் தெளியும் - இங்கு
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும்; - நல்ல
வீரர் உறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவம் உண்டாம் - நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கும் (1)[18]

3. உள்ள தெலாமோர் உயிரென்று நேர்ந்தபின்
உள்ளம் குலைவதுண்டோ? - மனமே!
வெள்ள மெனப்பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோ டா? (2)

சித்தின் இயல்பும் அதன்பெருஞ் சக்தியின்
செய்கையும் தேர்ந்துவிட்டால் - மனமே!
எத்தனை கோடி இடர்வந்து சூழினும்
எண்ணம் சிறிதுமுண்டோ? (3)[19]

4. வேதம் அறிந்தவன் பார்ப்பான் - பல
வித்தை தெளிந்தவன் பார்ப்பான்
நீதி நிலைத்தவ றாமல் - தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன் (2)

17. பா.க. வே.பா. - சங்கு - 1,2
18. பா.க. வே.பா. பக்தி-1
19. வே.பா. தெளிவு - 2,3

பண்டங்கள் விற்பவன் செட்டி - பிறர்
பட்டினி தீர்ப்பன் செட்டி
தொண்டரென் றோர்வகுப் பில்லை - தொழில்
சோம்பலைப் போல்இழி வில்லை (3)

நாலு வகுப்பும்இங் கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி (4)

தெய்வம் பலபல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம் (11)

தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மாதத்தார்; (12)

யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று; - இதில்
பற்பல சண்டைகள் வேண்டா (13)[20]

5. வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்;
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;
கானிழல் வளரும் மரமெலாம் நான்;
காற்றும் புனலும் கடலுமே நான் (1)

விண்ணில் தெரிகின்ற மீன்எல்லாம் நான்;
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்;
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்
வாரியி லுள்ள உயிரெலாம் நான் (2)

20. பா.க. பலவகைப் பாடல்கள் - முரசு - 2,3,4,11,12,13

அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்;
அவைபி ழையாமே சுழற்றுவோன் நான்;
கண்டபல் சக்திக் கணமெலாம் நான்;
காரண மாகிக் கதித்துளோன் நான் (6)

நான்எனும் பொய்யை நடத்துவோன் நான்,
ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்;
ஆன பொருள்கள் அனைத்திலும் ஒன்றாய்
அறிவாய் விளங்கும் முதற்சோதி நான் (7)[21]

6. ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலி கள்! - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளிரோ? (1)

மடனைக் காடனை வேடனைப் போற்றி
மயக்கும் மதியிலிகாள்! - எத
னூடும்நின் றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி அறியீரோ? (2)

சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ? - பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ? (3)[22]

7. எங்கும் நிறைந்திருந்த ஈசவெள்ளம் என்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப் போற்றிநின்றால் போதுமடா! (18)

யாதுமாம் ஈசவெள்ளம் என்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை உள்ளுவதே போதுமடா? (19)

காவித் துணிவேண்டா கற்றைச் சடைவேண்டா;
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே. (20)

21. வே.பா. - நான் - 1,2,6,7

22. வே.பா. அறிவே தெய்வம் - 1,2,3

சாத்திரங்கள் வேண்டா சதுமறைகள் ஏதுமில்லை;
தோத்திரங்கள் இல்லை;உளந் தொட்டுநின்றால் போதுமடா! (21)

தவம்ஒன்றும் இல்லைஒரு சாதனையும் இல்லையடா!
சிவம்ஒன்றே உள்ளதெனச் சிந்தைசெய்தால் போதுமடா! (22)[23]

இத்தகைய பாடல்களையும் செவிமடுக்கின்றான் நாட்டுப் புறத்தான். இதனால் அவன் சித்தம் தெளிகின்றது. அது,

உள்ளம் தெளியுமொரு பாட்டிலே,அடா! - மிக்க
ஊக்கம் பிறக்கும்ஒரு பாட்டிலே,அடா!
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலே,அடா! - ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் - பாட்டிலே,அடா! (9)

என்ற பாட்டாய் உருவெடுத்து விடுகின்றது திறனாய்வுப் பாங்கில்.

## (ஆ) பாடல்களின் தனிநோக்குத் திறனாய்வு

'கரும்புத் தோட்டத்திலே'[24] என்ற பாடல் தீவு ஒன்றில் ஏழைத் தொழிலாளர் - குறிப்பாக பெண் தொழிலாளர் படும் பாட்டைக் கேட்டோர் கண்கள் கலங்கும்படிப் பாடியுள்ளார்.

பெண்ணென்று சொல்லிடுலோ - ஒரு
பேயும் இரங்கும் என்பார்; தெய்வமே!நினது
எண்ணம் இரங்காதோ? - அந்த
ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ? - தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே - தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார்

23. பா.க: வே.பா: பரசிவ வெள்ளம் - 18, 19, 20, 21, 22

24. தே.கீ. கரும்புத் தோட்டத்திலே

என்ற அடிகளை இசையேற்றிப் பாடும்போது பட்டிக்காட்டானின் நெஞ்சு உருகுகின்றது; கொதிக்கின்றது. உடனே,

'கரும்புத் தோட்டத்திலே' - எனும்கவி
காதைச் சுடுகுதடா!
இரும்பு நெஞ்சமுமே - நீராய்
இளகியோடுதடா! (10)

என்று அவன் உணர்ச்சி பாட்டாக வடிவங் கொள்ளுகின்றது.

'செந்தமிழ்நாடு'[25] என்ற பாடலை உருக்கமாகப் பாடுவதை அவன் செவி கேட்கின்றது.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்கு மூச்சினிலே (1)

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையைபொருநைநதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு (3)

நீலத் திரைக்கட லோரத்திலே - நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை - வட
மாலவன் குன்றம் இவற்றிடையே - புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு (5)

வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து
வான்புகழ் கொண்ட தாழ்நாடு - நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் - மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (7)

25. தே.கீ. செந்தமிழ்நாடு

என்ற பண்ணோடு பாடப் பெற்ற பாடல்களின் முதல் மொழி செவியில் பட்டவுடன், பட்டிக்காட்டான் வாயி னின்று,

> 'செந்தமிழ் நாட்டின்' - முதன்மொழி
> செவியில் சேருமுன்னே'
> அந்தமில் லாமல் - உள்ளத்தில்
> அமுதம் ஊறுதடா! (11)

என்ற பாடல் பிறக்கின்றது.

அடுத்து, சிறு குழந்தைகட்குப் பாடப்பெற்ற பாடல்கள் பாடிய வாய் தேனூறும் வண்ணம் பாடப் பெறுகின்றன. இவற்றைக் கேட்கின்றான் நாட்டுப்புறத்தான்.

> ஓடி விளையாடு பாப்பா! - நீ
> ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
> கூடி விளையாடு பாப்பா! - ஒரு
> குழந்தையை வையாதே பாப்பா! (1)
>
> சின்னஞ் சிறுகுருவி போல - நீ
> திரிந்து பரந்து வா பாப்பா!
> வன்னப் பறவைகளைக் கண்டு - நீ
> மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா! (2)
>
> காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
> கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
> மாலை முழுதும்விளை யாட்டு - என்று
> வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா! (6)
>
> துன்பம் நெருங்கி வந்தபோதும் - நாம்
> சோர்ந்துவிட லாகாது பாப்பா!
> அன்பு மிகுந்ததெய்வ முண்டு - துன்பம்
> அத்தனையும் போக்கிவிடும் பாப்பா! (9)

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா! - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே, பாப்பா!
தேம்பி யழுங்குழந்தை நொண்டி, - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா! (10)

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா! - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! (11)[26]

என்ற பாடல்கள் பண்ணோடு பாடப்பெற்று நாட்டுப்புறத்தான் செவியில் தேன்போல் வந்து பாய்கின்றன. கள்ளங் கபடம் அறியாத அவன் வாயிலிருந்து,

'பாப்பாப் பாட்டிலே' - நெஞ்சைப்
பறிகொ டுத்தேனடா!
சாப்பாடேதுக் கடா! - சீனி
சர்க்கரை ஏதுக்கடா! (12)

என்ற பாடல் சருக்கரைக் கட்டிபோல பறந்து வெளிவருகின்றது.

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' இருபதாவது நூற்றாண்டில் உருவான ஓர் அற்புதமான தமிழ்க் காப்பியம். அத்தினபுரத்தின் வருணனையில் சோலைகள், வாவிகள், வேள்விச் சாலைகள், மந்திர கீதங்கள் முழங்கும் இடங்கள், சாத்திர ஆராய்ச்சிக் கழகங்கள் இவை அற்புதமாகக் காட்டப் பெறுகின்றன. பாண்டவர்கள் அத்தினபுரத்திற்கு வரும் வழியில் பார்த்தன் பாஞ்சாலிக்கு பரிதியின் எழிலைக் காட்டும் பகுதி, நேரில் காண்பது போன்ற சூதாட்ட வருணனைப் பகுதிகள், பாஞ்சாலியை துரியோதன்

26. பா.க. - பலவகைப் பாடல்கள் - பாப்பா பாட்டு

*மன்றுக்கு அழைத்து வருமாறு பணித்தபோது சகத்தில் உண்டான அதர்மக் குழப்ப வருணனை போன்ற பகுதிகள் கதையினை நேரில் காண்பது போன்ற பிரமையை உண் டாக்கி விடுகின்றது. இதனைப் பாடக் கேட்கும் வாய்ப்பி னைப் பெற்ற பட்டிக்காட்டான்,*

அன்னை 'பாஞ்சாலி - சபதம்'
அறைதல் கேட்டேனடா!
முன்னைக் கதையெல்லாம் - கண்ணின்
முன்நடந்த தடா! (13)

*என்று கூறுகின்றான். காவியத்தை உணர்ச்சியுடன் படிப் போர் காவியத்தில் காணப் பெறும் நிகழ்ச்சிகள் யாவும் படிக்கும்போதே படிமக் காட்சியாகக்* (Imagery) *காண முடிகின்றது.*

'வந்தே மாதரம்'[27] *என்ற பாடல் நாட்டுப் பற்றைக் கிளர்ந்தெழச் செய்து விடுகின்றது.*

ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகல்என்ன நீதி? - ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்
சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ? (3)

புல்லடி மைத்தொழில் பேணிப் - பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர - இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி
வந்தே மாதரம் என்போம் (6)

*என்று உணர்ச்சியோடு பாடும் போது உண்மையில் ஓர்*

27. தே.கீ: வந்தே மாதரம்

*அற்புத சக்தி நம்மில் தோன்றக் காண்கின்றோம். இதைத் தான் கவிமணியும்,*

'வந்தே மாதரத்'தைப் - பாடவே
வாய்தி றந்தவுடன்,
சந்தேக மில்லை - ஒருபுதுச்
சக்தி தோன்றுதடா! (14)

*என்று திறனாய்ந்து கூறுகின்றார் பட்டிக்காட்டான் வாய் மொழியாக.*

'எங்கள் நாடு' *என்ற தலைப்பில் மூன்று பாடல்கள் உள்ளன. மூன்றும் முக்கனிகள். மூன்றையும் 'பூபால ராகத்தில்' இசையேற்றிப் படித்தால்,*

தனித்தனிமுக் கனிபிழிந்து
வடித்தொன்றாய்க் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின்
பொடியுமிகக் கலந்தே
தனித்தநறும் தேன்பெய்து
பசும்பாலும் தேங்கின்
தனிப்பாலும் சேர்த்தொருதீம்
பருப்பிபடியும் விரவி
இனித்தநறு நெய்அளைந்தே
இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும்
இனித்திடும்தெள் அமுதே [28]

*என்று வள்ளல் பெருமான் காட்டும் இனித்திடும் தெள் அமுதமாக இருக்கும்; உள்ளத்திலும் மகிழ்ச்சிக் கடல் பொங்கி வழியும். இதனைக் கவிமணி,*

28. திரு அருட்பா - ஆறாந். அருள்விளக்க மாலை - 17

'எங்கள் நாடு'தான் - பூபாள
இசையி லேறிடுமேல்
கங்கை யாறுபோல் - உள்ளத்தில்
களிப்பொ ழுகுதடா! (15)

*என்று சிற்றூரான் வாயில் வைத்துப் பேசுவர்.*

*'சின்னஞ் சிறுகிளி' என்ற பாட்டு 'கண்ணன் பாட்டில்' 'கண்ணம்மா - என் குழந்தை' (8) என்ற பாட்டின் தொடக்க மாகும். பாரதி பராசக்தியைக் 'கண்ணம்மா' என்று பெண் குழந்தையாக்கிக் குழந்தையிடமே நேரில் பேசுகின்றார். 'மக்கட் பேறு' என்பது ஒரு தாய்க்கு - தந்தைக்கும் கூடத்தான் - ஒரு மாபெரும் பேறு அல்லவா? குழந்தை யைப் பெற்ற தாய் கொள்ளை இன்பம் அடைகின்றாள்.*

பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே - என்முன்னே
ஆடிவருந் தேனே! (2)

*என்ற அடிகளில் அவள் பெறும் இன்பம் பளிச்சிடுகின்றது. ஓடி வருந்தேனை - - ஆடித் திரியும் அன்புப் பெட்டகத் தைத் - தூக்கி அணைந்தவண்ணம் அதன் உச்சியை முகந் தால் அவள் கொள்ளும் பெருமிதம் சொல்லி முடியாது. குழந்தையின் பண்பை ஒருதாய் மாத்திரம் மெச்சிக் கொண் டிருந்தால் போதுமா? ஊரில் உள்ளவர்கள் அதனைச் மெச்சிப் புகழும்போது அவள் மேனியெல்லாம் சிரிக்கின் றது.*

உச்சிதனை முகந்தால் - கருவம்
ஓங்கி வளருதடீ!
மெச்சி யுனைஊரார் - புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடீ! (4)

*தாயின் மகிழ்ச்சி பாரமானியில் காற்றழுத்தம் ஏறுவது போல் ஏறிக் கொண்டே போகின்றது.*

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்[29]

*என்ற வள்ளுவர் வாக்கை நினைந்து பாடுகின்றார் போலும்!*

*தூக்கிய குழந்தையைத் தாய் உச்சி முகப்பதுடன் விட்டு விடுகின்றாளா? அதன் கன்னத்தில் முத்தம் பதிக்கின்றாள். பலபடியாகத் தழுவி மகிழ்கின்றாள். மகிழ்ச்சிகள் வெறியை எட்டி விடுகின்றன. உன்மத்தம் அடைகின்றாள்.*

கன்னத்தில் முத்தமிட்டாள் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ!
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா!
உன்மத்த மாகு தடீ! (5)

*குழந்தையை தழுவும்போது உண்டாகும் மகிழ்ச்சியைச் சொல்லும் முன்பே 'கண்ணம்மா' என்று சொல்லி மகிழ்கின்றாள். இதிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் 'அட்சர லட்சம்' பெறும் என்று சொல்லி வைக்கலாம். அவை பட்டிக்காட்டானின் மனத்தையே உருக்கி விடுகின்றன.*

'சின்னஞ் சிறுகிளி' - கனவில்
தினமும் காணுதடா!
கன்னங் குழியவே - முத்தமும்
கனிந்தளிக்குதடா! (16)

*என்று தன் அநுபவத்தை வெளியிடுகின்றான்.*

'கண்ணன் - என் காதலன்' *(10, 11, 12, 13, 14) என்ற தலைப்பில் ஐந்து பகுதிகள் உள்ளன.*

29. குறள் - 69

பாலும் கசந்ததடீ! - சகியே!
படுக்கை நொந்ததடி!
கோலக் கிளிமொழியும் - செவியில்
குத்தலெடுத்த தடீ!
நாலு வயித்தியரும் - இனிமேல்
நம்புதற் கில்லை என்றார்;
பாலத்துச் சோசியனும் - கிரகம்
படுத்து மென்று விட்டான் (4)

*என்பதில் முதற் பகுதியில்* நான்காம் *பாடல்*

கண்கள் உறங்கஒரு காரண முண்டோ
கண்ணனை இன்றிரவு காண்பதன் முன்னே?
பெண்களெல் லோருமவர்வீடு சென்றிட்டார்
பிரிய மிகுந்த கண்ணன் காத்திருக் கின்றான்;
வெண்கல வாணிகரின் வீதி முனையில்
வெளிப் புறத்திலெனைக் காணடி என்றான்;
கண்கள் உறங்கலெனும் காரிய முண்டோ;
கண்ணனைக் கையிரண்டும் கட்ட லின்றியே? (6)

*என்பது இரண்டாம் பகுதியில்* ஆறாம் *பாடல்*

சொன்ன மொழிதவறும் மன்னவ னுக்கே - எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்;
என்ன பிழைகளிங்கு கண்டிருக் கின்றான்? - அவை
யாவும் தெளிவுபெறக் கேட்டு விடடீ! (3)

ஆற்றங் கரையதனில் முன்ன மொருநாள் - என்னை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர் முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம் (5)

*என்பவை நான்காம் பகுதியில்* மூன்றாம், ஐந்தாம் *பாடல்கள்.*

தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் - இந்த
வைய முழுதுமில்லை தோழி! (5)

இஃது ஐந்தாம் பகுதியில் ஐந்தாம் பாடல்.

இந்தப் பாடல்களைச் சந்தர்ப்பம் அறிந்து பாரதி குறிப்பிட்ட மெட்டில், இராகத்தில் படித்தால் — இல்லை பாடினால் — அவன் குறிப்பிட்ட சுவைகள் கொப்புளித்து நிற்பதைக் காணலாம். இந்த அநுபவத்தைக் கேள்வி ஞான முடைய நாட்டுப்புறத்தான்,

'கண்ணன் காதலன்' - எனக்கொரு
களியமுத மடா!
விண்ண முதமுமே - அதனை
வெல்ல மாட்டாதடா! (17)

என்ற பாடலில் வெளியிடுகின்றான்.

'குயில் பாட்டு' ஓர் அருமையான காதல் காவியம். ''இக்காலத்தில் எழுதப்பெறும் காதல் பாட்டுகள் அகத் துறை மரபுகளைப் பின்பற்றாது தற்காலப் பண்புகளுடன் இருக்க வேண்டியது அவசியம்''[30] 'குயில் பாட்டு' இங்ங னம் அமைந்த ஒரு காதல் பாட்டு என்றும் கருதுகின்றார்.

குயில் எப்படிப் பாடுகின்றது? 'குக்குக்கூ, குக்குக்கூ, குக்குக்கூ, குக்குக்கூ' என்பதாக. இவ்விசையைச் செவிம டுக்கும் கவிஞருக்குக் குயில் பாட்டின் தொக்க பொருள்:

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல்போயிற்
சாதல், சாதல், சாதல்

என்பது. மாயக்குயில்,

30. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி: **தற்காலத் தமிழிலக்கியம்** (1942)

காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்[31]

என்று மானுடவர் பேச்சில் மாயச் சொல் கூறுகின்றது. இப்படிச் சில இடங்கள்.

காதலுற்று வாடுகின்றேன், காதலுற்ற செய்தியினை
மாதர் உரைத்தல் வழக்கமில்லை என்றறிவேன்[32]

என்று குயில் மாட்டுடன் பேசுவதாக அமைக்கின்றார் கவிஞர். குயில் பாட்டில் குயில் சோதிப் பெண்ணாக மாறியபின் அவள் அழகை,

.... கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனூடே இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின்மேனி வகுத்தான் பிரமன் என்பேன்[33]

என்று இரசம் சொட்டும் கவிதை எல்லையாக வருணிப்பார். பாடல் முழுதும் காதல் மயம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆண்டவன் இருப்பதுபோல் பாடலில் காதல் மணம் எங்கும் வீசுகின்றது. இதனைப் பட்டிக் காட்டான்,

'குயில் பாட்டிலே' - காதல்
கொப்புளிக்கு தடா!
செயல் மறந்தேனடா! - லாகிரி
சிரசிற் கொண்டதடா! (18)

என்று தன் அநுபவத்தைத் தெரிவிக்கின்றான்.

31. கு.பா: குயிலின் காதற் கதை - அடி (13-14)
32. மேலது: குயிலும் மாடும் - அடி (59-60)
33. மேலது: குயிலின் முற்பிறப்பின் வரலாறு - அடி (242-45)

சுதந்திரத்தின் பாட்டாக 'சுதந்திரத்தின் பெருமை', 'சுதந்திரப் பயிர்', 'சுதந்திரத் தாகம்', 'சுதந்திரப் பள்ளு', 'சுதந்திர தேவியின் துதி', 'விடுதலை' என்ற பாடல்கள் அமைகின்றன. இந்தப் பாடல்களைப் படிக்கும்போது — இல்லை, பாடும் போது — உள்ளம் துடிப்பதை அறியலாம்.

முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்[34]

அவர் சிந்தனையில் எழுகின்றன. விடுதலைப் பயிரும் அவர் மனத்தில் முகிழ்க்கின்றது. ஆங்கில ஆட்சியில் அடிமைதான் நம்மவர்க்குப் புதிதேயன்றி விடுதலை - சுதந்திரம் - புதிதன்று என்று அவர் தூய மனம் எண்ணுகின்றது. இந்தியத் தாயை - பாரத மாதாவை - நோக்கிப் பேசுகின்றார்.

நின்பொருட்டு நின்னருளால் நின்னுரிமை யாம்கேட்டால்
என்பொருட்டு நீதான் இரங்கா திருப்பதுவோ? (13)

இன்று புதிதாய் இரக்கின்றோ மோ?முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த அருமையெலாம் ஓராயோ?[35] (14)

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்து விட்ட நம் நாட்டினரிடம் இடைக் காலத்து வந்த இழிநிலையை எடுத்துக்காட்டிக் கழிவிரக்கம் கொள்கின்றார்.

அன்னையே அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே.
பன்னிநீ வேதங்கள் உபநிட தங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிகா சங்கள்;

34. பா.க: சுயசரிதை - 26
35. பா.க: சுதந்திரப் பயிர் - 13,14

இன்னும்பல் நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?[36]

என்ற அன்னை படைத்த ஞானச் செல்வங்களையெல்லாம் எண்ணி எண்ணிக் களிக்கின்றார்.

விடுதலையே - சுதந்திரமே - பாரதியின் தாரக மந்திரம். நாட்டுப் பற்றைப் போலவே இதுவும் ஒரு பாரதீயம். நாட்டுப் பற்றிலிருந்து கிளைத்தெழுந்த ஒரு கொள்கை. 'வந்தே மாதரம் ஒன்றே தாரகம்' என்பது இதன் உயிராய பண்பு. எனவே,

வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ? - என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செல்லுத்து வாரோ?[37]

என்று கேட்கின்றார், என்றும் விடுதலையையே வேண்டி நிற்பவர்.

வருவதை முன்னுணர்ந்து ஆற்றலோடு நவிலும் அறிவுத் தெளிவு தனிப் பெறும் புலமைக் கூறாகும்.

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமே என்று[38]

என்று நாடு விடுதலையடைவதற்குப் பல்லாண்டுகட்கு முன்னரே பாடினார்.

36. மேலது: பாரத மாதா நவரத்தின மாலை - 3

37. தே.கீ: சுதந்திரப் பெருமை - 1

38. தே.கீ. சுதந்திரப் பள்ளு - பல்லவி

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர்; - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார்[39]

*என்று மூவண்ணக் கொடியையும் பாடிச் சென்றார்.*

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதி யாச்சு[40]

*என்று முன்னரே கூறிச் சென்ற கவிஞரின் வருவதுரைக்கும் திறன் எவரையும் இறும்பூது அடையச் செய்யும்.*

விட்டு விடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே[41]

*என்று தன் மனத்திற்குக் கட்டளையிடுகின்றார். ஏனைய பாடல்களைப் போலவே சுதந்திரம்பற்றிய பாடல்களும் நாட்டுப்புறத்தானின் மனத்தைக் கவருகின்றன. கூறுகின் றான்:*

'சுதந்திரப் பாட்டில்' - உள்ளம்
துடிது டிக்குதடா
பதமெ முப்புதடா! - கையும்
படப டக்குதடா! (19)

*என்று. இங்ஙனம் பட்டிக்காட்டான் வாயில் வைத்துப் பாரதியின் பாடல்களைத் திறனாய்வு செய்கின்றார் கவி மணி.*

39. மேலது - தாயின் மணிக்கொடி
40. மேலது - சுதந்திரப் பள்ளு - 2
41. வே.பா: விடுதலை - சிட்டுக்குருவி - பல்லவி

*சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கில அதிகாரி கூறுவதாக 'தொண்டு செய்யும் அடிமை' (பா.க.தே.கீ. 34) என்ற பாடல் அமைந்துள்ளது.*

தொண்டு செய்யும் அடிமை! - உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ? - அதற்குப்
பாத்திர மாவாயோ? (1)

சாதி சண்டை போச்சோ? - உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்! - கண்முன்
நிற்கொணாது போடா! (2)

வெள்ளை நிறத்தைக் கண்டால் - பதறி
வெருவலை ஒழிந்தாயோ?
உள்ளது சொல்வேன் கேள் - சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா! (7)

*இந்தப் பாடல்களைப் பாடக் கேட்ட பட்டிக்காட்டானின் உணர்ச்சி கிளர்ந்தெழுகின்றது. உடனே, இவ்வுணர்ச்சிக்கு,*

'தொண்டு செய்யும் அடிமை' - என்னும்
சுடுச ரம்ஓடி
மண்டையைத் தாக்குதடா! - நெஞ்சம்
மடியப் பாயுதடா! (20)

*என்று பாவடிவம் அமைகின்றது. பட்டிக்காட்டான் வாய் வழியாக வெளிவந்தாலும் உள்ளிருந்து பேசுபவர் கவிமணி தானே!*

*பெண்மையைப்பற்றியும் பெண்களின் விடுதலை யைப் பற்றியும் சில பாடல்களை செவிமடுக்கின்றான் நாட்டுப்புறத்தான்.*

பெண்மை வாகென்று கூத்திடுவோ மடா!
பெண்மை வெல்களன்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியம் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும் (1)

அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்;
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம் (2)

'போற்றி தாய்'என்று தாளங்கள் கொட்டடா!
'போற்றி தாய்'என்று பொற்குழல் ஊதடா!
காற்றி லேறிஅவ் விண்ணையும் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே (8)

இவை 'பெண்மை'[42] *என்ற தலைப்பில் காணப் பெறுபவை.* பெண்கள் விடுதலைக் கும்மியில்[43] *சில பாடல்கள்:*

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார் (2)

42. பா.க: பலவகை - பெண்மை

43. மேலது - மேலது - பெண்கள் விடுதலைக் கும்மி

கற்பு நிலையென்று சொல்ல வந்தார்,இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்பு றுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (5)

பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (6)

'பெண் விடுதலை'[44] *என்ற தலைப்பில் உள்ள பாடல்களின் சில அடிகள்:*

........ ....... .......
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ? (1)

திறமை யால்இங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்;
... ....... .......
அறிவி ழந்தது பண்டை வழக்கம்;
ஆணுக் குப்பெண் விலங்கெனும் அஃதே. (2)

*இந்தப் பாடல்களைக் கேட்ட நாட்டுப்புறத்தானுக்கு மானம் வந்து முட்டுகின்றது. அது,*

44. பா.க. பலவகை - பெண் விடுதலை

பெண்டு பிள்ளைகளின் - பெருமை
பெரித றிந்தேனடா!
சண்டைகள் செய்ததெல்லாம் - எண்ணித்
தலைக விழ்ந்தேனடா! (21)

என்று திறனாய்வுப் பாடலாக வடிவங்கொள்ளுகின்றது.

ஏழைத் துயரைப்பற்றிப் பாடிய பாடல்கள் அவன் காதில் விழுகின்றன. 'தமிழ்ச் சாதி'[45] பற்றிய பாடலில் சில பகுதிகள்:

.......... ........ .......
.... ஒருபதி னாயிரம்
சனிவாய்ப் பட்டும் தமிழ்ச் சாதிதான்
உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்
கண்டுஎனது உள்ளம் கலங்கிடா திருந்தேன்.
ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்
....... ....... ........
இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்
— அடி 27-42

45. தே.கீ: தமிழ்ச்சாதி

இத்தகைய கருத்துகளைக் கொண்ட பாடல்கள் நாட்டுப் புறத்தான் செவியேற்றதும், அவன்து உணர்ச்சி பொங்கி எழுகின்றது. அது,

ஏழைத் துயரெல்லாம் - அவனும்
  எடுத்த டுக்கையிலே
மூளை கலங்குதடா! - விம்மி
  மூச்சும் முட்டுதடா! (22)

என்று பாட்டு வடிவம் கொள்ளுகின்றது.

இறுதியாக தன்னால் அனைத்தையும் - பாவின் நயம் அனைத்தையும் - சொல்ல முடியவில்லையே என்று கழி விரக்கம் கொண்டு,

பாவின் நயமெல்லாம் - யானும்
  பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை - நாழி
  அளந்து காட்டிடுமோ! (23)

என்று முத்தாய்ப்பு வைத்துத் தன் திறனாய்வைத் தலைக்கட்டுகின்றான். இங்ஙனம் பேசுவதில் வெளிப்படுவது கவிமணியின் குரல்தானே!

# 7. சுந்தர மூர்த்தி வழியில்

**தே**வாரத்தில் (ஏழாம் திருமுறை) திருத்தொண்டத் தொகையைப் பாடி அடியார் (சைவ அடியார்கள்) வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்தரமூர்த்தி அடிகள்.

தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்[1]

என்று இறைவனாலே அடி எடுத்துக் கொடுக்கப் பெற்ற திருத்தொண்டத் தொகை இவ்வாறு தொடங்குகின்றது. 'அடியார்க்கும் அடியாராகின்றார்'', 'இதுவே தென் தமிழ்ப் பயனாய் வந்த திருத் தொண்டத் தொகை' என்று போற்றப்படும் அற்புதத் திருப்பதிகம் ஆகும். இதனைத் தொடர்ந்து நம்பி ஆண்டார் நம்பி 100 பாடல்களடங்கிய 'திருத் தொண்டர் அந்தாதியாக' விரித்துப் பாட வழியாக அமைகின்றது. பின்னர் சேக்கிழார் பெருமான் அவர்களால் பக்திச் சுவை நனி சொட்டும் திருத்தொண்டர் புராணமாக (பெரிய புராணம்) மேலும் விரிந்தது. இந்தத் தம்பிரான் தோழரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் காந்தியடிகள், தாதாபாய் நௌரோஜி, திலகர், லாலா லஜபதிராய், வ.உ. சிதம்பரம் பிள்ளை போன்ற விடுதலைத் தொண்டர்களைப் பாடிப் போற்றினார் பாரதியார். தொடர்ந்து பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பல்வேறு தொண்டர்களைத் தம் பாடல்களில் போற்றியுள்ளார்![2] இவர்தம் பாடல்களில் உலகப் பெரியார்கள், நாட்டுப் பற்றாளர்கள், திராவிட இயக்கத் தொண்டர்கள், அறிஞர்கள், வள்ளல்கள், துணை வேந்தர்கள், புலவர்கள், நூல் வெளியீட்டாளர்கள் நடிகர் கள் முதலியோர் இடம் பெற்றனர்.

1. சுந்தரர் தேவாரம்: 7.39 (பதிகம்)
2. பாவேந்தர் பாரதிதாசன் - ஒரு கண்ணோட்டம் - இயல்-5 காண்க.

இந்த மரபினைத் தொடர்ந்து நம் கவிமணி அவர்களும் உலகப் பெரியார்கள், ஞானச் செல்வர்கள், நாட்டுத் தொண்டர்கள் அறிஞர் பெருமக்கள், இசையரசுகள் முதலியோரைப்பற்றி வாழ்த்துப் பாடல்களாகவும் இரங்கற் பாக்களாகவும், தனியாகப் போற்றும் முறையாகவும் பாடியுள்ளார். இவையாவும் கவிமணியின் பண்பாட்டுணர்ச்சியைக் காட்டுவனவாகவும் அமைகின்றன. இங்ஙனம் பாடப் பெற்றவர்கள் சிலரைப் பற்றி ஈண்டுக் காண்போம்.

## 1. உலகப் பெரியார்கள்

திருவள்ளுவர், அண்ணல் காந்தி இவர்கள் கவிமணியின் பாடல்களில் இடம் பெற்றுள்ளனர்.

திருவள்ளுவர்: உலகப் பெரியார் திருவள்ளுவர்; ஒப்பின்றிச் சிறந்து விளங்குபவர். இவரை உலகினுக்குத் தந்து வான்புகழ் பெற்றது தமிழகம். இவர் இயற்றிய நூல் உலகப் பொதுமறையாகிய திருக்குறள். திருவள்ளுவரைப் பற்றி கவிமணி பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார்.[3] அவற்றுள் சில:

இம்மை மறுமையின் - பயன்கள்
    எவருமே யடையச்
செம்மை நெறியின் - விளங்கும்
    தெய்வநூல் செய்தோன் (1)

வழுக்கள் போக்க வந்தோன் - நல்ல
    வாழ்வை ஆக்க வந்தோன்;
ஒழுக்கம் காட்ட வந்தோன் - தமிழுக்கு
    உயிரை ஊட்ட வந்தோன் (2)

தொன்மை நூல்களெல்லாம் - நன்கு
    துருவி ஆராய்ந்து
நன்மை தீமைகள் வகுத்த
    நாவலர் கோமான் (3)

3. ம.மா: திருவள்ளுவர்

எதை மறந்தாலும் - உள்ளம்
என்றுமே மறவாப்
பொதுமறை தந்த - தேவன்
பொய்சொல்லாப் புலவன் (4)

சாதி ஒன்றேயாம் - தமிழர்
சமயம் ஒன்றேயாம்
நீதி ஒன்றேயாம் - என்று
நிலை நிறுத்தி நின்றோன் (6)

**வெண்பா**

வையம் புகழ்ஞானி வள்ளுவன் மக்களெல்லாம்
உய்யும் படிமுப்பால் ஓதினான் - ஐயமின்றி
இம்மை மறுமை யிரண்டுக்கும் நேர்வழியைச்
செம்மையிற் கண்டு தெளிந்து (7)

புத்தகம் நூறு புரட்டிக் களைப்பற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன்? - வித்தகன்
தெய்வப் புலவன் திருவள் ளுவன்சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது (9)

நாலா ரணப்பசுவை நாடிக் கறந்தளித்த
பாலாகு மென்றுபா ராட்டுமே - நாலாய்ந்து
வள்ளுவன் தந்த மறுவில் திருக்குறளை
உள்ளுவந் தோதும் உலகு (10)

*திருக்குறளை 'வள்ளுவர்' தந்த 'திருமறை' என்றும் 'தமிழ் மாதின் இனிய உயர்நிலையை' என்றும் பாராட்டுவர் நம் கவிமணி. இதுதவிர ஐந்து பாடல்களாலும் இதனைப் போற்றுவர் சிலவற்றைக் காட்டுவான்.*

மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்
சிக்கலறக் காட்டிநலம் செய்நூலாம் - மிக்கபுகழ்ச்

செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே!
சிந்தனை செய்வாய் தினம் (1)[4]

சங்கப் பலகையிலே - அன்று
தனியமர்ந்த நூலாம்
பங்கய நான்முகனே - தமிழில்
பகர்ந்த மாமறையாம் (2)

புத்தகக் காட்டினிலே - புகுந்து
புத்தி மயங்குவதேன்?
பத்தியோ டிந்நூலை - நிதமே
படித்தால் போதுமையா! (4)

இயேசு நாதர்: *உலகம் உய்ய வந்த பெரியார். இவரைப் பற்றிக் கவிமணி இயற்றியுள்ள பாடல்கள்* முப்பது; 'இரட்சகர்' *என்ற தலைப்பில்*[5]. *அவற்றுள் சில:*

பூமியை ஆளுதற்குத் - தேவ
புத்திரன் வந்துதித்தான்;
சேமம் பிறக்குமென - யூதர்
சிந்தை களித்திருந்தார் (11)

"ஈசன் நாமத்தை - அனுதினம்
ஏத்திப் புகழவேண்டும்;
தாச தாசனாய்ப் - பணிந்து
தருமம் காக்கவேண்டும் (12)

உன்னுயி ரைப்போல் - இந்த
உலகில் உயிரையெல்லாம்
மன்னும் அன்பொடுநீ - என்றும்
மதித்து வாழவேண்டும் (13)

4. ம.மா: திருக்குறள்

5. ம.மா: இரட்சகர்

மேவும் எனதாட்சி - அந்த
    விண்ணுல காட்சியேயாம்;
ஏவல் இடம்பொருளில் - எனக்கிங்கு
    ஏதும் மயக்கமில்லை'' (14)

என்னும்இப் பொன்னுரைகள் - நாட்டில்
    எங்கும் எடுத்துரைத்தான்;
மன்னுயிர் காத்திடவே - மண்ணில்
    வந்து பிறந்தமகன் (15)

*அனைத்துப் பாடல்களும் படித்து, அநுபவித்து மகிழ வேண்டியவை.*

மகாத்மா காந்தி: '*கத்தியின்றி இரத்தமின்றி*' *வெள்ளைய ரிடமிருந்து நாட்டின் விடுதலை பெற்றுத் தந்தவர். இவ ரைப்பற்றி ஏழு பாடல்கள் பாடியுள்ளார் கவிமணி.*[6] *இவை யாவும் இரங்கற்பாக்கள்.*

திடம்படைத்த கல்நெஞ்சும் திடுக்கிட்டு
    நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம்படைத்த மாபாவி வஞ்சனையால்
    காந்திமகான் மடியச் சுட்டான்;
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
    உறுதுயரம் ஒழிந்தி டாதால்;
இடம்படைத்த உலகாளும் இறையேநீ
    எங்கொழிந்தாய் இந்நாள் ஐயா! (1)

புத்த முனியும் புனிதஅரிச் சந்திரனும்
உத்தமன் ஏசுவும் ஒன்றானோன் - மெய்த்தவத்தோர்
வந்தனைசெய் காந்திமகான் வாய்மலரும் பொன்மொழியை
எந்தநாள் கேட்போம் இனி (2)

6. ம.மா: சரமகவி - மகாத்மா காந்தியடிகள்

என்னைச் சுடுகின் றவன்மீதும்
இரக்கம் கொண்டு முகமலர்ந்து
மன்னித் துயிரை விடுவனென்ற
வார்த்தை முற்றும் பலித்ததையா
உன்னையொத்த அருளாள
உலகில் வேறு கேட்டறியோம்!
அன்னை பாரதத் தேவிதரும்
அருமை காந்தி மாமணியே! (6)

கஸ்தூரிபாய்[7]: *இப்பெருமாட்டி காந்தியடிகளின் வாழ்க்கைத் துணைவி; மனைத்தக்க மான்புடையாள். இவரைப் பற்றி ஒரு பாடல்.*

வையம் புகழும் காந்திமகான்
வாழ்க்கைத் துணையாய் வந்துநிதம்
செய்யும் தொழிகள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்து கண்கண்ட
தெய்வம் கணவன் என்றுள்ளம்
தெளிந்த தாயே! நீஎம்மை
வெய்ய துயரில் வீழ்த்தியின்று
விண்ணா டாளச் சென்றனையோ!

## 2. ஞானச் செல்வர்கள்

*இவர்களில் இராமகிருஷ்ணர், சாரதா தேவி, விவேகானந்தர், இராமதீர்த்தர், அரவிந்தர், சுத்தானந்த பாரதியார், அம்பலவாண தேசிகர், குன்றக்குடி அடிகளார் அடங்குவர். இவர்களைப் பற்றிய பாடல்கள்:*

இராமகிருஷ்ணர்: *வங்கநாடு ஈன்ற மாமுனிவர். சக்தி வழிபாட்டாளர்.*

7. ம.மா: கஸ்தூரிபாய்

மாசிலாத அன்பை - உன்னை
　　மறக்க வொண்ணா அன்பை
தாசனாகும் அன்பை - எனக்குத்
　　தந்தருள்வாய் அம்மா! (7)[8]

*என்று அன்னையின் அன்பை மட்டிலுமே வேண்டி நிற்ப வர். 'கற்றுத் தேர்ந்த பண்டிதரும் காணற்கரிய பரம் பொருளை, முற்றி முதிர்ந்த அன்பாலே முழுதும் கண்ட மாமுனிவன்'. வேத, ஆகமங்கள் விரித்த பொருளையெல் லாம் ஓதாது உணர்ந்த உரவோன். மங்கையரைத் தீண்டியறி யாத மகான். இவரைப்பற்றி ஆறு பாடல்கள் உள்ளன. அவற்றுள் இவை:*

ஓடும் பொன்னும் ஒன்றெனவே
　　உறுதி கண்ட உள்ளத்தான்;
ஏடும் குருவும் இல்லாமல்
　　யாவும் அறிந்த பேரறிஞன்
ஈடில் அருள்மா முனிவன்ஸ்ரீ
　　இராம கிருஷ்ணன் திருநாமம்
நாடும் நகரும் போற்றிடயெந்
　　நாளும் வாழ்க வாழ்கவே! (1)

பார்தனிலே வேதாந்தப் பயிர்வ ளர்த்தோன்
　　பத்தினியைச் சோதரியென் றெண்ணி வாழ்ந்தோன்;
கூர்மதியால் எக்கலையும் தானே கற்றோன்;
　　குணக்குன்றம் ராமகிருஷ்ண பரம ஹம்சன்;
சீர்மிகுந்த மெய்ஞ்ஞானி தெரிந்து ரைத்த
　　செம்மொழிகள் சிந்தையினிற் சேர்ந்தோர் என்றும்
பேர்பெருக நீடிந்த உலகில் வாழ்ந்து
　　பேரின்ப வாழ்வினையும் பெறுவர் மாதோ! (2)

8. ம.மா: இராமகிருஷ்ணரின் தேவி பிரார்த்தனை

பாரில்அரும் புகழ்படைத்த பரம ஹம்சன்,
    பாரதத்தாய் செய்ததவப் பயனாய் வந்தோன்;
நீரொழியப் பாலுண்ணும் நெறியில் ஆய்ந்து,
    நிலையான உண்மைகளை நெஞ்சிற் கொண்டோன்;
கூரியமா மதிவிவே கானந் தற்குக்
    கோதிலா மெய்ஞ்ஞான குருவாய் நின்றோன்;
சீரியநம் ராமகிருஷ்ண தேவன் பாதம்
    சென்னிமிசைக் கொண்டுநிதம் சேவிப் போமே! (3)

சாரதா தேவி[9]: *இராமகிருஷ்ணரின் துணைவியார். கண வரையும் மிஞ்சிய மனப்பக்குவம் அடைந்தவர். இவரைப் பற்றி இரண்டு பாடல்கள் உள்ளன. அவை:*

சிந்தனையில் போற்றிடுவோம்; செந்தமிழில் பாடிடுவோம்
வந்தனைகள் செய்து வணங்கிடுவோம் - முந்துபுகழ்ப்
பாரதத்தாய் பெற்றபெரும் பாக்கியத்தால் வந்துதித்த
சாரதத்தாய் வாசமலர்த் தாள் (1)

மண்ணில் வாழும் வாழ்நாளில்
    மாலை யிட்ட மணவாளன்
கண்ணிற் கண்ட கடவுளெனக்
    கருதி வாழ்ந்த மாதேவி

அண்ணல் ராம கிருஷ்ணாவின்
    அருமை மனைவி சாரதையை
பண்ணில் பாடிப் புகழ்வோமே!
    பாத பூசை செய்வோமே (2)

*இங்ஙனம் அருளாளர் பெருமக்களைப் பாடிய கவிமணி யின் கவனத்தில் நந்தமிழ் நாட்டுத் தாயுமான அடிகளும் வள்ளல் இராமலிங்கப் பெருமானும் ஏன் இடம் பெற*

9. ம.மா: சாரதாதேவி

*வில்லை என்பதை நினைக்கும்போது வியப்பாகவே உள்ளது. பாரதியின் பாடல்களில் தாயுமான அடிகள் இடம் பெற்றார். ஆனால், வள்ளல் பெருமான் இடம் பெறவில்லை. இதுவும் வியப்பே.*

விவேகானந்த அடிகள்[10]: இவர் இராமகிருஷ்ணரின் ஈடும் எடுப்புமற்ற சீடர். வேதாந்த நெறியை மேலை நாடுகள் உணரச் செய்த மாமேதை. இவரைப் பற்றிய ஒரே *பாடல்:*

சீர்பெருகு வங்கநிலம் சிறக்க வந்தோன்;
ஸ்ரீராம கிருஷ்ணபதம் சிரமேற் கொண்டோன்;
பார்புகழும் வேதாந்தப் பயிர்வ ளர்த்தோன்
பாரதத்தின் பெருமையெங்கும் பரவச் செய்தோன்;
வேர்பறிய எதிர்வாதம் விரித்துக் கூறி
வீண்வாதம் செய்பவரை வென்று வெற்றித்
தார்புனைந்த தவயோகி விவேகா னந்தன்
தாள்பணிந்து வாழ்வோம்இத் தரணி மீதே.

இராமதீர்த்தர்[11]: *இப்பெருமானின் போதனைகளாக* ஐந்து *பாடல்கள் உள்ளன. இவை ஐந்தும் ஐந்தெழுத்து மந்திரமாகக் கொள்ளத் தகும். அவற்றுள்,*

ஓய்ந்து சோம்பி உறங்கா தேயடா!
ஊக்கம் பெருக உழைத்துமுன் னேறடா!
வாய்ந்த தொழிலில் மலையா தேயடா!
மனமதில் ஒன்றி மகிழ்ச்சி கொள்ளடா! (1)

கற்பனைக் குதிரை கடவுதல் ஒழியடா!
காரியம் பொருளிற் கண்டு தெரியடா!
விற்பனர் விதிகளை விளம்புதல் வீணடா!
வினையில் விளைந்த விவேகம் காணடா! (4)

10. ம.மா: விவேகானந்தர்

11. ம.மா: இராமதீர்த்தரின் போதனை

*என்பவை இரண்டாகும். ஐந்தும் அகத்தில் இடம் பெறத் தக்கவை.*

*அரவிந்தர்[12]: வங்க நாட்டில் தோன்றி சில ஆண்டுகள் நாட்டுத் தொண்டாற்றி, புதுவைப் போந்து புனித வாழ் வாம் சமய வாழ்வில் ஆசிரமம் கண்டு அணையா சோதியா கப் பல ஆண்டுகள் திகழ்ந்து அமைதியான வாழ்க்கை வாழ்ந்தவர். இன்றும் புதுவை செல்வோர் அரவிந்த ஆசிர மம் காணாது திரும்புவதில்லை. 1980இல் என் மனநிலை கலங்கியிருந்தது. நானும் என் துணைவியும் ஆசிரமவாசிக ளாகச் சேர்ந்து இம்மை வாழ்வை முடித்துக் கொள்ளத் திட்டமிட்டோம். எங்கள் நுகர்வினையின் (பிராரத்தம்) பலனாக அத்தகைய வாழ்வு அமையவில்லை!*

*இந்த மாமுனிவரைப் பற்றி இரண்டே பாடல்கள்:*

ஐயம் அறவே நூற்கடலில்
    ஆழ்ந்து மூழ்கி ஆராய்ந்து
பொய்யைப் போக்கி மெய்கண்ட
    புனிதன் புதுவை மாநகரில்

தெய்வ ஞான தீபமெனத்
    திகழ்ந்த யோகி அரவிந்தன்
வையம் காணாப் பேரின்ப
    வாழ்வு கண்டு மறைந்தனனே! (1)

பீடாரும் வங்க வளநா
    டதனில் பிறந்துவந்து,
நீடாழி மோது புதுவைப்
    பதியில் நிலைத்துநின்று,

12. மேலது: அணைந்த சோதி

வாடாது மங்கி மறையாமல்
சூறா வழிவரினும்
ஆடா தொளிர்ந்த அரவிந்த
சோதி அணைந்ததுவே (2)

சுத்தானந்த பாரதி[13]: *பல்லாண்டுக் காலம் அரவிந்த ஆசிரமத்தில் வாழ்ந்து ஞான ஒளி பரப்பி வந்தவர். ஆசிரமத்தைத் துறந்து சென்னையில் ஓர் ஆசிரமம் நிறுவி அதில் வாழ்ந்தவர். மிகப் பல நூல்களின் ஆசிரியர். இவர் தம் தமிழ்ப் பணியைப் பாராட்டி தஞ்சைத் தமிழ்ப் பல்க லைக் கழகம் 'இராஜ இராஜன் விருது' வழங்கி சிறப்பித்தது. இவரை வாழ்த்தி கவிமணி மூன்று பாடல்களை ஆக்கியுள் ளார்.[14] இவை தவிர அடிகளார் புத்தேரிக்கு வந்தபோது வாழ்த்திப் பாடிய மூன்று பாடல்களும் உள்ளன.*

கண்டும் கனியும் கரும்பும் களியமுதும்
தண்டமிழில் கொண்டுதரும் தண்ணளியான் - மண்டுபுகழ்ப்
பண்டிதசுத் தானந்த பாரதிசெய் பாவிருந்தை
உண்டறியார் உண்டோ? உரை (1)

முற்றத் துறந்த முனிவனை முத்தமிழும்
கற்றுத் தெளிந்த கலைஞனை - உற்றநல்
அன்புருவ மானசுத் தானந்த பாரதியை
மன்புவியில் வாழ்த்துகஎன் வாய் (2)

கொண்டல் வண்ணா! கோபாலா
கும்பிட் டுன்னை வேண்டுகின்றேன்
அண்டும் அன்பால் தமிழன்னைக்கு
அல்லும் பகலும் அலுப்பின்றித்

13. ம.மா: தவயோகி வாழ்க
14. மேலது: தவயோகி வாழ்க

தொண்டு செய்யும் தவயோகி
    சுத்தா னந்த பாரதியும்
மண்ட லத்தில் என்றென்றும்
    வாழ வரம்நீ வழங்குவையே.

*இவை தவிர இப்பெருமான் புத்தேரிக்கு வந்தபோது பாடிய மூன்று வெண்பாக்களும் உள்ளன.*

தவத்திரு அம்பலவாண தேசிகர்: *இவர் திருவாவடுதுறை மகா சந்நிதானம்; இவர் நாகர்கோவிலுக்கு எழுந்தருளி யிருந்த காலத்து (5.12.1950) அவர்களைத் தரிசித்தபோது வாழ்த்திப் பாடியவை மூன்று பாடல்கள்.*

அந்தரத்து அம்புலியும் ஆடரவும் சூடாமல்
கந்தரத்து வெவ்விடமும் காட்டாமல் - வந்தருளும்
அம்பல வாணன் அடிமலரைப் போற்றிநிதம்
கும்பிடுநீ நெஞ்சே குழைந்து (1)

*இது தேசிகருக்கு வணக்கம் கூறுவது.*

அன்பால் எவரையும் தன்பா லாக்கும்
ஆவடு துறைவாழ் அம்பல வாண!
தேசிகா! சிவனருட் செல்வா! இன்றுன்
பொன்னடி தொழுது போற்றிய புண்ணியம்
ஐய மின்றி அருந்துணை யாகிப்
பொய்யை அறவே போக்கி
மெய்யை உணர்த்தி, மேல்வீடும் தருமே (2)

*இஃது அடிகளாரைக் கண்டதன் பயன் கூறுவது.*

சைவம் வளரத் தமிழ்வளரத்
    தருமம் ஓங்கித் தழைத்துவரப்
பொய்யைப் போக்கி மெய்கண்ட
    புனித ஞானி யாமெங்கள்

ஐயன் துறைசைக் குருநாதன்
அடியார்க் கருள்அம் பலவாணன்
வையம் புகழ நீடூழி
வாழ்க! வாழ்க! வாழ்கவே! (3)

தவத்திரு குன்றக்குடி அடிகள்[15]: *தருமபுரி ஆதீனத்திலிருந்து குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினத்துச் சின்னப்பட்டப் பொறுப்பை (1949-50) ஏற்றிருந்த காலத்திலேயே இக்காலத்திற்கு வேண்டாத, பொருந்தாத சில மடத்துச் சம்பிரதாயங்களைக் கைவிட்டதனால் பொதுமக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள். ஏனைய மடாதிபதிகள் போல் 'மூலவராகவே' இராமல் 'உற்சவராக' எங்கும் சென்று சமயநெறியையும் தமிழ் நெறியையும் பரப்பி வந்தவர்கள். சமயமும் தமிழும் இந்த அடிகளாரின் மூச்சாகவும் பேச்சாகவும் இருந்து வந்ததைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு அறியும். இவரைப் பற்றிக் கவிமணியின் ஐந்து பாடல்கள் உள்ளன.*

சைவம் வளரத் தமிழ்வளரச்
சலியா தென்றும் தொண்டாற்றி
வையம் புகழ நல்லறங்கள்
வளர்ந்து நாட்டில் புலவர்களை
மெய்யன் போடு பாராட்டும்
மேலோன் அருணாசல அடிகள்
ஐயன் குன்றக் குடிமுருகன்
அருளால் வாழ்க! வாழ்கவே! (1)

இனிய தமிழில் சைவத்தை
எவரும் அறிய எடுத்தோதி
கனியும் அன்பால் அறம்பேணிக்
கற்றோர் போற்ற விளங்கிடுநம்

15. ம.மா: முத்துக்குவியல்

புனிதன் அருணா சலஅடிகள்
　　புகழ்சேர் வாழ்க்கை வரலாறு
நனியிவ் வுலகில் சிறந்தோங்க
　　நாளும் வாழ்க! வாழ்கவே! (2)

மெய்யறிவே எத்திசையும் மேலோங்க, வீண்வாதப்
பொய்யழிந்து பாதலம் புக்கொழியச் - செய்யபுகழ்
ஐயனெம் அண்ணல் அருணா சலஅடிகள்
வையமிசை வாழ்க மகிழ்ந்து (4)

## 3. புலவர் - கவிஞர் பெருமக்கள்

இவர்களுள் கம்பன், ஔவை, பாரதியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, இரவீந்திரநாத் தாகூர், ஆறுமுக நாவலர், உ.வே.சாமிநாதய்யர், திரு.வி.கல்யாண சுந்தர முதலியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், டி.கே. சிதம்பரநாத முதலியார், அபிநவ காளமேகம் அனந்த கிருஷ்ண அய்யங்கார் ஆகியோர் அடங்குவர்.

கம்பன்: 'விருத்தம் எனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்று சிறப்பிக்கப் பெறும் கம்பனைப் பற்றிப் பத்தொன்பது பாடல்கள் உள்ளன.[16] இவை தவிர வேறு சில பாடல்களில் இவன் பெருமை சிறப்பிக்கப் பெறும் இடங்களும் உள்ளன.

கம்பன் கவியின்
　　கனியமுதம் உண்டிட,மால்
அம்புவியில் வந்திங்கு
　　அவதாரம் செய்தானோ![17]

என்பது ஓரிடம். நிற்க. இவனைப் பற்றிய வேறு சில:

16. ம.மா: கம்பன் - 19
17. மேலது - மழலை - தாலாட்டு - 13

அயன்ப டைப்பினையும் - திருத்தி
அழகு செய்திடு வோன்;
நயம்தெ ரிந்துகதை - நடத்தும்
நாட கக்கவி ஞன் (2)[18]

இந்திர சாலமெல்லாம் - கவியில்
இயற்றிக் காட்டிடு வோன்;
மந்திரச் சொல்லாலே - உள்ளம்
மயங்கச் செய்திடுவோன் (3)

உலக உண்மைகளை - எவரும்
உணரக் கூறிடு வோன்;
அலகி லாக்கலைகள் - உறையும்
ஆலய மாகிடு வோன் (4)

அரக்கர் நெஞ்சறி வான் - முனிவர்
அகமும் கண்டறி வான்;
குரங்கின் உள்ளறிவான் - வேடன்
குணமும் நன்கறி வான் (11)

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் செந்தமிழில் செய்தளித்து - நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி (17)

*சுவைக்குச் சில காட்டப் பெற்றன. எல்லாப் பாடல்களுமே எழில்மிகு தெய்வக் கனிகள்.*

ஔவை: '*பாட்டி சொல் தட்டாதே!*' *என்பது ஒரு சுவைமிக்க திரைப்படம். அதுபோல, சிறுவர்கட்கு - மன்பதையிலுள்ள - பேரன்மார்கட்கு - ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி போன்ற நீதி*

18. மேலது - கம்பன் - 2,3,4,11,17

நூல்களை அருளிய பெருமாட்டி நம் ஔவைப் பாட்டி. இவர் தவிர சங்க காலத்தில் வாழ்ந்து அதியமான் தந்த அருநெல்லிக்கனியுண்டு நீடு வாழ்ந்த ஔவையார் என்ற பெரும் புலவர் ஒருவரும் உண்டு. அரசர்கட்கு அறநெறிகளை உணர்த்தியும், முரண்படு முடி வேந்தர்களிடையே நட்பை வளர்த்தும், மார்பு நெறித்து (ஆணவத்துடன்) போர்முரசம் கொட்டுபவர்களிடையே சந்து செய்வித்தும் வாழ்ந்த பெருமாட்டி இவர். இவர்களைத் தவிர கம்பர் காலத்து வாழ்ந்த ஔவையாரும் உளர். இவர்களையெல்லாம் நினைவுகூரும் வகையில் மூன்று பாடல்களை அருளியுள்ளார் நம் கவிமணி.

ஔவைக் கிழவி நம்கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி (1)

நெல்லிக் கனியைத் தின்றுலகில்
நீடு வாழும் தமிழ்க்கிழவி
வெல்லற் கரிய மாந்தரெல்லாம்
வியந்து போற்றும் ஒருகிழவி (2)

கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி; அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம் மறவோம் மறவோமே! (3)

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை: கேரளம் தமிழுக்குத் தந்த ஒப்புயர்வற்ற ஒரு மாமணி. ஆலப்புழையில் தோன்றி (ஏப்ரல் 4,1855) அனந்தபுரத்தில் (ஏப்பிரல் 25, 1897) மறைந்தவர். 42 ஆண்டுகளே தமிழ் கூறு நல்லுலகில் நடமாடி நற்றொண்டு புரிந்து நற்புகழ் ஈட்டியவர். இவர் இயற்றிய 'மனோன்மணீயம்' என்னும் அற்புத நாடகம் தமிழ்

மொழி உள்ள அளவும் நிலைத்து நிற்கும். இது தெய்வ பக்தி, காதற் பெருமை, மகளிர் மாண்பு, நாட்டுப் பற்று, விடுதலை உணர்வு என்பவற்றை உணர்த்திக் கொண்டிருக் கும். இந்நாடகத்தில் தமிழ் வாழ்த்தாகவுள்ள பாடலின் ஒரு பகுதிதான் தமிழக அரசால் ''தமிழ்த்தாய் வாழ்த்தாக'' மேற்கொள்ளப் பெற்று வழக்கத்தில் இருந்து வருகின்றது.

இத்தகைய பெருமகனாரைப் பற்றிக் கவிமணி பதி னோரு பாடல்களை இயற்றியுள்ளார்.[19] இவை 1947 ஏப்பி ரல் திங்கள் பாடப்பெற்றன - இவர் இகவாழ்வை நீத்து ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுவதன் நினைவாக. அவற்றுள் சில:

'ஆரா அமுதம்' அனைய தமிழ்வளர்த்த
பேரா சிரியர் பெருமானைச் - சீராரும்
வஞ்சிமா மன்னர் மதித்தகுண சுந்தரனை
நெஞ்சமே! நித்தம் நினை (1)

தாலம் புகழும் திருஞான
சம்பந் தப்பேர் முனிவாழ்ந்த
கால மதனை ஆராய்ந்து
கற்றோர் மெச்சக் கணித்திட்டோன்,
ஆலப் புழைமா நகருடைய
அறிஞன் பெருமாள் அரும்புதல்வன்
சீலஞ் சிறந்த சுந்தரனைச்
சிந்தை மகிழ்ந்து போற்றுவமே. (2)

''தேடி வைத்த செல்வமெலாம்
திரைகொண் டோட வருந்திமுகம்
வாடி மெலிந்த தமிழணங்கு
மகிழ்ந்து மகிழ்ந்து கூத்தாட''

19. ம.மா: சுந்தரன் பாமாலை

நாடும் அறிய மனோன்மணிய
    நாட கத்தைச் செய்தளித்த
நீடு புகழோன் சுந்தரனை
    நித்தம் நித்தம் போற்றுவமே. (5)

வையம் புகழும் திருவஞ்சி
    வளநா டதனை முடிசூடிச்
செய்ய முறைசெய் தரசாண்ட
    சேர மன்னர் சரிதமெலாம்
ஐயம் இன்றிச் "சிலையெழுத்து"
    ஆய்ந்து சொன்ன பேரறிஞன்
துய்ய சீலன் சுந்தரன்பேர்
    சொல்லி நாளும் போற்றுவமே (6)

ஆடும் தில்லை அம்பலவன்
    அடிகள் மறவா அன்புடையோன்
பாடித் திருவா சகத்தேனைப்
    பருகிப் பருகி இன்புறுவோன்
கோடைப் பதிசுந் தரமுனியைக்
    குருவாயக் கொண்ட குணசீலன்
ஈடி லாத பேரறிஞன்
    எங்கள் பெரிய சுந்தரனே (7)

சித்திரம் வரைந்து காண்போம்;
    சிலைகண்டு தொழுது நிற்போம்;
சத்திரம் கட்டி வைப்போம்;
    தருமங்கள் பலவும் செய்வோம்;
வித்தகன் சுந்த ரன்பேர்
    மெய்மையாய் விளங்க வைத்தல்
இத்தமிழ் நாட்டில் வாழும்
    எம்மனோர் கடமை யன்றோ? (8)[20]

20. இங்ஙனம் கனவு கண்ட கவிமணியின் கருத்தை அண்மையில் தமிழக அரசு 'சுந்தரனார் பல்கலைக் கழகம்' கண்டு நனவாக்கியதை நாம் அறிவோம்.

சிந்தை கவரும் சிவகாமி நற்சரிதம்
செந்தமிழில் சுந்தரன் செய்ததனால் - முந்தவரு
மூலத்தை வெல்லும் மொழிபெயர்ப்பென் றேஎவரும்
சாலப் புகழ்ந்திடவே தான். (10)

தாகூர்: *இப்பெருமகன் வங்கம் ஈன்ற தவப்புதல்வன். 'கீதாஞ்சலி' யை வங்க மொழியில் இயற்றி, அதை மீண்டும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகப் புகழ்பெற்றவர். இந்த நூல் நோபல் பரிசைப் பெற்றது; பரிசுக்குப் பெருமை சேர்த்தது. சாந்தி நிகேதன் பல்கலைக் கழகம் கண்ட பெருமை இவரைச் சேர்ந்தது. இப்பல்கலைக் கழகத்தில் 1981-இல் நடைபெற்ற கீழ்த்திசை மாநாட்டுக் கருத்தரங் கில் நானும் என் அருமை மணாக்கர் டாக்டர் என்.கடிகாச லமும் (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்), என் அருமை நண்பர் வழக்கறிஞர் பா.அரங்கசாமி ரெட்டியாரும் கலந்து கொண்டோம். தாகூரை நினைவுகூரும் வகையில் தனியே நிறுவப் பெற்றுள்ள நூலகம், அருங்காட்சியகம் முதலிய வற்றைக் கண்டு களித்தோம்.*

*இந்தப் பெரியாரைப் பற்றிக் கவிமணியின் ஒரே பாடல்:*[21]

அலை வளைத்த புவிமுழுதும் அளந்தபெரும்
  புகழுடையான் அரசர் கண்டு
தலைவளைத்து வணங்குமொரு குருதேவன்
  சலியாது தரணி மீது
கலைவளர்த்த கவியரசன் தாகூரின்
  றெம்மையெல்லாம் கைவிட்டு, ஐயோ!
மலைவிளக்கு மறைந்ததென மறைந்திட்டான்
  என்னேஇம் மனித வாழ்க்கை!

*திரு. பா.அரங்கசாமி ரெட்டியார் இன்றில்லை; திருநாடு அலங்கரித்து விட்டார்.*

21. ம.மா: தாகூர் இரங்கற்பா

ஆறுமுக நாவலர்: யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர்களுள் சிறப்பிடம் பெற்று விளங்கியவர் இந்த நாவலர் பெருமான். கல்வித் தொண்டு, சமயத் தொண்டு, தமிழ்த் தொண்டு ஆகிய முத்தொண்டுகளையும் புரிந்து புகழ் பெற்ற மூதறிஞர். சென்ற நூற்றாண்டில் தமிழில் உரை நடை வளர்ச்சி பெறத் தொடங்கியிருந்த நிலையில் அதற்கு நல்வழி காட்டி பிழையற்ற எளிய உரைநடைத் தமிழை வளர்த்த பெரியார். இவரை நினைக்கும்போது இவர் இராமலிங்க அடிகள் அருளிய பாடல்கள்மீது தொடுக்கப் பெற்ற அருட்பா - மருட்பா போராட்டம் நினைவிற்கு வாராமற் போகாது. இவரைப் பற்றிக் கவிமணி மூன்று பாடல்கள் இயற்றியுள்ளார். அவை:

புண்ணியநாள் நாளெல்லாம் போற்றுநாள், செந்தமிழ்த்தாய்
எண்ணி எதிர்பார்க்கும் இனியநாள் - மண்ணுலகில்
மேவுமுயர் சைவம் விளங்கிடுநாள்; ஆறுமுக
நாவலர்கோன் தோன்றியநல் நாள் (1)

ஆடும் தில்லை அம்பலவன்
அடிகள் மறவா அன்புடையோன்
பீடு பெறவே செந்தமிழைப்
பேணி வளர்த்த பெரும்புலவன்,
நீடு சைவம் இவ்வுலகில்
நிலவச் செய்த குருநாதன்
நாடு புகழும் ஆறுமுக
நாவ லன்பேர் மறவோமே. (2)

இல்லா ஏழை எளியவருக்கு
இரங்கும் இனிய குணசீலன்,
கல்லா தவரின் கல்நெஞ்சம்
கனியப் பேசும் கனிவுடையோன்

வல்லார் அறிஞர் செல்வரறம்
 வளர்க்கும் ஈழ வளநாட்டான்,
நல்லார் போற்றும் ஆறுமுக
 நாவ லன்பேர் மறவோமே. (3)

பாரதியார்[22]: *இவர் பிறவியிலேயே சுதந்திரமான மனப் பான்மையுடைய கவிஞர். சுதந்திரத்தைத் தெய்வமாக வழி பட்டுப் பாடிய கவிஞர். அவர் சமுதாய நன்மைக்காகப் பாடப் பெற்ற பாடல்கள் இன்றும் உணர்ச்சி மிகுந்த கவிதைகளாகப் பாடிப் போற்றப் பெறுகின்றன. இப்பெரு மானைப்பற்றி ஒரே பாடல் உள்ளது.*

ஊரறிய நாடறிய உண்மை யெல்லாம்
 ஒருவரையும் அஞ்சாமல் எடுத்து ரைத்தோன்,
ஆரமுதம் அனையகவி பாடித் தந்தோன்,
 அமரகவி என்றெவரும் புகழப் பெற்றோன்
சீருயரும் தமிழ்மக்கள் செய்த வத்தால்
 தென்னாடு சிறக்க வந்த சுப்ரமண்ய
பாரதியார் பெயர்போற்றி ஏத்து வோமே
 பாமாலை புனைந்தவற்குச் சாத்துவோமே.

*என்பது காண்க.*

உ.வே.சாமி நாதய்யர்: *'தமிழ்த் தாத்தா' என்று செல்வ மாக வழங்கப் பெறும் உ.வே.சா. ஏட்டுச் சுவடிகளில் அடங்கிக் கிடந்த பண்டைய இலக்கியங்களை அச்சுக்குக் கொணர்ந்து ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் அழகாக வெளி யிட்டு உதவிய பெருமகனார். இவரைப்பற்றி மூன்று பாடல்கள் உள்ளன.*[23]

22. ம.மா: அமரகவி
23. ம.மா: தமிழ் முனி

எவ்வேடு தேடிநீ எந்நாட்டில் எப்பதியில்
எவ்வீடு நோக்கியின் றேகினையோ? - அவ்வான்
அமிழ்தம் அமிழ்தமென அள்ளிஅள்ளிச் சங்கத்
தமிழ்தந்த சாமிநா தா! (1)

கண்ணும் சடையாமல் கையும் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல் - எண்ணியெண்ணிச்
செந்தமிழ்த் தாய்க்குநீ செய்த திருத்தொண்டுக்
கிந்தநிலத் துண்டோ இணை? (2)

சித்திரத்திற் பார்ப்போம்; சிலைசெய்து கும்பிடுவோம்;
புத்தகத்திற் போற்றிப் புகழ்ந்திடுவோம் - இத்தரையில்
சந்தப் பொதிகைத் தமிழ்முனியென் றுன்னைநிதம்
சிந்தையிற் கொண்டு தெளிந்து (3)

திரு.வி.க.[24]: *தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்களை அறியாதார் இலர். பண்டிதர்க்கும் பாமரர்க்கும் பாலம் போன்றவர்; புலவர் கூட்டத்தையும், பாமரர் கூட்டத்தையும் கவரும் வண்ணம் சொற் பெருக்காற்றுபவர். தமிழ் உரை நடைக்கு உயிர் கொடுத்து துடிப்புடன் இயங்கச் செய்தவர். இவர் திருநாடு அலங்கரித்தது பற்றி ஒரு பாடல்:*

ஏழைத் தொழிலாளிக் கென்றும் துணைநின்று
வாழும் தமிழின் வளம்பெருக்கி - ஊழியங்கள்
செய்யப் பிறந்த திரு.வி.க. சென்றடைந்தான்
தையலொரு பாகனிரு தாள்.

பண்டிதமணி[25]: *மகிபாலன் பட்டியின் மணி. அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையை அலங்க ரித்திருந்த பெரும்புலவர் இவர். வடமொழியிலும் புலமை*

24. ம.மா: திரு.வி.க. பிரிவு

25. ம.மா: மகா மகோபாத்யாய பண்டிதமணி கதிரேசன் செட்டியார்

மிக்கவர். 'மிருச்ச கடிகம்' என்ற வடமொழி நாடகத்தைத் தமிழாக்கம் செய்து 'மண்ணியல் சிறுதேர்' என்ற தலைப்பில் வெளியிட்டுப் பெரும்புகழ் ஈட்டியவர். திருவாசகம், திருச் சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை முதலிய வற்றிற்கு 'கதிர்மணி விளக்கம்' கண்டவர். இவரை வாழ்த் தும் பாங்கில் ஏழு பாடல்களும் 'மகிழ்ச்சி உரை'யாகப் பதினான்கு பாடல்களும், இரங்கற்பாக்களாக ஐந்து பாடல் களும் உள்ளன.

## வாழ்த்துப்பாக்கள்[26]

பள்ளிப் படிப்பறியான் பைந்தமிழும் ஆரியமும்
தெள்ளிச் சுவைதேரும் செந்நாவான் - உள்ளிநிதம்
சித்தம் சிவன்பால் செலுத்தும் கதிரேசன்
நித்தம் வளர்க நிலத்து (2)

சிந்தைக் கினிய செவிக்கினிய
திருவா சகத்தின் உட்பொருளை
முந்தும் அறிவால் ஆராய்ந்து
முத்தே வர்க்கும் முதற்றேவன்
எந்தை சிவனே யாமென்ன
எவர்க்கும் நன்றாய் எடுத்தோத
வந்த பெரும்பே ராசிரியன்
வாழ்க வாழ்க வாழ்கவே! (4)

ஆரி யத்தின் நிலைகண்டோன்,
அரிய தமிழின் கடலானோன்,
பாரி அண்ணா மலைமன்னன்
பரிந்து போற்றும் முதுபுலவன்
தேரும் இனிய சொல்லால்எம்
சிந்தை கவரும் கதிரேசன்
பேரும் புகழும் பெருவாழ்வும்
பெற்று நிதமும் வாழ்கவே! (6)

26. மேலது - கதம்பம் - மகிழ்ச்சி உரை

நெற்றி நிறைந்த நீறுடையான்,
நெஞ்சில் பஞ்சாக் கரமுடையான்
முற்றி முதிரும் அன்பாலே
மூவர் தமிழும் பயில்நாவான்
சுற்றம் தழுவும் குணசீலன்,
தூய நெறிகண் டொழுகிடுவான்
கற்ற பெரியோன் கதிரேசன்
கடவு ளருளால் வாழியவே! (7)

## மகிழ்ச்சி உரை [27]

தெய்வ மறையாம் திருவா சகப்பொருளை
ஐயமறக் காட்டும் அணிவிளக்கம் - வையமிசைச்
செந்தமிழைக் கற்றுத் தெளிந்த கதிரேசன்
தந்த மணிவிளக்கம் தான் (6)

வாதவூர் மாமுனிவன் மனங்க னிந்து
மக்க ளெல்லாம் சிவநெறிக்கண் டுய்யுமாறு
கோதிலா தமைத்ததிரு வாச கப்பூங்
கோயிலுக்குச் சிறந்தகதிர் மணிவிளக்கம்
ஓதரிய பேரன்பால் உபயம் வைத்தோன்
ஓங்குபுகழ்க் கதிரேச நண்பன் தில்லை
ஆதிரையான் அழகியசிற் றம்ப லத்தான்
அருளாலே நீடூழி வாழ்க மாதோ! (12)

## இரங்கற்பா [28]

பத்தரெலாம் பாராட்டும் பண்டித மாமணிநீ
அத்தன் திருவடிக்கா ளாயினையோ! - நித்தமவர்
கற்றுக் களிக்கும் கதிர்மணி நல்விளக்கம்
முற்றுப் பெறுவதன் முன் (1)

27. ம.மா. கதிமணி விளக்கம் - மகிழ்ச்சி உரை
28. ம.மா: பண்டிதமணியின் பிரிவு

என்று வருவான் எமனென் றெதிர்நோக்கி
நின்று தளர்கின்றேன் நித்தமுமே மன்றில்
நடங்கண்ட ஈசன் நடராசன் பாதத்
திடங்கண்டு வைநீ எனக்கு (3)

இரசிகமணி டி.கே.சி: *இந்த மூன்றெழுத்துக்களால் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் அறிமுகமானவர் இரசிகமணி சிதம்பரநாத முதலியார். இவருடைய வட்டத் தொட்டி இலக்கியப் புகழ் பெற்றது. இஃது அறிஞர் பலருக்கு கம்பன் கவியமுதம் மாந்தி அநுபவிக்கும் இடமாக இருந் தது. நல்ல திருத்தங்களைப் பாடலில் இவர் கைவைக்கும் பொழுது புலவர்களின் நாக்கு வசைபாடும் என்பது தமிழு லகம் அறிந்த செய்தி. இவர்தம் மணி விழாச் செய்தியாக மூன்று பாடல்களும், இரங்கற்பாவாக ஆறு பாடல்களும் 'கதம்பம்' என்ற தலைப்பில் ஒரு பாடலும் உள்ளன.*

## மணிவிழா செய்தி [29]

கன்னித் தமிழேபோல், கம்பன் கவியேபோல
மன்னும் பொதிகை மலையேபோல் - பன்னுநம்
நாடு மகிழ்ச் சிதம்பர நாதநண்பா!
நீடுநீ வாழ்க நிலைத்து (1)

குற்றால நாதா! குழல்வாய் உமைபங்கா!
பொற்றாள் பணிந்துன்னைப் போற்றுகின்றேன்
- கற்றார்தம்
சிந்தை மகிழ்ச் சிதம்பர நாதநண்பன்
சந்ததம் வாழவரம் தா (3)

29. ம.மா: மணிவிழா ஆசிச் செய்தி

## இரங்கற்பா[30]

புன்னகை பூத்துப் பொலியும் முகத்தழகன்
கன்னலைச் சொல்லில் கலந்தளிப்போன் - மன்னுபுகழ்ச்
செந்தமிழ்ச் செல்வன் சிதம்பர நாதனைநான்
எந்தநாள் காண்பேன் இனி! (2)

தண்பொருநை நெல்லைத் தமிழர் குலதிலகன்
நண்பன் சிதம்பர நாதனைப்போல் - பண்பமைந்த
பாவின் நயமறிந்து பாவலரைப் பாராட்ட
யாவருளர் ஐயா இனி? (4)

என்னருமை நண்பா! இனிய கலைரசிகா!
தன்னிகர் இல்லாத் தமிழ்ச் செல்வா - மென்னுமுளம்
தத்தளித்து நின்றுன் சரமகவி பாடுதற்கோ
இத்தனைநாள் வாழ்ந்திருந்தேன் யான்? (5)

அம்பொன் நகரில் அமர்ந்திடினும்
அமுதே உணவாய் அருந்திடினும்
கம்பன் கவியைப் பாடாமல்
கன்னித் தமிழைப் பேசாமல்
உம்பர் உலக வாழ்க்கையிலுன்
உள்ளம் மகிழ்ச்சி கண்டிடுமோ?
நம்பன் பாதம் மறவாத
நண்பா ரசிக மாமணியே! (6)

*இவருடைய சுவைத் திறனைப் பற்றி*[31]

கூடி யிருக்கும் நண்பரெலாம்
குடித்து மகிழ்ந்து கூத்தாட,

30. மேலது: முத்துக்குவியல்

31. ம.மா: கதம்பம் - காண்க

பாடிப் பாடிப் பாடலிலே
பாலும் தேனும் கலந்துதவும்
தாடி இல்லாத் தாகூர்செய்
ஜால வித்தை அத்தனையும்
தேடி அழகாய்ச் சொன்னதமிழ்ச்
செல்வா! வாழ்க! வாழ்கவே!

*என்று சொல்லிச் சொல்லி மகிழ்வார் கவிமணி.*

*டி.கே.சி.யின் ஒரே மகன் தீர்த்தாரப்பன் (தீபன்) இவர்தம் அகால மரணம் டி.கே.சி.க்கு ஒரு பேரிடி. இவரைப் பற்றிக் கவிமணி,*

எப்பாலும் போற்றும் இசைத்தமிழ்ச் செல்வா!என்
அப்பா! அழகியசெல் லையா!நான் - இப்பாரில்
சிந்தைக் குளிரச் சிரித்தொளிரும் உன்முகத்தை
எந்தநாள் காண்பேன் இனி

*என்ற பாடலில் இரங்குகின்றார்.*

அபிநவ காளமேகம் அனந்த கிருஷ்ண அய்யங்கார்: 'விரைந்து *கவிபாடும்* வேந்த'ராதலால் *அபிநவ காளமேகம் என வழங்கப்படுகின்றார். இவர் சதாபிசேகம் பற்றி* மூன்று *பாடல்களும்*[32] *இரங்கற் பாவாக ஒரு பாடலும்*[33] *உள்ளன.*

முன்னைக் காள மேகத்தின்
மூவி ரட்டிக் கவிபொழிவோன்
அன்னை வாணி அருளுடையன்
அனந்த கிருஷ்ணப் பேரறிஞன்

32. ம.மா: அபிநவ காளமேகம் - அ.கி. அய்யங்கார்

33. மேலது - மேலது - பிரிவு

மன்னும் ஈசன் திருவருளால்
மகிழ்ந்து மக்கள் சுற்றத்தோடு
இன்னும் பிறைகள் ஆயிரம்கண்டு
இனிது வாழ்க! வாழ்கவே! (1)

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து கற்றமகான்
பாரிலிணை யில்லாத பண்டிதன் - சீரிய
அந்தண சீலன் அனந்தகிருஷ்ண நண்பனையான்
எந்தநாள் காண்பேன் இனி!

## 12. நாட்டு நற்றொண்டர்கள்

*இவர்களுள் கட்டபொம்மன், சரோஜினி தேவி, அன்னை கஸ்தூரிபாய், நேதாஜி, வ.உ.சி., நாமக்கல் கவிஞர், இராஜாஜி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.*

கட்டபொம்மன்[34]: *வீரபாண்டியக் கட்டபொம்மன். தென்பாண்டி நாட்டு எட்டயபுரத்தைச் சேர்ந்தவன். வெள்ளையர் ஆட்சிப் பிடிப்பிலிருந்து நாடு விடுதலை பெற வேண்டும் என்று முதல் முழக்கம் செய்த பெருமகன். இவனைப் பற்றிப் பதின்மூன்று பாடல்கள் உள்ளன.*

செந்தில் முருகன் சேவடியைத்
தினமும் போற்றித் தொழுதிடுவோன்;
சந்தக் கவிகேட் டுளமகிழ்ந்து
தரளம் வாரி அளித்திடுவோன்;

வந்த பொல்லா வெள்ளையரை
மதியா வீர பாண்டியனைச்
சிந்தை மறவா தோவியத்தில்
சிலையில் கண்டு போற்றுவமே (2)

34. ம.மா: கதம்பம் - காண்க

'தானம் வேண்டில் தருகின்றேன்;
தருமம் வேண்டில் தருகின்றேன்;
வானம் இடிந்து விழுந்திடினும்
வரிதந் தும்மை வணங்கேன்' என்று
ஏனை வெள்ளைக் கம்பெனியார்க்கு
எடுத்துக் கூறித் தென்னாட்டின்
மானம் காத்த பாண்டியனை
மறவா தென்றும் போற்றுவமே (4)

சீமை வெள்ளைக் காரர்படை
சிதறி யோட முறியடித்தோன்;
ஊமைத் துரையென் றுலகுபுகழ்
ஒப்பில் விசயன் முன்வந்த
வீமன் வீர பாண்டியனின்
வெற்றி முரசு முழக்கியிந்தப்
பூமி மீதெந் நாளுமவன்
புகழைப் பாடிப் போற்றுவமே (6)

காய்ந்து போரில் வெள்ளையரைக்
கறங்கச் செய்த ஆண்சிங்கம்;
ஆய்ந்து வினைகள் செய்துநிதம்
அறங்கள் காத்த அறிவுடையோன்;
பாய்ந்து நாயை முயல்விரட்டும்
பாஞ்சை யாண்ட பாண்டியனுக்கு
ஏய்ந்த புகழை இனியதமிழ்
இசையிற் பாடிப் போற்றுவமே (7)

மானம் முற்றும் விலைகொடுத்து
மண்ணை வாங்கி அரசாளும்
ஈன வாழ்வை உள்ளத்தில்
எள்ளத் தனையும் எண்ணாதோன்;

ஊன உடலை வெறுத்துதறி
உலகில் அழியாப் புகழ்நாட்டி
வானம் சென்ற வீரனைநாம்
மறவா தென்றும் போற்றுவமே (8)

அன்னை கஸ்தூரிபாய்: அண்ணல் இராமகிருஷ்ணருக்கு அன்னை சாரதாதேவி துணைவியாக வாய்த்ததுபோல் நாட்டுத் தந்தை காந்தியடிகட்கு அன்னை கஸ்தூரிபாய் துணைவியாக வாய்த்தார். அவரைப் பற்றி ஓர் இரங்கற்பா உள்ளது.

வையம் புகழும் காந்திமகான்
வாழ்க்கைத் துணையாய் வாழ்ந்துநிதம்
செய்யும் தொழில்கள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்து கண்கண்ட
தெய்வம் கணவன் என்றுள்ளம்
தெளிந்த தாயே! நீயெம்மை
வெய்ய துயரில் வீழ்த்தியின்று
விண்ணா டாளச் சென்றனையே![35]

வ.உ.சிதம்பரனார்[36]: இவர் கப்பலோட்டிய தமிழன். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். சிறையில் செக்கிழுத்த செம்மல். தமிழறிவும் தமிழுணர்வும் மிக்க நாட்டுப் பற்றாளர். இவரைப பற்றி மூன்று பாடல்கள் உள்ளன.

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற - ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ? சொல் (1)

35. மேலது - கஸ்தூரிபாய் இரங்கற்பா
36. ம.மா. வாழ்த்து - காண்க

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக் கூழ்உண் டுடல்மெலிந்தோன் -ஒப்பிலாத்
தென்னாட்டு வீர திலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் வாழ்த்துகஎன் நா (3)

சரோஜினி தேவி[37]: *இந்த அம்மையார் தேசிய நீரோட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர். சிறந்த ஆங்கிலக் கவிஞர். உலகப் புகழ்பெற்றவர். இவரை* Nightingale of India *இந்தியாவின் வானம்பாடி என்று புகழ்ந்து கூறுவதுண்டு. இவரைப் பற்றி* நான்கு *பாடல்கள் உள்ளன.*

காந்தி திருவடியோ? கற்பகமோ? வாணியமுது
ஏந்தும் எழிற்கரமோ? யாரறிவார்? - ஆர்ந்தபுகழ்
மங்கை சரோஜினியாம் வண்ணக் கிளிஇன்று
தங்கி யிருக்குமிடம் தான் (1)

பைங்கிளிவா வாவென்று பங்கயச் செல்வியுனை
அங்கைகள் நீட்டி அழைத்தாளோ? - பொங்குபுகழ்
மங்கை சரோஜினிநீ வானுலக வாழ்வுபெற
இங்கிருந் தேகினாய் இன்று (2)

வெட்டி முறித்த விறகெனவோர் வீணையினைச்
சுட்டெரித்த பாவியென்று தூற்றாதோ? - சிட்டர்புகழ்
அன்னை சரோஜினியின் ஆவியுண்ட கூற்றமே!
உன்னையினி என்றும் உலகு. (3)

பைங்கிளியாய்த் தேன்கலந்த பாலமுதம் உண்டுமையாள்
அங்கையிலே தங்கியுரை யாடுதற்கோ? - இங்கிருந்து
மாதரசி நன்மதுர வாணி சரோஜினிநீ
மீதெழுந்து சென்றாய் விரைந்து (4)

37. ம.மா: சரமகவி - சரோஜினிதேவி

நாமக்கல் கவிஞர்[38]: சேலம் மாவட்டம், நாமக்கல் என்ற ஊரினர்; வெ.இராமலிங்கம் பிள்ளை என்ற இயற் பெயரினர். சிறந்த ஓவியரும்கூட. 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற இவர்தம் சந்தப் பாடல் - இவருக்கு நாடளாவிய புகழைக் கொண்டு சேர்த்தது. முதல் அரசவைக் கவிஞர்; ஆயுட்காலம் வரை இப்பதவியிலிருந்தவர். இவர்தம் மணிவிழா வாழ்த்தாக ஒரே ஒரு பாடல் உள்ளது.

சிந்தையினால் வாக்கதனால் செய்கை தன்னால்
  தேசத்திற் கோயாது தொண்டு செய்தோன்;
முந்தும் அன்பே உருவாக வந்தமூர்த்தி
  மூதறிஞன் காந்திமகான் வழிபின் பற்றிச்
செந்தமிழ்நாட் டாஸ்தான கவிஞ னாகிச்
  சீரோங்கி ராமலிங்க நண்ப னே!நீ
சந்ததமும் இவ்வுலகில் வாழச் செந்தில்
  சண்முகனை வேண்டிநிதம் போற்று வேனே.

இராஜாஜி[39]: சேலத்தைச் சார்ந்த வழக்கறிஞர். சிறந்த தேசத் தொண்டர். காந்தியடிகளின் இதயத்தை நன்கு அறிந்தவர். அவருடன் மாறுபட்ட கருத்துகளையும் கொண்டவர். பிரிட்டிஷ் ஆட்சியில் சென்னை மாநில முதலமைச்சராகப் பணியாற்றியவர். சுதந்திரம் பெற்ற பிறகு குடியரசுச் சட்டம் நிறைவேற்றும் வரையில் கவர்னர் ஜெனரலாகச் சுமார் மூன்றாண்டுக் காலம் பணியாற்றியவர். ஒரு சமயம் தமிழகக் காங்கிரசு கட்சியில் நெருக்கடி ஏற்பட்ட போது மீண்டும் ஒரு சில ஆண்டுகள் தமிழக முதலமைச்சராக இருந்தவர். காங்கிரசு கட்சி இவரை வேண்டும்போது கறிவேப்பிலையாகப் பயன்படுத்திக் கொள்ளும். பிறி

38. ம.மா: வாழ்த்து - நாமக்கல் கவிஞர் 60ஆம் ஆண்டு நிறைவு விழா
39. ம.மா: வாழ்த்து - இராஜாஜி

தொரு சமயம் வங்க நாட்டு ஆளுநராகப் பணியாற்றியவர். காங்கிரசுக்கு எதிராகச் சுதந்திராக் கட்சியைத் தோற்றுவித்த வர். உண்மையான காங்கிரசுத் தொண்டர். மறையும்போது இவர் சுதந்திரா கட்சியினராக மறைந்தார். தந்தை பெரியா ரின் நெருக்கமான நண்பர். இவரை ஓர் அரசியல் ஞானி என்று சொல்லாம். 'சக்கரவர்த்தித் திருமகன்' 'வியாசர் விருந்து' இவரை நினைவு கூரச் செய்யும் நூல்கள். தன் மனத்திற்குத் தவறு எனப் பட்டபோது கொள்கைகளை மாற்றிக் கொள்ளத் தயங்குவதில்லை. இவரைப்பற்றி வாழ்த்தாக ஆறு பாடல்கள் உள்ளன.

அன்னை யடிமை நிலைபோக்கி
அறப்போர் வெற்றித் தளபதியாய்
மன்னும் காந்தி யடிகளுக்கு
வலக்கை யாக நின்றுதவி
சென்னை மக்கள் புகழ்வளர்த்த
செல்வா! ராஜ கோபாலா!
இன்னும் பல்லாண் டிவ்வுலகில்
இனிது வாழ்க! வாழ்கவே! (1)

இனிய கனிகள் கையிலெடுத்து
எளியேன் இருக்கும் இடந்தேடி,
கனியும் அன்பால் வந்துள்ளம்
கனியச் செய்த கனவானே!
புனித ஞானி என்றுலகம்
புகழும் ராஜ கோபாலா!
நனிஎம் பெருமான் அருளால்எந்
நாளும் வாழ்க! வாழ்கவே! (2)

எங்கும் மக்கள் இடரின்றி
இன்பந் துய்க்கும் வழிகண்டு
கங்குல் பகல்எக் கணமுந்தான்
கடமை யாற்றும் அருளாளா!
வங்க நாடு போற்றிநிதம்
மகிழும் ராஜ கோபாலா!
சங்க பாணி திருவருளால்
தழைத்து வாழ்க! வாழ்கவே! (3)

தந்திரிக்குத் தந்திரியாய் தாசனுக்கு தாசனாய்
மந்திரிகள் மெச்சும் மந்திரியாய் - வந்துதித்த
இன்னருட் செல்வா இராஜகோ பாலா!நீ
மன்னுலகில் வாழ்க மகிழ்ந்து (6)

## 5. அறிஞர் பெருமக்கள்:

இவர்களுள் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சொ. முருகப்பா, வெ.ப.சுப்பிரமணிய முதலியார், சோம. லக்குமணன் ஆகியோர் அடங்குவர்.

செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார்: இக்கால 'வள்ளல்கள்' வரிசையில் முதலிடம் பெறுபவர். 'கல்வித் தந்தை' என்று போற்றும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவியவர். தமிழிசைத் தந்தை என்று பாராட்டும் வகையில் 'அண்ணாமலை மன்றம்' நிறுவியவர். இவரைப் பற்றி வாழ்த்தாக பதின்மூன்று பாடல்களும்[40], சரமகவிகளாக இரண்டு பாடல்களும்[41] உள்ளன.

40. ம.மா: வாழ்த்து - அண்ணாமலை மன்னர்
41. மேலது: சரமகவி - இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பிரிவு

## வாழ்த்து

தில்லை பதியுடையான் சிற்றம்பலந் தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான் - எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து. (3)

தத்தளித்து நின்ற தமிழிசைச் செல்வாக்குப்
புத்துயிரை ஊட்டியநற் பண்ணியவான் - பத்தியுடன்
எண்ணான் கறமும் இனிதா வளர்த்துமகிழ்
அண்ணா மலைமன்ன னாம் (4)

ஐயம் அகல உண்மைகளை
ஆய்ந்து காணும் அறிவுடையோன்
செய்யும் வினைகள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்யும் திறம்பெற்றோன்;
கையிற் கொண்ட கருங்கல்லும்
கனகம் சொரியச் செய்திடுவான்;
வையம் புகழும் தனவணிகர்
மணியாம் அண்ணா மலைமன்னே (6)

உள்ளம் உருகச் செவிகுளிர
ஓதும் நாவில் அமுதூறத்
தெள்ளத் தெளிந்த செந்தமிழின்
தெய்வ கீதம் செழித்தோங்க
எள்ளத் தனையும் சலியாமல்
இரவும் பகலும் உழைத்திடும்நம்
வள்ளல் அண்ணாமலை மன்னன்
வாழ்க! வாழ்க! வாழ்கவே! (8)

அம்பொன் வேய்ந்த அரும்புகழும்
அமுதம் கொணர்ந்த பெரும்புகழும்
இம்பர் ஒருங்கு பெற்றகுலத்து
எழுந்த அண்ணா மலைமன்னன்

பம்பு மூட இருளகற்றும்
 பானு வாசி நல்லறங்கள்
நம்பி உலகில் நிதம்வளர
 நன்மை செய்து வாழுகவே! (12)

காந்தி யடிகள் திருவுள்ளம்
 கனிந்து போற்றும் குருதேவன்
ஆய்ந்த அகில கலையாளன்
 அண்ணல் தாகூர் அமைத்தஉயர்
சாந்தி நிகேதப் பெரும்பொழிலில்
 தமிழும் கமழச் செய்துபுகழ்
ஏந்தும் அண்ணா மலைமன்னன்
 என்றும் வாழ்க! வாழ்கவே! (13)

**சரமகவி**

பண்ணியங்கள் பலபுரிந்தோன்;
 புவிநிறைந்த புகழுடையோன்;
 புலவர் போற்றும்
கண்ணியவான்; தில்லையிலே
 கலைவளரப் பெருங்கழகம்
 கண்ட கோமான்;
தண்ணளியான்; நுண்ணறிவோன்;
 தனவணிகர் குலம்செய்த
 தவத்தால் வந்தோன்;
அண்ணல் அண்ணா மலைமன்னை
 இழந்துலகம் அருந்துயரில்
 ஆழ்ந்த தம்மா! (1)

சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார்: *பொருளாதார நிபுணர்; நடுவண் அரசின் நிதியமைச்சராகப் பணியாற்றியவர்.*

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகத் திகழ்ந்தவர். இவரைப்பற்றி மணிவிழா வாழ்த்தாக ஐந்து பாடல்களும்[42], சரமகவியாக ஒரு பாடலும் உள்ளன.*

**வாழ்த்து**

அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணார் மணிபோலக் காத்திடுவோன் - பண்ணார்ந்த
செந்தமிழ்ச் செல்வன் திருக்கோவைச் சண்முகவேள்
சந்ததம் வாழ்க தழைத்து (1)

ஆங்கிலமும் செந்தமிழும் ஆய்ந்து கற்றோன்;
அரியபொரு ளாதாரக் கலைஞா னத்தால்;
ஓங்குபுகழ் நிபுணனென உலகம் போற்றும்
உத்தமனாம் சண்முகவேள் நித்தம் நித்தம்
தீங்கொழிய நல்லனவே தேர்ந்த றிந்து
செய்வன வெலாம்திருந்தச் செய்தெம் ஈசன்
தேங்கமழ்பூங் கொன்றையணிந் தாடும் தில்லைச்
சிவபெருமான் திருவருளால் வாழ்க மாதோ! (4)

**சரமகவி[43]**

மன்னாதி மன்னர் மதிக்கும் மதிப்புடையான்;
பொன்னாடை வந்தெனக்குப் போர்த்தமகான் - தென்னாட்டுச்
சிங்கவே றான திருக்கோவைச் சண்முகனை
எங்கேதான் காண்பேன் இனி.

சொ. முருகப்பா: *செட்டி நாடு தமிழ் உலகிற்குத் தந்த சீர்திருத்தச் செம்மல். அமராவதிப் புதூரில் 'மகளிர் இல்லம்' கண்ட மேதை. காந்தீயம், சைவ சித்தாந்தம் இவற்றில் ஆழங்கால் பட்டவர். அவர் வாக்கில் சொன்னால்:*

42. ம.மா: ஆர்.கே. சண்முகம் செட்டியார் மணிவிழா வாழ்த்து
43. ம.மா: ஆர்.கே. சண்முகம் செட்டியார் பிரிவு

வள்ளுவரைக் கற்றேன்; மணிவாசகம் உணர்ந்தேன்;
கள்ளூறு கம்பன் கவிதையில் திளைத்தேன் - அள்ளுபுகழ்
காந்தி யடிகளையென் கண்ணாரக் கண்டிட்டேன்;
வாழ்ந்தேன் இருந்தேன்; மகிழ்ந்தேன்.

கம்பருக்கு அடிமையென்று கைச்சாத்து செய்துவிட்டேன்;
இம்பர்வேறு ஒன்றற்கு இடமுண்டோ? - கம்பர்அரும்
காதைக்கு உரைஎழுதக் காலம் மிகுந்திருந்தால்
ஏதுவொன்று செய்ததற்கு இடம்.

*இந்தப் பெரியாரிடம் அடியேனுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. இவர் மணிவிழா பற்றி மூன்று பாடல்களும்[44] இராமகாதை பதிப்பு பற்றி ஒரு பாடலும் உள்ளன.*

சொல்லும் சொல்லை ஐயமறச்
 சொல்லி உண்மை காத்திடுவோன்;
அல்லும் பகலும் உழைத்திடுவோன்;
 அழகார் அமரா வதிமகளிர்
இல்லம் கண்டு புகழ்கண்டோன்;
 எங்கள் நண்பன் முருகப்பன்
வெல்லும் செந்திற் பன்னிருகை
 வேலன் அருளால் வாழ்கவே! (2)

பத்திமிகுந் தன்பர் பணிந்துநிதம் போற்றுகின்ற
அத்திமுகத் தண்ணல் அருளாலே - வித்தகன்
சிந்தைக் கினியதமிழ்ச் செல்வன் முருகப்பன்
சந்ததமும் வாழ்க தழைத்து. (3)

44. ம.மா: சொ.முருகப்பா மணிவிழா வாழ்த்து

யாவரும் போற்ற இராம கதையிதனை
ஆவலோடு தேர்ந்தளித்த அன்புடையோன் - மேவுதமிழ்
வித்தகச் செல்வனெம் வீர முருகப்பன்
நித்தமும் வாழ்க நிலைத்து[45] (1)

வெ.ப. சுப்பிரமணிய முதலியார்[46]: *இவர் விலங்குகளின் உறுபிணி நீக்கும் துறையில் பணியாற்றியவர். தமிழில் நல்ல பயிற்சியுடையவர்; கவிபாடும் திறம் வாய்ந்தவர். இவர் 'கோம்பி விருத்தம்', 'சுவர்க்க நீக்கம்' 'அகலிகை வெண்பா' முதலிய கவிதை நூல்களை இயற்றிப் பெரும் புகழ் அடைந்தவர். அகலிகை வெண்பாவின் 'கடவுள் வாழ்த்து' சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது.*

ஏத்திமத மெல்லாம் எதையறிந்தேம் என்னும்?எதைச்
சாத்திரம்நன் காய்ந்து, சலிக்கும்?எதை - நாத்திகமோர்
சற்றுமே ஓர்ந்திலதாச் சாதித் திடும்? அதையே
பற்றுவாய் நெஞ்சே பரிந்து

*என்பதுவே அப்பாடல். இப்பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவுபற்றி ஒரு பாடல் உள்ளது.*

எண்பதாண் டான இளைஞனே, இன்னமுதின்
பண்பெலாம் காட்டுதமிழ்ப் பாவலனே - நண்பனே
வெள்ளக்கால் செல்வனே, வேள்சுப் பிரமணிய
வள்ளலே, வாழ்க மகிழ்ந்து

*என்ற பாடலாகும் அது.*

45. இராம காதைப் பதிப்பு (1) 1954 - சனவரி நூல் வெளியீடு விழாவில் அடியேனும் பேசிப் பங்கு கொண்டேன்.

46. ம.மா: வாழ்த்து - காண்க.

சோம.லெ[47]: இவர் சொந்தச் செலவில் உலகம் சுற்றிய தமிழர். செட்டிநாடு தந்த தமிழ்ச் செல்வர். சுவைபட எழுதிய, செய்திகள் நிரம்பிய பன்னூல்களின் ஆசிரியர். விவசாய முதல் அமைச்சர் ஓமந்தூர் இராசமாமி ரெட்டியார் வரலாற்றை ஊர் ஊராகத் தேடிச் சென்று செய்திகளை அரும்பாடுபட்டுத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து எழுதிய தமிழ்ச் செம்மல். இவரைத் தமிழ் பாஸ்வெல் எனலாம். இவரைப் பற்றி வாழ்த்தாக ஒரு பாடல்:

எல்லா நாடும் தன்நாடாய்
எங்கும் சுற்றி ஆராய்ந்து
நல்லார் பலரின் கருத்தையெலாம்
நாளும் தேடித் தமிழ் மக்கள்
பல்லார் அறியச் செந்தமிழில்
பண்பாய் உரைக்கும் என்நண்பன்
சொல்லால் அமுதை வென்றிடுவோன்
சோம லக்கு மணன் வாழ்க!

## 6. கலைஞர்கள்

கலைஞர்களில் இராவ் பகதூர் ப.சம்பந்த முதலியார், இசையரசு இலட்சுமண பிள்ளை, டி.கே.எஸ். சகோதரர்கள் ஆகியோர்.

பம்மல் சம்பந்த முதலியார்: 19, 20ஆம் நூற்றாண்டுகளில் நாடக உலகில் துருவ மீன்போல் திகழ்ந்தவர். நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை அரங்கேற்றி நாடகக் கலையின் முன்னேற்றத்திற்காகப் பெருந்தொண்டு புரிந்தவர். நாடகக்

47. ம.மா: வாழ்த்து - 'சோமலெ' வாழ்த்து

*கலையில் இருந்து வந்த இழிநிலையை மாற்றியமைத்த வர். சென்னையில் (1891)* 'சுகுண விலாச சபா' *என்ற நாடகக் கழகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் இக்கலையைப் பரப்பி யவர். தாமும் நடித்து பல அறிஞர்களையம் நடிக்கச் செய்தவர். நீதிபதி முதலான பதவிகளில் இருந்த போதும் இவருடைய தொண்டு ஓயவில்லை. 'இரத்னாவளி', 'மனோகரா', 'இரண்டு நண்பர்கள்', 'கள்வர் தலைவன்', 'வேதாள உலகம்' முதலியவை இவருடைய படைப்புத் திறனை எடுத்துக்காட்டும் சிறந்த நாடகங்கள். இவர் எழுதியுள்ள* 'நாடகத் தமிழ்', 'நாடக மேடை நினைவுகள்' *ஆகிய நூல்கள் நாடகத் துறையில் இவருக்கு இருந்த ஆர்வம், அநுபவம், பயிற்சி முதலியவற்றை விளக்குகின் றன. இத்தகைய பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவு நாளை வாழ்த்தி கவிமணியின் இரண்டு பாடல்கள்.*[48].

அந்திமதி சூடி அம்பலத்தி லாடிநிதம்
சிந்தைமகிழ் கூத்தன் திருவருளால் - செந்தமிழ்
நாடுபுகழ் சம்பந்தன் நடிக மகராசன்
நீடுலகில் வாழ்க நிலைத்து. (1)

ஈடி லாத செந்தமிழில்
இனிய தமிழில் அழகழகாய்
நாட கங்கள் பலதந்த
நடிக ராசன் சம்பந்தன்
நீடிவ் உலகில் பல்லாண்டு
நிலைத்து வாழ நல்லவரம்
ஆடும் கூத்தன் எம்பெருமான்
அருள்க அருள்க அருள்கவே (2)

48. ம.மா: வாழ்த்து - காண்க

இசையரசு இலட்சுமண பிள்ளை: *நாடகத் துறையில் 'விழா நாடகம்' 'இரவி வர்மா' போன்ற நாடகங்களை இயற்றிப் புகழ்பெற்ற இப்பெருமான் இசைத் துறையிலும் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். 'செய்யுட் கோவை' என்பது இவர் இயற்றிய பாடல்களின் தொகுதியாகும். இவர் மறைவு பற்றி மூன்று பாடல்கள் உள்ளன.*[49]

கந்தருவ நன்னகர்க்கோ? கண்ணுதல் சேவடிக்கோ?
சந்தமெழு தண்பொதிகைச் சாரலுக்கோ? - முந்துதமிழ்
இன்னிசை மன்னன் இலக்குமணன் ஏகினான்
மன்னிலத் தெம்மை மறந்து (1)

ஞானி வடலூர் வள்ளலையெந்
நாளும் போற்றும் குணசீலன்;
தேனைப் பாலை இசையமுதைச்
சோர்த்தின் கவிகள் செய்திடுவோன்;

ஊனை 'உண்ணேல் உண்ணேல்'என்று
ஓதும் அறிஞன் இலக்குமணன்
ஆன வயதெண் பத்தேழில்
அமர வாழ்வை அடைந்தனனே! (3)

டி.கே.எஸ். சகோதரர்கள்[50]: *இவர்கள் நாஞ்சில் நாட்டு நற்றமிழ்ப் புதல்வர்கள். இவர்தம் கலைக் குழுவினர்கள் நடத்திய 'ஔவையார்' நாடகம் கண்டுகளித்து உள்ளம் பொங்கி உவந்தளித்த வாழ்த்துப் பாக்கள் மூன்று உள்ளன.*

49. ம.மா: சரமகவி - காண்க

50. ம.மா: கதம்பம் - ஔவையார் நாடகம் காண்க

மந்திரமோ? தந்திரமோ? மாயமோ? சண்முகத்தின்
விந்தை நடிப்பு விசித்திரமோ? - செந்தமிழ்நாடு
அன்றுகண்டு போற்றி அடிபணிந்து ஔவையை
இன்றுகண்ட காட்சி இது. (1)

நாடும் இசையால் நடிப்பால் அரங்கமைப்பால்
பீடுபெறு செந்தமிழ்ப் பேச்சழகால் - நீடுலகில்
எவ்வெவரும் கண்டுமகிழ்ந் தின்புறுதற் கேற்றதிந்த
ஔவைவரு நாடகமே யாம். (2)

*இவை தவிர பல பெரியோர்கள் பிறந்த நாள் விழா, பல பெரியோர்கள் மறைந்த நாள், பள்ளிகள், கல்லூரிகள், இசை அமைப்புகள், நாடக அமைப்புகள் இவை பற்றிய வாழ்த்துப் பாடல்களும்; நாள், வார, பிறை, திங்கள் இதழ்கள் பற்றிய வாழ்த்துப் பாடல்களும்; பல நூல்களுக்கு அருளிய சிறப்புப் பாயிரங்களும் ஏராளமாக உள்ளன. இவற்றை, வாழ்த்து, சரமகவி, கதம்பம், முத்துக்குவியல் என்ற பகுதிகளில் கண்டு மகிழலாம். இக்காலத்தில் வாரியார் சுவாமிகளிடத்தில் வாழ்த்துப் பாடல்கள் பெறும் மரபைப் போலவே அக்காலத்தில் கவிமணியிடம் வாழ்த்துப் பாடல்கள் பெறும் மரபு இருந்து வந்தது.*

# 8. சமூகநலச் சிந்தனைகள்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனியாக வாழ முடியாது. நாம் உண்ணும் உணவு உற்பத்தியில் எத்தனை பேர் உழைக்கின்றனர்? உடுத்தும் உடை உற்பத்தியில் எத்தனை பேர் பங்கு பெறுகின்றனர்? மளிகைக் கடையில் வாங்கும் சாமான்களையும் விதவிதமாகத் துணிகள் விற்கும் துணிக் கடையில் பலவித துணிகளையும் எண்ணிப் பார்த்தால் இவ்வுண்மை விளங்காமற் போகாது. நாம் குடியிருக்கும் வீட்டைத்தான் எண்ணிப் பார்ப்போமே. வீடு கட்டும் வேலையில் பங்கு பெற்ற தொழிலாளர்கள் செங்கல், சிமைக்காரை, கருங்கல், பல வண்ணமமைந்த தரையில் பாவிய கல், பலகணி - வாயிற்படிக் கதவுகள் தயாரித்தல், சுவரில் பூச்சு வேலை செய்ய வேண்டிய வண்ணக் கலவைகள் முதலியவற்றைத் தயாரித்த தொழிலாளர்கள் இவர்களின் பங்கை எண்ணிப் பார்த்தால் மனிதன் தனியாக வாழ முடியாது என்ற உண்மை தெளிவாகும். இந்தப் பேருண்மையைக் கவிமணி,

> ஏகாந்தம் யாவருக்கும் இசைய மாட்டாது;
> எந்நாளும் கூடியே வாழ வேண்டும்;
> சாகாத வரம்பெற்றோர் எவரும் இல்லை;
> தளர்ந்தவரைத் தாங்குவதே தரும மமாகும்; [1]

என்று கூறுவார். பாரதியாரும்,

> ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - தம்மில்
> ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே [2]

1. ம.மா: வையமும் வாழ்வும் - வாழ்க்கை நிலையாமை - 2

என்று கூறியுள்ளதையும் ஈண்டுச் சிந்தித்தல் தகும். இனி, கவிமணியின் சமூக நலச் சிந்தனைகள் பற்றி ஆராய் வோம்.

ஒற்றுமை: சமூகம் சிறப்புடன் திகழ வேண்டுமானால் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது கவிமணி யின் திருக்குறிப்பு. மக்களிடை ஏற்றத் தாழ்வைக் கண்டு சிலர் உள்ளம் குமுறுகின்றனர். சீர்திருத்தவாதிகள் சமூகத் தின் அமைப்பை மாற்றியமைக்க முயலுகின்றனர். சட்டத் தின் மூலம் சில சில திருத்தங்களைக் கொணர்ந்து அதனை நடைமுறைப்படுத்துகின்றது அரசு. பின்னிலையிலுள்ள வர்கட்கு கல்விச் சலுகை, உத்தியோகச் சலுகை முதலியன நல்கி ஊக்குவிக்கின்றது. என்ன செய்தாலும் மேலும் ஏற்றத் தாழ்வே இருந்து கொண்டுதான் உள்ளது. இதற்கு அறிஞர்கள், தத்துவ விற்பன்னர்கள் கூறும் காரணம், அவரவர்கள் பல பிறப்புகளிலும் செய்த வினைகளே காரணம் என்பது. இன்னும் சிலர் இறைவன்மீது பழியைப் போடுகின்றனர். இவற்றையெல்லாம் கருதி கவிமணி,

வைய மெங்குமே - காணும்
வாழ்வு தாழ்வெல்லாம்
செய்வினைப் பயனாம் - இதில்
சிறிதும் ஐயமில்லை (7)

என்று கூறுவார்.[3]

ஒருவர் வாழ்ந்திடலும் - உலகில்
ஒருவர் தாழ்ந்திடலும்
அரிய தெய்வத்தின் - செயலென்
றறைதல் வீணேயாம். (4)

2. பா.க: தே.கீ. வந்தே மாதரம் - 4

3. ம.மா: வையமும் வாழ்வும் - ஒத்துழைப்பு - காண்க

ஈசன் மீதிலே - பழியை
ஏற்ற லேனையா!
நாச மாவதற்கு - மூலம்
நாமே தானையா! (6)

என்று தெளிவுறுத்துவர்.

பாரத சமுதாயத்தில் ஒற்றுமையை நிலைநாட்ட முயலும் பாரதி,

''எல்லா உயிர்களிலும்
நானே இருக்கின்றேன்''
என்றுரைத் தான்கண்ண
பெருமான்''

என்று கீதையின் உண்மையை எடுத்துக்காட்டி,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்[4]

என்று மக்களில் வேறுபாடு இல்லை என்று உண்மையை உணர்த்துவார். ஒற்றுமையாக வாழவேண்டும் என்பது குறிப்பு.

இதே கருத்தைக் கவிமணி வேறொரு போக்கில் மக்களுக்கு உணர்த்துவார் மேலே குறிப்பிட்ட பாடலில்,

உலகம் முழுவதும் - நோக்கின்
ஒருடம் பேயாம்
அலகில் சீவரெல்லாம் - அதின்
அவயங்க ளேயாம் (8)

உடலு றுப்புகள்போல் - உலகில்
ஒத்துழைப் போமேல்,

4. பா.க: தே.கீ. பாரத சமுதாயம்

தடையி லாமலே - சேமம்
தழைத்து வருமையா! (9)

*இப்படி வாழ்ந்தால் வறுமை அண்டாது; கொடிய வழக்கும் வாராது; சிறுமை தரும் செயல் ஏதும் தீண்ட மாட்டாது என்பது கவிமணி தரும் குறிப்பு.*

'ஒற்றுமையே உயிர்நிலை'

*என்ற கருத்தைப் பிறிதோர் இடத்திலும் வலியுறுத்துவார் கவிமணி.*[5]

ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்;
வெற்றுரைபேசித் திரியவேண்டாம் - இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம் (1)

*என்பது அவர் வழங்கும் அறவுரை.*

சாதி வேற்றுமை: *இன்று நாடு முழுதும் ஒற்றுமையின்மை நோயால் பீடிக்கப் பெற்றிருப்பதற்குச் சாதி வேற்றுமையே காரணம் என்பதை யாவரும் அறிவர். வேறுபட்ட சாதியர்களிடையே 'கொள்வினை - கொடுப்பினை' இல்லாவிடினும்,*

நாடி எவரொடும் நட்பினராய்த் - தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டம் உண்டோ?[6]

*என்று கேட்கின்றார். மேலும்,*

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு - சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத்தாய் பெற்ற மக்களென்று - நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ? (3)

*என்று கவலையுடன் வினவுகின்றார்.*

5. ம.மா: சமூகம் - ஒற்றுமையே உயிர்நிலை
6. மேலது - மேலது - (2)

வேதன் முகத்தில் உதித்தவரே - இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்!
பாத மதில்வந்த பாவியரே - என்றும்
பாரில் இழிந்த அடிமைகளாம்! (4)

*என்று கிண்டல் பாணியில் சாடி,*

வேதியராலே மழைவருமேல் - வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ?
வாதமெலாம் கட்டி வைத்திடுவோம் - ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத் திடுவோம் (9)

*என்று நடைமுறைப் பாதையை வகுத்துக் காட்டுகின்றார்.*

*ஔவைப் பாட்டி 'சாதி இரண்டொழிய வேறில்லை... இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்'[7] என்பதை,*

சாதி இரண்டலால் வேறுளதோ? - ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ? - மக்கள்
ஆக்கிய கற்பனைத் தான்இதுவோ? (7)

*என்பதை நினைவுகூரச் செய்து,*

நாயனார்வந்த திருக்குலத்தை - உயர்
நந்தனார்வந்த பெருங்கு லத்தை
தீய குலம்எனத் தள்ளுவரேல் - அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ! (8)

*என்று பரிதாபத்துடன் கேட்கின்றார். மேலும்,*

உச்சி மரத்திற் சுவைக்கனியும் - தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ? (6)

*என்று எடுத்துக்காட்டுடன் வினவுகின்றார்.*

7. நல்வழி - 2

*உயிராய் கருத்தொன்றையும் கூறுகின்றார்.*

மானமே வாழ்வின் உயிர்நிலையாம் - அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்;
ஈன சாதியெனும் பேச்சினைப்போல் - நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ? (11)

மன்னுயிர்க் காகமுயல்பவரே - இந்த
மானிலத் தோங்கும் குலத்தினராம்;
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர், அம்மா! (12)

*பொதுத் தொண்டில் ஈடுபடுபவரே உயர் குலத்தினர்; சுயநலம் நாடித் திரிபவர் தாழ்ந்த குலத்தினர் என்பது கவிமணி உணர்த்தும் உண்மை.*

பெண்ணுரிமைகள்: *பெண்களைப் பற்றி பாரதியார்,*

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்

...... .... .....

பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்[8]

*என்று கூறுவார். கவிமணியோ சமூகநலம் அனைத்தும் பெண்களிடம்தான் உள்ளன என்று அறுதியிடுவார். அவை அவர்களின் உரிமைகளாக அமைந்துள்ளன என்பார்.*[9]

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டும்; அம்மா!
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா (1)

8. பா.க: பலவகைப் பாடல்கள் - முரசு 3,4

9. ம.மா: சமூகம் - பெண்களின் உரிமைகள்

என்கின்றார். அவர்கள்தாம் 'அறம் வளர்க்கும் நாயகி'யின் அம்சமாகப் பிறந்தவர்கள் என்பது கவிமணியின் அதிராத நம்பிக்கை (1).

அவர்கள்தாம் அல்லும் பகலும் உழைப்பவர்கள்; அன்பு ததும்பி எழுபவர்; பின் தூங்கி முன் எழுபவர்கள். கல்லும் கனியக் கசிந்துருகிக் கடவுளைத் தொழுபவர்கள் (2). ஊக்கம் குலைந்தழும் ஏழைகளைக் காணில் உள்ளம் உருகித் துடிப்பவர்கள்; நோயாளிகளின் அருகில் இருக்கும் போது கண்ணினைக் காக்கும் இமைகள்போல் காப்பவர் கள் (3). பொங்கிய கலக்கம் சார்தரு போதில் பூரணத்தெளி வருள் அமைச்சராய்ச் செயற்படுபவர்கள்; குழந்தைகளை அள்ளியெடுத்து மடியிருத்தி, முத்தம் அளித்து, அவர்களின் அன்பைப் பெருக்குபவர்கள் (4,5).

நீதிநெறி நில்லா 'கார்க் கோடகனையும்' நேர்வழியில் நடத்திச் செல்லும் திறனுடையவள்; மானம் இழந்த கணவ ரையும் உத்தமர் ஆக்க முயல்பவள் (6). ஆவி பிரியும் காலத்து அன்போடு அரவணைத்து அகலாதிருப்பவளும், யமனும் வருத்திடாமல் ஈசன் பாதம் நினைந்திடச் செய்பவ ளும் பெண்ணே (7). கணவனை இழந்த காரிகைக்கு இதம் சொல்பவளும் தந்தையை இழந்த நிலையிலே தனயனை மகிழ்ச்சியூட்டி வளர்ப்பவள் மங்கைதானே (8). சின்னஞ் சிறு வயதில் ஈசன் சேவடியின்மீது அன்பெறச் செய்பவ ளும் இளமைப் பருவத்தில் உள்ளத்தில் களிப்பு பெருகிடச் செய்பவளும் அன்னைதானே (9).

இம்மை வாழ்வினை விட்டெழுந்து மனத்தை மாணிக் கச் சுடராக ஒளிரச் செய்து, விண்ணக வாழ்வின்மீது நாட்டம் செலுத்தும் பாங்கில் போதனை செய்பவள் பெண் ணேயாவாள் (10). அன்பினுக்காக வாழ்பவளும், அன்பிற் காக ஆவியையும் போக்கத் துணிபவளும் இன்ப உரைகள்

நல்கி வீட்டை இன்னகை ஒளி செய்பவளும் பெண்ணே *(11)*.

இத்தகைய பெரிய நற்செயல்கள் எல்லாம் மகளிருக்கு ஈசன் அளித்த உரிமைகள். இவை தவிர அவர்கட்கு வேறு ஏதேனும் தெய்வப் பணி உண்டோ? ஈசனிடம் பெறும் வேறு வரமும் உண்டோ? *(12)*. மங்கையராகப் பிறந்தத னால் அவர்கள் மனம் வாடித் தளர வேண்டா; அவர்கள் தரணியில் நிற்கும் கற்பகத் தருவாய் நிற்பவர்கள். இத்த கைய திருப்பணிகளையெல்லாம் செய்யும் திருக்குணங்க ளையுடையவராதலால், அவர்கட்கு முக்தி உறுதி என்கின் றார் கவிமணி. இதனால் சமுதாய நலம் பேணுபவர்களில் சிறந்தவர்கள் மங்கையரேயாவர்.

தீண்டாமை[10]: சமூகநலத்திற்குப் பங்கம் விளைவிக் கும் நோய் இது. கவிமணி இதனைப் பேயாக வருணிப்பர். பண்டை நாள்தொட்டு இன்றுவரை இருந்து கொண்டு பாரத நாட்டைப் பாழ்படுத்தி வருகின்ற பேய்; சண்டைகள் மூட்டிடும் பேய். இதனைச் சாத்திரிமார் பூசை செய்து வளர்த்து வருகின்றதாகக் கவிமணி கூறுவார்*(2)*.

கண்ணிலே காணும்பேய், ஐயா! - இது
காலும் நிலத்தில் பதியும்பேய், ஐயா
நிண்ணய மில்லாப் பேய்ஐயா! - நடு
நீதிநெறி காணா நீசப் பேய்,ஐயா! (4)

வேதக் கடலைக் கலக்கும் - அதில்
வேண்டும் விதிவலை வீசிப் பிடிக்கும்;
சாதிப் பிளவை உண்டாக்கும் எங்கும்
'சண்டாளர்' 'சண்டாளர்' என்றே முழங்கும் (8)

10. ம.மா: சமூகம் - தீண்டாமைப் பேய்

*என்று அந்தப் பேயின் நிலைமைகளைக் கூறுவார். இந்தப் பேய் நடமாடும் இடங்களை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுவார்.*

கோவிலின் வாசற் படியில் - நிதம்
    கும்மாளி கொட்டிக் குதித்தாடி நிற்கும்;
வாவிக் கரையிலும் நிற்கும் - அங்கு
    வந்த மனிதரை ஓட்டித் துரத்தும் (5)

பிள்ளைமார் வீட்டிலும் தங்கும்; - உயர்
    பிராமணர் வீதியில் எங்குமே சுற்றித்
துள்ளி விளையாடி நிற்கும் - அவர்
    சோமன் புடவைகளிற் சுற்றிக் கிடக்கும் (6)

மண்கலத் துள்ளே இருக்கும்; - அதில்
    வைத்த பண்டத்தில் மறைந்தும் இருக்கும்;
வெண்கலம் வெள்ளிபொன் கண்டால் உடன்
    வெட்கம் அடைந்து வெளியேறிப் போகும் (7)

*என்ற பாடல்களில் அந்த இடங்களைக் காணலாம்.*

*'தீண்டாமை' திருக்கோயிலின் நிலைக்களம். புதுக்கவிதை ஒன்று அதனைக் கிண்டல் செய்கின்றது - 'வள்ளி சிரித்தாள்' என்ற தலைப்பில்.*

சப்பரத்திலே வள்ளியும் முருகனும்
காஷ்லைட் தூக்கியவாறு
நான் முன்னால் சென்று கொண்டிருந்தேன்
அபிஷேகத்திற்காக
பன்னீர் பாட்டலுடன்வந்த பட்டர்
என்மீது மோதிவிட்டார்
"டேய் மடப்பயலே தீட்டாச்சேடா
நான் குளிச்சிக் கிட்டில்லேடா சாமிகிட்ட போகணும்"
நான் சப்பரத்தைப் பார்த்தேன்
வள்ளியின் உருவம்
சிரித்துக் கொண்டிருந்தது [11]

11. புதுக்கவிதை போக்கும் நோக்கும் - பக்.150-51

*நல்ல கிண்டல்; தீட்டைப் பொருட்படுத்தாது இறைவனே வேடர் குலப் பெண்ணை மணந்து கொண்டதை நினையாமலே, அந்த இறைவனுக்குப் பூசை புரியும் பட்டர் தீட்டைப் பற்றிப் பேசுகின்றார்.*

*தீண்டாமையின் திருவிளையாடல்களைப் பற்றிப் பேசும் போக்கில் அதனைத் தோலுரித்துக் காட்டுகின்றார் கவிஞர்.*

கூடியிருக்க வொட்டாது - நண்பர்
 கொண்டு தருவதை உண்ணவொட்டாது;
தேடி வருவோரை அன்பாய் - வீட்டுத்
 திண்ணையில் வைக்க வொட்டாது (10)

தாகித்து வந்தவருக்குச் - செம்பில்
 தண்ணீர் அளித்திடச் சம்மதியாது;
சோகித்து வீழ்வோரைக் கண்டால் - தலை
 தூக்கி வியர்வை துடைக்க வொட்டாது (11)

கண்ணுதல் ஆலயம் சென்றால் - அங்கே
 கையிற் பிரசாதம் போடவொட்டாது
எண்ணி வரையளந்திட்டே - அதற்கு
 இப்புறம் அப்புறம் வில்லென் தட்டும் (12)

*ஆனால் இந்தப் பேய் அடங்கிக் கிடக்கும் இடங்களும் உண்டு.*

கப்பலில் ஏறிட அஞ்சும் - சில
 காப்பிக் கடைஎட்டிப் பார்க்கவும் நாணும்;
செப்பும் புகைவண்டி யுள்ளே - அது
 சீற்றம் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் (13)

(புகைவண்டி - இருப்பூர்தி)

*கலைவாணரின் 'கிந்தனார்' நாடகத்தில் அது பட்ட பாட்டைக் கிண்டலுடன் காட்டுகின்றார் அப்பெருமகன். இப்பேயை ஒழித்துக் கட்ட அதற்கு நகைச்சுவை விருந்து அளித்துக் கொண்டிருந்தார் சுமார் இருபதாண்டுக் காலம்.*

*இந்தப் பேயின் வலிமையினைக் காட்டும் பாங்கில்,*

கண்ணான காந்தி மகானும் - இதைக்
கண்டு நடுங்கிக் கடவுளை வேண்டி,
உண்ணா திருந்தனர் என்றால் - இதன்
ஊக்கம் சிறிதும் உரைத்திடப் போமோ? (14)

முன்னம் பெரியோர் இதனை - வெட்டி
மூடிப் புதைத்தும், உயிர்வலி கொண்டு
பின்னும் முளைத்ததே, ஐயா! - இது
பேய்களும் அஞ்சும் பெரியபேய், ஐயா! (15)

*என்ற பாடல்களில் எடுத்துக்காட்டுகின்றார். ஆகவே, இதனைக் கப்பலில் ஏற்றி நடுக்கடலில் கொண்டு தள்ள வேண்டும் என்கின்றனர்.*

*சமூகத்தில் 'தீண்டப்படாதார்' என்ற ஒரு சாதி இருப்பது கொடுமையிலும் கொடுமை. இதனை வேரில் வெந்நீர் விட்டு ஒழித்துக் கட்ட வேண்டும் என்பது கவிமணியின் கருத்து. 'தீண்டாதார் விண்ணப்பமாக' கேட்டோர் மனம் இரங்கும்படி முப்பத்தெட்டுப் பாடல்களில்[12] இவர்களுடைய நிலைமையக் காட்டுகின்றார்.*

கண்ணப்பன் பூசைகொளும்
கடவுள் திருக்கோயிலிலே
நண்ணக் கூடாதோ? நாங்கள்
நடையில்வர ஆகாதோ? (1)

12. ம.மா: சமூகம் - தீண்டாதார் விண்ணப்பம்

சிலந்திக்கும் வரம் அளித்த
சிவபெருமான் திருவடியை
நலம்பெறவே கண்டுநாங்கள்
நமக்கரித்தால் ஆகாதோ? (4)[13]

பெற்றான்எனும் சாம்பானுக்குப்
பேறளித்த பெருமானை
வற்றாத அன்பொடு யாம்
வணங்குதலும் வழுவாமோ? (5)[14]

நந்தனுக்குப் பதமளித்த
நடராசன் எங்களுக்கும்
சொந்தம்எனக் கூறுவதில்
சொல்லிழுக்கும் உண்டோ?ஐயா! (6)

*இவை யாவும் சைவ சமய இலக்கியங்களில் கண்ட எடுத்துக்காட்டுகள். அடுத்துக் காட்டும் மேற்கோள் தேவாரத்தை அடிப்படையாகக் கொண்டது.*

ஆவுரித்துத் தின்பரேனும்
அரனடிக்கீழ் அன்பர்எனில்
தேவர்அவர் என்றுரைக்கும்
திருமொழியும் பெறுமொழியோ? (26)[15]

*இது,*

அங்கமெலாம் குறைந்தழுகும்
தொழுநோயராய், ஆவுரித்துத்
தின்றுழலும் புலையரேனும்

13. 4 - சிலந்திக்கு வரமளித்தது திருஆனைக் காவல்; சிலந்தி, கோட்செங்கட் சோழராகப் பிறந்தது என்பர்.
14. (5) தில்லையிலே பெற்றான் சம்பானுக்கு முக்தி அளித்தவர் உமாபதி சிவம்.
15. (16) ''சங்க நிதிபதுமநிதி'' - அப்பர் தேவாரம் 6.95:10 என்ற பாடல் காண்க.

கங்கைவார் சடைகரந்தார்க்
    கன்பராகில், அவர்கண்டீர்
    யாம்வணங்கும் கடவுளாரே (10)

என்ற தேவார அடிகளை நினைக்கச் செய்கின்றது.

வைணவ சமய இலக்கியங்களில் கண்ட எடுத்துக்காட்டுகளும் தருகின்றார் கவிமணி.

பார்ப்பார்கள் தோள்சுமந்து
    பாணரைமுன் திருக்கோயில்
சேர்த்தார்கள் என்றகதை
    தெரியாதோர் உண்டோ? ஐயா! (9)

இதில் திருக்குலத்துத் திருப்பாணாழ்வாரை லோக சாரங்க முனிவர் என்ற பார்ப்பன அர்ச்சகர் உறையூரை அடுத்த காவிரியின் தென்கரையிலிருந்து அரங்கநாதர் சந்நிதிக்குச் சுமந்து சென்ற வரலாறு குறிப்பிடப் பெறுகின்றது.

சண்டாளர் ஆனாலும்
    சக்கரத்தான் அடியவரேல்
கொண்டாடத் தக்கோர்எனக்
    கூறுவதும் பொய்மொழியோ? (28)

இத்திருப் பாடல் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்களின்,

பாதியாய் அழுகியகால் கைய ரேனும்
    பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பர் ஆகில்
    அவரன்றோ யாம்வணங்கும் அடிகள் ஆவார்.[16]

என்ற பாசுரத்தையொட்டி அமைந்திருப்பதாகத் தெரிகின்றது.

16. திருவரங்கக் கலம்பகம் - 15

சாதியினால் குறைவில்லை;
　　தாழ்ந்தவரும் பக்தியினால்
வேதியரிற் பெரியாரென
　　விளம்பும்மொழி வீண்மொழியோ? (27)

இந்தத் திருப்பாடல் தொண்டரடிப் பொடியாழ்வாரின்,

''பழுதிலா ஒழுகலாற்றுப்
　　பலசதுப் பேதிமார்கள்!
'இழிகுலத் தவர்களேனும்
　　எம்மடி யார்களாகில்
தொழுமினீர்! கொடுமின்! கொள்மின்!'
　　என்றுநின் னொடுமொக்க
வழிபட அருளினாய்போல்''
　　மதில்திரு வரங்கத்தானே![17]

என்ற திருப்பாசுரத்தின் கருத்தையொட்டி அமைந்துள்ளது.

அடுத்து காளிதேவியைப் பற்றிப் பேசுகின்றார்: ''கள், ஆடு, கோழி இவற்றைக் கலந்து உண்ணும் காளி தேவியின் கோயிலில் எங்கட்கு உரிமை இல்லையா? பள்ளர்களாகிய எம்மைக் கண்டவுடன் பயந்தோடிப் போவாரோ?'' என்று தீண்டாதார் வாயில் வைத்துப் பேசுகின்றார்.

அடுத்துப் பொதுவாக அவர்கள் வாயில் வைத்துப் பேசும் பாடல்கள் உள்ளத்தை உருக்குபவை; உணர்ச்சிப் பிழம்பானவை. அவற்றுள் சில:

காப்பாற்றி நமையாளும்
　　கடவுளரும் மக்களுக்குள்ளே
பார்ப்பார்கள் பறையரென்ற
　　பகுப்பேதும் வைத்ததுண்டோ? (12)

17. திருமாலை - 42

கோவிலிலே தீட்டேறிக்
குடிபுகுமோ? குளிப்பவரின்
பாவமெல்லாம் கங்கையிலே
படிந்திடுமோ? கூறும்,ஐயா! (13)

பாவிகளை ஈடேற்றிப்
பதமளிக்கும் பரமசிவ
கோயிலிலே எமைக்கண்டால்
குடிமுழுகிப் போய்விடுமோ! (16)

அண்டம்எல்லாம் காக்கும்ஈசன்
ஆலயத்தில் மக்கள்எம்மைக்
கண்டகண்ணைக் கழுவுவரோ?
கருணைசெய்ய மாட்டாரோ? (18)

தருமஉரு வாம்ஈசன்
தமியரையும் கண்டவுடன்
கருணைவிழி அடைப்பாரோ?
கனல்விழியைத் திறப்பாரோ? (19)

குற்றமிலா எமைக்கண்டு
கோயிலையும் அடைக்கலாமோ?
பெற்றவரைக் காணவரும்
பிள்ளைகளைத் தடுப்பார்உண்டோ? (20)

தாகம்என்று வருபவர்க்குத்
தண்ணீரை அழியாமல்
ஆகமங்கள் ஓதிநிற்றல்
அழகாமோ? அறமாமோ? (25)

சாவியிட்டுப் பூட்டுமிட்டுச்
சந்நிதியில் காவலிட்டுத்
தேவிருக்கும் கோயிலைநீர்
சிறைச்சாலை ஆக்கலாமோ? (29)

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பினைநீர்
பொல்லாதார் பொருளெனவே
பூட்டிவைப் தழகாமோ! (30)

நல்லார்க்கும் பொல்லார்க்கும்
நலமளிக்கும் நலத்தினைநீர்
கல்லாலே கோட்டைகட்டிக்
கடுங்காவல் செய்யலாமோ? (31)

காணார்க்கும் கண்டவர்க்கும்
கண்ணளிக்கும் கண்ணுதலை
வீணாக மூடிவைத்து
விளங்காமற் செய்யலாமோ? (32)

எல்லார்க்கும் வரமளிக்கும்
எம்பெருமான் ஆலயங்கள்
வல்லார்க்குச் சொந்தம்என
வழக்காடல் முறையோ?ஐயா! (33)

*இங்ஙனமெல்லாம் காரணங்கள் காட்டிக் கருணை உணர்வை கிளர்ந்தெழச் செய்கின்றனர். பின்னர் அவர் தம் அறியாமையை, படிப்பின்மையை, ஏழ்மையை எடுத்துக் கூறி இரக்க உணர்வைத் தட்டி எழுப்புகின்றனர். இறுதி யாக,*

நாடாளக் குடியரசு
நாடுவார் ஆலயத்தில்
நீடாகத் தனியரசு
நிலைநாட்டத் துணியலாமோ? (38)

*என்று குடியரசு உண்மையைச் சுட்டுகின்றனர்.*

முற்போக்குச் சாதியார் அனைவரும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவதில்லை. அதுபோல தீண்டாதாரும் சென்று வழிபடலாம் என்ற நிலை ஏற்பட்டால், அவர்கள் அனைவரும் அனுதினமும் வழிபாட்டுக்குத் திருக்கோயில் செல்வர் என எதிர்பார்க்க வேண்டா. வேண்டும்போது போகலாம் என்ற உரிமை முன்னவருக்கு இருக்கும்போது பின்னவருக்கும் அது வேண்டும் என்பதே ஈண்டுக் குறிப்பிடுவது.

தொழிலாளர் நிலை: தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் பாவேந்தர் தீர்க்க முயலும் நிலை வேறு; கவிமணி தீர்க்கும் நிலை வேறு. பாவேந்தர் பிரச்சினைகளைப் புரட்சி மூலம்தான் தீர்க்க முடியும் என்பார். கவிமணி பிரச்சினைகளை அலசி ஆய்கின்றார். வழியொன்றும் காட்டவில்லை. பாரதியார் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும் என்பார்.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே [18]

என்ற தாரக மந்திரமே வெற்றிக்கு வழி என்று கூறுவார். பாவேந்தரோ,

புதுக்கணக்குப் போட்டுவிடு,
பொருளை எல்லாம்
பொதுவாக எல்லார்க்கும்
நீகுத்தகை செய் [19]

என்று கூறிப் பொதுவுடைமைப் பாதையைக் காட்டுவார். கவிமணியோ,

18. பா.க: தே.கீ. - வந்தே மாதரம் - 4

19. உலகப்பன் பாட்டு

வாழவேண்டுமெனில் - தொழில்கள்
வளர வேண்டுமையா!
ஏழையென்றொருவன் - உலகில்
இருக்க லாகாதையா![20]

என்று தொழில்கள் பெருக வேண்டும் என்று கூறுவதுடன் நிறுத்திக் கொள்ளுகின்றார். இந்த அளவில் இவர்தம் சமூக நலச் சிந்தனைகள் அடங்கி விடுகின்றன.

*வேலையில்லாத் திண்டாட்டம்*[21]: படித்தவர்களிடையே அன்றும் இன்றும் என்றுமே இருக்கும் ஓர் அவல நிலை. இதுபற்றிப் பல தனிப்பாடல்கள் உள்ளன. இஃது ஒரு சமூகப் பிரச்சினையாகவே உள்ளது. கவிமணியும் இதுபற்றிச் சிந்தித்துள்ளார். ஒரு பண்டிதன் வாயில் வைத்துப் பேசுகின்றார்.

பட்டம் பெற்றனன்; பண்டிதர் தம்மிடம்
மட்டி லாத மதிப்புரை வாங்கினன்;
துட்டி லாது சுழன்று கறங்கும்இக்
கட்டம் நீங்கு வழிஇன்றும் கண்டிலேன் (3)

வீடு விற்றும், விளைநிலம்விற்றும், மாடு
ஆடு விற்றும் அணிமணி தாம்விற்றும்,
பாடு பட்டுப் படித்த படிப்பெலாம்
வாடும் என்பசி யாற்றிய தில்லையே (4)

ஆயும் மேலதி காரிகள் வாழும்அக்
கோயில் தோறுங்கை கூப்பித் தொழுதனன்;
ஓயும் நெஞ்சுக் குறுதிசொல் வார்இலை;
ஏயும் என்விதிக் கென்செய்கு வேன்?ஐயா! (5)

20. ம.மா: சமூகம் - தொழிலாளி முறையீடு - 9

21. சமூகம் - வேலையில்லாத் திண்டாட்டம்

பெரும்பாலும் 'வெள்ளை வேட்டி வேலை' (White colar jobs)க்காக அலையும் கூட்டமே அதிகம். பெரும்பாலும் இவர்களிடம் தன்னம்பிக்கையே இருப்பதில்லை.

சிலரிடம் தன்னம்பிக்கை உள்ளது. இவர்கள் எந்த வேலையையும் மேற்கொள்ளத் துணிகின்றனர். இந்நிலையைக் கவிமணி,

நெஞ்சின் நூலை நினைப்பது விட்டு, இனிப்
பஞ்சின் நூலிற் பழகத் துணிகுவன்;
கெஞ்சு வாழ்க்கையும் கேடும் ஒழியுமே
விஞ்சு செல்வமும் மேன்மையும் தங்குமே (6)

என்று இத்துணிவினைச் சித்திரித்துக் காட்டுவார்.

செல்வச் செருக்கையும், வறுமைத் துன்பத்தையும் பிஞ்சு மனங்கள் வாயில் வைத்துப் பேசுகின்றார்.[22] அடிமனத்திலிருந்து வரும் துக்க உணர்வை நகைச்சுவையுடன் வெளிப்படுவதைக் காணலாம்; எள்ளல் குறிப்பும் அதில் நிழலிடுவதையும் உணரலாம்.

உடல்நலம் பேணல்[23]: சமூக நலம் பேணுவதில் முக்கிய கூறு உடல்நலம் பேணல் ஆகும். தனிப்பட்டோரின் உடல்நலம் நன்கு அமைந்தால், சமூக நலம் சிறப்புடன் பொலிவுறும். சுற்றுப்புறச் சூழ்நிலையைக் காக்கும் பொறுப்பு தனிப்பட்டோரிடம்தான் உள்ளது. 'நோய்க்கு இடங் கொடேல்'[24] என்பது ஔவைப் பாட்டியின் அமுத மொழி. 'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது வழிவழி மக்களிடையே வழங்கும் பொன் மொழிகள். இதையே கவிமணியும் கும்மி மெட்டில்,

22. சமூகம்: செல்வச் சிறுமியர் களிப்பு; ஏழைச் சிறுமியர் மனப்புழுக்கம் - காண்க.
23. சமூகம் - உடல்நலம் பேணல்
24. ஆத்திசூடி - 76

கந்தை யானாலும் கசக்கியுடு - என்னும்
கற்பனை போற்றி நடப்பாய், அம்மா
சுந்தர மேனியுண்டாகும், அம்மா! - இந்தச்
சுத்தத்தின் நன்மை சிறிதோ? அம்மா![25]

இவை உடல் தூய்மை, ஆடைத் தூய்மையை வற்புறுத்துவன. இதனையே கவிமணியும்,

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி அப்பா![26]

என்று கூறுவார். தூய்மையான காற்று மிகவும் இன்றியமையாதது. இதனை,

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டால்
காலன் ஓடிப் போவானே.[27]

என்று இனிமையாகக் கூறுவார். உணவையும் அளவோடு உண்ண வேண்டும். 'மீதுதூண் விரும்பேல்'[28] என்பது பாட்டியின் வாக்கு. 'அற்றால் அளவறிந்துண்க' என்பது வள்ளுவர் வாய்மொழி (குறள் - 943). இதனைக் கவிமணி,

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய்;
தினமும் பாயில் விழுந்திடுவாய்[29]

என்பார். வள்ளுவர் பெருமானும்,

25. ம.மா: சுகாதாரக் கும்மி - 7
26. ம.மா. சமூகம் - உடல்நலம் பேணல் - 5
27. மேலது - மேலது - 3
28. ஆத்தி சூடி - 91
29. உடல்நலம் பேணல் - 6

மாறுபா டில்லா உணவை மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு [30]

என்று கூறியுள்ளதை ஈண்டு நினைத்தல் தகும். 'பசித்துப் புசி' என்பது மக்கள் மொழி. இதனை வள்ளுவப் பெருந் தகை,

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்கத் துவரப் பசித்து (குறள் 944)

என்று வற்புறுத்துவார். கவிமணியும்,

மட்டுக்கு மிஞ்சிடில், வானமுதும் - குணம்
மாறி விடமாகிப் போகும் அம்மா!
இட்டமுள்ள தோழித் தங்கமே! - நீஇதை
என்றும் மறவா திருப்பாய், அம்மா! (8)

சுண்டப் பசித்துண்ணும் வேளையிலே - பழஞ்
சோறும் சுவையமு தாகும், அம்மா!
பண்டி நிறைந்தபின் உண்பவர்க்கு - நல்ல
பாலும் கசப்பாகிப் போகும், அம்மா! [31] (9)

என்பார். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பொன்மொழியையொட்டி எழுந்தது இது.

உழைப்பை வற்புறுத்தும் கவிமணி,

ஆளும் அரசன் ஆனாலும்
ஆகும் வேலை செய்வானேல்,
நாளும் நாளும் பண்டிதர்கை
நாடி பார்க்க வேண்டாமே [32]

என்று முன்மொழிவார். இதனையே கும்மிப் பாட்டிலும்,

30. குறள் - மருந்து - 5
31. சுகாதாரக் கும்மி - 8,9
32. உடல்நலம் பேணல் - 4

வேலைசெய் யாதுசோம் பேறிகளாய் - நிதம்
வீட்டி லிருப்பது ஆகாதம்மா!
மூலையி லிட்ட இரும்பு துருவேறி
மோசமாய்ப் போவதும் கண்டிலையோ? (10)

வேலைகள் செய்து உடல்வன்மைபெறின் - இந்த
மேதினி முற்றும் நமதே, அம்மா!
கால னையும்வென்று வாழ்வோம், அம்மா! - ஒரு
காலும் தளர்ச்சியுண் டாகா தம்மா![33] (11)

*என்று பின்மொழிவார்.*

*முத்தாய்ப்பாக,*

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்[34]

*என்று முன்மொழிந்த கவிமணி கும்மிப் பாட்டில்,*

நோய்கள் உடலை அணுகிடாமல் - ஆயுள்
நூற்றினும் மேலாய் வளரும் அம்மா![35]

*என்று வேறுவிதமாகப் பின்மொழிவார்.*

*இன்னும்,*

உள்ளம் உடலையே பற்றிநிற்கும் - இந்த
உண்மை மறந்திட லாகாதம்மா!
தெள்ளத் தெளிந்த அறிவுடை யோர்மொழி
தெய்வமொழியென் றுணர்வாய், அம்மா![36] (2)

33. சுகாதாரக் கும்மி - 10,11
34. உடல்நலம் பேணல் - 1
34. சுகாதாரக் கும்மி - 12
36. சுகாதாரக் கும்மி - 2,3

மாசோ டறியாமை நேசமாகித் - தம்முள்
வாய்த்த மணம்செயும் காரணத் தால்
பேசும் உலகினில் நோய்கள் எனும்பல
பிள்ளைகள் வந்து பிறக்குதம்மா! (3)

சுத்தமே என்றும் சுகமளிக்கும் - தீய
சோம்பலை ஒட்டித் துரத்தும், அம்மா!
இத்தரை வாழ்வைப் பெருக்கும் அம்மா! - அதற்கு
ஈடேதும் இல்லையான் சொன்னேன், அம்மா! [37]

என்றும் அறிவுரை கூறுவார். தனிப்பட்டவர் உடல்நலம் சமூகநலம் பேணுவதாக அமையும்.

மதுவிலக்கு: குடிப்பழக்கம் மக்களைப் பீடித்து வாட்டும் ஒரு பொல்லாத நோய். ஏழை மக்கள் 'நாட்டுச் சரக்கில்' மூழ்கித் தம்மை மறக்கின்றனர். செல்வர்கள் 'சீமைச் சரக்கில்' திளைத்து விபசாரத்தில் ஆழ்கின்றனர். மதுவிலக்குக் கொள்கையும் அரசிடம் மதில்மேல் பூனையாகக் காட்சி அளிக்கின்றது. வருமானத்தை நினைந்து, ஊதாரிச் செலவை மறந்து இருப்பதால் வந்த வினை இது. இதற்கு ஒரு 'விடிவெள்ளி' என்று தோன்றுமோ? மத்திய அரசுக் கொள்கையும் மாநில அரசுகளின் கொள்கையும் வேறு வேறாக மாறுபட்டிருப்பதால் விளையும் தீங்கு இது. கவிமணி மதுவிலக்கை முற்றிலும் ஆதரிக்கின்றார். [38]

கள்ள ரக்கா! குலத்தோடுநீ
கப்ப லேறத் தாமதம்ஏன்?
வள்ளல் எங்கள் காந்திமகான்
வாக்கு முற்றும் பலித்ததினி;
எள்ளத் தனையும் உன்வாழ்வுக்கு
இடமிங் கில்லை, இல்லையடா!

37. மேலது - 4

38. சமூகம்: மதுவிலக்குக் பாடல்கள்

தெள்ளத் தெளியச் சொன்னேன்நான்
தெரிந்து ஒளிந்து தொலைந்திடுவாய் (2)

என்ற பாடலில் இதனைக் காணலாம்.

_ச்சைக்காரர் நிலை: நம் காட்டில் பிச்சைக்காரர் நிலையைச் சொல்லி முடியாது. அஞ்சல் நிலையம், பேருந்து நிலையம், இருப்பூர்தி நிலையம், ஓடும் இருப்பூர்தி, கோயில், குளம் முதலிய இடங்களில் எல்லாம் கையேந்தி நிற்பவர்களைக் காணலாம். திருப்பதியில் பிச்சை எடுப்பதையே ஒரு தொழிலாகக் கொண்டிருப்பதைக் காணலாம். வீடு வாசல் இருக்கும் முதியோர்கள் கூட இத்தொழிலில் இறங்குகின்றனர். திருத்தலப் பயணிகளின் கூட்டம் அதிகம் இருப்பதால் இத்தொழில் சுறுசுறுப்பாக நடைபெறுகின்றது. சிலருக்குக் கோவாப்பரேட்டிவ் வங்கியிலும் சேமிப்புக் கணக்குகள் இருப்பதை அறிவேன். நெற்றியில் திருமண் காப்பு அல்லது விபூதி பட்டை இட்டுக் கொண்டு திரியும் முதியோர் கூட்டம் உண்டு; இதில் ஆண் பெண் இருபாலாரும் உண்டு. சிலர் பகல் முழுதும் இரவு 9 மணி வரை சுற்றித் திரிந்து, உணவு விடுதிகளில் உண்டு, இரவு ஒன்பது மணிக்குமேல் ஆள் இயக்கும் மிதி வண்டியில் வீடு திரும்புகின்றனர். மீதி வருவாயை வங்கியில் செலுத்துகின்றனர். அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த போது (மார்ச்சு - ஜூன் 2002) அங்கும் பிச்சைக்காரர்கள் இருப்பதைக் கண்டு வியந்தேன்.

கவிமணி காட்டும் பிச்சைக்காரர்கள் கும்மாளம், அடிக்கின்றனர்.[39] தம்மை ஆண்டியாகவுள்ள ஆதிசிவனுடன் சேர்ந்துக் கொண்டு மன அமைதியுடன் வாழ்கின்றனர். அவர்கள் நிலையை அவர்கள் வாயில் வைத்துப்

39. பிச்சைக்காரர் கும்மாளம்

*பேசுகின்றார் கவிமணி - பதினோரு பாடல்களில். சிலவற்றைக் காண்போம்.*

**தங்குமிடம்:**

ஆல மரத்தின் நிழலிதுவே - நல்ல
ஆயிரங் காலெழு மண்டபமாம்;
சாலவே தங்கும் பறவையெலாம் - அதில்
சங்கீதம் பாடிடும் பாடகராம் (1)

பட்டப் பகலை இரவென் றழைத்திடும்
பாழான சத்திரம் ஏதுக் கடா!
கட்டிப் புளுகும் கதைகளைக் - கேட்டிந்தக்
காதுபுண் ணானதும் கொஞ்சமோடா! (4)

**உணவு:**

ஊர்களி லுள்ள உழவர்களே - நமக்கு
ஓயா துழைத்திடும் ஊழியராம்;
சாரும்இவ் வீடுகள் யாவையுமே - உண்ணச்
சாதம் சமைத்திடும் சாலைகளாம் (2)

சண்டிக் குதிரைமேல் நொண்டித்துரை - செய்யும்
சவ்வாரி போலும்இவ் வாழ்வதனில்
உண்ட துடுத்ததை யன்றிநாம் - வேறெதும்
உண்மையாய்க் கண்டதும் உண்டோ? அடா! (6)

உண்டு வயிறு நிறைந்துவிட்டால் - உடன்
உள்ளக் கவலை ஒழிந்ததடா!
மண்டை உடைத்து வழக்குகள் - பேசிநாம்
வாணாளை வீணாளாய்ப் போக்கோம் அடா! (8)

**உலகப் பார்வை:**

கோட்டிலே ஜட்ஜ் இருப்பதுவும் - வக்கீல்
கொட்டி முழக்கிநின் றாடுவதும்,
கூட்டிலே கள்ளன் நடுங்குவதும் - இந்தக்
கும்பி செயுஞ்செயல் அல்லவோடா? (7)

**தத்துவம்:**

ஆதி சிவனும்ஓர் ஆண்டி,அடா! - அவர்க்கு
அன்பான பிள்ளைகள நாமே,அடா!
ஓது மெய்ஞ்ஞானியர் யாவருமே - நமக்கு
உற்ற உறவினர் ஆவர்,அடா! (10)

லட்சமும் கோடியும் வேண்டாம்,அடா! - அதை
ரட்சிக்க நம்மாலே ஆகுமோடா!
அட்சய பாத்திரம் உண்டே,அடா! - நமக்கு
ஆரே நிகர்இவ் வுலகில்? அடா! (11)

*கவிமணி காட்டும் பிச்சைக்காரர் கூட்டம்போல் கவலை யற்ற மக்கட் கூட்டம் எங்கும் இல்லை என்பது நாம் காணும் உண்மை! இத்தகைய கூட்டம் நம் சமூகத்தில் ஒரு பகுதியாக இருப்பதை நாம் உணரவேண்டும்.*

# 9. பண்பாட்டுக் கூறுகள்

'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்'[1] என்றார் நல்லந்துவனார். மக்கட்கு உரிய பண்பு இல்லாதவர்கள் மரம் போன்றவர்கள் என்பர் வள்ளுவப் பெருந்தகை.[2] மக்கட் பண்பு என்றால் என்ன? நீதியையும் அறத்தையும் விரும்பும் தன்மை ஆகும். இவற்றை விரும்புகின்றவர் களே உலகத்திற்குப் பயன்படுவார்கள். இவர்களுடைய பண்பையே உலகமும் பாராட்டும். இத்தகையோர் இருப்ப தனால்தான் உலக வாழ்க்கை உண்டு என்று சொல்லக் கூடியதாய் நடைபெறுகின்றது. 'பண்புடையார் பட்டுண்டு உலகம்'[3] என்பது வள்ளுவர் வாழ்மொழி. உண்மையான பெருமையையுடைய உலகமாகத் தோன்றச் செய்வது நெஞ்சப் பண்பு ஒன்றேயாகும். பண்புடையவர்கள் பகை வர்களிடத்திலும் பண்போடு நடப்பதைக் காணலாம். தீங்கு செய்து வாழும் மற்றவர்களிடத்திலும் அவர்கள் பண்பு தவறாமல் நடப்பார்கள்.

இத்தகைய பண்பாட்டுணர்ச்சியைக் கவிமணியின் பாடல்களில் பளிச்சிடுவதைக் காணலாம். இயல்பாக இவ ரிடம் அமைந்த பண்பு, வாழ்ந்த சூழ்நிலை, பெற்ற கல்வி முறை முதலியவை இவருடைய பண்பாட்டுணர்ச்சியை வளர்த்தன. இதனால் இவருடைய பாடல்களும் பண்பாட் டுணர்ச்சியைப் பிரதிபலிப்பனவாய் அமைந்தன என்று கருதுவதில் தவறொன்றும் இல்லை. அறிவியலில் மிகவும் ஆழங்கால்பட்டிருந்தமையால், அதில் பெற்ற பயிற்சி யினால், எப்பொருளையும் அறிவியல் முறையில் நோக்கு

1. கலி (நெய்தல்) - 133
2. குறள் - 997
3. மேலது - 996

தல் வேண்டும் என்ற மனப்பான்மையும் இவரிடம் உண்டாயிற்று. இந்த மனப்பான்மையும் இவருடைய பண்பாட்டுணர்ச்சிக்கு உரம் அளித்தது.

இறையன்பு: கவிமணி இயல்பாகவே இறையன்புடையவராக இருந்தார். திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த உமையொரு பாக தேசிகர் என்பவரிடம் சிவதீட்சையும் பெற்றார். இவ்வாறு தீட்சை பெற்றபோது இவர் அவர் மீது பாடிய பாடலை நினைவு கூரலாம்.

வேறும் ஒருதுணையான் வேண்டுவனோ? வேணுவனம்
தேறும் உமையோர்பாகத் தேசிகனே! - எனக்கு
எய்யாப் பிறவி இருள்அகல நீஅளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது[4]

தாம் பிறந்த ஊராகிய தேரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அழகம்மையின் மீது 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' (10 பாடல்கள்)[5] என்னும் பதிகத்தையும் அடுத்துள்ள சுசீந்திரத்தில் எழுந்தருளியுள்ள தாணுமாலயப் பெருமாள் மீதும் பல தோத்திரங்களையும் துதிப் பாடல்களையும் இயற்றியுள்ளார். இங்ஙனம் இவர்தம் சமயப் பற்றும் இவருடைய பண்பாட்டுணர்ச்சியை மிகமிக ஆழந்ததாக்குவதற்குக் காரணமாக அமைந்தது. இவ்வுணர்ச்சியின் விளைவாக இவர் மூலம் 'கலைமகள் துதி', 'இலக்குமி துதி', 'செந்தில்குமரன்', 'முருகன் புகழ்மாலை' முதலிய பக்திப் பாடல்கள் பிறந்தன.

பண்டைய இலட்சியங்கள்: பலவழிகளாலும் உரம் பெற்று வளர்ந்த பண்பாட்டுணர்ச்சிமிக்க இவர்தம் உள்ளம் நமது மூதாதையர்களின் பண்டைய இலட்சியங்கள்

4. ம.மா: வாழ்த்து - உமையொருபாகக் குருக்கள்

5. மேலது - பக்தி மஞ்சரி காண்க.

மீது சாயத் தொடங்கியது. அவற்றின் பெருமையை எண்ணி எண்ணி இவர் மனம் கனியத் தொடங்கியது. உயர்ந்த இலட்சியங்கள் யாவும் திரண்டு உருப்பெற்று விளங்குவதுபோல் தோன்றிய புத்தர் பெருமான் வரலாற்றில், தம் மனத்தைப் பறிகொடுத்தார். ஆங்கிலத்தில் எட்வர்ட் ஆர்ணால்டு எழுதிய 'ஆசிய சோதி' (Light of Asia) என்ற நூலைப் பலமுறை கற்று அந்த நூலின் அழகையும் புத்தர் பிரானின் குணநலன்களையும் அநுபவித்து மகிழ்ந்தார். இந்த அநுபவத்தின் விளைவாகப் 'புத்தர் அவதாரம்', 'புத்தரும் ஏழைச் சிறுவனும்', 'கருணைக்கடல்', 'புத்தரும் மகனை இழந்த தாயும்', 'காதல் பிறந்த கதை' முதலிய கவிதைத் தொகுதிகள் தோன்றின. இவற்றின் தொகுப்பே 'ஆசிய சோதி' என்ற அரியதொரு நூலாக வடிவம் பெற்றது.[6] இப்பாடல்களின் சில பகுதிகள் தற்காலத் தமிழ் இலக்கியத்தில் ஈடும் எடுப்புமின்றித் தலைசிறந்து விளங்குவதைக் கண்டு மகிழலாம்.

உண்மையான பண்பாடு: இந்தப் பண்பாடு கால, தேச நியதிகளுக்குள் அடங்குவதன்று. பிற நாடுகளிலும் பிற சமயங்களிலுமுள்ள பெரியோர்களையும் சான்றோர்களையும் பாராட்டிப் போற்றும் இயல்பு வாய்ந்தது. ஈழ நாட்டுப் புலவர் ஆறுமுக நாவலர், நம் நாட்டுச் சான்றோர்களாகிய வள்ளுவர், கம்பர், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தேசிய கவி பாரதியார் இவர்களைப் பற்றி இயற்றியுள்ள பாடல்கள் தமிழ் மக்கள் பண்பாட்டை அநுபவித்த பாங்கை அற்புதமாக விளக்க வல்லன. இவர்களைப் பற்றி விரிவாக இந்நூலில் பிறிதோர் இடத்தில் காட்டப் பெற்றுள்ளது.[7]

6. இந்த நூலின் பிறிதோர் இடத்தில் ஆராயப் பெற்றுள்ளது.

7. இயல் - 7 காண்க

இங்ஙனம் பல பெரியார்களைப் பற்றிப் பேசி பண்பாட்டுணர்ச்சியைத் தம் கவிதைகளில் பாயவிடும் கவிமணியின் கவனத்திலிருந்து தாயுமான அடிகள், வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகள் ஏன் தப்பினர் என்பது அறியக் கூடவில்லை. இவர்கள் மனிதநேய ஒருமைப்பாட்டின் தூண்களன்றோ?

இயற்கை: இயற்கையைப்பற்றி இவர் இயற்றிய பாடல்கள் பண்பாட்டுணர்ச்சியைப் பளிச்சிடுவதாய் அமைந்துள்ளன. மேல்நாட்டுக் கவிஞர்களாகிய வொர்ட்ஸ்வொர்த், டென்னிசன் போன்றவர்களின் இயற்கையைப் பற்றிப் பாடிய பாடல்களைச் சுவைத் திறனாய்வாளர்கள் அவற்றைப் பலபடியாகப் புகழ்வதைக் காண்கின்றோம். சைவ சமய குரவர்களாகிய சம்பந்தர், நாவுக்கரசர், தம்பிரான் தோழர் இவர்கள் பாடல்களிலும், ஆழ்வார் பெருமக்கள் அருளியுள்ள பாசுரங்களிலும் இயற்கைப் பற்றிய வருணனைகளைக் கண்டு மகிழலாம். எடுத்துக்காட்டாக ஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒரு பாடல்:

புலனைந்தும் பொறிகலங்கி
நெறிமயங்கி அறிவழிந்திட்டு
ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக
அஞ்சேலென் றருள்செய்வான்
அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள்
நடமாட முழவதிர
மழையென் றஞ்சி
சிலமந்தி அலமந்து
மரமேறி முகில்பார்க்கும்
திருவை யாறே [8]

8. சம்பந்தர் தேவாரம் 1.130:1

இப்பதிகத்தின் பாடல்கள் அனைத்தின் ஈற்றடிகள் இரண்டி லும் திருவையாற்றின் இயற்கைச் சூழல் அற்புதமாகக் காட்டப் பெறுகின்றது.

திருமங்கையாழ்வாரின் திருக்கோவலூர் பற்றிய திரு மொழியில்[9] அத்தலத்து இயற்கைச் சூழல் அழகுற அமைந் திருப்பதைக் கண்டு மகிழலாம்.

எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட
செழுந்தட நீர்க்கமலம் தீவிகைபோல் காட்டும்
திருக்கோவலூர் (3)

என்றும்,

கோங்கரும்பும் சுரபுன்னை குரவுஆர் சோலைக்
குழாம்வரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் திருக்கோவலூர் (4)

என்றும்,

கருங்கமுகு பசும்பாளை வெண்முத்து ஈன்று
காய்எல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட,
செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவலூர் (7)

என்றும் திருக்கோவலூர் பற்றிய பாசுரங்களில் இவ்வளம் சித்திரிக் கப் பெற்றிருப்பதைக் காண்க.

நம்மாழ்வார் இயற்கையில் இறைவனையே கண்டு மகிழ்வார்.

9. பெரி.திரு.2.10

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவி மலர்என்றும் காண்தோறும்! - பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று [10]

*என்ற பாசுரத்தில் அப்பெருமான் இறைவனைக் கண்டு மகிழ்வதைக் காண்க.*

*கவிமணியின் பாடல்களில் புல்பேசும்; அது தன்னைப் 'பசும்புல்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டு தன் சுயசரிதையைக் கூறுகின்றது.[11] மலர்கள் திருவாய் மலர்கின்றன.*

பூமகளின் புன்னகைபோல்
　　பூத்திடு வோமே! - கம்பன்
பாமணக்கும் தமிழினைப்போல்
　　பரமளிப்போமே! [12]

*என்பதில் இதனைக் காணலாம். மலையை நோக்கி அணில் பேசுகின்றது.[13] சூரியகாந்தியை நோக்கிக் கவிஞர் பேசுகின்றார்.*

காயும் கதிரவன் மேனியை நோக்க - உன்
　　கண்களும் கூசிக் கலங்காவோ!
நேயம் மிகுந்தவர் காய வருத்தம்
　　நிலைப்பதும் இல்லையே? சொல், அடியே! [14]

*என்ற பாடலில் இதனைக் காணலாம். கடலை நோக்கிக் கவிஞர் பேசுகின்றார். இங்கெல்லாம் பண்பாட்டுணர்வுகள் பளிச்சிடுகின்றன.*

10. பெரி.திருவந்.73
11. ம.மா: வையமும் வாழ்வும் - புல்
12. மேலது: இயற்கை இன்பம் - மலர்கள் - I - 1
13. ம.மா: வையமும் வாழ்வும் - மலையும் அணிலும்
14. மேலது - இயற்கை இன்பம் - சூரியகாந்தி - 3

இறைவனின் இருப்பு: *அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தபூர்த்தியுடன் இறைவனின் இருப்பைக் காட்டுவது இந்தியப் பண்பாட்டின் அடிநிலைக் கொள்கை. இதனைச் சமயநூல்கள் 'வியாபகத்துவம்' என்று பேசும். அவன் அணுவுக்கு அணுவாயும் எல்லாப் பொருள்களுள்ளும் - இயங்கு திணை நிலைத்திணை அனைத்திலும் உறைகின்றான் என்றும் அவை பேசும். இதனை 'அந்தர்யாமித்துவம்' என்று அவை குறிப்பிடும். இக்கொள்கைகளைக் கம்பநாடன்,*

வானின்று இழிந்து வரம்கந்து
மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
உள்ளும் புறமும் உளன்என்ப[15]

*என்று விளக்கி வைப்பான். இந்த அடிநிலைக் கொள்கைக்கு ஏற்பக் கவிமணியும் கிளி முதலிய பறவைகளைக் குறித்தும், உரோஜா முதலிய செடிகளைக் குறித்தும், மழலை மொழி பேசும் குழந்தைகளைக் குறித்தும் பாடிய பாடல்களில் பண்பாட்டுணர்ச்சியின் பெருமை பளிச்சிடுகின்றது. கிளியைக் குறித்து,*

செம்பவள வாயைத் - திறந்துநீ
செப்பும் மொழி கேட்கில்
உம்பர் அமுதமெல்லாம் - செவியகத்து
ஓடி ஒழுகும் அடி (13)

கொம்பிற் கொலுவிருந்து - களித்துநீ
கூவும் குரல்வருமேல்
பம்பி யெழுஞ்சோலை - எனக்குப்
பரமபதம் அடியோ! (14)

15. கம்பரா. அயோ.காண் - கடவுள் வாழ்த்து

என்ற பாடல்களில்[16] இயற்கையைக் கடந்தும் அதற்கு ஆதாரமாய் நின்றும் விளங்கும் தெய்விக சக்தியை இவர் அநுபவிக்கும் திறத்தை உணர்த்துகின்றது. மழலையர் பேசுவதைக் குறித்து இவர் பாடிய பாடல்களும்[17] இத்தகைய அநுபவத்தின் பெருமையை நமக்குப் புலனாக்குகின்றன.

பூவின் அழகுனது முகத்தில் - என்றும்
பொலிந்திடும் காரணம்என்? குழந்தாய்!
தேவரும் கண்டறியாக் காட்சி - யானும்
தெளிவுறக் கண்டபலன் அம்மா! (6)

ஆசைக் குழந்தாய்!இச் செவிகள் - உன்னை
அடைந்த வரலாறே துரையாய்?
ஈசனும் பேசிட வாய்திறந்தான் - கேட்க
இவையும் எழுந்தன, என்அம்மா! (8)

இன்பச் சிறுகரங்கள் இவைதாம் - உனக்கு
எவ்வா றமைந்தன? என்குழந்தாய்
அன்பு வளர்ந்திவ்வுரு வாகி - என்னை
அண்டி அணைத்திருக்கு தம்மா! (9)

இவை முன்னற் குறிப்பிட்டதற்குச் சான்றுகளாகும்.

நிலையாமை: நம் நாட்டு அடிநிலைக் கொள்கைகளுள் மற்றொன்று நிலையாமையை வற்புறுத்துவதாகும். வள்ளுவப் பெருந்தகையும்,

நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வான்மை கடை (குறள் - 331)

என்று கூறுவர். இளமை, யாக்கை, செல்வம் இவற்றின் நிலையாமையை உணர்த்தி நிலைத்த இன்பத்தை நல்குவ

16. ம.மா: இயற்கை இன்பம் - கிளி - 13,14
17. மேலது - உள்ளமும் உணர்வும் - குழந்தை - 6, 8, 9

தாகிய வீடு பேற்றை வற்புறுத்தி அதற்கு உபாயமாகிய துறவைக் கூறுதல் வள்ளுவர், சமண முனிவர் முதலியோரது கருத்தாகும். வேறு சில ஆசிரியர்கள், குறிப்பாக அகத்துறைப் புலவர்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்ற இரண்டனையும் குறிப்பிட்டு இல்லற இன்பத்தைக் காலம் தாழ்த்தாமல் நுகரவேண்டும் என்று வற்புறுத்தினர். கலித்தொகையாசிரியர்,

இளமையும் காமமும்
நின்பாணி நில்லா [18]

எனவும்,

இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
..... ....... .......
ஒரோவகை தம்முள் தழீஇ ஒரோ ஒகை
ஒன்றன்கூ றாடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினர் வாழ்க்கையை வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு [19]

என்று கூறுவர். இந்த இரண்டாவது வகை ஆசிரியர்களின் கருத்தைப் பெரும்பாலும் உட்கொண்டதே உமர்க்கய்யாம் பாடல்

மலர்ந்து நல்ல மணம்வீசி
வையம் புகழ வாழாமல்
உலர்ந்து வீழும் அரும்புகளில்
உலகில் யாரே எண்ணிடுவார்?
கலந்த திருவும் யௌவனமும்
கண்ணுக் கினிய மெய்யழகும்
குலைந்து போகும் மெய்யறிஞர்
கூறும் கூற்றில் ஐயமுண்டோ? (5)

18. கலித். பாலைக்கலி - 11

19. மேலது - 11

பலநூல் கற்ற பண்டிதர்கள்
　　பலரும் சபையில் பலகூடிக்
கலகம் வாதம் செய்திடுக;
　　கண்டம் கிழிய முழங்கிடுக;
மலரும் மலர்கள் வாடலும்இவ்
　　வாழ்வு நிலையா தோடலுமே
உலகம் கண்ட உண்மைகளாம்;
　　உண்டோ மற்றொன் றுடைத்திடவே? (6)

உண்ட வெறியில் முன்னொரு நாள்
　　உண்ட கலத்தை உடைத்தெறிந்தேன்;
துண்டு துண்டாய்ப் போனகலம்
　　துணிந்து மெல்ல எனைநோக்கிப்
'பண்டு யானும் உன்வாழ்வைப்
　　பாரில் அடைந்தேன்; நீயும்எனக்கு
அண்டும் அந்த வாழ்வைஇனி
　　அடைவாய் உண்மை என்றதடா (39)[20]

*என்ற பாடல்கள் சான்றுகளாகும். இன்னும் பிறிதோரிடத்தில்,*

ஏகாந்தம் யாவருக்கும் இசைய மாட்டாது;
　　எந்நாளும் கூடியே வாழ வேண்டும்;
சாகாத வரம்பெற்றோர் எவரும் இல்லை;
　　தளர்ந்தவரைத் தாங்குவதே தரும மாகும்;

20. உமர்க்கய்யாம் பாடல்கள் - 5,6,39.

ஆகாய மளவுயர்ந்து வளர்ந்து நின்ற
அரண்மனையும் அரைநொடியில் அழியு மென்று
பீகாரா கொற்றாவால் அறியார் இந்தப்
பேருலகில் பின்எதனால் அறிவார்? ஐயா! [21]

என்ற பாடலால் நிலையாமையை வற்புறுத்திப் பேசுவார். இங்ஙனமாகக் கவிமணி இப்பாடல்களில் விளக்கி இருப்பது போல் வேறு எங்கும் தமிழ் இலக்கியங்களில் காண முடியாது. இப்பாடல்களும் இவர் இந்தியப் பண்பாட்டைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதை விளக்குகின்றன அல்லவா? இந்த நெறியினைப் பின்பற்றியே தமது வாழ்வின் பெரும்பகுதியிலும் பாடி வந்துள்ளார் இப்பெருமகனார்.

21. ம.மா: வாழகசை நிலையாமை. பீகாரிலும், குவெட்டாவிலும் நேரிட்ட நிலநடுக்கங்கள்.

# 10. மக்கட்பண்புக் கோட்பாடு

கவிமணியின் பாடல்களில் மக்கட்பண்புக் கோட்பாடு (Humanism) பல இடங்களில் காணப்படுகின்றது. சமய நூல்களும் சமயச் சார்பான நூல்களும் மறுமையில் வீட்டுலகம் அடைவதற்கு உதவுபவை. கிரேக்க இலக்கியங்களோடொப்ப, மக்களது இல்வாழ்விற்கு உதவி அவர்களுடைய நலத்தைப் பேணுபவை நமது பண்டைய இலக்கியங்களாகும். இவற்றை நன்கு கற்பதால் மக்கட்பண்பு சிறந்து விளங்கும் என்பது அறிஞர் கொள்கை. தமிழின் மறுமலர்ச்சியில் இதுவும் ஓர் அம்சமாகும். திருக்குறளைக் குறித்து,

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை (1)[1]

என்பார். மேலும்,

மக்களுக்கு மாநிலத்தில் வாழ்க்கை வழிகளெலாம்
சிக்கலறக் காட்டிநலம் செய்நூலாம்[2]

என்று சிறப்பிப்பார். இன்னும்,

ஆதி மனுநூலைத் - திருத்தி
அமைத்த நன்னூலாம்;
நீதி எடுத்தோதப் - புவியில்
நிகரி லாநூலாம் (3)

புத்தகக் காட்டினிலே - புகுந்து
புத்தி மயங்குவதேன்?
பத்தியோ டிந்நூலை - நிதமும்
படித்தல் போதுமையா! (4)

என்று பாராட்டிப் பேசுவார்.

1. ம.மா: இலக்கிய பஞ்சகம் - 1
2. மேலது: இலக்கியம் - திருக்குறள் - 1

இராமாயணத்தைக் குறித்து,

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரிற் பொழிந்ததம் பாற்கடலை (2)

என்று போற்றுவார்; சிலப்பதிகாரத்தைக் குறித்து,

தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேடும் சிலப்பதிகா ரத்தை (3)

என்று புகழ்வார். கலித்தொகையைக் குறித்து,

கற்றவர் மெச்சும் கலித்தொகையாம் - இன்ப
கற்பனை சேரும் களஞ்சியத்தை (4)

என்று பாராட்டுவார்.

இலக்கியக் கல்வியாலன்றியே பிற வழிகளாலும் நம் மக்கள் இகவாழ்க்கையில் மேம்பட்டு விளங்க வேண்டும் என்று கருதி வேறுபல பாடல்களும் பாடியுள்ளார் நம் கவிமணி. 'வையமும் வாழ்வும்' என்ற பகுதியிலுள்ள பாடல்கள் பலவும் இத்தகையனவே.

பறவை வாழ்வில்: மரங்களில் தங்கி ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டிருக்கும் பறவையின் வாழ்க்கையைக் கண்டு அதனினின்றும் சில படிப்பினைகளை வழங்குவார். இவை யாவும் மனிதப் பண்பினைப் பற்றியனவாகவே இருக்கும்.

பறந்து பறந்தெங்கும் - திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ்வேதும் - இந்தச்
செகத்தில் கண்டதுண்டோ? (1)[3]

3. ம.மா: வையமும் வாழ்வும் - இயற்கை வாழ்வு

*இந்தப் பறவைகளின் வாழ்வில்,*

சாதிச் சண்டையில்லை - ஓயாச்
சமயச் சண்டையில்லை;
வேத சாத்திரங்கள் - கூறும்
விதிவிலக்கும் இல்லை (2)

பசுவைக் கொன்றுவிட்டுக் - கொன்ற
பாவம் நீங்கிடவே
பசுவின் தோற்செருப்புத் - தானம்
பண்ணு வதுமில்லை (5)

செக்கினை விழுங்கி - அதனைச்
சீரணம் செய்யச்
சுக்குக் கஷாயம் - குடிக்கும்
தொழில்கள் ஏதுமில்லை. (6)

குடிகெ டுத்துவிட்டுப் - பழிகள்
கோடி செய்துவிட்டுக்
கடவுளை வணங்கி - நிதமும்
கண்ணீர் விடுவதில்லை (7)

நாளைக் கில்லையென - இன்று
நைந்து நைந்துருகி,
மூளை கலங்கியே - இருந்து
முணுமு ணுப்பதில்லை (10)

அச்சக் கும்பிடில்லை; - நடிக்கும்
அன்புக் கும்பிடில்லை;
பிச்சை யெடுப்பில்லை - காட்டும்
பித்த லாட்டமில்லை (11)

தேரும் பொதுவுடைமை - ருஷிய
தேசத்தி லுள்ளதெல்லாம்
பாரிற் பறவைகளைக் - கண்டு
படித்த பாடமேயாம் (21)

நமனை எண்ணியெண்ணி - உள்ளம்
நடுந டுங்கிடாமல்,
அமைதி காணலாம் நித்திய
ஆனந்தம் பெற்றிடலாம் (22)

ஓர்ந்து சிந்தித்தால் இவை யாவும் மக்கட் பண்புக் கோட் பாடு என்பது தெளிவாகும்.

குரு வழங்கிய ஞானச்செல்வம்[4]: குரு வழங்கியனவாக கவிமணி சிலவற்றை அருளுகின்றார்.

வாக்கி றந்தபொருள் - நமது
மனத்திற் கெட்டாப் பொருள்;
யார்க்கும் அப்பொருளை - அளக்க
இயலமாட்டா தப்பா! (1)

'அணுவுக்குள் அணுவாய் அப்பாலுக்கப்பாலாய்' இருக் கும் இறைவனை எப்பொழுதும் சிந்தையில் இருத்த வேண்டும் என்பது குறிப்பு.

'ஆதி எது?'என்று - வினவும்
அவன்ஓர் அறிவிலான்;
'ஆதி இது'என்று - கூறும்
அவனும் ஒருமூடன்! (3)

என்பது நமக்கு உணர்த்தும் ஒரு பேருண்மை.

'பிறந்தவர் இறப்பர்; இறந்தவர் பிறப்பர்' என்பது ஒருவகை நியதி. இஃது அவரவர் செய்த வினையின் பயனாகும். இந்தப் பேருண்மையினை,

மண்ணில் வாழ்வதுண்டு - பின்னால்
மரணமாவ துண்டு;
நண்ணும் இன்பதுன்பம் - எந்த
நாளும் உண்டப்பா! (4)

என்று உணர்த்துவார்.

4. ம.மா: மேலது - குருவின் உபதேசம்

*'தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பது உலகினர் வாயில் உதிரும் பொன்மொழி. இவ்வுண்மையினைக் கவி மணி,*

நன்மை விதைத்திடில் - என்றும்
நல்மையே விளையும்;
தின்மை விதைத்திடில் - அதுபோல்
தின்மையே விளையும் (5)

*என்று விளக்குவார். மேலும் இதனை ஓர் உவமையால்,*

கரும்பில் என்றுமே - வேம்பின்
கனி கனிவதில்லை;
விரும்பிடா வேம்பில் - கரும்பும்
விளைவ தொன்றுமில்லை (6)

*என்ற பாடல் மூலம் தெளிவாக்குவார். ஆதலால்,*

பொய் களைந்திடுவோம் - மெய்யைப்
போற்றி நின்றிடுவோம்;
செய்கடனை நிதம் - உலகில்
செய்து வாழ்ந்திடுவோம் (7)

*என்பது நமக்கு அப்பெருமான் உணர்த்தும் அறிவுரை. இதனையே 'நித்திய நைமித்தி கருமங்கள்' என்று சமய நூல்கள் குறிப்பிட்டுக் காட்டும்.*

ஞான உபதேசம்: *சில கருத்துகளை மனத்திற்கு உபதேசிப்பதாகக் கவிதைகள் அமைந்துள்ளன. இறைவனின் திருநாமங்களை நாவினால் ஒலியின்றி நவிற்றிக் கொண்டு தியானத்தில் ஈடுபடுமாறு ஆற்றுப்படுத்துகின்றார். உருவ வழிபாட்டிற்கு இவர் முக்கியத்துவம் தருவதில்லை. பூ, கற்பூரம் முதலிய ஆராதனப் பொருள்கள்கூடத் தியானத்*

திற்கு தேவை இல்லையல்லவா? மனத்தில் ஞானதீபத்தை ஏற்றுமாறு உபதேசிக்கின்றார். ஒரு வகையில் இது வள்ளல் பெருமானின் கொள்கையை ஒத்துள்ளது.

மனமே! நீயும் வருந்துவதேன்?
மகிழ்ந்து தேவி திருநாமம்
தினமும் மறவா தன்போடு
தியானம் செய்து வாழ்வாயே;
கனமா மணிசே கண்டியெலாம்
கணக ணென்று முழக்காது,
நினைவை ஒடுக்கி நிகழ்த்திடும் அந்
நிட்டைக் கேதும் நிகருண்டோ? (1)

மண்ணினைக் கல்லதனைச் - செம்பினை
வடிவம் செய்துவைத்துப்
பண்ணிடும் பூசையாலே - யாதுமோர்
பலன்அ டைவதுண்டோ?
எண்ணிய எண்ணிலெழும் - உருவை
இதய கமலத்தில்
திண்ணமாய் ஏற்றிவைத்து - நிதமும்
செபங்கள் செய்வாயே (2)[5]

என்று நெஞ்சிற்கு உபதேசிக்கின்றார். இஃது ஒருவிதமான பூசை. இந்நிலையில்,

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலாய் நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனார்க்கும் போற்றஇக் காட்டினோமே[6]

என்ற அப்பர் அடிகளின் திருப்பாடலும்,

5. வையமும் வாழ்வும் - ஞானோபதேசம் - 1,2

6. அப்பர் தேவாரம் 4.76:4

நெஞ்சகமே கோயில்; நினைவேசுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய்! பராபரமே![7]

என்ற தாயுமானவர் வாக்கும் நினைவுக்கு வருகின்றது.

ஞானப் பயிர் வளர்ப்பதும் மக்கட் பண்பைப் பேணும் முறையில் அடங்கும்.

வாழிஎன் மனமே! - உழவின்
வழியறி யாயோ?
பாழ்நில மெல்லாம் - உழுதால்
பயிர்செழித் திடுமே (7)

விரிசடைத் தேவி - பெயரால்
வேலிகட் டுவையேல்
அரியகா லனுமே - வந்திங்கு
அணுக மாட்டானே (8)

என்றிவ் வுலகமெல்லாம் - நாசம்
எய்தி வீழ்ந்திடுமா?
இன்றோ நாளையோ? - அதனை
யாவர் அறிகுவார்? (9)

இந்த நாளேநீ - வாழ்வோடு
இருக்கும் நாளாகும்!
முந்திப் பயிர்செய்து - நல்ல
முதலெடுப் பாயே (10)

விரும்பி ஞானகுரு - தந்த
விதையை நீவிதைத்துப்
பெருகும் அன்புநீரைப் - பாய்ச்சிப்
பேணிக் காப்பாயே (11)

7. தா.பா. பராபரம் - 151

இவை ஞானப் பயிர் வளர்க்கும் வழிகளாகும். இவ்விடத்தில்,

மெய்மமையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே[8]

என்ற அப்பர் பெருமானின் திருவாக்கும் நினைவிற்கு வருகின்றது.

குதிரைகளின் அவலநிலை: 'காக்கை, குருவி எங்கள் சாதி' என்று ஐயறிவுடைய பிராணிகளையும் தம்முடன் சேர்த்துக் கொண்டான் பாரதி. இவரைப் பின்பற்றிக் குதிரைகளின் அவலநிலை பற்றிக் கவிமணி விரிவாக விளக்குகின்றார். வீடுகளில் வீட்டுப் பிராணிகளாகவும், செல்லப் பிராணிகளாகவும் சிலவற்றை வளர்க்கின்றோம். வீட்டுப் பிராணிகளாக ஆடு, பசு, எருமை என்பவற்றையும செல்லப் பிராணிகளாக நாய், (பூனை?)[9], கிளி ஆகியவற்றையும் வளர்க்கின்றோம். பாலுக்காக பசு, எருமைகளை வளர்ப்பவர்கள் அவற்றை நன்கு பராமரிக்கின்றனர்; தமக்குத் தேவையான பாலைக் கறந்து கொண்டு மீதியைக் கன்றுகளுக்கு விட்டு விடுகின்றனர். பால் வியாபாரிகள் வளர்க்கும் மாடுகளைப் பெரும்பாலும் அவர்கள் நன்கு பராமரிப்பதில்லை; தெருவில் திரிய விடுகின்றனர். அவற்றின் கன்றுகளின் கதி ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். வீடுதோறும் பால் கறந்து கொடுக்க வருபவர்கள்

8. அப்பர் தேவாரம் 4.76:2

9. இன்று அமெரிக்காவில் காணலாம்.

மாடுகளை மட்டிலும்தான் ஓட்டி வந்து கறக்கின்றனர்; கன்றுகளின்றியே அவை பால் சுரக்கின்றன. இவை கன்றுகளின்மீது பாசம் இல்லாதவை; கன்றுகளைப் பற்றியே நினைவில்லாதவை; இவற்றிற்குத் துணையாகத் தோற்கன்றுகளைக் கொணர்கின்றனர். இதனைக் கண்டு பால் மாடுகள் சுரப்பு விடுகின்றன. இக்காட்சியினை நேரில் கண்ட வைணவ உரையாசிரியர்கள் "கன்றுக்கு இரங்கும் பசு தோற் கன்றுக்கும் இரங்குமாப் போலே" என்ற உவமையைக் கையாண்டு எம்பெருமானுடைய கருணைத் திறத்தை விளக்குவர். நாய்க்கும் கிளிக்கும் காட்டும் பராமரிப்பு சொல்லுந் தரமன்று. சொந்தப் பிள்ளைகளைவிட இப்பிராணிகளை மிகச் செல்லமாக வளர்க்கின்றனர்.

குதிரைகள்: இன்று குதிரைகள் வண்டி இழுக்கவும், வட்டரங்குகளில் சுற்றிச் சுற்றி ஓடவும், தனிப்பட்டோர் சவாரி செய்யவும், ஓட்டப்பந்தயத்தில் பயன்படுத்தவும், ஊர்க் காவலர் படையில் சவாரி செய்யவும், போர்த் துறையில் குதிரைப் படைகளாகவும் பயன்படுத்தப் பெறுகின்றன. இவற்றையெல்லாம் குதிரைகள் விரும்புவதில்லை; வெறுக்கின்றன. தம் குறைகளைக் குதிரைகளே சொல்லுவதாகக் கவிமணியின் பாடல்கள் அமைந்துள்ளன.[10]

சிலர் குதிரைகளின் வால் மயிரை வெட்டிக் குஞ்சம் போல் ஆக்கி விடுகின்றனர்.

வளர்ந்து வரும்வாலை வெட்டி வெட்டித் - தேய்ந்த
மாறுபோல் ஆக்கிக் குறைத்திடும் நீர்;
தளர்ந்த பொழுதெங்கள் ஈப்பகை ஓட்டிடத்
தக்க உதவிகள் செய்வதுண்டோ? (2)

10. ம.மா: உள்ளமும் உணர்வும் - குதிரைகள் புலம்பல்

*வாயில் கடிவாளம் போடுவதையும் உடம்பின் குறுக்கே சேணம் இடுவதையும் அவை விரும்புவதில்லை; பார்வையைக் கட்டி மறைப்பதையும் வெறுக்கின்றன.*

இரும்புக் கடிவாளம் மாட்டுவதேன்? - வாயை
ஈசன் படைத்தது இதற்காமோ?
பெரும்புவி மீதினில் உங்களுக்கும் - இந்தப்
பேதைகள் செய்த பிழைகள் உண்டோ? (3)

வம்புகள் பேசிடும் வாயையன்றோ - பூட்டி
வைப்பது நீதி முறையாகும்;
நம்பி யிருப்போர்க்குத் துன்பம் இழைப்பது
நல்லோர் பெரியோர் செயலாமோ? (4)

வெள்ளிப்பூண் கட்டிய சேணம்இட்டால் - நெஞ்சு
வேதனை யில்லாது இருந்திடுமோ?
அள்ளி யிடும்பிடிப் புல்லுக்காக - எங்கள்
ஆவியைக் கொள்வது அழகாமோ? (5)

பக்கம் திரும்பியே பார்த்திடாமல் - எங்கள்
பார்வையைக் கட்டி மறைப்பது மேன்?
திக்கெலாம் தந்த பிரமனிலும் - நீவிர்
தீவிர புத்தி உடையவரோ? (6)

*எல்லாச் செயல்களிலும் பங்கு கொள்ளும் குதிரைகளின் கால் குளம்புகளின் பாதுகாப்புக்காக லாடம் கட்டுவதை அவை விரும்புவதில்லை. தோள் பட்டைகளைக் கட்டுவதையும் அவை வெறுக்கின்றன.*

திண்ணிய லாடமும் கட்டுவதேன்? - அதில்
தீயெழ எம்மையும் ஒட்டுவதேன்?
புண்ணியம் நீர்செய்ய வேண்டாமையா! - எம்மைப்
போக்கிலே விட்டிடில் போதுமையா! (7)

எண்ணிக்கை அற்றதோல் பட்டைகளைக் - கட்டி
எம்மீது இறுக்கி முறுக்கி வைப்பீர்;
கண்ணுக் கழகவை ஆயிடினும் - எங்கள்
கண்டம் நெரிவ தறியீரோ? (8)

குதிரையோட்டப் பந்தயத்தில் ஆள்ஏறி அவற்றைப் பறக்கச் செய்வதும், அவற்றின் முதுகை முறிப்பதும், அவற்றிற்குச் சொல்லொணாத் துயரை விளைவிக்கின்றன; இவற்றை எண்ணி அவை கண்ணீர் வடிக்கின்றன.

பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர் - எம்மைப்
பட்சிகள் போலப் பறக்கச் செய்வீர்
சற்றும் இரக்கம் இலாதவரோ? - நீங்கள்
சாத்திரம்;கற்ற பயன் இதுவோ? (9)

ஈசன் அளித்தகால் இரண்டிருக்க - நீரும்
எங்கள் குறுக்கை முறிப்பதேனோ?
தாசரைப் போல்வேலை செய்திடினும் - தயை
சற்றும் உமக்கு வருவதுண்டோ? (10)

வண்டியில் மாட்டுவதும், நேரம் காலம் இல்லாமல் தட்டி ஓட்டுவதும், கையில் சவுக்கையும் காலில் முட்களையும் கொண்டு விரட்டுவதும் நொண்டினாலும் விடாக் கொண்டனாக நோவ அடிப்பதும் அடாத செயல்கள்.

கையில் சவுக்கொன்று போதாதென்றோ - இரு
காலிலும் முட்களைக் கட்டிக் கொண்டீர்?
ஐயையோ ஏழையேம் ஆவி பறித்திட
ஆயிரம் கூற்றுவர் வேண்டுமேயோ? (11)

வண்டியில் கொண்டெமை மாட்டுகின்றீர் - காலை
மாலையெல்லாம் தட்டி ஓட்டுகின்றீர்;
நொண்டினா லும்விட்டுப் போகமாட்டீர் - உடல்
நோவ அடித்து வெருட்டு கின்றீர் (12)

*''எங்கள் ஓட்டமோ சொல்லி முடியாது. மேடு பள்ளங்களிலும் வெயில் மழை என்று பாராமலும் காடு மேடு என்று கருதாமலும் ஓடவேண்டிய நிலை. கால் இளைப்பாறக் கூட முடியாத நிலை. கௌவிப் புல்லையும் தின்ன விடுவதில்லை. மூலை முடுக்கெல்லாம் ஓட வேண்டிய நிலை.''*

மேடு பள்ளங்களில் ஓடவேண்டும் - வெய்ய
வேனில் மழைகளில் ஓடவேண்டும்;
காடு செடிகளில் ஓடவேண்டும் - இந்தக்
கஷ்டங்கள் யாரிடம் சொல்வோம்,ஐயோ! (15)

கால்இளைப் பாறியே நிற்கவொட்டீர் - வாயிற்
கௌவிய புல்லையும் தின்னவொட்டீர்;
மூலை முடுக்கென்றும் எண்ணமாட்டீர் - எம்மை
மூச்சு விடாமல் துரத்துவீரே (18)

*மோட்டார் வண்டி வந்தும் கோடி கோடி மிதி வண்டிகள் வந்தும், மிதி வண்டிகள் போல் எண்ணெய் ஆற்றலால் இயங்கும் இரண்டு சக்கரங்கள் மூன்று சக்கர வண்டிகள் வந்தும் குதிரைகளை விட்டபாடில்லை.*

மோட்டார் வண்டிவந்தும் மோட்சமில்லை - நாங்கள்
முன்செய்த தீவினைக் கென்செய்குவோம்?
ஏட்டால் எழுத அடங்கிடுமா? - கஷ்டம்
யாரிடம் சொல்லி அழுதிடுவோம்? (13)

கோடிகோடி சைக்கிள் வந்திடினும் - எங்கள்
கூட்டத்துக் கேதுமோர் நன்மையுண்டோ?
ஓடிஓடி உயிர் ஓய்ந்திடவோ - எம்மை
உண்டாக்கி விட்டான் உடையவனே? (14)

*குதிரையைப் பராமரிப்பவன் சிறிது கொள்ளு வேக வைத்து உணவாகத் தருகின்றான். சிறிது புல் போடுகின்*

றான். சில சமயம் குளிப்பாட்டவும் செய்கின்றான். ஆனால், ஈடுபடுத்தும் வேலைகளோ அளவற்றவை.

ஆழக்குக் காணம் அளித்திடுவீர் - அதற்கு
ஆயிரம் வேலையும் இட்டிடுவீர்;
ஏழைக் கிரங்கெனும் நீதிமொழி - நீங்கள்
ஏட்டில் படித்ததை ஏன்மறந்தீர்? (19)

'ஏழைக் கிரங்கவே வேண்டும்' என்ற நீதிமொழியை ஏன் மறந்தீர்? என்று கேட்டு,

சித்தம் இரங்கிட வேண்டுகின்றோம் - எம்மை
சேமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்றோம்;
புத்த முனியருள் போதனையை - என்றும்
போற்றுதல் உங்கள் கடனாகுமே (20)

என்று வேண்டுகோள் விடுத்து அறிவுரையும் தருகின்றன. குதிரைகள் புலம்பல் பற்றிய பாடல்கள் அற்புதமாய் அமைந்திருப்பதால் அனைத்துமே ஈண்டு காட்டி விளக்கப் பெற்றன. கவிமணியின் மக்கட் பண்பு பேணும் தன்மை இவற்றால் அற்புதமாக வெளிப்படுகின்றது அல்லவா?

இடையூறுகளைக் களைதல்: மக்கட்பண்பு மேலும் பாட்டிற்குப் பகையாய் நின்று இடையூறு விளைவித்து வரும் சமுதாய ஒழுக்கங்களைப் பெரிதும் இகழ்ந்து வெறுப்பதையும் இவருடைய பாடல்களில் காண முடிகின்றது. இஃது இவர்தம் நன்னோக்கத்திற்குப் பொருத்தமானதே. இவர் இயற்றிய 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்' இதற்குத் தக்கதொரு சான்றாக அமைகின்றது. நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி வேளாளர் குலத்தில் பிறந்த பெண்ணொருத்தி தன் வாழ்நாளில் அநுபவித்த சிரமங்களையெல்லாம் எடுத்துக் கூறி வருந்துவதாக அமைந்த ஒரு சமுதாயச் சித்திரமாகும்; இஃது ஒரு நூதனமான இலக்கிய வகையுமா

கும். இதில் நகைச்சுவையும் இகழ்ச்சியும் சோகமும் கலந்துவரும் பெரியதொரு பயனும் விளைவதாக அமைகின்றது.

இந்நூலில் மருமக்கள் வழியைக் குறித்து வரும் பகுதி ஒரு சிறந்த சமூகம் படிப்பினையைக் காட்டுவதாகும்.

தீரா வழக்கும் சென்மப் பகையும்
உற்றா ருக்குள் உண்டாக் கும்வழி;
அப்பனைப் பிள்ளை அண்டவொட் டாவழி;
பிள்ளையை அப்பன் பேணவொட் டாவழி;
கணவனை மனைவி போற்றவொட் டாவழி;
மனைவியைக் கணவன் மதிக்கவொட் டாவழி;
அண்ணனைத் தம்பி அடுக்கவொட் டாவழி;
தம்பியை அண்ணன் தரிக்கவொட் டாவழி;
மருமகனை மாமன் வஞ்சித் திடும்வழி;
மாமனை மருமகன் வதைத்துக் கொல்லும்வழி
குடியை முடிக்கும் கொடிய தீவழி;
அடிபிடி சண்டை அகலாப் பெருவழி;
மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ்வழி;
...... .... .....
இருவழி சுட்டும் இடைவழி யாய்வரும்
வழியிது போல்இவ் வையகத்து எங்கும்
உண்டோ அம்மா! உண்டோ அம்மா!
...... .... .....
அழுபவர் கண்ணீர் ஆறாய்ப் போம் வழி-
ஐயோ! இவ்வழி ஆகாது ஆகாது [11]

என்று இவர் குறிப்பிட்டுள்ளது மேற்கூறியனைத் தெளிவுறுத்துவதாக அமைகின்றது. இறுதியாக, கவிமணி குறிப்பிடும் அறிவுரை இது:

11. எம்பி எரிச்சப் படலம் - அடி (15-48)

ஆதலால் எந்நாளும் அழியாத பொருளாம்
ஆன்மாவை மேம்படுத்தி அறநெறியில் நின்று
தீதெல்லாம் அறவொதுக்கித் திருவருளும் பெற்றுச்
சிவஞானச் செல்வரெனத் தினம்வாழு வோமே.[12]

*இங்ஙனம், நமது பண்பாட்டினையே உயிர்நாடியாகக் கொண்டுள்ளன கவிமணி தே.வியின் பாடல்கள். இந்நெறியைக் கடைப்பிடித்தே தமது வாழ்வின் பெரும்பகுதியிலும் பாடி வந்துள்ளார்.*

*கவிமணியின் பாடல்களை ஊன்றி நோக்கின், அவர் முற்போக்குக் கருத்துடையவர் என்பது தெளிவாகின்றது. அவர் தூய உள்ளமும் சீரிய நோக்கமும் கொண்டவர்.*

மாசிலன் என்ற வாழ்வும்
மதிநலத் தெளிவாம் எங்கள்
தேசிக விநாய கத்தின்
திகழ்தரும் சிறப்பை யாரும்
பேசிடும் பொழுதி லெல்லாம்
பெருமிதம் என்னுள் ஊறும்
கூசிடும் எனது சொற்கள்
குணமாகும் அவற்கு முன்னால் (1)

*என்பது நாமக்கல்லார் வாக்கு. தாம் வாழும் சமுதாயம் பலவகை இன்னல்களும் நீங்கி அதற்குரிய உயரிய நிலையை அடைய வேண்டும் என்ற ஆழ்ந்த உணர்ச்சியை உடையவர் கவிமணி.*

12. வையமும் வாழ்வும் - உத்தம ஜீவிதம் - 7

பொய்யகம் நீக்கி வஞ்சப்
புலன்களை அடக்கி யாண்டு
வையகம் முழுதும் வாழ
வரந்தர வல்ல நல்லான்
மெய்யகம் வணங்கி நின்று
மேலொரு பொருளைப் போற்றிக்
கையகம் கூப்பி' (6)

*நிற்பவர் எங்கள் கவிமணி என்பார் நாமக்கல் கவிஞர். இவை இவர்தம் எழுத்தில் நிழலிடுகின்றன. இவர் தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர். தமிழரின் வரலாற்றை நன்கு உணர்ந்தவர்.*

தமிழ்மொழிப் பெருமை யெல்லாம்
தண்மையும் உண்மை தானும்
அமிழ்தென அதனைச் சொல்லல்
அழிவிலா அறிவுக் காக
குமிழ்தர இவற்றின் மேன்மை
குலவிடும் கவியால் ஞானம்
கமழ்தரச் செய்யும் (3)

*எங்கள் கவிமணி என்பார் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை. தமிழர்களின் உயர்ந்த குறிக்கோள்களிலும் ஒழுக்க நியதிகளிலும் ஆழங்கால் பட்டவர்.*

துரும்பென மெலிந்த தேகம்
துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இருப்பினும் வலிய உள்ளம்
இனியவே செய்யும் எண்ணம்
பரம்பொருள் நினைவே காட்டும்
பாரெல்லாம் பரந்த நோக்கம்
கரும்பினும் இனிய சொற்கள் (4)

*கூறுபவர் கவிமணி என்பார் கவிஞர் நாமக்கல்லார். இவரு*

டைய உழைப்பில் சுயநலம் சிறிதும் இல்லை; தூயவாழ்க் கையுடையவர். 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று வாழ்ந்து காட்டியவர்.

கற்றவர் பலபேர் உண்டு;
  கவிகளும் புனைய வல்லார்;
மற்றவர் வியக்கப் பேசி
  மகிழ்தரும் எழுத்தும் செய்வார்;
கற்றதை உணர்ந் தடக்கிக்
  கசடற வாழ்ந்து காட்டி
நிற்றலை யன்றோ எங்கள்
  'கவிமணி' நினைவு கூட்டும். (2)

என்று கவிமணியைப் பாராட்டி மகிழ்வார் நாமக்கல்லார். ஆங்கிலக் கவிஞர்களின் பாடல்களில் இவருக்கு அதிக ஈடுபாடு உண்டு. பிற சமுதாய வரலாறுகளை ஊன்றி நோக்கி உணர்ந்தவர். ஆடம்பரம் சிறிதும் இல்லாதவர்; விளம்பரத்தில் பற்றில்லாதவர். ஆதலால் சொற்பொழிவு அரங்குகளிலும் பிரசாரக் கூட்டங்களிலும் இவரைக் காண் டல் அரிது. ஆனால், அமைதியோடும் உள்ளுணர்வோடும் தமிழ் மக்களது நன்மையையே இடைவிடாது சிந்தித்துப் பணியாற்றி வந்த உயர்குணச் செம்மல். மக்கட் பேறு அற்றவராதலால் அதுபற்றிய பந்த பாசங்கள் இவரைத் தொடுவதில்லை. குழந்தைகளிடம் பேரன்பு கொண்டவர். இவர் படைத்துள்ள குழந்தைப் பாடல்களே இதற்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன. 'மலரும் மாலையும்' என்ற தமது கவிதைத் தொகுதியை,

செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்நூல் உரியதாய் என்றும் வாழ்கவே

என்று உரிமை செய்துள்ளமையை அறிந்து நாம் வியந்து மகிழ்கின்றோம்.

ஏழை எளியவர்பால் இரக்க நெஞ்சம் கொண்டவர். தொழிலின் பெருமையைக் கூறுமிடத்து,

> வாழ வேண்டுமெனில் - தொழில்கள்
> வளர வேண்டு மையா
> ஏழை யென்றொருவன் - உலகில்
> இருக்க லாகா தையா[13]

என்ற கூற்று இதனை உறுதிப்படுத்துகின்றது. இந்த ஏழ்மை நிலையால் விளையுறும் துன்பங்களை,

> நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
> துன்பங்கள் சென்று படும்[14]

என்ற குறளால் வள்ளுவர் பெருமானும் விளக்கிப் போந்தார். பல்வகைத் துன்பங்களை, "துன்பமும் தானும் உடனே நிகழ்தலின், நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்பம் அடியாகச் செல்வர் கடைநோக்கிச் சேறல் துன்பமும், அவரைக் காண்டல் துன்பமும், கண்டால் மறுத்துழி நிகழும் துன்பமும், மறா வழியும் அவர் கொடுத்தது வாங்குந் துன்பமும், அது கொடு வந்து நுகர்வன கூட்டல் துன்பமும் முதலாயின நாடோறும் வேறு வேறாக வருதலின் எல்லாத் துன்பங்களும் உளவாம்'' என்று விளக்குவர் பரிமேலழகர். இங்ஙனமாக இவர்தம் மக்கட் பண்பாட்டுக் கோட்பாடு ஒருவாறு விளக்கப் பெற்றது.

13. ம.மா: சமூகம் - தொழிலாளர் முறையீடு!

14. திருக்குள் - நல்குரவு - 5

# 11. இயற்கை வழி இன்பம்

இயற்கைப் பொருள்கள் இன்பமயமான சமாதியில் அடங்கிக் கிடக்கின்றன. அந்த அமைதி நிலைக்குக் குந்தகம் விளையாமல் - அந்த நிலையைக் கலைக்காமல் - அதனுடன் கலந்து கொள்ளும் இன்பம் உடையவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகும் - தோய்ந்து நிற்கும் - அநுபவன் வாய்ந்தவன். இயற்கையுடன் அவன் ஒன்றி நிற்கும் நிலையே தனிப் பெருமை வாய்ந்தது. உறங்குகின்ற குழந்தையைத் தாய் அணைத்துக் கொள்வதைக் கண்டுள்ளோம் அன்றோ? தாய் குழந்தையை மார்போடு சேர்த்தே தழுவிக் கொள்வாள் என்றாலும் அவ்வாறு அணைத்துக் கொள்வதில் குழந்தையின் துயில் கெடுவதில்லை. அடுத்த கணத்தில் அவளும் தன்னை மறந்து உறங்கி விடுவாள். அவ்விதமே கவிஞனும் இயற்கையை அதன் இன்ப அமைதி கெடாமல் - - கலையாமல் - குலையாமல் - தழுவுவான்; தன்னையும் உடனே மறந்து விடுவான்; இன்பப் பெருக்கில் மிதப்பான். அதிலிருந்து வெளிவந்தவுடன் இன்ப வெறிபிடித்தவன் போல சில சமயம் பாடுவான்; சில சமயம் ஆடுவான். இவையெல்லாம் கலைகளாகின்றன. அவன் அநுபவத்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவன் பாடிய பாட்டிலும், ஆடிய கூத்திலும் அமைகின்றன. அதைப் பார்த்தே நாம் உயர்ந்த கவிதைகள், கலைகள் என்று உள்ளம் பூரித்துக் கொண்டாடுகின்றோம்.

எங்கெங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது கொள்கை. இக்கொள்கையே 'முருகன்' என்ற தமிழ்க் கடவுளின் தத்துவம் என்பதைத் தமிழ் முனி திரு.வி.க. போன்ற இறையன்பு கொண்ட பெரியோர்கள் விளக்கிப்

*போயுள்ளனர். இக்கொள்கையையொட்டியே பக்தர்களும் இயற்கையில் தோய்ந்து இறைவனை அநுபவிக்கின்றனர். காட்டிலும் நாட்டிலும், மண்ணிலும் விண்ணிலும், எல்லா இடங்களில் காணும் இற்கையழகுகளால், எம் பெருமானின் அழகுக் கூறுகளில், மனத்தை பறி கொடுக்கின்றனர்.*

*தற்காலக் கவிஞர்களில் பாரதி, பாரதிதாசன் தம் கவிதைகளில் இயற்கையைப் புனைந்து புகழ்பெற்றனர். எடுத்துக்காட்டாகப் பாரதியார்,*

விண்டு ரைக்க அறிய அரிதாய்
 விரிந்த வான வெளியென நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
 அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை;
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
 வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை! [1]

*என்று அகிலத்தின் காட்சியைக்* (Cosmic vision) *காட்டுவர்.*

'புரட்சிக் கவி' *யில் நிலவுபற்றி இரண்டு பாடல்கள் அற்புதமானவை.*

நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
 நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழு துங்காட்டி விட்டால், காதற்
 கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
 சொக்க வெள்ளிப் பாற்குடமா! அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
 கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!

1. பா.க: தோ.பா: மகாசக்தி வாழ்த்து - 7

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்;
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்?
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணம் தானே?

இவை உதாரன் வாயிலிருந்து வந்த கவிதைகள்.

கவிமணி இயற்கை எழில்பற்றிச் சில பாடல்கள் பாடியுள்ளார். அவற்றை ஈண்டுக் காண்போம்.

இயற்கை: கவிஞர் வானத்தை நோக்குகின்றார். சிந்தனையோட்டம் செயற்படுகின்றது.

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்
மண்குளிர்ந்தால் புல்தழைக்கும்,
புல் தழைத்தால் பசுமேயும்
பசு மேய்ந்தால் பால்சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்;
கன்று குடித்து மிஞ்சியதைக்
கரந்து கொண்டு வந்திடலாம்;
காப்பியில் விட்டுக் குடித்திடலாம்[2]

இது குழந்தைகட்கு 'இயற்கை வட்டம்' செயற்படுவதைக் காட்டுவது. தத்துவ நோக்கில் அசித்தின் பரிணாமத்தையும், சித்தின் நுகரும் தன்மையினையும் விளக்குவதாகவும் அமைகின்றது.

2. ம.மா: இயற்கை இன்பம் - இயற்கை

காலதத்துவம்: கால வட்டம் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று ஆறு பிரிவுகளாக இயங்குகின்றதை நம் முன்னோர் குறித்து வைத்துள்ளனர். இளவேனில் தான் 'வசந்தம்' என்பது. ஒருவர் வாழ்க்கையில் 'வசந்தம்' வந்தது என்றால் நல்ல சூழ்நிலை அமைந்து வாழ்க்கை இன்பகரமாக இருக்கும் என்பது பொருள். செடிகள் தளிர்த்து, மலர்கள் பூக்கும் காலம் வசந்தம். திருக்கோயில்களில் 'வசந்த உற்சவம்' நடைபெறுவதைக் காணலாம். மன்மதனுக்கு மலரம்புகள் ஆயுதங்கள். 'காமன் பண்டிகை' இக்காலத்தில்தான் கொண்டாடப் பெறுகின்றது. இந்த வசந்த காலத்தைக் கவிமணி ஐந்து எளிய பாடல்களால் வருணித்திடுவர்.[3]

மின்னி மேகம் பரவுது,
மெல்ல மெல்லத் துளிக்குது;
என்ன சொல்லித் துளிக்குதென்று
இயம்பு கின்றேன் கேளம்மா! (1)

'மண்ணில் கொஞ்ச நாட்களாய்
மறைந்து றங்கும் செடிகளே!
கண்ம லர்ந்து வாருங்கள்;
காலை யாச்சு தென்குது (2)

வாசச் செப்பைத் திறவுங்கள்;
வாரி யெங்கும் வீசுங்கள்;
ஈசன் பாத பூசனைக்கு
எழுந்தி ருங்கள் என்குது (4)

வாட்ட மெல்லாம் நீங்கவே
வசந்த காலம் வந்தது;
மீட்டும் தன்மை காணலாம்;
விரைந்தெ ழுங்கள் என்குது (5)

3. ம.மா. வசந்தம் - பக்.71

பாடல்கள் யாவும் குழந்தை மனத்திற்கு ஏற்றவையாக உள்ளன.

சரத்காலம்: இது மழைக்காலம். மழை பற்றி வள்ளுவப் பெருந்தகை கூறுவது:

> விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
> பசும்புல் தலைகாண் பரிது — குறள்-16

விசும்பிலிருந்து மழைத் துளி வீழ்ந்தால் அல்லாமல், இந்த நில உலகத்தில் பசிய புல்லின் தலையையும் காண்பது அரிது என்கின்றார். மழைக் காலத்தைப் பற்றி வருணிக்கும் கவிமணியின் பாடல்களில் தமிழ் வளம் கொழிக்கின்றது. பச்சைப் பாட்டு விரித்தாற் போன்ற நெல் வயலைக் காணும்போது பொன்னொளியும் பச்சை நிறத்தின் பொலிவும் கலந்து காட்சியளிக்கும்; மழைக்கால மேகம் அந்த வயலின்மீது நிழலை வீசும்; அந்த மேகத்தைக் கதிரவன் வெருட்டிச் செல்லும். மலரில் உள்ள தேனை உண்டு மகிழும் வண்டும் அதனை மறந்து அங்குமிங்கும் சுழன்று சுழன்று ரீங்காரமிட்டுத் திரியும். நதி, குளம் இவற்றின் கரைகளில் வாழும் 'தாரா' என்னும் பறவை இனிய குரலை எழுப்பிக் கொண்டு அங்குமிங்கும் திரியும். மழைக் காலக் காட்சியைத் தாம் கண்டவாறு கூறுகின்றார்[4] கவிமணி.

விரித்துவிடு பாய்காற்றுப் பிடித்து ஓடம்
விரைந்துகுதித் தோடியழ கமையக் கண்டேன்;
பெருத்தநிதி யிருக்குமிடம் பாடம் கேட்டேன்;
பெறும்வழிகள் அறிந்தாசை பெரிதும் கொண்டேன்;
திருத்தமுறச் சுடரொழிதான் முகத்தில் வீசத்
திரண்டுபுயல் பின்வர, மாலுமியும் நின்றான்;
கருத்தொ டெதைப் பாடுவன்யான் களிப்பி லொன்றாய்க்
கண்ணீரும் புன்னகையும் கலந்தது அம்மா! (3)

4. ம.மா. சரத்காலம் - பக்.85

உள்ளமதை ஆகாயம் பரவ விட்டேன்;
    உள்கரமும் என்கனவில் தீண்டப் பெற்றேன்;
மெள்ளஉன்றன் முகம்மறைக்கும் திரையை நீக்கி
    விழிகளையான் கண்டுதொழக் கருணை செய்வாய்!
கள்ளவிழும் வனத்திலெழும் இசையூ டெம்மைக்
    களிப்பொடுநீ வரவேண்டும் குறிப்பைக் கண்டேன்;
வள்ளலுன்றன் திருக்கழலின் ஒலியென் னுள்ளம்
    மலியநிறைந் தானந்தம் அளிக்கு தையா! (4)

ஆறு: *இது குட்ரிச் (Goodrich) என்பார் எழுதிய அதி அற்புதமான ஆங்கிலப் பாடல்களின் பாவனையையும் கருத்தையும் தழுவி பாடப் பெற்றது. ஓர் ஆறு பேசும் திறமை பெற்று, தன் வாழ்க்கையில் சலிப்பு இல்லாத நடையையும், உலகிற்கு உயிரும் உணவும் பசுமையும் கொடுக்கும் பேற்றைத் தனக்கு இறைவன் வழங்கியிருப்ப தில் பெருமிதம் கொண்ட பான்மையையும், மனிதனை ஏளனம் செய்வதுபோல் தோன்றும்படியாகச் சொல்லும் முறையில் அமைந்த எட்டுப் பாடல்கள் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கழி பேரின்பம் நல்கவல்லவை.*[5]

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
    காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்கும்நான்
    இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன் (1)

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் - அதன்
    கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் - மடைச்
    சீப்புகள் மோதித் திறந்துவந்தேன் (2)

5. ம.மா. ஆறு - பக்.72

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரிகுளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன் (4)

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் - சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில் - குழாய்
நீராக வும்சென்று பாய்ந்து வந்தேன் (6)

அல்லும் பகலும் அலைந்துவந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டு மம்மா! (8)

*கவிதைகளைச் சுவைக்கத் தெரிந்தவர்கள் இந்தப் பாடல் களை மாணிக்கங்களாக மதித்துப் போற்றுவர். பாட்டும் நடையும் ஓசையும் ஆற்று நீர் பாயும் பாணியில் அமைந்தி ருப்பதுபோல் புலப்படும். ஒரு நல்ல கவிதைக்குரிய குணமும், நயமும் இன்பத்தை நல்கும் ஆற்றலும் பாடல்க ளின் கட்டும் தே.வி.யின் பாடல்களில் மிளிர்வதைக் கண்டு மகிழலாம்.*

*கடல்: ஆற்றைப் பற்றிப் பேசிய கவிஞர் ஆழியைப் பற்றியும் பேசத் தொடங்குகின்றார் ஆறு பாடல்களில்.[6] ஒரு குழந்தையின் கூற்றுகளாகப் பாடல்கள் அமைந்துள் ளன.*

எல்லை அறியாப் பெருங்கடலே! - நீதான்
இரவும் உறங்காயோ? கடலே!
அல்லும் பகலும் அலைகடலே! - உனக்கு
அலுப்பும் இலையோ? கருங்கடலே! (1)

*6. ம.மா. கடல் - பக்.73*

ஓடம் எடுத்தெறியும் கடலே! - தயை
உனக்குச் சற்றிலையோ? கடலே!
ஆடல் வீடிதனைக் கடலே! - நீயும்
அழிப்ப தழகாமோ? கடலே! (4)

மலையை வயிற்றடக்கும் கடலே! - எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! - சிப்பி
விளையாடற் குதவும் கடலே! (5)

மழைக்கு மூலமும்நீ, கடலே! - அதை
வாங்கி வைப்பதும்நீ, கடலே!
வழுத்து மகிமையெலாம் கடலே! - எவர்
மதித்து முடிக்கவலார்? கடலே! (6)

இப்பாடல்களைப் படிப்போர் தம் உள்ளத்தைப் பறி கொடுத்துப் போவர் என்பது உறுதி.

வான்மதி: நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாகவே இரவு நேரத்தில் ஒளியை அளித்து மக்களுக்குக் களிப்பினை ஊட்டி வரும் சந்திரன் அவர்கள் கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளான். பால்மணம் மாறாப் பச்சிளங் குழவிகளும் வான்மதியின் வனப்பில் ஈடுபட்டுக் களிப் படைவதை நாம் இன்றும் காணலாம். எல்லா நாட்டுக் கவிஞர்களும் சந்திரனின் அழகில் தம் உள்ளத்தைப் பறி கொடுத்து இனிய பாடல்களை இயற்றியுள்ளனர்.

கவிமணி வானவெளியில் உலவும் வான்மதியை நோக்குகின்றார். பன்னிரண்டு பாடல்கள் பிறக்கின்றன.[3] வான்வெளியைக் கடலாகக் காண்கின்றனர்.

மீனினம் ஓடிப்பறக்குதம்மா! - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா! - இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா! (1)

7. இயற்கை இன்பம் - சந்திரன் - பக்.74

என்ற பாடலில் அந்தக் கடலில் வெள்ளியோடம் ஒன்று செல்வதைக் காண்கின்றார். இதனையே,

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! - ஒரு
வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே! (1)

என்று பின்னர் வழிமொழிகின்றார்.[8] ஒரு பாடலில் வானத்தில் முல்லை மலர்ப்பந்தல் இட்டனரோ? அல்லது முத்து விதானத்தைத் தேவர் அமைத்தனரோ? வான்மதிக்குத் திருமணமோ? அத்திருமணத்தில் 'பட்டணப் பிரவேசம்' போல் சந்திரன் பவனி வருகின்றானோ? என்று வினவுகின்றார் (2). பின்னர் ஒரு கண்ணியில் 'ஆதாரம் ஒன்றில்லாமல் அந்தரத்தில் நிற்பதேனோ?' என்றும் சொந்த இடம் இல்லாததால்தான் சுற்றித் திரிகின்றாயோ? என்று பிறிதொரு கண்ணியிலும் வினவுகின்றார் (12,13).

இரவைப் பகலாக்கும் அற்புத ஆற்றலைப் பெற்றுள்ளது நிலவு. இளைப்பையும் ஓட்ட வல்லது அது. இதனை,

இரவைப் பகலா யியற்றுதம்மா! - வெப்பம்
இல்லா திளைப்பெல்லாம் ஓட்டுதம்மா!
அரவம் விழுங்கினும் அஞ்சாதம்மா! - எங்கள்
ஆண்டவன் சூடும் மணியே அம்மா! (10)

என்று ஒரு பாடலில் முன்மொழிகின்றார். பின்னர்,

இரவையும் பகலாக்கும் வெண்ணிலாவே! - உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ? வெண்ணிலாவே! (4)

என்று பிறிதோர் கண்ணியில் வழிமொழிவார். இரண்டிலும் இராகு சந்திரனை விழுங்கும் புராணக் கதையும் சந்திர கிரகணம் தோன்றும் காரணமும் குறிப்பிடப் பெறுகின்றன.

8. வெண்ணிலா-1 - பக்.76

*அமாவாசையன்று சந்திரனை இருள் விழுங்குகின்றது; பௌர்ணமியன்று இருளை நிலவும் விழுங்கி விடுகின்றது. போட்டா போட்டியில் இருவருக்கும் தோல்வியும் வெற்றியும் மாறிமாறி வருகின்றன. இதனை,*

இருளதனை விழுங்கவல்ல வெண்ணிலாவே! - உன்னை
இருள்விழுங்கும் சூழ்ச்சி யெதோ? வெண்ணிலாவே! (19)

*என்ற கண்ணியில் குறிப்பிடுகின்றார்.*

*சந்திரனில் கறையொன்று தென்படுகின்றது. அதனைக் குன்றும் குகைகளும் என்பதாகக் குறிப்பிடும் அறிவியல். அதனை முயல் என்றும் கூனக் கிழவி என்றும் குறிப்பிடும் புராணம். இவற்றை,*

அம்புலிக் கூட்டில் முயல்வருமோ? - ஈதோர்
அண்டப் புளுகோ? அறியேன் அம்மா!
பம்பி யெழுமலை அங்குளதும் - மேலைப்
பண்டிதர் கண்டகனவே அம்மா! (5)

கூனக் கிழவி நிலவினிலே - ராட்டில்
கொட்டை நூற்கும்பணி செய்வதைஇம்
மாநிலம் கண்டு மகிழ்ந்திடவே - காந்தி
மாமதி யோங்கி வளருதம்மா! (6)

*என்று முன் மொழிகின்றார். இவற்றையே பின்னர்,*

பூமியின் உருநிழலோ? வெண்ணிலாவே - அது
போகாக் குறுமுயலோ? வெண்ணிலாவே! (9)

குன்றும் குகைகளுமோ? வெண்ணிலாவே! - அன்றிக்
கூனக் கிழவிதானோ? வெண்ணிலாவே! (10)

*என்ற இரண்டு கண்ணிகளால் வழிமொழிகின்றார். இவ்விடத்தில் மண்டோதரி புலம்பலாக வரும் பாடல்களில்,*

அம்புலி அம்ம வாவென்று
அழைத்தலும் அவிர்வெண் திங்கள்
இம்பர்வந் தானை 'அஞ்சல்!'
எனஇரு கரத்தில் ஏந்தி
வம்புறு மறுவைப் பற்றி
முயலென வாங்கும் வண்ணம்
எம்பெருங் களிறே! காண
ஏசற்றே எழுந்தி ராயோ? [9]

என்ற பாடல் நினைவிற்கு வருகின்றது. சந்திரனுடைய தன்மைகளிலும் செயல்களிலும் உள்ளத்தைப் பறிகொடுத்த கவிமணி,

பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே! - உன்றன்
பக்கம் வந்து சேருவேனே, வெண்ணிலாவே! (15)

என்று சொல்லித் தன் ஆர்வத்தைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றார்.

மலர்கள்: இவற்றில் முதன் பகுதியில் ஐந்து பாடல்களும் [10] இரண்டாம் பகுதியில் ஐந்து பாடல்களும் [11] உள்ளன. மலர்களே பேசுவனவாகப் பாடல்கள் அமைந்துள்ளன. இங்கும் முதற் பகுதிப் பாடல்கள் முன்மொழிதல் போலவும் இரண்டாம் பகுதிப் பாடல்கள் வழிமொழிதல் போலவும் அமைந்துள்ளன.

பூமகளின் புன்னகைபோல்
பூத்திடு வோமே! - கம்பன்
பாமணக்கும் தமிழன்னைப்போல்
பரிமளிப் போமே! (1)

9. கம்ப. யுத்த. இராவணன் சோகப். 50
10. ம.மா. மலர்கள் - I பக்.78
11. மேலது - மேலது - II பக்.79

என்று பூக்கள் முன் மொழிகின்றன. இக்கருத்தைச் சிறிது மாற்றத்துடன்,

மண்ணிலிருந்து பொருள்வரினும் - அதை
மாற்றி மணம்பெறச் செய்திடுவோம்;
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம் விண்ணிற்
காணும் கதிரிடம் பெற்றிடுவோமே (1)

ஆண் - பெண் திருமணத்தை முடித்து வைப்பதில் மலர்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மலரின் 'மணமே' மங்கையரின் 'திருமணம்' ஆகின்றது!

மங்கையர்க்கும் ஆடவர்க்கும்
மணமுடிப் போமே! - மன்னர்
தங்கமுடி மீதும் நாங்கள்
தங்கி வாழ்வோமே! (3)

என்று முன்மொழியும் மலர்களின் பேச்சை,

மங்கைய ரோடு குமரரையும் - மணம்
வாய்த்த மணம்செய்து வாழவைப்போம்
தங்கமும் பொன்னும் மணிகளுமே - எம்மை
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம் (3)

என்ற பாடல் வழிமொழிதலாக அமைந்து நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது.

மலர்கள் ஈசனது திருவடிகளில் கிடக்கும் பேறு பெற்றுள்ளன.

ஈசனருள் வேண்டிநிதம்
இணையடி போற்றி - நல்ல
வாசமெழு தூபதீபம்
வழங்கி நிற்போமே! (5)

என்ற கருத்தை,

ஈசன் அடியில் பணிந்திருப்போம் - அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்;
பூசனை செய்யும் அடியவரின் - உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டி நிற்போம் (4)

என்று வழிமொழிவதுபோல் அமைந்துள்ளது இப்பாடல். மலர்கள்பற்றிய பாடல்கள் படிப்போர் மனத்திற்கு மன நிறைவு தருவனவாக உள்ளன.

சூரியகாந்தி[12]: ஓர் அற்புதமான மலர். சூரியனை நோக்கிக் கொண்டே திரும்பும் தன்மையது.

செங்கதிர் செல்லும் திசையது நோக்கி, - உன்
செல்வமுகம் திரும்புவதேன்?
மங்கையே உன்மணவாளனாகில் - அவன்
வார்த்தை யொன்று சொல்லிப் போகானோ? (5)

என்று வினவுகின்றாள் அந்தப் பெண். இதன் விதையிலிருந்து எடுக்கப்பெறும் எண்ணெய் உடல்நலத்திற்கேற்றவாறு உணவாகப் பயன்படுவது. இதனை நோக்கி ஒரு பெண் பேசும் பாவனையில் அமைந்தவை பாக்கள்.

பெண் வினவுகின்றாள்: "ஆகாய வீதியில் உலவி வரும் ஆதித்தன் உன் அன்பனா? வேகாமல் வெந்து வெயிலில் உலர்ந்து நீ விண்ணில் கண் வைத்து நிற்பதற்குக் காரணம் என்ன? (1). நீயோ பொன்னிறமானவள்; பொலிவுடையவள். உன்னைப் போற்றுவதற்கேற்ற வடிவத்தையும் பெற்றுள்ளாய். இன்னும் எந்த வரம் பெறுவதற்கு அவனை நோக்கித் தவம் செய்கின்றாய்? (2). ஆதித்தனின் மேனியை நோக்கிக் கொண்டிருக்கும் நின் கண்கள் கூசாவோ? (3). காலை நேரத்தில் கதிர் வீசி வரும் அவனைக் கண்டு களித்திருக்கின்றாய்; மாலையில் நின் முகம் வாடித் தளர்ந்திருப்பதற்கு என்ன வருத்தமடி? (4).

12. இயற்கை இன்பம் - சூரியகாந்தி பக்.79

ஆசை நிறைந்தஉன் அண்ணலை நோக்கிட
　　ஆயிரம் கண்களும் வேண்டுமோடி?
பேசவும் நாவெழ வில்லையோடி? - கொஞ்சம்
　　பீத்தற் பெருமையும்வந்த தோடி? (6)

மஞ்சள் குளித்து முகத்தை மினுக்கிக் கொண்டு இந்தப் பொடி வீசி நீ நிற்கும் நிலையை அந்த இலக்குமி வந்து கண்டால் சிரிப்பாளோ? அல்லது கண்ணீர் உகுப்பாளோ? யாருக்குத் தெரியும்? (7). உன் பெயர் சூரியகாந்தி என்கின் றனர். அதன் உண்மை இன்றுதான் எனக்குத் தெரிந்தது. இன்பம் அளித்திடும் இந்தப் பூவுலகத்தில் நினக்கு நிகர் எவரும் இல்லை, அம்மா! (8). இந்த மலரைப் பற்றிய எட்டுப் பாடல்களும் படித்து மகிழத்தக்கவை; இன்பம் பெறத்தக்கவை.

கிளி: பேசும் இப்பறவையைப் பற்றிய இருபத்திரண்டு பாடல்களும் பாடியவாய் தேனூறும் பான்மையில் அமைந் துள்ளன.[13] அனைத்தும் நயமான பாடல்கள். கிளியின் இயல்புகளையெல்லாம் கூர்ந்து நோக்கிக் காட்டும் திறன் சொல்லால் உணர்த்த முடியாது.

செம்பவழ வாயைத் - திறந்துநீ
　　செப்பும் மொழி கேட்கில்,
உம்பர் அமுதமெலாம் - செவியகத்து
　　ஓடி ஒழுகும்,அடி! (13)

கொம்பிற் கொலுவிருந்து - களித்துநீ
　　கூவும் குரல்வருமேல்,
பம்பி எழுஞ்சோலை - எனக்குப்
　　பரம பதம் அடியோ! (14)

கண்ணுக் கினிமையாகி - எனதிரு
　　காதும் குளிரச் செய்யும்
வண்ணப் பசுங்கிளியே! குயிலும்உன்
　　மாதவம் செய்ததுண்டோ! (20)

13. இயற்கை இன்பம் - கிளி - பக்.81

*என்று பாடியிருப்பது இயற்கையைக் கடந்தும் அதற்கு ஆதாரமாய் நின்றும் விளங்கும் தெய்விக சக்தியைக் கவி மணி அநுபவிக்கும் திறத்தை உணர்த்துகின்றது. குழந்தை யைக் குறித்து இவர் பாடியுள்ள பாடல்களும்[14] இவ்வகை அநுபவத்தின் பெருமையையே நமக்குப் புலப்படுத்து கின்றது.*

பூவின் அழகுனது முகத்தில் - என்றும்
பொலிந்திடும் காரணம்என்? குழந்தாய்!
தேவரும் கண்டறியாக் காட்சி - யானுந்
தெளிவுறக் கண்டபலன், அம்மா! (6)

*ஒரு தாய் குழந்தையை வினவுவது போலவும், குழந்தை அதற்கு விடையளிப்பது போலவும் அமைந்துள்ளன குழந் தையைப்பற்றி பன்னிரண்டு பாடல்களும்.*

புன்னகை பூத்திடும் வேளை - ஒரு
புதுமையும் காண்பதேனோ? குழந்தாய்!
முன்னம் அரம்பையர்கள் மூவர் - ஒன்றாய்
முத்தம் அளித்தகுறி, அம்மா! (7)

ஆசைக் குழந்தாய்! இச்செவிகள் - உன்னை
அடைந்த வரலாறே துரையாய்?
ஈசனும் பேசிடவாய் திறந்தான் - கேட்க
இவையும் எழுந்தன என் அம்மா! (8)

இன்பச் சிறுகரங்கள் இவைதாம் உனக்கு
எவ்வா றமைந்தன என்குழந்தாய்!
அன்பு வளர்ந்திவ் வுருவாகி - என்னை
அண்டி அணைந்திருக்கு தம்மா! (9)

*என்ற பாடல்கள் தெய்விகக் கனிகள்; பாடிய வாய் அமு தூறும் அற்புதப் படைப்புகள். இங்ஙனம் ஒருவாறு கவி மணி இயற்கைவழி இன்பத்தைத் தாம் நுகர்ந்து நம்மையும் அநுபவிக்கச் செய்யும் பாங்கு காட்டப் பெற்றது.*

14. ம.மா: உள்ளமும் உணர்வும் - குழந்தை (மாக்டோனபில்டு செய்த ஆங்கிலப் பாடலின் தழுவல்)

# 12. மருமக்கள் வழி மான்மியம்

கவிமணி அவர்கள் வரைந்த 'மருமக்கள் வழி மான்மியம்' என்ற சமுதாய ஓவியம் ஒரு நூதன இலக்கிய வகையைச் சார்ந்தது. இலக்கியம் வாழ்க்கையின் திறனாய்வு என்று கூறினார் மேனாட்டுத் திறனாய்வாளர் ஒருவர். இக்கூற்றினை விளக்குவது போல் கவிமணியின் இந்தச் சொல்லோவியம் அமைந்துள்ளது. இந்த இலக்கியத்தில் நகைப்பும் இகழ்ச்சியும் சோகமும் ஒன்றாகக் கலந்து அடிநாதமாக ஒலிப்பதை இந்த இலக்கியத்தை ஊன்றிப் படிப்போர் அறிந்து கொள்ளலாம்.

சேர சோழ பாண்டியர் இடையே நேர்ந்த அரசியற் குழப்பங்களும், உள்நாட்டுக் கலகங்களும் திப்பு சுல்தானால் நிகழ்ந்த படையெடுப்புகளும் நாஞ்சில் நாட்டினருக்கும் பெருந்துன்பம் விளைவித்தன என்பது உண்மை. புறநானூற்றில் உள்ள பல குறிப்புகளால் சேர சோழ பாண்டியர்களால் நிகழ்ந்த குழப்பங்களை அறியலாம். இந்தப் பின்னணியை மனோன்மணிய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் தமது நாடக நூல்களில் குறிப்பிட்டுள்ளார். அரசியற் காரணங்களால் அநாதியாக மக்கள் தாய முறையைக் கொண்ட நாஞ்சில் நாட்டு வேளாளர் மருமக்கள் தாய முறையைக் கைப்பற்றினர்.

மருமக்கள் தாய முறை: இந்த முறையின் முக்கிய கூறுகள் விசித்திரமானவை; விநோதமானவையும் கூட. ஒரு குடும்பத் தலைவனது வழிவழி வந்த சொத்து அவனது சகோதரியின் வாரிசுகளுக்குத் தாய முறைப்படி இறங்கும். அவனுடைய குழந்தைகட்கு 'உகந்துடைமை' என்று வழங்கும் ஒரு சிற்றுரிமையைத் தவிர வேறு யாதொரு உரிமையும் இல்லை. சகோதரியின் குழந்தைகட்கும் வழிவழி வந்த சொத்தைப் பாகப் பிரிவினை செய்து கொள்ளும்

உரிமை இல்லை. இந்நிலையில் குடும்பத் தலைவன் (காரணவன் என்ற பெயரால் காவியத்தில் வழங்கப்படு கின்றான்) இருதலைக் கொள்ளி எறும்பு போலாகின்றான். தன் குழந்தைகள் ஒரு பக்கமும், சகோதரியின் குழந்தைகள் ஒரு பக்கமுமாகவும் குடும்பத் தலைவனை அரித்துத் தின்பதுதான் நாஞ்சில் நாட்டுக் குடும்பத்தின் கதியாகி இருந்தது. இதனால் எப்போதும் நீதிமன்றத்தில் தீராத வழக்குதான்.

பெண்களின் பரிதாப நிலை: நாஞ்சில் நாட்டுப் பெண்க ளின் துயர நிலை சொற்களால் அளவிட முடியாது. ஒருவர் பல பெண்களை மணந்து கொள்ளலாம். இங்ஙனம் பலருள் ஒருத்தியாய் வாழ்வது நடைமுறையாயிற்று. கண வனை இழந்த கைம்பெண் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை பெற்றிருந்தாள். இவ்வுரிமையால் அவளது துன் பம் தீரவில்லை. மணந்த மனைவியைக் காப்பாற்றும் பொறுப்பு கணவனுக்கு இல்லாத நிலை. சேஷக்காரர்கட்கு (சகோதரியின் பிள்ளைகட்கு) காரணவனுடைய (குடும்பத் தலைவனுடைய) மனைவி மக்களைக் காப்பாற்ற வேண் டும் என்ற பொறுப்பு சிறிதும் இல்லாதிருந்தது. இதனால் பெண்டிர் நிலை பரிதாபகரமாய் இருந்து வந்தது. முற் போக்குள்ளவர்கள் அவகாச முறைபற்றிய சட்டத்தை மாற் றியமைக்க வேண்டும் என்று விரும்பினர். முற்போக்கற்ற ஒரு சிலர் அதனை இரகசியமாக எதிர்க்கத் தலைப்பட்ட னர். இதனால் நாஞ்சில் நாடு இரு பிளவுப்பட்டது. ஆயினும் முற்போக்காளரே இறுதியாய் வென்றவர்களாயி னர். கவிமணி முற்போக்காளர்களைச் சேர்ந்தவர்.

கவிமணியின் நோக்கம்: சட்டத் திருத்தம்பற்றிக் கவி மணி மேற்கொண்ட முயற்சி பெரியது; மிகப் பெரியது. மலபார் குவாட்டர்லி ரிவியூ என்ற இதழில் நாஞ்சில் நாட்டு வேளாளர் பற்றி இவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரை அச்சமூகத்தினரின் கண்களைத் திறந்து விழிக்கச் செய்தது.

தமது சமுதாயத்தினர் சுயநலத்தால் சீர்திருத்தத்திற்கு இணங்கார்களோ என்ற கவலையால் 'நாஞ்சில் நாட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை வினாக்கள்' என்ற துண்டு அறிக்கைகளை வெளியிட்டார். தொடர்ந்து 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்ற சமுதாய ஓவியத்தை வரைந்து வெளியிட்டார். இதிலுள்ள 'அங்கதக் கூறு' (Satire element) மக்களின் உள்ளத்தைத் தூண்டும் படியாக அமைந்தது.

ஓவியத்தின் சுருக்கம்: நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி வேளாளர் குலத்தில் பிறந்த ஒரு பெண் தன் வாழ்வில் அநுபவித்த துயரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி வருந்துகின்றாள். ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவள் தம் பதினாறாம் அகவையில் ஒரு செல்வருக்கு ஐந்தாம் மனைவியாகின்றாள்; கணவன் இல்லத்தில் மாமியார், சககிழத்திகள், மதினி முதலியோரால் அடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. சிறிது காலத்தில் இவளுடைய கணவனுக்கும் அவனுடைய மருமகனுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டு அது முற்றி நீதிமன்ற வழக்காய் முடிகின்றது. வழக்கு முடியுமுன்னர் கணவன் நோய்வாய்ப் பட்டார். அச்சமயம் அவனுடைய வாரிசுகள் (அவகாசிகள்) செய்த தொல்லைகளுக்கு அளவில்லை. இறக்குந்தறுவாயில் தன் மனைவி மக்கட்கு அடைக்கலம் தந்து காப்பாற்றுமாறு மருமகளிடம் வேண்டுகின்றார். அவர் இறந்ததும் மனைவி மக்கள் யாவரும் வீட்டிலிருந்து வெளியேற்றப் படுகின்றனர். அப்பொழுது ஐந்தாம் மனைவியாக வந்தவள் தாம் அடைந்த தொல்லைகளையும் மருமக்கள் வழி அவகாச முறையில் பழித்துரைக்கும் பாங்கில் காவியம் அமைகின்றது.

காவியம்: 1. குலமுறை கிளத்துப் படலம், 2. மாமி அரசிற் படலம், 3. கேலிப் படலம், 4. கடலாடு படலம், 5. பரிகலப் படலம், 6. நாகாத்திரப் படல்ம், 7. கருடாத்தி

*ரப் படலம், 8. வாழ்த்துப் படலம், 9. கோடேறி குடி முடித்த படலம், 10. யாத்திரைப் படலம், 11. கும்பி எரிச்சல் படலம் என்ற பதினொரு படலங்களில் அமைந் துள்ளது காவியம்.*

*இதில் மருமகளின் துன்பம், மாமியாரின் தொல்லை, குடும்பத் தலவர்களின் கவலை, மருமகன் ஏச்சு, காரணவ ரின் பதிலடி, வழக்குகள், வக்கில் - எழுத்தர் திருவிளையா டல்கள், அமீனாவின் அட்டகாசம், பல்வகைப் பீசுகள், ஓட்டாண்டியான கதை முதலியவற்றை வட்டாரத் தமி ழில், நகைச்சுவை ததும்பும் பாங்கில், குத்திக் காட்டும் முறையில் எடுத்துக்காட்டும் கவிமணியின் பாணி வாசகர்க ளைக் கண்ணீர் உகுக்கச் செய்கின்றது. படிப்பு அதிகம் அறியாத ஒருப் பெண்மணியின் கூற்றாக இருப்பதால் வட்டாரத் தமிழ் பல இடங்களில் கையாளப் பெற்றுள் ளது.*

*ஐந்தாம் மனைவி,*

மருமக் கள்வழி யென்னும் வனத்தில்
புலிகள் சூழுமோர் புல்வாய் போல
வளையிற் படுமோர் மணிப்புறாப் போல
ஒருத்தி ஏழை ஒருதுணை யில்லாள்
தானும் மக்களும் தமிய ராகிப்
பொறியும் கலங்கிப் போதமும் கெட்டுப்
புலம்பும் பொழுது ...... .....
...... ...... ...... .....
பதவியும் பணமும் படிப்பும் இலாதேன்
பஞ்சப் பாட்டெனப் பழித்திக ழாதீர்,
இலக்கண வழுக்கள் இருப்பினும் அவற்றை
வலித்தல் மெலித்தலாய் மதித்துக் கொண்மின்
நீட்டல் குறுக்கலாய் நினைத்துக் கொண்மின்
விரித்தல் தொகுத்தலாய் விளக்கிக் கொள்மின்

பழையன திரிலாய்ப் படித்துக் கொண்மின்
புதியன புகுதலாய்ப் பொறுத்துக் கொண்மின்
இன்னும்
அமைக்கும் விதியறிந் தமைத்துக் கொண்மின்
நாயேன்
கொண்ட கருத்தைக் குறைவறக்
கண்டு கொள்வது பெரியவர்க் கடனே

என்று அவையடக்கப் பகுதியே அற்புதமாய் அமைந்துள்ளது.

குலமுறை கிளத்தும் பகுதியில் தன் வரலாற்றை,

காசினி மீதென் கதைபோல் இல்லை
சீதையின் கதையும் சிறுகதை யாகும்
பாஞ்சா லியின்கதை பழங்கதை யாகும்
தமியேன் கதைக்குச் சந்திர மதிகதை
உமியாம், தவிடாம், ஊதும் பொடியாம்

என்று பிட்டு வைப்பது கற்போர் கருத்தைக் கனியச் செய்கின்றது. இப்பகுதியில் சக கிழத்திகள் சதிராட்டத்தை, ஓதும் தலையணை மந்திரம் முதலியவற்றைக் கூறும் பாங்கு நயம் மிக்கது. எடுத்துக்காட்டாக நாலாம் அக்காளை,

...... எடுப்புக் காரி
இந்தி ராணியும் ஈடில்லை; இவளது
மஞ்சள் பூச்சும் மயக்கிடும் பேச்சும்
சாந்துப் பொட்டும் தாசிகள் மெட்டும்
கோல உடையும் குலுக்கு நடையும்
கொண்டை யழகும் கண்டு, கணவர்
அண்டையி லிருந்து அகலவே ஒட்டார்;
'தங்கப் பெண்ணே! தாராவே!
தட்டான் கண்டால் பொன்னென்பான்

தராசிலே வைத்து நிறு என்பான்
எங்கும் போகாமல் இங்கே யேஇரு
என்று சொல்லுவ திவட்கே இசையும்
இவள்,
அடுக்களை வந்திடாள் - அரக்குப் பாவையோ?
கரிக்கலம் கையெடாள் - கனகசுந் தரியோ?
வாருகோல் ஏந்திடாள் - மகாராணி மகளோ?
வெயிலில் இறங்கிடாள் மென்மலர் இதழோ?
குடத்தை எடுத்ததிடாள் - குருடியோ? கொண்டியோ?
வஞ்சகி இவள்செய் தலையணை மந்திர
உபதேசங்களை.....

*என்று விளக்குவாள். பொதுவாக, கடைசியாக மணந்தவள் மீது அதிக பாசம் வைப்பது கணவன்மார் இயல்பு! இதற்கு மாறாக இருந்தது ஏனோ?*

மாமியார் கொடுமை: *'அரசியல்' என்ற சொல் இக்காலத்தில் இழிநிலையை விளக்கக் கையாளப் பெறுகின்றது. இதனால்தான் கவி 'மாமியார் அரசியல்' என்று மகுடம் சூட்டினார் போலும்! இவள் கொடுமையை,*

அரிசியை நிதமும் அளந்து வைப்பாள்
கொல்ல மிளகைக் குறுக்கி வைப்பாள்;
உப்பில் புளியை உருட்டி வைப்பாள்;
கறிக்குத் தேங்காய் கருக்கி வைப்பாள்;
கடுகையும் எண்ணிக் கணக்கிட்டு வைப்பாள்;
தீபா வளிக்குத் தீபா வளியே
எண்ணெ யறியும் என்தலை அம்மா!
அரைக்க மஞ்சள் அளித்திடா மாமி
குளிக்க மஞ்சள் கொடுத்திடு வாளா?

*இவ்வடிகள் வீட்டு நிர்வாகத்தை விளக்குவன.*

*மாமியின் வெளி அலுவல்களைப்பற்றி விளக்கும் பாங்கு விநோதமாக உள்ளது. இறைவன் எங்கும் இருப்*

பதுபோல் இவள் எங்கும் இருப்பாள். ஆணாய்ப் பிறந்தாள் அகிலம் ஆளுவாள். இவள் குணத்தை அறிந்தே எல்லாம் வல்ல எம்பெருமான் இவளை 'ஒற்றைக் கண்ணி' யாக்கி னான். இவள் ஒரு கண்ணுக்கு இந்திரனின் ஆயிரம் கண்ணும் இணை ஆகா.

இவளுடைய திறமையைப் பற்றிக் கூறுவாள்:

ஊரை முழுதும் உழக்கால் அளப்பாள்;
நாட்டை முழுதும் நாழியால் அளப்பாள்;
நரியை முன்னம் பரியாம் ஆக்கின
நாதனும் கண்டு நாண, இவளும்
யானையைப் பூனை யாக மாற்றுவாள்
பூனையை யானை போலக் காட்டுவாள்
ஐயோ! உலகுக் கெங்கள் அருமை
அத்தை திருவிளை யாடலை யெல்லாம்
பத்துப் பரஞ்சோ திகளே பாடினும்
முடியா தென்றால் மூதறி வில்லா
அடியாள் சொல்லி அறியப் படுமோ?

என்ற பகுதியில் இதனைக் காணலாம்.

இவள், இல்லத்தில் செய்யும் கொடுமையை,

இரக்கம் சிறிதும் இன்றி எனக்கிவள்
இடுவாள் வேலைகள் இரவும் பகலும்
குழந்தைக் குப்பால் கொடுக்க வொட்டாள்;
கும்பி யாரக் குடிக்க வொட்டாள்
உண்ண வொட்டாள்; உறங்க வொட்டாள்
உடலைக் கீழே சரிக்க வொட்டாள்
அருமை மதினி அடிக்கடி அடிக்கடி
சடைவா றுதற்குத் தாய்வீ டடைவாள்;
மக்களும் பின்னால் வருவர்; புருஷன்
இரண்டொரு நாள்கழித் தெட்டிப் பார்ப்பான்;
வந்தால், போகும் வரையிலும் என்னை

அம்மியில் வைத்துச் சம்பந்தி யாக
அரைத்து விடுவாள்; ஐயம் அதற்கிலை
என்னிரு மக்களும் இவருக் கேவல்
செய்து செய்து துரும்பாய் தேய்ந்தார்

என்று விளக்குகின்றாள்.

ஒரு சமயம் மருமகன் குடும்பத் தலைவனைக் காண வருகின்றான் வழக்குப் பேச. குடும்ப வருமானம் பற்றி வாக்கு வாதம் நடைபெறுகின்றது. பொய்க் கணக்குக் காட்டுவதாக புகார். வாய்க்கு வந்தபடி வசைகள் பாடி கோர்ட்டில் வழக்கு போடுவதாக வீராப்பு பேசி வீண் வம்பு செய்கின்றான். இதனை 'நாகாத்திரப் படலம்' நயமாக விளக்குகின்றது.

நாகக் கணை தொடுத்த மருமகன்மீது மாமன் கருடக் கணை தொடுக்க முற்படுகின்றான். வருமானத்திற்கு செலவுக் கணக்கு தருகின்றார் காரணவர். இடையே மருமகன் படிப்புக்கு செலவழித்ததைக் குறிப்பிட்டு 'எண்ணெய் செலவழிந்தது பிள்ளை பிழைத்த பாடில்லை' என்ற எள்ளல் குறிப்பும் வெளிவருகின்றது. வழக்குப் போட்டு ஆண்டியாய்ப் போனவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். குடும்பத்துக்கு ஒரு குறையும் வராமல் காரியம் பார்க்கும் காரணவர்களில் தன்னைப் போல் இந்த நாஞ்சில் நாட்டுப் பன்னிரண்டு பகுதிகளிலும் ஒருவரும் இல்லை என்று வீரம் பேசி எழுகின்றார்.

பிரிந்து சென்ற மருமகன் தன் தந்தை வீரபத்திரப் பிள்ளையிடம் விளைந்தவற்றையெல்லாம் விரித்துரைத்து இடையிடையே சிறிது சேர்த்துக் கூறுகின்றான். வீரபத்திரப் பிள்ளை வெகுண்டெழுந்து காரணவர் வீடேகி தன் மகனைக் குறைத்துப் பேசியதற்குக் காரணவர் மகனை கண்டபடி ஏசிப் பேசி வட்டியும் முதலுமாகத் தந்து விடுகின்றார். இவற்றைக் கேட்ட காரணவர்,

வைய வைய வைரக் கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக் கல்லும்

ஆகி இருக்கின்றார்.

வீரபத்திரப் பிள்ளையால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் பெறுகின்றது. இவர் நியமித்த வக்கீல் அண்டப் புழுகன்; எழுத்தர் 'ஆனைப் பொய்யன்'. நோக்கம் 'காரணவனைப் பல காரணத்தாலே மாற்றுதல்'. கோடேறினால் குடி முடிந்து போகுமே என்று பரிதபித்த கவிஞர்,

'புற்றை விட்டுப் புறம்போ காமல்
பட்டினி கிடக்கும் பாம்பின் வாயில்
தேரை குதித்துச் சென்று விழுவது
நாகம் முன்செய்த நல்வினைப் பயனோ?
தேரை முன்செய்த தீவினைப் பயனோ?
ஏதெனச் சொல்ல எவரால் ஆகும்?'

என்று அழாத குறையாகப் பேசுகின்றார்.

நம்பர் பதித்த நாலாம் மாதம் சம்மன் வருகின்றது. நிலைமை வெளிச்சமாகின்றது. மேல் வீட்டிலிருந்து வெள்ளையம் பிள்ளை என்பார் ஒருவர் சில கூறி சமதானமாகப் போகுமாறு அறிவுரை கூறுகின்றார். நீதிபதியொருவர் தோற்றவர் வென்றவர் உருவங்களை சுவரில் வைத்த கதையையும், இரண்டு பூனைகள் வானரத்திடம் சென்று வழக்கு சொல்லி உள்ளதையும் இழந்த கதையையும் சான்றுகளாக வைக்கின்றார். கோடேறி குடி முடிந்தவர் பட்டியலையும் தருகின்றார். ஆகவே,

வியாச்சியம் வேண்டா; வியாச்சியம் வேண்டா
தேடின முதலைத் தெருவில் வாரி
இறைக்க வேண்டா; இறைக்க வேண்டா

என்று அறிவுரையும் தருகின்றார்.

*இவர் அமீனாவைப் பற்றிச் சொன்னது:*

ஆஆ என்றுஅலை ஆமீன் வாயில்
அகப்பட் டார்வெளி யாவது முண்டோ?
சுறா மீனையுமே தூக்கி விழுங்கும்
பொல்லா மீன்இது போலொரு மீனைக்
கடலிலும் கூடக் கண்டவ ரில்லை

*என்பது.*

வக்கீல் குமாஸ்தா *என்னும் கூட்டத்தைப் பற்றி:*

எவரினும் பெரியவன் யானே ஆவேன்
எப்பெரு வேலையும் எளிதில் முடிப்பேன்!
இம்மிரு கத்தையும் எடுத்தொரு மடியில்
வானெலாம் சுற்றி வருவதற் குள்ள
ஆற்றலு முடையேன்; ஆனால், அத்திறம்
அனைத்தையும் வெளிப்படை யாகக் காட்ட
அற்பமும் ஆசை எனக்கிலை; அன்றியும்
உருவமோ நீளமோ உயரமோ கண்டே
மூட உலகமும் மோசம் போகும்;
ஆதலால் ஒருவரும் அறியா திருந்தும்இந்
நாலுகை யானை நடத்து கின்றேன்
என்றுதன் முதுகி லிருக்கும் ஈயொன்று
எண்ணாது டம்பம் எடுத்துரைப் பதுபோல்
'இரவும் பகலு இடைவிடாமல்
பற்பல வருஷம் படித்து பி.எல்.
எம்.எல். பட்டம் எல்லாம் பெற்று
வந்திடும் பெரிய வக்கில் மாரும்
யாங்கள் இல்லையேல் என்செய்வார்? எனப்
புத்தி யிலாது புலம்பித் திரியும்
குமஸ்தா வெனும்ஈக் கூட்டம்'

*என்று கூறுவார்.*

*நீதிபதிக் குறிப்பாக,*

'இன்ன படியென்று எழுதி விட்ட
சிவனே வரினும் சிறிதும் அஞ்சேன்,
விதியினுக்கு ஆயிரம் விக்கினம் சொல்வேன்;
வருகிற வழியாய் வந்துஎனைக் கண்டால்
சிக்கெலாம் போக்கி நடத்தித்
தருவேன்' என்று சற்றும்வாய் கூசாது
உரைக்கும் அந்த உத்தம புருஷன்
நிறையா வயிற்றை நிறைத்திடக் கடலைத்
திறந்துவிட் டாலும் திகையுமோ?

*என்று சுந்து காட்டுவார்.*

*கோர்ட்டில் செலுத்த வேண்டிய படிகளைப்பற்றி,*

பாரப் படிகளும் பட்டிகைப் படிகளும்
சாட்சிப் படிகளும் சம்மன்சு படிகளும்
கணக்கி லடங்காக் கமிஷன் படிகளும்
ஜப்திப் படிகளும் வேலப் படிகளும்
வாரண்டுப் படிகளும் வாசற் படிகளும்
ஏணிப் படிகளும், இப்படி அப்படி
எல்லாப் படிகளும் ஏறி இறங்கி
வாணாள் கொடுத்து வாண தீர்த்தம்
ஆட ஆளும் நீரோ?

*என்று படிவகைகளைப் பிட்டு பிட்டு வைப்பார்.*

*கோர்ட்டிலும் பிற இடங்களிலும் செலுத்த வேண்டிய பீசுகளைப் பற்றி,*

கோர்ட்டுப் பீசு குமஸ்தா பீசு
கூடிக் காப்பி குடிக்கப் பீசு
வெற்றிலை வாங்கிட வேறொருபீசு
வக்கில் பீசு மகமைப் பீசு

வக்கா லத்து வகைக்கொரு பீசு
எழுதப் பீசு சொல்லப் பீசு
எழுதிய தாளை எடுக்கப் பீசு
நிற்கப் பீசு இருக்கப் பீசு
நீட்டின கையை மடக்கப் பீசு
பாரப் பீசு கீரப் பீசு
பரா இழவுப் பயிற்றுப் பீசு
கண்டு பீசு காணாப் பீசு
முண்டு துணிக்கொரு முழுமல் பீசு
அந்தப் பீசு இந்தப் பீசு
ஆனைப் பீசு பூனைப் பீசு
ஏறப் பீசு இறங்கப் பீசு
இப்படி யாக என்றென் றைக்கும்
பீசு பீசாகப் பிச்சுப் பிடுங்கும்
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டா
குதித்துக் குடியை முடித்திட வேண்டா

*என்ற பகுதியில் ஒரு பட்டியலையே தருகின்றார் வெள் ளையம் பிள்ளை.*

*வாதி வக்கில் அண்டப் புரட்டனைப்பற்றிக் கூறுவது:*

வாதிப் பக்கத்து வக்கீல் உம்மைக்
கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்க்
கிராசு கேட்டு கிடுக்கி விடுவான்;
சந்தேக மில்லை சந்தேக மில்லை;
நீர்,
அண்டப் புரட்டனை அறிய மாட்டீர்,
புத்தியில் பெரியவர், பொல்லாத வம்பர்;
ஆளும் தரமும் அறிந்திட வல்லவர்;
சீரும் திறமும் தெரிந்திடச் சமர்த்தர்;
ஆடிக் கறப்பதை ஆடிக் கறப்பார்;
பாடிக் கறப்பதைப் பாடிக் கறப்பார்

தயவாய்ச் சொல்லுவார தக்கில் கேட்பார்
இரைந்து சொல்வார், எச்சில் எழுப்புவார்;
பார்பார் என்பார் பல்லைக் கடிப்பார்;
போருக்கு நிற்பார், புலிபோல் பாய்வார்
அங்கும் இங்கும் அசையாதே என்பார்;
குனியாதே என்பார், கோட்டைப்பார் என்பார்;
கோட்டையும் கூடக் கூட்டாக் காமல்
கேள்விகள் பலவும் கேட்க வருவார்
'ஓடும் குதிரைக்கு உச்சியில் கொம்புகள்
ஒன்றா? இரண்டா? உடன்சொலும்' என்பார்;
நாம்,
'குதிரைக்கு ஏது கொம்பு?' என்றால்
அது
கோர்ட்டு அலட்சியக் குற்றம் என்பார்;
கேள்வியை நன்றாய்க் கேட்டுச் சொல்லும்;
இரண்டா? ஒன்றா? என்பதுதான் கேள்வி,
உண்டா? இல்லையா? என்றுநான் உம்மிடம்
கேட்டே னாய்ஓய்? காதுகேட் காதோ?
என்றெலாம் சொல்லி ஏமாற்றி விடுவார்;
குண்டில் விழுந்த குள்ள நரியைப்
படுத்தும் பாடெலாம் உம்மைப படுத்துவார்

*என்று கூறி அச்சத்தை எழுப்புவார்.*

வக்கீல் சாமர்த்தியம்: *சிலர் பீசு சரியாக வரவில்லை என்று வழக்கு விசாரணையைத் தள்ளிப் போடுவதுண்டு. சிலர் கட்சிக்காரர்களிடம் அதிகமாகக் கறப்பதற்காகவே விசாரணையைத் தள்ளிப் போடுமாறு 'வாய்தா' கேட்கின்றனர். வெள்ளையம் பிள்ளை சொல்லுகின்றார்:*

ஈரங் கிகளை எடுத்துச் சொன்னால்
பீரங் கிகளும் பின்னிட் டோடும்
பொல்லா தவர்அவர், பொல்லா தவர்அவர்,

இந்த வக்கீலுக்கு ஏழரை நாட்டனும்
இணையா வாரோ? இணையா வாரோ?
..... ..... ..... .....
மூடர் முதலெலாம் வக்கில் முதலாம்

*என்று கூறி*

ஐயா! ராஜி ஆவதே உத்தமம்!
ஐயா! ராஜி ஆவதே உத்தமம்!

*என்று அறிவுரையும் பகர்கின்றார். பின்னர் விடைபெறு கின்றார்.*

ஒரு வக்கீல் குமாஸ்தாவின் சதி: *இவன் காரணவரின் நாலாம் மனைவியின் மாமன் மகன். வெள்ளையம் பிள்ளையின் அறிவுரையை அறிந்து வந்தவன். இவன் காரணவரிடம் வந்து 'தூபம்' போட்டு வழக்கில் கட்டிவிடுகின்றான் காரணவரை. நாலரையாண்டு வழக்கு நடைபெற்றது. காரணவர் எல்லா நியமங்களையும் கைவிட நேரிட்டது. நோயும் ஆட்கொண்டது. ஓட்டாண்டியாகி கைலை ஆண்டவனிடம் போய்ச் சேர்ந்து விடுகின்றார். இறுதிக் காலத்தில், உமையொரு பாக தீட்சிதரிடம் சிவதீட்சை பெற்றவர் திருவாசகம் ஓதுகின்றார். யாத்திரைப் பத்தில்,*

'போவோம் காலம் வந்தது காண்
போய்விட் டுடையான் கழல்புகவே' [1]

*என்ற பகுதி எடுத்தோதியவுடன் காரணவர்,*

'ஏங்கி யழுத எங்களை நோக்கினர்
வாடி யழுத மக்களை நோக்கினர்
கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர்
கண்ணை மூடினர், கயிலை போய்ச் சேர்ந்தனர்'

1. திருவா. யாத்திரைப் பத்து - 1

வழக்கின் பலன்: *இதனைப் பற்றி பெண்மணி இழித்துக் கூறுகின்றாள்:*

தீரா வழக்கும் சென்மப் பகையும்
உற்றா ருக்குள் உண்டாக் கும்வழி

*இந்த வழி அப்பனைப் பிள்ளை அண்டவொட்டாது; பிள்ளையை அப்பன் பேண வொட்டாது; கணவனை மனைவி போற்ற வொட்டாது; மனைவியைக் கணவன் மதிக்க வொட்டாது; அண்ணனைத் தம்பி அடுக்க வொட்டாது; தம்பியை அண்ணன் தரிக்க வொட்டாது; மருமகனை மாமன் வஞ்சித்திடும். மாமனை மருமகன் வதைத்துக் கொல்லும்; குடியைக் குட்டிச் சுவராக்கிவிடும்; அடிபிடி சண்டையை அகலாமற் செய்துவிடும்; மனிதரைப் பேயாய் மாற்றிவிடும்; வயிற்றுக்கின்றி வறுமையில் தள்ளி நடைப் பிணமாக நடக்கச் செய்துவிடும். இவ்வழியில் வெளிச்சம் இராது; இருள் சூழ்ந்து கெடுக்கும். இந்த வழியில் கோட்டானும் ஆந்தையும் குடிகொண்டு கிடக்கும். நெஞ்சில் படர்ந்து நிரம்பிய முள் வழியாகும்.*

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ'மென்று
ஔவை சொல்மொழி அறியா மடவழி
பெற்ற பிதாதன் பிள்ளைகட்குப்
பழியும் பாவமும் பற்றிய நோயும்
அழியாப் பொருள்களாய் அளிப்ப தன்றி
ஒருகா சேனும் உதவாச் சதிவழி!
இது,
மக்கள் வழியென மதிக்கவொண் ணாது!
மருமக் கள்வழி யாகவும் மாட்டாது

*என்று விளக்குகின்றாள்.*

*வீடு, விளை நிலம், ஆடு, மாடுகள் அனைத்தையும் விற்றதோடன்றி இல்லத்தின் சாமான்கள், அணிகலன்களை*

யும் விற்றுப் பணமாக்கி, வக்கில்சாமி மலரடிகளிலும், குமஸ்தா மாடன் கோவில்களிலும் சாட்சித் தெய்வச் சந்நிதி களிலும் வெற்றிலை பழம் தேங்காய்களுடன் வைத்து வணங்கச் செய்துவிடும். முடிவில் வழக்கு இழப்புதான்.

வழக்கை இழந்து வாய்மண் ணாகி
உண்ண உணவும் உடுக்கத் துணியும்
இல்லா தாகி, யாரும் கைவிட,
முற்றத் துறந்த முனிபுங் கவர்போல்
பழுக்கப் பழுத்த பட்டினத் தடிகள்போல்
ஊரும் சதம்அல்ல உற்றார்
சதம்அல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதம்அல்ல பெண்டீர்
சதம்அல்ல பிள்ளைகளும்
சீரும் சதம்அல்ல செல்வம்
சதம்அல்ல தேசத்திலே
யாரும் சதம்அல்ல நின்தாள்
சதம்கச்சிஏ கம்பனே

— திருஏகம்ப மாலை - 227

என்று கூறி இனித்தோ வாளைக்
கஞ்சிப் புரையே கதியெனச் சென்று,
பக்கமெங்கும் பரந்து சுற்றிச்
சுவான தேவர் துதித்து நிற்க,
அந்தரம் எங்கும் பந்தர் போட்டுக்
காக்கைபா டினியர் கானம் பாட,
பலஅடி யார்கள் பலரொடும் கூடி
வெட்ட வெளியில் வெண்சோ றுண்டு,
பட்டைச் சோறும் பாற்சோ றாக
ஒட்டுத் திண்ணை உறங்கிட மாக
இருப்பதை நோக்கி இரங்கி,இரங்கி,
இழந்ததை எண்ணி ஏங்கி ஏங்கி
அழுபவர் கண்ணீர் ஆறாய்ப் போம்வழி

ஐயோ, இவ்வழி ஆகாது ஆகாது!
ஆடுகள் மாடுகட்கு ஆகும் இவ்வழி
மனிதர் செல்லும் வழியா யிடுமோ?

*என்று சீர்கேடு அடைந்த குடும்பம் சித்திரிக்கப் பெறுகின்றது.*

*இறுதியாக, இச்சிறுக் காவியம் சிலப்பதிகாரத்தை இளங்கோ முடிப்பது போல் கவிமணியவர்களால்,*

கற்றவர் உளரோ! கற்றவர் உளரோ!
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவர் உளரோ! கற்றவர் உளரோ!
அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ
வறுமைக்கு இரையாய் மக்களை விட்டிடும்
அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ!
நீதியும் உளதோ! நீதியும் உளதோ!
மாதர் கண்ணீர், மாறா நிலத்தில்
நீதியும் உளதோ! நீதியும் உளதோ!
தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!
பொய்வழிப் பொருளைப் போக்குமருந் நிலத்தில்
தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!!

*என்ற முறையில் முடிக்கப் பெறுகிறது. சிலப்பதிகாரத்தை இளங்கோ அடிகள் அறிவுரையால் முடிகின்றார். (வரந்தரு காதை காண்க) இந்தக் காவியம் ஓர் அபலைப் பெண் வாக்கால் முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி கோவலனை இழந்து புலம்பும் பாணியைப் போல் (துன்ப மாலை காண்க) காரணிகளின் ஐந்தாம் மனைவி புலம்பும் பாணி அமைகின்றது. மற்றும் சிலப்பதிகார 'ஊர் சூழவரி' கண்ணகியின் குரல்,*

பெண்ணிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்கு

பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்!
ஈன்ற குழவி எடுத்து வளர்ச்சிக்கும்
சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!
தெய்வமும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!

*என்று ஒலிப்பதைப்போல் ஈண்டும் ஓர் அபலையின் குரல் ஒலிக்கின்றது. சிலம்பில் பெண்டிர், சான்றோர் தெய்வம் குறிப்பிடப் பெறுகின்றனர். ஈண்டுக் கற்றவர், அறிஞர், நீதி, தெய்வம் குறிப்பிடப் பெறுகின்றனர்.*

மதிப்பீடு: *கதையை ஓர் அபலையின் வாயில் வைத்துக் கவிமணி பேசுவது அற்புதமாக அமைந்துள்ளது. காவியத்தின் நடையும் ஒரு சாதாரணப் பெண் பேச்சாக அமைந்திருப்பது படிப்போரின் மனத்தைக் கவருகின்றது. சீர்திருத்தம் விரும்பிய கவிமணியின் நோக்கத்தை நிறைவு பெறச் செய்வதற்கு இக்காவியம் சிறந்த கருவியாக அமைகின்றது. பெண் பாவத்தைப் பெரிதாக எடுத்துக் காட்டுகின்றது.*

*நூல் முழுவதும் கையாளப் பெறும் வட்டார வழக்குச் சொற்கள் காவியத்தை இயல்புடையதாக்குகின்றன. எடுத்துக்காட்டாக ஏகாங்கி (= குழந்தையில்லாமல் தனியே இருப்பவள்), கண்டாங்கி (= சாயப் புடவை), குலுக்கை (= குதிர்), களரி கட்டுதல் (= சண்டையிடுதல்), காரணவர் (= குடும்பத் தலைவர்), மலரணை (= பேரிரவல், பினாமி), உகந்துடைமை (= நாஞ்சில் நாட்டு வேளாளரிடையே கணவனுடைய சொத்தில் மனைவி மக்களுக்குரிய பாக உரிமை), குடும்ப கோஷி (= குடும்ப காரியங்களுக்குத் துரோகம் செய்பவன்), பிலே (= பயலே), படிப்புரை (= ஒட்டுத் திண்ணை), ஆவலாதி (= பிராது), கொட்டாரம் (= அரண்மனை), படாகை (= ஒரு நாட்டின் சிறு உட்*

பிரிவு), போட்டும் (= போகட்டும்), அப்பமுத்து (= கொஞ்ச காலத்துக்கு முன் நாகர்கோயிலில் இருந்த ஒரு மூடன்), குடவண்டி (= தொந்தி வயிறு), கைச்சாத்து (= ரசீது), அண்ணாவி (= உபாத்தியாயர்), தாட்பொதி (= காகிதக் கட்டு), மச்சம்பி (= அத்தான், அக்காள் கணவன்), வல்லம் (= தென்னங்கீற்றினால் செய்யப்பட்ட ஒரு வகைக் கூடை), குழியல (= உண்ண உபயோகிக்கும் பாத்திரம்), நாலு கை யானை (= வக்கீல்), வஞ்சி (= கோவிலில் காணிக்கை செலுத்தும் உண்டிப் பெட்டி), ஏழரை நாட்டன் (= ஏர்ட்லி நார்ட்டன் Eardley Norton என்ற பிரசித்திப் பெற்ற ஆங்கிலேய வக்கீல்), முழுக்காளி (= முத்துக் குளிப்பவன்), பதிவு சாட்சி (= லஞ்சம் வாங்கிக் கொண்டு முன் பின் தெரியாத எந்தப் பத்திரத்திலும் சாட்சிக் கையெழுத்து போடவும் சாட்சி சொல்லவும் தயாராக இருப்பவன்), நடைபடி (= கோர்ட்டு நடவடிக்கை முறை), அர்ஜி (= பிராது), துவர்த்து முண்டு (= ஈரம் துவட்டுத்தற்குரிய துண்டு), விடுமுறி (= கணவனும் மனைவியும் பிரிந்து கொள்வதைக் குறிக்கும் பிரமாண பத்திரம்), தட்டு (= மேல் மாடி), அன்னப்பால் (= உலையிலுள்ள கொதிநீர்), ஈனாப் பேச்சி (= மலடி), அலந்து (= ஆசைப்பட்டு), சுவான தேவர் (= நாய்கள்) என்பவற்றைக் கூறலாம்.

பழமொழிகள்: இக்காவியத்தில் கையாளப் பெறும் பழமொழிகள் கருத்துகளைத் தெளிவாக்கப் பயன்படுவதுடன் காவியத்திற்கு உயிரையும் ஊட்டுகின்றன. எ-டு.

(1) 'தின்றவன் தின்றான் திருக்கணங்குடியான் தொண்ட மிறுப்பான்' என்பது பழமொழி, செலவு செய்பவன் ஒருவன்; ஆனால், சுகமும் அநுபவமும் பெறுபவன் வேறொருவன் என்பது பொருள். திருக்கணங்குடி - திருகுறுங்குடி (ஒரு வைணவத் திருப்பதி), தெண்டம் இறுப்பான் - வரியைக் கொடுப்பான்.

*(2)* ஒரு கண் வெண்ணெயும் ஒரு கண் நீறும் (சுண்ணாம்பு) வைப்பது - பாரபட்சமாக நடந்து கொள்வது என்பது பொருள்.

*(3)* 'வாணாளக் கொடுத்து வாணதீர்த்தம் ஆடுவது' என்பது ஒரு நாஞ்சில் நாட்டுப் பழமொழி; வாண தீர்த்தம் என்பது பாபநாசம் அருகிலுள்ள ஒரு தீர்த்தக் கட்டம். இதில் தீர்த்தமாடி வருவது மிகவும் சிரமமான செயல். மிகவும் சிரமப்பட்டு ஒரு செயலை நிறைவேற்றுவது என்பது இப்பழமொழியின் கருத்து. வழக்குப் போட்டு வெல்வதைக் குறிக்க இப்பழமொழி ஈண்டுக் கையாளப் பெற்றுள்ளது.

*(4)* 'வஞ்சியை முறித்த கணவன்' என்பது பழமொழி போல் வழக்கிலுள்ள தொடர். வஞ்சி கோவிலில் காணிக்கை செலுத்தும் உண்டிப் பெட்டி. வஞ்சியை முறித்தல்: திருட்டுத் தொழிலில் வல்லவனை 'வஞ்சியை முறித்த கணவன்' என்று சொல்வது நாஞ்சில் நாட்டு வழக்கம்.

*(5)* 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையாரின் 'கொன்றை வேந்தன்' என்பதிலுள்ள முதல் சொல் மொழி.

*(6)* திருவாசகத்தில் யாத்திரைப் பத்திலுள்ள தொடக்கப் பாடல்:

பூவார் சென்னி மன்னனெம்
　　புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்துணர்வாய்
　　உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப்பட்டு அன்பாய்
　　ஆட்பட் டீர்வந்து ஒருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
　　போய்விட் டுடையான் கழல்புகவே

என்பது. இது பொருத்தமான இடத்தில் ஆளப் பெற்றுள்ளது.

*(7) பட்டினத்தடிகளின் திருஏகம்ப மாலையிலுள்ள ஒரு பாடல்:*

**ஊரும் சதமல்ல; உற்றார்**
**சதமல்ல; உற்றுப்பெற்ற**
**பேரும் சதமல்ல; பெண்டிர்**
**சதமல்ல; பிள்ளைகளும்**
**சீரும் சதமல்ல; செல்வம்**
**சதமல்ல தேசத்திலே**
**யாரும் சதமல்ல; நின்தாள்**
**சதம்;கச்சிஏ கம்பனே (227)**

என்ற பாடல் பொருத்தமான இடத்தில் ஆளப் பெற்றுள்ளது.

இங்ஙனம் பழமொழிகளும் இலக்கியக் குறிப்புகளும் ஏற்ற இடங்களில் அமைந்து காவியத்திற்குப் பொலிவூட்டுகின்றன.

'இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி' என்பது ஒரு மேனாட்டுத் திறனாய்வாளரின் கூற்று; அது 'வாழ்க்கையின் திறனாய்வு' என்றும் சொல்லப்படும். இந்தக் காவியம் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மக்களின் வாழ்க்கையின் கண்ணாடியாக திறனாய்வுப் போக்கில் அமைந்துள்ளமை தெளிவு.

# 13. பாடலில் படிமங்கள்

"படிமம் (Imagery) என்பது சொற்களால் கவிஞன் புலன்கட்குக் கவர்ச்சியுடையதாகச் செய்யும் ஒருவகை உத்தி. புலன்களின் மூலம் படிப்போரின் எழுச்சிகளையும் அறிவினையும் கிளர்ந்தெழச் செய்ய இயலும்; இதனைக் கருதியே கவிதையில் படிமம் கையாளப் பெறுகின்றது'' என்று கூறுவர், பர்ட்டன் என்ற ஆங்கிலத் திறனாய்வாளர் கவிதைத் திறனாய்வு என்ற தமது நூலில். மேலும் அவர் கூறுவார்: "புலன்கட்கு முறையீடு செய்வதற்கேற்ப படிமங்கள் வகை செய்யப் பெறுகின்றன; கட்புலப் படிமங்கள, செவிப்புலப் படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப்புலப் படிமங்கள், நொப்புலப் படிமங்கள், அல்லது தொடுபுலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள் (Kinesthetic images), மரபு வழிப் படிமங்கள் (conventional images) என்பவையாகும்'' என்று. எண்ணத்திற்கும் புலன் காட்சிக்கும் குறியீடுகளாக இருப்பவை சொற்களாகும் என்பதை நாம் அறிவோம். ஒரு கவிதையைப் படிக்கும்போது அக்கவிதையிலுள்ள சொற்கள் அல்லது சொற்கோவைகள் சிலபல படிமங்களை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. புலன்களின் மட்டத்தில் தூண்டல்கள் (Stimuli) செய்வதைப் போலவே படிமங்களும் கருத்து நிலைச் செயலில் (ideationally) நம் புலன்களைத் தூண்டி நம்மிடம் கவிதையநுபவத்தை எழுப்பிக் கவிதையைத் துய்த்து மகிழ்வதற்குத் துணையாக அமைகின்றன. மேலும் சில சொற்கள் நம்மிடம் 'கட்டுண்ட' படிமங்களையும் (Tied images), விடுதலைப் படிமங்களையும் (Free images) எழுப்பி விடுகன்றன. இவையும் கவிதையை நுகர்வதற்கு இன்றியமையாத கூறுகளாக (Sine Quo Non) அமைகின்றன.

*கவிமணியின் பாடல்களில் இத்தகைய படிமங்கள் அமைந்திருப்பதால் பாடல்களைப் பயில்வோர் மனத்தில் இவை தோன்றி கவிதையநுபவத்தைக் கிளர்ந்தெழச் செய் கின்றன; படிப்போரை கவிதையநுபவத்தின் கொடுமுடிக் குக் கொண்டு செலுத்துகின்றன. 'என்னுளத்து ஞான ஒளி ஏற்றிய மெய்த் தீபம்' (10), 'பன்னரிய நின்னிசையின் பாலாறு' (8), 'தெள்ளத் தெளிந்த கவியமுதம்' (94), 'ஆரமுதம் ஊறும் இதழ்' (167), 'வட்டமாய் உன் கழுத் திலே வானவில்லை ஆரமாய்' (253), 'பந்தம் எரியுதோடி! - கண்களைப் பார்க்க நடுங்குதடி! (271), 'புன்னை மலரும் - குவளையின் பூவும் கலந்தது போல், மின்னி மிளிரும் உடல்' (276), 'பாலாழி மீது படர்ந்த வெண்ணெய் - ஒரு பந்தாய் உருண்டு திரண்டதுவோ?' (312), 'வெள்ளியோ டம் போலவரும் வெண்ணிலா' (316), 'விரித்துவிடு பாய் காற்றுப் பிடித்து ஓடம், விரைந்து குதித்தோடியழகமையக் கண்டேன்' (377), 'புனைந்த சித்திரம்போல் வண்ணாத்துப் பூச்சி சுற்றுதம்மா!' (464), 'பாகனைய செந்தமிழ்ப் பாமா ரி' (1023), 'ஆராமுதனைய தமிழ்' (1028), 'திடம் படைத்த கல் நெஞ்சும் திடுக்கிட்டு நடுநடுங்கிச் சிதறிப் போக' (1048), 'அன்பின் கடலை அமுத மொழியரசு' (1080) என்பன போன்ற சொற்கோவை எழுப்பும் படிமங்களை எண்ணி மகிழலாம். இனி, சிறப்பாக ஒவ்வொரு புலனை யும், பொதுவாகப் பல புலன்களையும் கவரும் படிமங்க ளைக் கண்டு மகிழ்வோம்.*

கட்புலப் படிமங்கள்: *பல்வேறு படிமங்களிடையேயும் கட்புலத்தைக் கவரும் படிமங்களே அதிகமாக உள்ளன. இவையே படிப்போர் மனத்தில் நிலையான பதிவினை விளைவிக்கின்றன. கட்புல நரம்பு ஏனைய பல நரம்பு களை விடத் தடித்திருப்பதே இதற்குக் காரணம் எனக் கருதலாம். இதன் காரணமாகவே இந்தக் காலக் கல்வியில் கட்புல - செவிப்புலத் துணைக் கருவிகள் அதிகமாகப்*

*பயன்படுத்தப் பெறுகின்றன. பள்ளிகளில் சுற்றுலா அமைத்து மாணாக்கர்களைப் பல்வேறு இடங்கட்கு இட்டுச் சென்று பல்வேறு காட்சிகளை நேரில் காணச் செய்கின்றனர். கவிமணியின் பாசுரங்களில் கட்புலனைக் கவரும் ஒரு சில படிமங்களைக் கண்டு மகிழ்வோம்.*

நாடிப் புலங்கள் உழுவார்
    கரமும், நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர்
    நாவும், செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர்
    நெஞ்சும் (1)

*இது கலைமகள் வணக்கப் பாடலின் பகுதி*[1]. *இதில் 'உழுவார் கரம், கவிவாணர் நா, அறிவாளர் நெஞ்சு கட்புலப் படிமங்கள்.*

*இன்னொரு காட்சி:*

ஓங்கா ரத்தோடு பணிகின்ற அடியாரின்
    உபயபதம் என்றனக்கிவ்
உலகாளும் இறைவன் கவிக்குமொரு முடியினும்
    உயர்ந்ததிரு முடிகள், அம்மா!
தேங்கா மரத்திலே மாங்காய் பறிக்கவொரு
    சினைமந்தி கொக்கை நோக்கும் (34)

*இஃது அழகம்மை ஆசிரிய விருத்தத்தில் ஒரு பகுதி. இதில் 'அடியாரின் உபய பதம்', 'உயர்ந்த திருவடிகள்', 'தேங்கா மரம்', 'மாங்காய்', 'சினை மந்தி', 'கொக்கு' இவை கட்புலப் படிமங்கள்.*

*கம்பனைப் பற்றிய பாடல்களில் ஒரு பாடலிலுள்ள படிமத்தைக் காண்போம்.*

1. பாடல்களில் குறிக்கப்படும் எண்கள் நூலின் பாடல்களில் குறிக்கப் பெற்றுள்ள எண்களாகும்.

அணி யணியாக - அணிகள்
அடுக்கி வைத்திடுவன்;
மணி மணியான - பொருள்கள்
வாரி வழங்கிடுவான் (79)

இதில் *'அணியணியான - அணிகள்', 'மணி மணியான - பொருள்கள்' என்பன கட்புலப் படிமங்கள்.*

*'அன்பின் வெற்றி'யிலுள்ள ஒரு பாடற்பகுதி இது:*

மீனை வண்டை மானை, அவன்
விழிகள் மறக்கச் செய்திடுமே
காணிற் படரும் கோவையும் அக்
கனிவாய் இதழைக் காட்டிடுமே (158)

இதில் *'மீன்', 'வண்டு', 'மான்', 'விழிகள்', 'காணிற்படரும் கோவை' இவையாவும் கட்புலப் படிமங்கள்.*

செவிப்புலப் படிமங்கள்: *காதினால் மட்டும் கேட்டு உள்ளத்தைப் பறிகொடுக்கச் செய்யும் படிமங்களாகும் இவை. கவிமணியின் பாடல்களில் இவற்றைக் காண் போம்.*

குன்றினொடு குழியெலாம் இச்சிறிய வேயின்வரு
குழல்கொண்டு சென்று நீயுன்
குமுதவாய் வைத்து தவநவமான் இசைகள்செவி
குளிரவே ஊதி நிற்பாய் (5)

*இஃது அஞ்சலி ஆசிரிய விருத்தத்தின் ஒரு பகுதி. இதில் 'நவமான இசைகள்' கட்புலப் படிமம்.*

வாச மெழு சோலைவாய் மதுவுண்டு வண்டினம்
மதுரகீ தங்கள் பாட (7)

*இதுவும் அஞ்சலி ஆசிரிய விருத்தமே. இதில் 'மதுர கீதங்கள்' செவிப்புலப் படிமமாகும்.*

பாட்டுக் கொருபுலவன் பாரதி,அடா! - அவன்
பாட்டைப் பண்ணோ டொருவன் பாடினான் (100)

*இத பட்டிக்காட்டான் வாயிலிருந்து வரும் பாடல். இதில் 'பாட்டு', 'பண்' என்பன செவிப்புலப் படிமங்கள்.*

'குயிலும் கிளியும் பாட்டில் கூவுமே' (102)

'செந்தமிழ் நாட்டின்' - முதன்மொழி
செவியில் சேருமுன்னே' (109)

'எங்கள் நாடு'தான் - பூபாள
இசையி லேறிடுமேல் (113)

*இவையும் பட்டிக்காட்டானின் வாய்மொழிகள். இவற்றில் 'கூவுதல்', 'முதல் மொழி செவியில் ஏறுதல்', 'பூபாள இசையிலேறிடுமேல்' என்பன செவிப்புலப் படிமங்களாகும்.*

சுவைப்புலப் படிமங்கள்: *நாவினால் பெறும் அநுபவத்தைத் தரும் பாடல்கள் அதிகமாகவே காணப் பெறுகின்றன.*

தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும் உதிர்கின்ற
செறிமரச் சோலை (28)

*இஃது அழகம்மை ஆசிரிய விருத்தம். இதில் 'தித்திக்கும் முக்கனிகள்' சுவைப்புலப் படிமம்.*

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து - கம்பன்
பாரிற் பொழிந்ததீம் பாற்கடலை (53)

*இஃது 'இலக்கிய பஞ்சகத்தில்' கம்பனைப் பற்றிய பாடல். இதில் 'பாவின் சுவைக் கடல்', 'தீம் பாற்கடல்' இவை சுவைப்புலப் படிமங்கள்.*

பண்டைத் தமிழ்மொழியைப் - படித்துப்
பக்குவம் செய்து வைத்தோன்

கண்டின் சுவையெல்லாம் - சொல்லில்
　　கனியைக் காட்டிடுவோன் (76)

*இது கம்பனைப் பற்றிய பாடல். இதில் 'கண்டின் சுவை' சுவைப்புலப் படிமம்.*

கற்கண்டு சீனி,
　　கனியும் கனிந்தொழுகு
சொற்கொண்டு எமக்குச்
　　சுகமளிக்கும் பூங்குயிலோ? (209)

தேவாரப் பாகும்
　　திருவாசகத் தேனும்
நாவார உண்ணஎம்மான்
　　நன்மகவாய் வந்தானோ? (218)

*இவை 'மழலை மொழி'யின் கீழ்வந்த தாலாட்டுப் பாடல்கள். இவற்றில் கற்கண்டு, சீனி, பாகு, தேன் ஆகிய இவை சுவைப்புலப் படிமங்கள்.*

நாற்றப்புலப் படிமங்கள்: *மூக்கினால் முகர்ந்து அநுபவிக்கக் கூடிய படிமங்களாக அமைந்திருப்பவை இவை:*

பூவாகி அப்பூப் பொருந்துவன மாகிஅப்
　　பூவினுறு மணமுமாகிப்
பூதமாய்ப புலனாய்ப் புறப்பாழுமாய் அப்
　　புணாப்பைஅறி விக்கும் அறிவாய் (27)

*இஃது அழகம்மை ஆசிரிய விருத்தம். இதில் 'மணம்' நாற்றப்புலப் படிமம்.*

மண்டலம் எங்கும் கமழும் அருந்தமிழ்
　　வாசம் நுகர்ந்து மகிழ்வோமே! (56)

*இலக்கியப் பஞ்சகத்தில் 'பத்துப் பாட்டு' பற்றியவை. இதில் 'அருந்தமிழ் வாசம்' என்பது நாற்றப்புலப் படிமம்.*

முல்லை பூத்த தம்மா! - இருவாட்சி
மொட்ட விழ்ந்த தம்மா!
மல்லி கைப்பூவும் - மலர்ந்துநல்
வாசம் வீசுதம்மா! (459)

இதில் 'நல் வாசம்' என்பது நாற்றப் புலப்படிமம்.

நொப்புலப் படிவமங்கள்: தொடுவதால் அநுபவிக்கக் கூடிய படிமங்கள் இவை. இவை கவிமணியின் பாடல்க ளில் மிக அரியவை.

பொன்றுத லிலாதநிலை தரவல்ல உன்கரப்
புனித முடல் தீண்டலாலே (5)

இஃது 'அஞ்சலி'யில் வருவது. 'உடல் தீண்டல்' என்பது நொப்புலப் படிமம்.

முத்தம் கொடுக்குது
வெள்ளைப்பசு - மடி
முட்டிக் குடிக்குது
கன்றுக் குட்டி (268)

இது 'பசுவும் கன்றும்' என்பதில் வருவது. 'முத்தம்' 'முட்டிக் குடித்தல்' என்பவை நொப்புலப் படிமங்கள்.

இயக்கப்புலப் படிமங்கள்: ஒரு பொருள் அல்லது ஒரு மனிதனின் இயக்கத்தை விளக்குவன இந்நிலைப் படிமங் கள்.

பாலாறு பொங்கிப்
பாறைகளும் உடைந்துருளப்
பாய்ந்தொழுகும் (8)

இஃது 'அஞ்சலி'யில் வருவது. இதில் 'உடைந்து உருளு தல்' 'பாய்ந்து ஒழுகுதல்' இயக்கப்புலப் படிமங்கள்.

தையலார் மீதிலே மையலாய் ஓயாது
சண்டாள நெறியி லெல்லாம்
சாடிக் குதித்தோடி அலைகின்றமனம் (31)

*இஃது அழகம்மை ஆசிரிய விருத்தம். இதில் 'சாடுதல்', 'குதித்தல்', 'ஓடுதல்', 'அலைதல்' ஆகியவை இயக்கப்புலப் படிமங்கள்.*

பறக்கும் குருவியோடென் - உள்ளம்
பறந்து பறந்து திரியும்;
கறக்குப் பசுவைச் சுற்றி - அதன்
கன்று போலத் துள்ளும் (47)

*இஃது 'இலக்கியம்' என்ற பகுதியில் வரும் 'கவிதை' பற்றியது. இதில் 'பறத்தல்', 'திரிதல்', 'துள்ளுதல்' இயக்கப்புலப் படிமங்கள்.*

அலைமேலே அலைவந்து மோதுமே,அடா! - அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமே,அடா!
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே,அடா! - அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே,அடா (103)

*இது பட்டிக்காட்டான் வாயிலிருந்து வருவது. இதில் 'மோதுதல்', 'அள்ளிக் கொட்டுதல்' என்பவை இயக்கப் புலப் படிமங்கள்.*

'சுதந்திரப் பாட்டில்' - உள்ளம்
துடிது டிக்குதடா!
பதமெ ழும்புதடா! - கையும்
படப டக்குதடா! (117)

*இதுவும் பட்டிக்காட்டான் வாயில் வருவது. 'துடிதுடித் தல்', 'பதம் எழும்புதல்', 'படபடத்தல்' ஆகிய இவை இயக்கப்புலப் படிமங்கள்.*

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி - எங்குநான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன் (290)

இஃது 'ஆறு' பற்றி வரும் பாடல். இதில் 'குதித்து வருதல்', 'கடந்து வருதல்', 'இறங்குதல்', 'தவழ்ந்து தவழ்ந்து வருதல்' ஆகிய இவை இயக்கப்புலப் படிமங்கள்.

புனைந்த சித்திரம்போல் வண்ணத்துப்
பூச்சி சுற்று தம்மா!
துணைவன் இல்லாமல் - யானும் அதைத்
தொடர்ந்து செல்லேன்,அம்மா! (464)

இது 'முதல் துயரம்' என்பதில் 'பிள்ளை' பற்றியது. இதில் 'வண்ணத்துப் பூச்சி சுற்றுதல்', 'தொடர்ந்து செல்லுதல்' இவை இயக்கப்புலப் படிமங்கள்.

கலவைப் படிமங்கள்: பெரும்பாலும் படிமங்கள் தனித்து வருதல் அருமை; அவை கலவையாகவே அமைந்து அவற்றிற்கு மெருகூட்டுகின்றன. கவிமணியின் பாடல்களில் இவற்றைக் காண்போம்.

மணமும் நிறமும் இல்லாவோர்
மலரே எனினும், ஐயாநின்
பணியிற் சேரத் தாழாது
பறித்துக் கொள்ள வேண்டினனே (16)

இஃது 'அஞ்சலி'யில் ஒரு பாடல். இதில் 'மணம்' நாற்றப் புலப் படிமம்; 'நிறம்' என்பது கட்புலப் படிமம்; இவை இரண்டும் இணைந்து பாடலுக்கு மெருகூட்டுகின்றது.

அம்பொற் குழைகள் மிசையாட,
அரைஞாண் சதங்கை இசைபாட,
நம்பன் கண்ணன் அழகியவோர்
நடனாய் வந்து நடிக்கின்றான் (159)

இஃது 'அன்பின் வெற்றி' என்ற மீரா பற்றிய சரித்திரக் கவிதையில் ஒரு பாடல். இதில் 'ஆடுதல்' நடித்தல் இயக்கப் புலப்படிமங்கள்; 'பாடுதல்' செவிப்புலப் படிமம். இவை மூன்றும் இணைந்து பாடலைச் சிறப்பிக்கின்றன.

தேனும் தினையும்பாவில் உண்ணலாம்,அடா! - மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம்,அடா!
கானக் குயிலிசையும் கேட்கலாம்,அடா - ஊடே
களிவண்டு பாடுவதும் கேட்கலாம்,அடா! (105)

இது பட்டிக்காட்டான் வாயில் வருவது. 'தேன்', 'தினை', முக்கனி சுவைப்புலப் படிமங்கள்; 'வண்டு பாடுதல்' செவிப்புலம் படிமம். இவை கலந்த கலவைப் படிமம் கவிதைக்கு மிகு சுவையூட்டுகின்றது.

எத்திசையும் மேகங்கள் எழுந்து மின்னி
இடிமுழங்கிப் பெருமழையும் பெய்யக் கண்டோம்;
தத்திவரும் குளிர்வாடை வீசக் கண்டோம்;
தவளையொடு சாதகமும் கத்தக் கண்டோம்
சித்தமகிழ் பூங்குயிலும் கூவக் கண்டோம்;
ஸ்ரீநந்த குமரன் வர இன்னும்காணோம்;
பத்தியொடு பணிகின்றேன்; கிரித ரா!உன்
பாதமலால் வேறுதுணை அறியேன்,ஐயா! (162)

இது மீரா சரிதையில் ஒரு பாடல் இதில் 'மின்னுதல்' கட்புலப் படிமம்; 'இடிமுழங்குதல்' செவிப்புலப் படிமம்; 'மழை பெய்தல்' இயக்கப்புலப் படிமம், 'குளிர்வாடை' நொப்புலப் படிமம்; 'வாடை வீசுதல்' இயக்கப்புலப் படிமம்; 'தவளை சாதகம் கத்துதல்' செவிப்புலப் படிமம்; 'பூங்குயில் கூவுதல்' செவிப்புலப் படிமம். இங்ஙனம்

இப்பாடலில் பல படிமங்கள் பாங்குற அமைந்து பாடலுக்கு மெருகூட்டுகின்றன.

கவிதையநுபவம்: நம் உடல் தூண்டல் - துலங்கள் (Stimaulus - response) என்ற உளவியல் தத்துவப்படி இயங்குகின்றது. வெளி உலகிலிருந்து தூண்டல்கள் நம்புலன்களைத் தாக்கும்போது (sensory level) அவற்றிற்கேற்பப் புலன்கள் துலங்குகின்றன. அதாவது, அப்புலன்கள் அத்தூண்டல்களால் கிளர்ச்சியடைகின்றன. அதனால் ஏற்படும் உணர்ச்சியை மனம் அநுபவிக்கின்றது. இந்த உணர்ச்சிப் பெருக்கில் உண்டாகும் இன்பமே - முருகுணர்ச்சியே - சுவையாகும். எடுத்துக்காட்டாக மணப் பொருள்கள் நல்கும் மணத்தை நாற்றப்புல நரம்புகள் வாங்கி மூளைக்கு அனுப்புகின்றன. மனம் அப்பொருள்கள் நல்கும் மணத்தை அநுபவிக்கின்றது. ஊதுவத்தி, சாம்பிராணி மணம் செயற்படுவதைக் கருதலாம். மல்லிகை, மருக்கொழுந்து, உரோஜா முதலியவை தரும் மணங்களிலிருந்து, அவை இன்னவை என்று மனம் வேறுபடுத்தி அறிகின்றது. இங்ஙனமே பிறபுலன்களின் மூலம் பெறும் தூண்டல்களால் மனம் அந்தந்தப் பொருள்கள் தரும் சுவைகளைப் பெற்று அவற்றில் ஈடுபடுகின்றது. இவ்வாறு வெளியுலகத் தூண்டல்களால் அடிக்கடி மனம் பெறும் அநுபவம் பெருமூளையில் பதிவாகி விடுகின்றது. உலகை இன்பமயமாகக் கண்டு உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்களே கவிஞர்கள். கவிமணி இயல்பாகவே கவிஞராதலால் இந்த அநுபவத்தைப் பெறுபவராகின்றார்.

இவ்வாறு பெருமூளையில் பதிவாகியிருக்கும் அநுபவம் அச்சு வடிவிலுள்ள கவிதைகளைப் படிக்கும்போது

நினைவாற்றலின் காரணமாகக் கருத்து நிலைத் தூண்டல்க ளாக (Ideational level) மாறுகின்றன. அவை மூளையிலுள்ள பூத்தண்டு (Thalamus), மேற்பூத்தண்டு (Hypo - thalamus) என்ற பகுதிகளின் மூலமாகப் புலன்களை அடையும்போது மூளையில் அற்புதமாக அமைந்திருக்கும் நரம்பு அமைப்பு களைத் தூண்ட, அந்நரம்புகளின் இயக்கத்தால் மாங்காய்ச் சுரப்பிகள் (Adrenal glands) போன்ற நாளமிலாச் சுரப்பிகளில் சாறுகளை ஊறச் செய்து குருதியோட்டத்தை மிகுவிக்கின் றன. உடலும் கிளர்ச்சியடைகின்றது. அப்போது கவிதைக ளில் வரும் படிமங்களைப் புலன்கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக்காட்சிகளை அநுப வித்து மகிழ்கின்றது. இத்தகைய முருகுணர்ச்சி கவிமணி யின் பாசுரங்களில் கவிதையநுபவமாகப் பரிணமிக்கின் றது. இந்தப் பாடல்களை நாம் பயிலுங்கால் அதே உணர்ச் சியை நாம் பயிற்சியால் பெற முடிகின்றது.

## 14. கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாரதியின் பரம்பரையைச் சேர்ந்தவர். நடை, கற்பனை, சந்தம் முதலிய அம்சங்களில் பாரதியைப் பின்பற்றினவர்; கவிதைப் போக்கிலும் பாவனையிலும் பாரதியை முன் மாதிரியாகக் கொண்டவர். கவிமணியின் படைப்புகள் அவரை ஒரு 'சிறந்த தற்காலக் கவிஞர்' என்பதற்குச் சான்றுகளாக அமைகின்றன.

தமிழ்ப் பண்பாட்டினை உணர்த்தும் கவிமணியின் அரிய கவிதைகளில் தமிழ் மக்கள் பெரிதும் ஈடுபட்டனர். தமிழகமெங்கும் இவர்தம் புகழ்மணம் பரந்து கமழ்ந்தது. முதல் கட்டுரையில் குறிப்பிட்ட பல விருதுகளை இவர் பெற்றமையே இதற்குப் பெருஞ்சான்றுகளாக அமைந்துள்ளன என்பதைக் காண முடிகின்றது. இவர்தம் கவிபாடும் திறமையைப் போலவே, அருங்குணங்களாலும் இவர் சிறந்து விளங்கினார் என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் நன்கு உணர்ந்தது. இக்காலத்தில் அண்மையில் சிவப்பேறு அடைந்த வாரியார் சுவாமிகளிடம் வாழ்த்துப் பாடல்களை மக்கள் பெற்று வந்ததைப் போலவே அக்காலத்தில் இவரிடம் வாழ்த்துப பாடல்களை ஆசிச் செய்திகளாகப் பெறுவதற்கு பலரும் விரும்பினர்; இதன் பயனாக பல வாழ்த்துப பாடல்கள் சரம கவிகள், பாராட்டுப் பாடல்கள் ஆகியவை வெளிவந்தன. இவற்றால் மக்கள் பெருமகிழ்ச்சி எய்தினர். இவ்வகைப் பாடல்கள் ஒரு சிலவே அச்சு வடிவம் பெற்றுள்ளன. எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் திறக்கப பெற்றபொழுது இவர் பாடிய கவிதைகள் இங்கு குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றுள் சில இந்நூலில் ஆங்காங்கு எடுத்து காட்டப் பெற்றுள்ளன.

இனி இவர்தம் கவிதைகளின் இயல்புகளைப் பற்றிச் சிறிது நோக்குவோம். கவிதையின் இயல்பை வரையறை செய்வதற்கு - கவிதை இன்னது என்று விளக்குவதற்கு - சில நூற்றாண்டுகளாக நூற்றுக்கணக்கான ஆய்வாளர்கள் முயன்று வந்துள்ளனர். மேற்புல அறிஞர்களில் ஜான்சன் என்பார், ''கவிதை என்பது ஒலிநயம் (Rhythm) அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பு; அஃது இன்பத்தை உண்மையுடன் இணைப்பது; அறிவுக்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டிருப்பது'' என்று கூறுவார். கார்லைல் என்பார் ''இசை தழுவிய எண்ணமே கவிதை'' என வரையறுப்பார். மனிதச் சொற்களால் அடைய முடிந்த மகிழ்வூட்ட வல்லதும் செம்மை நிறைந்ததுமான கூற்றே கவிதையாகும்'' என்பது மாத்யூ ஆர்னால்ட் என்பார் கவிதைக்குக் கூறும் இலக்கணம். இங்ஙனம் மேற்புல அறிஞர் கூறியவை அனைத்தும் கவிதையின் இலக்கணத்தைத் திட்டமாக வரையறுக்க இயலவில்லை.

இனி, நம் நாட்டு அறிஞர்கள் மொழிவதையும் காண்போம். சீதாப் பிராட்டியின் அழகை வருணிக்கப் புகுந்த கம்பநாடன் பொன்னின் சோதி, போதின் நாற்றம், தேனின் தீஞ்சுவை என்று ஒவ்வொன்றாகச் சொல்லிப் பார்த்து, ஒன்றில்கூட மனநிறைவு பெற முடியாமல், இறுதியாக,

செஞ்சொற் கவிஇன்பம்''[1]

என்று கூறி மனநிறைவு பெறுகின்றான். நன்னூலாசிரியரும்,

பல்வகைத் தாதுவின், உயிர்க்(கு) உடல்போல்,பல
சொல்லால் பொருட்(கு)இட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்[2]

1. கம்பரா.பாலகாண். மிதிலைக் காட்சி - 23
2. நன்னூல் - 268

என்று வரையறுத்துள்ளார். இதில் யாக்கைக்கும் கவிதைக்கும் ஒப்புமை கூறப் பெற்றுள்ளது. தோல், குருதி, தசை, எலும்பு முதலிய தாதுக்களினால் ஆன உடல் உயிருக்கு இடனாக, கல்வியறிவில்மிக்க வல்லோரால் அணிபெறச் செய்யப் பெறுவதே கவிதையாகும். நம் கவிமணியவர்களும்,

உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெ டுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெளிந்து ரைப்பது கவிதை [3]

என்று கவிதைக்கு இலக்கணம் கூறுவார்.

இங்ஙனம் கூறியுள்ள மேற்புல அறிஞர்களின் கூற்றுகளிலும் நம் நாட்டு அறிஞர்களின் கூற்றுகளிலும் கவிதையின் முழு வடிவம் தோன்றவில்லை. 'கவிதையின் உருவம் திருமலை நாயக்கர் மகால் தூணைப் போல் தூலமாகத் தெரிவதில்லை' என்று புதுக்கவிதையைப் பற்றி மீரா கூறுவது பொருத்தமாகத் தோன்றுகின்றது.[4] ஏதோ இன்னும் நாம் காணாத பல கூறுகள் கவிதையினுள் உள்ளன என்றே நம் மனம் எண்ணத் தோன்றுகின்றது. உயிருள்ள, வளரும் இயல்புடைய கவிதையைச் சொற்கோட்டைக்குள் வளைத்துக் கிட்டியில் மாட்டி விடலாம்[5] என்று நினைப்பது தவறு; அஃது இயலாததொன்று. அது மேலிருந்து

3. ம.மா: கவிதை - 7
4. மீரா: 'புதுக்கவிதையின் உருவம்'
5. சுப்புரெட்டியார்: கவிதையநுபவம் (கழகம் - 1961) பக்.135

விழும் அருவி நீரைப் பற்றுவது போலாகும். அஃது அண்ணாமலையான் தன்மையைத்தான் கொண்டுள்ளது; அவனது அடியையும் முடியையும் மாலும் அயனும் காண முடியாது அல்லலுறுவதைப் போல் கவிதையின் இயல்பை ஆய்வாளர் கண்டறிய முடியாமல் திண்டாடுகின்றனர். எனினும் இம்முயற்சிகள் பயனற்றவை அல்ல.

''கவிதையின் இயல்புகள் காலந்தோறும் இடந்தோறும் சூழ்நிலைக்குத் தக்கவாறு வேறுபடுகின்றன. அவற றுள் ஒரு சில அம்சங்களையே ஒவ்வோர் ஆய்வாளரும் அறிய முயல்வது. ஆனால், தாம் கூறுவதே எல்லா வகை யாலும் முற்ற முடிந்த உண்மையெனத் தாமும் நம்பி வாசகர்களையும் மயங்கச் செய்து விடுகிறார்கள். இக்குறை யினால் இன்னோரது நூல்கள் பயனற்றுப் போய் விட வில்லை. கவிதை இயல்புகள் ஒரு சிலவற்றின் முக்கியத்து வம் நன்றாக நம் மனத்தில் ஆழப்பதிந்து விடுவதற்கு இவ்வித நூல்கள் உதவுகின்றன. அன்றியும் இந்நூல்களை நாம் கற்குந்தோறும் நமது அறிவு விசாலமடைகின்றது. கவிதையநுபவம் மேலும் மேலும் முதிர்வதற்கு இடம் ஏற்படுகின்றது.''[6]

கவிமணி பெரிய காவியம் ஒன்றையும் படைக்க வில்லை. அவர் படைத்துள்ள 'ஆசிய சோதி', 'உமர்க்கய்யாம் பாடல்கள்', 'மருமக்கள் வழி மான்மியம்' ஆகியவை சற்றுப் பெரியவை. இவற்றுள் முதலிரண்டும் ஆங்கிலக் கவிதைக ளைத் தழுவி ஆக்கப் பெற்றவை. இவற்றின் கருத்து தமிழ் மக்களுக்கு ஏற்ற முறையில் மாற்றப் பெற்றுள்ளது. தமிழ்க் கவிதைகட்கு ஏற்றபடியாகவும், அக்கருத்தோடு ஒத்த பிற கருத்துகளும் சேர்க்கப் பெற்றுள்ளன. எனவே, இக்கவிதை கள் ஆங்கில மூலத்தின் கருத்தினைப் பொதுவாக எடுத்துக் கொண்டு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற முறையில் தமிழ்

6. வையாபுரிப் பிள்ளை - தமிழ்ச் சுடர்மணிகள் - தே.வி.பிள்ளை - பக்.331.

மக்கள் அநுபவிக்கும் பாங்கில், வேண்டிய மாற்றங்கள் செய்து அழகுற அமைக்கப் பெற்றவை யாகும். மொழி பெயர்க்க எடுத்துக் கொண்ட ஒவ்வொரு கவிதையிலும் கவிமணியின் ஆன்மா புகுந்து நின்று கவிதைக் கருத்தின் வடிவினைத் தானே மேற்கொண்டு புதிய படைப்பாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மையாகும். நாரத முனிவன் கூறிய நாரணன் விளையாட்டை வான்மீகி வடமொழியில் கூறியதைக் கம்பன் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்பத் தமிழில் செப்புவதைப் போல கவிமணியின் படைப்புகள் அமைந் துள்ளன என்று சொல்லி வைக்கலாம். இவர் தமிழாக்கம் செய்த 'முதல் துயரம்' 'வண்மை கண்டவர் யார்?' பிற சிறிய கவிதைகளும் 'அழியா உயிர்ப்பு' 'மூன்று விஷயங் கள்' போன்ற பிறச் சிறிய கவிதைகளும் இங்ஙனமே அமைந்துள்ளன. இக்கவிதைகளில் மொழிபெயர்ப்பு என்ற உணர்ச்சியே உண்டாவதில்லை. நமது நாட்டில் நமது தாய்மெழி மரத்தில் இயற்கையாய்க் காய்த்து சுவைபடக் கனிந்த கனிகளே இவை என்று சொல்லத் தக்கனவாகவே அமைந்துள்ளன என்று கூறுவதில் யாதொரு தவறும் இல்லை.

கவிமணியின் சிறு பாட்டுகளில் சில முதல் தரமா னவை. 'கிளி', 'மலர்கள்', 'குழந்தை', 'ஆறு' முதலியவை சிறந்த நயமுடையவை. கற்றோர்க்கு இன்பம் தரவல் லவை. கவிதைகளைச் சுவைக்கத் தெரிந்தவர்கள் இந்தப் பாடல்களை மாணிக்கங்களாக மதிப்பார்கள். ஒரு நல்ல கவிதைக்குரிய குணமும், நயமும், இன்பத்தை உண்டாக்க வல்ல அகத்தெழுச்சியும் கவிதையின் கட்டுக் கோப்பும் கவிமணியின் பாடல்களில் மிளிர்கின்றன.

'மலரும் மாலையும்' என்ற தொகுதியில் 'சமூகம்' என்ற பகுதியில் காணப்பெறும் கவிதைகள் சிறப்பாக இருந்த போதிலும் அவை அரசியல், சமூக, சீர்திருத்தப் பிரசாரத்

*திற்காகவே எழுதப் பெற்றுள்ளன என்றும் அது காரணம் பற்றி இலக்கியச் சுவையிலும் கவிதைச் சுவையிலும் சிறு குறைவுற்றனவாகச் சிலர் கருதுவர். இக்கருத்தைப் பலர் ஏற்றுக் கொள்ளார். 'பொங்கல் திருநாள்' தீபாவளிப் பண்டிகை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் பண்டிகைகள். 'பெண்கள் உரிமைகள்'*[7] *என்ற பாடல்களில் பெண்களின் தியாக உணர்வு அற்புதமாகச் சித்திரிக்கப் பெறுகின்றது. எடுத்துக்காட்டுகளாக,*

அல்லும் பகலும் உழைப்பவ ரார்? - உள்ளத்து
 அன்பு ததும்பி எழுபவ ரார்?
கல்லும் கனியக் கசிந்துருகித் - தெய்வ
 கற்பனை வேண்டித் தொழுப வரார்? (2)

உள்ளம் தளர்வுறும் நேரத்திலே - உயிர்
 ஊட்டும் உரைகள் உரைப்பவர் யார்?
அள்ளியெடுத்து மடியிருத்தி - மக்கள்
 அன்பைப் பெருக்கி வளர்ப்பவர்ஆர்! (5)

மண்ணை வாழ்வினை விட்டெழுந்து - மனம்
 மாசிலா மாணிக்க மாயொளிர்ந்து
விண்ணக வாழ்வை விரும்பிடவே - நிதம்
 வேண்டிய போதனை செய்பவர்ஆர்! (10)

அன்பினுக் காகவே வாழ்பவர்ஆர்? - அன்பின்
 ஆவியும் போக்கத் துணிபவர் ஆர்?
இன்ப உரைகள் தருபவர்ஆர்! - வீட்டை
 இன்னகை யாயொளி செய்பவர்ஆர்? (11)

*இவற்றைப் 'பிரசாரக் கவிதைகள்' என்று திருநாமம் சூட்ட முடியுமா! இங்ஙனமே* 'உடல் நலம் பேணல்', 'சுகாதாரக்

7. ம.மா: சமூகம் - பெண்களின் உரிமைகள் - பக்.148

கும்மி', 'நாட்டுக்கே உழைப்போம்' என்ற தலைப்புகளில் உள்ள பாடல்களை 'பிரசாரக் கவிதைகள்' என்று குறைத்து மதிப்பிடல் அறிவுடைமை அன்று; இது சுவைப்பண்பு இல்லாதவர் செயல் என்று தள்ளத்தக்கது.

கவிமணியின் தமிழ்: இவரது தமிழைக் குறித்துச் சில சொற்கள். இதுகாறும் மேற்கூறிய கவிதைகளால் நாம் அறிந்தது இது. இவருடைய தமிழ் என்றும் உள்ளத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியம். நமது மூதாதை யரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ்; உண்மை நிரம்பிய தமிழ். கல்லார்க்கும் கற்றார்க்கும்; நாட்டார்க்கும் நகரத்தார்க்கும் ஒன்றுபோல் நலம் அளிக்கும் தமிழ். காணார்க்கும் கண்டார்க்கும் கண் ணளிக்கும் தமிழ். இந்த இயல்புடைய தமிழ் நம் நாட்டில் அரிதாகிக் கொண்டு வருகின்றது. இழக்க முடியாத இந்த அரிய செல்வத்தை நமக்குப் போற்றி அளித்தவர் நம் கவிமணி அவர்களே.

ஆய்வாளர்கள் அனைவரும் உண்மைக் கவிதை பற் றிய ஒரு விஷயத்தில் ஒன்றிய உள்ளத்தினராய் உள்ளனர். சிறந்த உண்மையான உயர் கவிதையைப் படித்த அளவி லேயே நம் மனத்தில் விவரிக்க முடியாத ஓர் இன்பத்தைக் காண முடிகின்றது.

நாமக்கல் கவிஞர் கூறுவார்:

புவியணி கவிகள் பாடும்
புலமையைப் போற்று கேனோ?
செவிமகிழ் இனிய சொல்லின்
செறிவினை மெச்சு கேனோ?

நவம்மிகப் பழமை பேசும்
நயத்தினைப் புகழு வேனோ?
கவிமணி யவரை வாழ்த்தக்
காரணம் எதனைச் சொல்வேன்? (5)[8]

என்று. இதில் அவர் கூற முடியாமல் தவிப்பதைக் காண லாம். 'காதல் பிறந்த கதை', கருணைக் கடல்', 'அன்பின் வெற்றி' முதலியனவற்றை உண்மைக் கவிதைகள் என உரைக்கலாம். கால நதியின் கதியதனில் கடவுள் ஆணை யைக் காண்போமாயின் ஞாலமீது சுகமெல்லாம் நம்மை வந்து அடையும். நாமே நமக்குத் துணையானால் நாடும் பொருளும் நற்புகழும் தாமே நம்மைத் தேடிவரும். கவி மணியின் பாடல்களில் மீண்டும் மீண்டும் நம் மனம் ஆழங்கால் படும்போது நம் மனத்தில் புதியதோர் இன்பம் சுரக்கின்றது. அவற்றை நுகர நுகரத் தெவிட்டாத இன் பத்தை அடைகின்றோம். அவை என்றும் மாறாத இள மைத் தன்மையோடு நம் மனத்தைக் கவர்வனவாக உள் ளன. பல பாடல்கள் பல தலைமுறைகளாகத் தமிழ் மக்களை இன்புறுத்தி நிலவும் என்று உறுதி கூறலாம். சில பாடல்கள் என்றும் வாடாமலர்களாய் நின்று நிலவும் இனிய மணம் கமழ்ந்து தமிழன்னையின் திருவடிகளில் ஒளிரும் என்று கருதலாம். இவற்றையெல்லாம் கருதியே நாமக்கல் கவிஞர், கவிமணி பாரதியின் பாடல்களில் சுவைத்து மகிழ்ந்து 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்று கூறியதுபோல்,

தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதுஎன் செவிப்பெருமை[9]

8. சிறப்புப் பாயிரங்கள் - நாமக்கல் கவிஞர்

9. ம.மா: சிறப்புப் பாயிரங்கள் - நாமக்கல் கவிஞர்

*என்று மொழிந்து மகிழ்கின்றார். இதே பாணியில் கவி மணியின் பாடல்களைத் திறனாய்ந்து பேசுகின்றார். அப் பேச்சில் சில கவிதைகள்: இவருடைய பாடல்களில்,*

கோழி குலவிவரும்; கிளி கொஞ்சும்;
குழந்தை எழுந்து துள்ளிக் களிமிஞ்சும்;
ஏழை எளியவர்கள் யாவருக்கும்
இன்பம் கொடுக்க அவன்பா விருக்கும் (2)

காடும் மலையும்அதில் கலைபேசும்
கடலும் ஞானம்தர அலைவீசும்;
பாடும் தேசிகவி நாயகத்தின்
பழமை பாட்டிடஎன் நாஉவக்கும் (3)

படித்துப் பழகாத பாமர ருக்கும்
பாடிப் பருக அதில் சேம மிருக்கும்;
ஒடித்துப் பொருள்பிரிக்கும் சந்திக ளில்லை;
ஊன்றிப் பதம்கூட்டும் பந்தன மில்லை (4)

*என்பவற்றைக் காணலாம். இன்னும், அவர் பாட்டு,*

உழுது தொழில்புரியும் பாட்டாளி
உழைப்பில் ஓய்வுதரும் பாட்டாகும் (3)

*என்பார் நாமக்கல்லார். இங்ஙனம் பல்லோர் பாராட்டும் அவர் கவிதைகளில் உள்ளம் பறிகொடுத்த நம் மனமும் கவிமணி தற்காலக் கவிஞர்களில் தலைசிறந்தவர் என்று மதிப்பிடும்; அறுதியிட்டு மகிழும்.*

# பின்னிணைப்பு
# பயன்பட்ட நூல்கள்

## (அ) தமிழ் நூல்கள்

ஆழ்வார்கள்:

*நாலாயிர திவ்வியப் பிரபந்தம்* - திரு.கி. வேங்கடசாமி ரெட்டியார், வி.புதூர், தென் ஆர்க்காடு மாவட்டம் (பதிப்பு) - 1987 (மூன்றாம் பதிப்பு)

*நாலாயிர திவ்வியப் பிரபந்தம்* (மர்ரே ராஜம் பதிப்பு)

ஔவையார்:

*ஆத்திசூடி*, கொன்றை வேந்தன், நல்வழி.

கம்பர்:

*கம்பரா. அயோ.காண்டம் - (வை.மு.கோ. பதிப்பு)*.

இராமலிங்க வள்ளலார்:

*திரு. அருட்பா - முதல் ஐந்து திருமுறைகள்* - சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம் - வடலூர் - 607 303. தெ.ஆ. மாவட்டம், இரண்டாம் பதிப்பு (1981)

*திருவருட்பா - ஆறாம் திருமுறை* - மேலது - மேலது - இரண்டாம் பதிப்பு - 1981 (இராமலிங்கர் பணி மன்றம்)

கவிமணி தே.வி.:

*மலரும் மாலையும்* - மூன் - பதிப்பு, 1944 (புதுமைப் பதிப்பகம்) காரைக்குடி.

*மலரும் மாலையும்* - பாரி நிலையம், சென்னை (திருத்திய பதிப்பு)

***உமார் கய்யாம் பாடல்கள்*** - 11ஆம் பதிப்பு - 1991 (பாரி நிலையம், சென்னை-102)

***மருமக்கள் வழிமான்மியம்***

குமரகுருபர அடிகள்:

***முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சேயூர் முருகன் பிள் ளைத் தமிழ்*** (அந்தகக் கவி வீரராகவ முதலியார்)

***திருத்தணிகை முருகன் பிள்ளைத் தமிழ்*** (கந்தப்ப தேசிகர்) திருச்செந்தூர்ச் சுப்பிரமணியன் பிள்ளைத் தமிழ் (பகழிக் கூத்தர்)

சுப்பிரமணிய அய்யர் ஏ.வி.:

***தற்காலத் தமிழ் இலக்கியம்*** (நவயுகப் பிரசுராலயம், ஜார்ஜ் டவுன், சென்னை - 1 (1942)

சுப்பு ரெட்டியார் - ந.:

***தமிழ்ப் பயிற்று முறை*** - (மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத் தெரு, சிதமபரம் - 608 001) திருத்திய பதிப்பு - டிசம்பர் 2000

***மாபெருங் கவிஞர் பாரதியார் கவிதைகள்*** - (ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி,சென்னை - 600 005).

***பாரதியார் - பாஞ்சாலி சபதம்*** (கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர்)

***புதுக்கவிதை - போக்கும் நோக்கும்*** (பாரி நிலையம்)

***கவிதையநுபவம்*** - (கழக வெளியீடு)

***பாவேந்தர் - ஒரு கண்ணோட்டம்***

***பாட்டுத் திறன்*** - (ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேணி - சென்னை-5)

தாயுமானவர்:

***தாயுமானவர் பாடல்கள்*** பூவை கலியாண சுந்தர முதலியார் வரை (கழக வெளியீடு, 2001)

திருவள்ளுவர்:

***திருக்குறள் - பரிமேலழகர் உரை*** (சை.சி. நூ.கழக் (1937)

பாரதிதாசன்:

***தமிழியக்கம்***

பாரதியார்:

***பாரதியார் கவிதைகள்*** (எஸ்.ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி)

பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்:

***அஷ்டப் பிரபந்தம்*** (வை.மு.கோ. பதிப்பு)

மாணிக்கவாசகர்:

***திருவாசகம் - தண்டபாணி தேசிகர் குறிப்புரை - தரும்புர ஆதீனம் வெளியீடு - (1949)***

மீரா:

***புதுக்கவிதையின் உருவம்***

மூவர் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்):

***தேவாரம் அடங்கன் முறை*** மயிலைக் கிழார் இளமுருகனார் பதிப்பு, திருவருளகம், 150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1 (1953)

வையாபுரிப் பிள்ளை .எஸ்:

***தமிழ்ச் சுடர் மணிகள் முதற்கோவை*** (குமரி மலர் காரியால யம், தேனாம்பேட்டை, சென்னை-18) (1949)

## (ஆ) ஆங்கில நூல்கள்

**Burton .N:**

**The Criticism of Poetry** (Longmans and Greeness Company Ltd., London)

**Sulbu Reddiar .N:**

**Collected Papers (Kazhakam)**

## குறிப்புகள்

# இந்நூலாசிரியர் பற்றி



*86* அகவையைக் கடந்தவர்

பணிகள் :

1. 9 ஆண்டு உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941–50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி – தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1950 – 60)
3. திருவேங்கடப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைவர் (1960–70)

ஓய்வுக்குப் பின்னர் பணிகள்:

1. 15 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர்
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் – காஞ்சித் தத்துவ மையம் பதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் – தமிழ் இலக்கியத் துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் மரபியல் பண்பாட்டு நிறுவனம் (சென்னைப் பல்கலைக் கழகம்)

பிறபணிகள்:

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பணிகள் – பொறுப்புகள்

பெற்ற பரிசுகள் : 14 நூல்கள் பரிசு பெற்றவை

பெற்ற விருதுகள்: பத்துக்கு மேல் – பல்வேறு நிறுவனங்களின் மூலம்.

000745